காரைநகர்-திக்கரை

# முருகமூர்த்தி கோவில்



## குடமுழுக்கு விழாமலர்

1974

9563

255.32
முருக
SL PR

மில்க் வைற் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர்
சீர்திருத்தப்பெற்ற உன்னத தயாரிப்பு

# நியூ மில்க் வைற் சோப்



மற்றும்

★ மில்க் வைற் நீல சோப்
★ மில்க் வைற் பார் சோப்
★ மில்க் வைற் சலவைப் பவுடர்

வாங்கி அதிக லாபம் அடையுங்கள்

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெருமதியானவை

நாடு நலம் பெற, நாம் நற்சேவை செய்ய நமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

தபால் பெட்டி இலக்கம் 77 யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசன்ஜர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: 36063

# காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு விழா மலர்

## 1974

255.32 முருக SUPR

ஆசிரியர் : ஐ. தி. சம்பந்தன்

வெளியிடுவோர் :

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேக விழாச் சபை
( கொழும்புக் கிளை )

344, காலி வீதி, வெள்ள[illegible]
இலங்கை.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ... 57 ஆம் ஒழுங்கை, கொழும்பு 6

9569

# *Karainagar Thikkarai Murugan Temple*

# *Kudamuzhuk u Malar*

19

EDITOR : I. T. AMBANTHAN

Publishe :

*Karainagar Thikkara Murugan Temple*
*Kudamuzhukku Vizha Sa (Colombo Branch)*

344, Galle Road Wellawatte
Sri La

24-8-1974



● திக்கரை முருகமூர்த்தி கோவில் மேற்கு மூலையில் கோவில் கொண்டிருக்கும் விநாயகர் விக்கிரகம்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

★

"நம்பிக்கையுண்டேல் நமக்கு விநாயகனுர்
தும்பிக்கை யுண்டே துணை"

# திக்கெதுவுமில்லை திக்கரை முருகா

என். வீரமணி ஐயர்

ராகம் : ஷண்முகப்பிரியா    தாளம் : ஆதி

பல்லவி

திக்கெதுவுமில்லை திக்கரை முருகா
தக்கதுணையும் நீயே தாமோதரன் மருகா


அனுபல்லவி

இக்கணமே வருவாய் இன்பகுமார வேலா
பக்கம் வந்தெனக் கருள் பாலசுப்பிரமண்யா

சரணம்

கும்பாபிஷேகம் செய்தே நினைத்துதித்தேன்
வெம்பாவவினை தீர்க்கும் வேலவனே கடம்பா
சம்போ மஹாதேவா சாம்பவியின் புதல்வா
நம்பாமினிர் காரைநகர் களபூமி நாதா.

"வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை"



காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் புதிய தோற்றம்

# வணக்கம்

பிரசித்திபெற்ற சைவாலயங்களில் ஒன்றாக விளங்கும் காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் மகிமையுடனும் பெருமையுடனும் விளங்குகிறது. வயல்களின் மத்தியிற் தனிச் சிறப்புடன் அமைந்திருக்கும் இவ்வாலயத் திருப்பணிகள் சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவில் நடந்தேறி திருக்குடமுழுக்கு விழா நடைபெறும் இந்நந்நாளின் நினைவாக குடமுழுக்கு விழா மலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென அவாக் கொண்டோம். இக்கருத்தினைத் திருப்பணிச் சபைத்தலைவர் வைத்தியகலாநிதி க. திருநாவுக்கரசு அவர்களிடம் கூறிய போது "நிச்சயமாக இப்படி ஒரு மலர் வெளிவருவது மிகமிக அவசியமானது" என்று தட்டிக்கொடுத்து ஊக்கம் தந்தார். எப்படியேனும் ஒரு மலர் வெளியிட வேண்டுமென்ற திடமான முடிவுக்கு வந்தோம். இந்துசமயம் மிகவும் சீர்குலைந்திருப்பதாக காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் வேதனைப்பட்டுக் கூறிய கருத்தை உற்று நோக்கி, செயற்படுத்த இச்சந்தர்ப்பம் வாய்ப்பாக அமைந்து விட்டது.

வீண் வேடிக்கைகளிலும் விழாக்களிலும் பணத்தை விரயமாக்கும் எம்மவர்களை நல்வழிப்படுத்தி ஆக்கபூர்வமான சைவ நற்பணிக்குத் திசை திருப்ப இம்மலர் மூல கருவியாக அமையுமென மகிழ்வடைகின்றோம்.

செந்தமிழையும் சிவநெறியையும் வளர்க்கும் உயரிய பணியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கும் பெருமை மிகு காரைநகர் சைவம் வளர்த்த சான்றோர்களையும், செந்தமிழ்க் காவலர்களையும் உருவாக்கியிருக்கிறது. மேலும் ஈழத்துச் சிதம்பரபுராணம், காரைநகர் சைவ மகாசபை பொன்விழா மலர், பண்டிதர் அருளம்பலனாரின் திருவாசக ஆராய்ச்சியுரைகள், ஆகிய நூல்கள் காரைநகருக்குத் தன்னிகரில்லாப்பெருமையைத் தேடித்தந்த பெருநூல்களாகும். இந்த வரிசையில் போற்றக்கூடிய சைவஞான நூலாக குடமுழுக்கு விழா மலர் அமைந்து விட்டது காரைநகருக்கு ஒரு தனிப்பெருமையே.

சிவமணமும் செந்தமிழ்மணமும் கமழும் மலராக மலர்ந்து காரைநகர்வாழ் பெருமக்களுக்கு மட்டுமன்றி சைவ உலகம் அனைத்திற்கும் பயன்படு பெருநூலாக வரலாற்றில் இடம்பெற வேண்டுமென்பது எமது பேரவா.

நாளொரு வண்ணமாக அதிகரித்துவரும் அச்சுக்கூலி கடதாசியின் மலைபோன்ற விலையேற்றம், ஏனைய அச்சிடற் பொருட்களின் விலை

உயர்வு ஆகியன எமது பெரு முயற்சிக்கு அச்சுறுத்தல்களாகவிருந்தன. திக்கரை முருகனின் திருவருளால் இவ்வச்சுறுததல்களும், தடைகளும் திசை தெரியாமல் மறைந்தது அவன் மகிமையே. முருக அடியார்கள் பலர் இப்பணிக்கு உதவ முன்வந்ததனுல் யாவும் இலகுவாகின.

வெளியிடப்படும் இம்மலர் ஒரு கண்துடைப்பு மலராகவில்லாது என்றென்றும் நீடித்து நிலைத்து, சைவத்தமிழ் மக்களால் போற்றக்கூடிய வரலாற்றுத் துணை நூலாகவும் சமய அறிஞர்கள் போற்றும் அறநெறி நூலாகவும், அமைய வேண்டுமெனப் பேரவா கொண்டோம். அது நிறைவேறி விட்டது என்பதை இம்மலரை நுகரும்போது உணர்வீர்கள். இது எமது முயற்சிக்கு கிடைத் பெரு வெற்றியாகும்.

இம்மலரைச் சிறப்புடன் அமைத்திடவும், படைத்திடவும், ஆக்கிடவும் அருந்துணை புரிந்த ஈழத்துச் சிதம்பர புராண பதிப்பாசிரியரும் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழக செயலாளருமாகிய உயர்திரு. க. வைத்தீஸ்வரர் குருக்கள் அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். மேலும் இந்த நற்பணிக்கு ஆரம்பகாலம் தொட்டு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தவரும், அருமையான ஆராய்ச்சிக் கட்டுரைகளை தமிழகத்திலிருந்து பெறுவதற்கு உதவியவருமாகிய சிவநெறிப் புரவலரும், சிவதர்ம வள்ளலுமாகிய திரு. கனகராசா அவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

ஆகமங்கள், திருமுறைகள், சைவ சித்தாந்தம், மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலாய அனேக நூல்களில் ஆழ்ந்த அறிவு கொண்ட பல பேரறிஞர்களின் பல்துறைப்பட்ட சமயக்கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகளைத் தந்துதவிய ஈழத்து அறிஞர்களும் தென்னகத்து அறிஞர்களும் திக்கரை முருகப் பெருமாள் திருவருளைப்பெற்று எல்லா மேன்மைகளையும் எய்துவார்களாக.

இம்மலர் எல்லோருக்கும் ஆத்மிக ஒளியூட்டும் ஞான ஒளி மலராக மிளிரட்டும்.

ஆ. தி. சம்பந்தன்
ஆசிரியர்

---

## குடமுழுக்கு விழா மலர் கிடைக்குமிடம்


**க. திருநாவுக்கரசு**
திக்கரை முருகமூர்த்தி கோவில்
திக்கரை, காரைநகர்.

**வி. குலரத்தினம்**
லிங்கம் ஸ்ரோர்ஸ்
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**வேல் முருகன் ஸ்டோர்ஸ்**
285 A, காலி வீதி,
வெள்ளவத்தை, இலங்கை.

# உள்ளுரை


1. வணக்கம்
2. ஆசிச்செய்தி - திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள்
3. ஆசிச்செய்தி வைத்திய கலாநிதி க. திருநாவுக்கரசு அவர்கள்
4. ஆசிச்செய்தி சட்டத்தரணி திரு. ச. க. பொன்னம்பலம் அவர்கள்
5. ஆசிச்செய்தி - திரு. நா. பொன்னையா அவர்கள்
6. ஆசிச்செய்தி - திரு. மு. பொன்னம்பலம் அவர்கள்
7. திக்கரை முருகன் குடமுழுக்கு விழா தோற்றமும் கோவில் அமைப்புகளும்
   ஐ. தி. சம்பந்தன், செயலாளர், குடமுழுக்கு விழாச்சபை.
8. பிரசித்திபெற்ற காரைநகர் திக்கரை முருகன் திருத்தல வரலாறு
9. அம்பாளை உபாசிப்பதன் பயன்
   – ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி, சங்கராச்சாரிய சுவாமிகள்.
10. திக்கரையில் வாழ் முருகன் திருவடிகள் போற்றி
   - பௌராணிக வித்தகர் சிவத்திரு வ. குகசர்மா
11. முருகனின் திருவுருவங்கள்
   -ந. ரா. முருகவேள் M.A.,M.O.L. ஆசிரியர்: 'திருக்கோவில்' சென்னை-34
12. திருமுருகன் பெருமை
   – திருமுறைக் கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி-2
13. முருகன் அருட் செல்வர்கள் முருகனைப் போற்றியவண்ணம் - நா. முத்தையா
14. செவ்வேளும் செந்தமிழும் - புலவர் பாண்டியனார், இரத்மலானை
15. காரை அபிவிருத்தி சபையின் 1974-75 வருட அலுவலர்கள்
16. திருக்கார்த்திகை தீப மகிமை – திரு. சி. நவரத்தினம்
17. கந்தர் அனுபூதி
   - ஸ்ரீராமகதாரத்தின V. தியாகராஜன் புதுக்கோட்டை, திருச்சி S. India
18. திருப்பணி – வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள், காரைநகர்
19. திருட்டுக் குடும்பம்
   - திரு. செ. தனபாலசிங்கம் B.A. (LON.) உதவி ஆணையாளர், தொழிற் திணைக்களம்
20. பலர் புகழ் முருகன்
   - திரு. பெ. திருஞானசம்பந்தன் M. A. I. T., சென்னை பல்கலைக்கழகம், தமிழ்நாடு
21. எங்கள் குலதெய்வம் -A. R. V. சோமசுந்தரம், பொன்னுவலை
22. கடவுள் வழிபாடு – பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
23. மனமுருகி இறைவனை வழிபடுக – திருமுருக கிருபானந்தவாரியார்

24. சைவம் – சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணி முதலியார் B.A.

25. வீரனும் சூரனும்
– 'சித்தாந்த வித்தகன்' சுயப்பாக்கம் திரு. சோமசுந்தரம்செட்டியார்

26. ஆலய அமைப்பு – திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார் B.A.B.L.

27. முன்னிய கருணையாறுமுகப் பரம்பொருள் - அருட்கவி சி. விநாசித்தம்பி

28. கும்பாபிஷேகம் – திரு கே. கைலாசநாதக் குருக்கள் M.A.PH.D.

29. திருவாசகத்தேன் - அ. தவபாலன், களபூமி, காரைநகர்

30 இல்லையோவுளம் ஈசனே – பண்டிதர் க. மயில்வாகனம்

31. கிரியைகளின் தத்துவத்தை பொதுமக்கள் உணரச்செய்தல் வேண்டும்
திரு. கி. இலட்சுமணன் M.A.

32. திக்கரை முருகன் கும்பாபிஷேக விழாபற்றி – திரு. கி. பி. ஹரன் அவர்கள்

33. கோணேசன் கொலுவிருக்கும் கோணமலை – ஈழவேந்தன்

34. பெருஞ்சாந்தி அல்லது கும்பாபிஷேகம்
– தருமையாதீனப் புலவர் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்

35. சொற் காத்த பொற் பாவை – வித்துவான் திருமதி ப. நீலா B.A. தருமபுரம்

36. ஆகமம் வியந்து கூறும் குமர வழிபாடு
– திரு. என். எஸ். பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள்

37. உபயக்காரர்களின் பெயர்கள்

38. Worship of Muruga - Mudaliar Kula Sabanathan

39. மலரை மலரவைத்தவர்கள்

40. சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

41. மண்டலாபிடேகம் நடந்த அற்புதக் கதை

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும், இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசருமான

# திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின்

# ஆசிச் செய்தி

திக்கரை முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேக விழாவை யொட்டி விழாச்சபையார் வெளியிடவிருக்கும் மலருக்கு அச்சபையின் செயலாளரும் சைவசமய வளர்ச்சியிலும், தமிழ் மொழி வளர்ச்சியிலும் மிக்க ஆர்வமும் உற்சாகமும் காட்டி வருபவருமாகிய திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்களின் கேள்விப்படி இச்செய்தியை அதிக மகிழ்ச்சியுடன் அனுப்புகின்றேன்.

திக்கரையில் அமைந்திருக்கும் முருகப் பெருமானின் திருக்கோவில் தொன்மை வாய்ந்ததும் வட இலங்கையில் கீர்த்தி பெற்றதுமாய் விளங்குகின்றது. பழமை வாய்ந்த ஆலயங்களைக் காலத்துக்குக் காலம் புனருத்தாரணம் செய்ய வேண்டியது எமது கடமையாகும். பணக்கஷ்டமான இக்காலத்தில் சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவழித்து இவ்வாலயத்தின் புனருத்தாரண வேலையைச் செய்து முடித்தது காரைநகர் மக்களின் சமய உணர்ச்சிக்கும் தேசபக்திக்கும், கும்பாபிஷேக விழாச் சபையினரின் விடா முயற்சிக்கும் சான்றன்றோ!

கும்பாபிஷேக வைபவம் சிறப்புற நடைபெறவும், அவ்வைபவத்தில் பங்குபற்றும் தொண்டர்கள் யாவருக்கும் முருகப்பெருமானின் திவ்விய அருள் பூரணமாகக் கிடைக்கவும் அப்பெருமானைத் தாழ்மையோடு பிரார்த்திக்கிறேன்.

4, ஹோட்டன் ரெறஸ்,
கொழும்பு 7.
26-6-74



காரைநகர் திக்கரை
முருகமூர்த்தி கோவில் திருப்பணிச்
சபைத் தலைவர்

வைத்திய கலாநிதி

## க. திருநாவுக்கரசு அவர்கள்

விடுத்த

# ஆசிச் செய்தி

''வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறையில்லை''

அவ்வாறே முருகன் திருத்தொண்டில் ஈடுபட்டவர்களுக்கு எவ்வித குறையும் ஏற்பட்டதில்லை. வரும் இன்னலெல்லாம் திசைதெரியாமல் மறைந்துவிடுகின்றது. திக்கரை முருகன் திருப்பணியில் ஈடுபட்ட காலத்தில் அனுபவரீதியாக நாம் கண்ட உண்மை இதுவே.

''வந்த வினையும் வருகின்றவல்வினையும்
கந்தன் என்று சொல்லக் கலங்குமே''

முருகன் திருத்தாள்களை இறுகப் பற்றினோர் இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்கும் உட்படார்.

நீண்டகாலமாக இவ்வாலயத்தைப் பரிபாலித்துவந்த எனது தந்தையார் திரு. சி. கனகசபை அவர்கள் 1960-ம் ஆண்டில் சிவபதமடைந்த பின்னர், அவர் விட்டுச்சென்ற இத் திருக்கோவில் சம்பந்தப்பட்ட சகல பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு ஆண்டவனால் என்மீது சுமத்தப்பட்டது. சிறியேன் தயங்கினேன். 'முன்னிற்போரை முருகன் காப்பான்' என்றபடி அப்பணிகளை ஏற்றபோது தன் நம்பிக்கையும், துணிவும் ஏற்பட்டது. அந்த அசைக்கமுடியாத நம்பிக்கையுடனும், துணிவுடனும் ஊரவர்களின் பேராதரவு பெருமளவு கிடைத்தது. இந்நிலையில் திக்கரை முருகப்பெருமானின் புனருத்தாரணத் திருப்பணி வேலைகள் 1964ஆம் ஆண்டில் ஆரம்பிக்க திருவருள் கூட்டியது. வசதிபடைத்த பல அன்பர்கள் முருகன் திருப்பணிக்கு உதவ முன்வந்தது திருவருட் செயலே. எல்லோரினதும் இடையறாத ஊக்கத்தினாலும், உற்சாகத்தினாலும் சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவில் இவ்வாலயத் திருப்பணிகள் நடந்தேறியுள. இரட்டைப் பஞ்சாங்க வேலையாக திருத்தியமைக்கப்பட்ட இவ்வாலயம் இன்று மிக அழகுடன் காட்சியளிக்கிறது.

இன்னமும் நிறைவுபெறவேண்டிய திருப்பணி வேலைகள் பல உள. ஆலயத்திற்கு தத்துவார்த்தமாக அமையவேண்டிய திருக்கோபுரம் புதிதாக அமைக்கப்பட்ட ஆறுமுக சுவாமி கோவில் முகப்புக் கொட்டகை, மகா மண்டபம், கோவில் அலுவலக அறை, அன்னதான மடம், நந்தவனம், பூசகர், குருக்கள்மார் வதியுமிடம், திருக்கேணி, ஆகியன இன்னமும் நடைபெறவேண்டிய திருப்பணிகளாகும். சைவாகம விதிப்படி பூரண நிறைவுபெற்ற திருத்தலமாக அமைவதற்கு மேற்கூறிய திருப்பணிகள் யாவும் நடந்தேறவேண்டியது அவசியமாகும். முருகபக்தர்கள் மனம் வைத்தால், இத்திருப்பணிகள் நிறைவேறும் காலம் வெகுதூரத்திலில்லை.

எல்லோரினதும் பெரு முயற்சியினாலும், உற்சாகத்தினாலும் இத்திருப்பணி வேலைகள் இனிது நிறைவேறி, கும்பாபிஷேகம் நடைபெறுவது திருவருட் பயனும் சைவப் பெருமக்கள் செய்த தவப்பயனுமாகும்.


தோன்றாத் துணையாகவிருந்து இத்திருப்பணிக்கு உதவிய சகலருக்கும் முருகப் பெருமானின் திருவருள் கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இத்திருவாலயத்தை அழகுற அமைக்க உதவிய ஸ்தபதிகளுக்கும் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இம்மகா கும்பாபிஷேக விழாவையொட்டி வெளிவரவிருக்கும் மலர், திக்கரை முருகனின் வரலாற்று நூலாகவும், கருணைக் கந்தனின் மகத்துவத்தை எடுத்து இயம்பும் திருநூலாகவும் வெளிவரவிருப்பது எமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி ஒரு புனித நூலாகக் கருதி உங்கள் இல்லங்களில் பாதுகாப்பீர்களாக.

இம்மலர் செந்தில்வாழ் திக்கரை முருகனின் திருப்பணிக்கு சமர்ப்பணமாகுக.

ஒன்றாய் ஆறாய் ஒளியாய் வெளியாய்
குன்றாய் குருவாய் குகனாய் குமராய்
அன்றாய் இன்றாய் அன்பாய் இணையாய்
மன்றாய் மணியாய் மலிந்தாய் (திக்)கரையே



காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேக
விழாச்சபை காப்பாளர்

## சட்டத்தரணி திரு. ச. க. பொன்னம்பலம் அவர்களின்

# ஆசிச் செய்தி

" உலகம் உய்ய வந்துதித்தனன்
ஆங்கே ஒரு திருமுருகன் "

இவ்வாறு உலக மக்களின் உயர்வுக்குத் தோன்றிய முருகன் காரைநகர் திக்கரையில் தனிச்சிறப்புடன் கோவில்கொண்டருளி அவ்வூர் மக்களின் 'இன்னல் அகற்றி இன்னருள் பொழியும்'' அருட்பெரும் சோதியாய் விளங்கும் காட்சிதான் என்னே.

மாறுப் பிணியில் அகப்பட்டு வருந்தும் அடியார் வருத்தமெல்லாம் நீறுய்ப் போக நின்னருள் புரியும் திக்கரை முருகனுக்கு பொலிவுடன் திருத்தியமைக்கப்பட்டிருக்கும் திருவாலயத் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு அதிககாலமாயினும், அவ்வாலயம் அழகுற அமைந்துவிட்டது அளவிலா மகிழ்ச்சியே. உருகி உருகி அழைக்கும் உண்மையடியார் துன்பமெல்லாம் உருகிப்போக கருணைக் கந்தனின் குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெறவிருப்பது அவன் திருவருளே.

பெருந்தொகை செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கும் இவ்வாலயத்தில், சைவ சமய ஆகம விதிகள் தவறுது நாளாந்த பூசைகளும் திருவிழாக்களும் விசேட புண்ணியகாலங்களும், சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெறவேண்டியது அவசியமாகும். ஆலய நிர்வாகிகள் அதற்கென ஓர் திட்டம் வகுத்துச் செயற்படுத்தவேண்டும். ஆலயத்தைத் திருத்தியமைத்தவர்களின் பெரும் பயனும் அதுவேயாகும்.

பல சிறப்புக்களுடன் விளங்கும் இவ்வாலயத்திற்கு அன்னதான மடமும்,சிறந்த பூந்தோட்டமும் இல்லாதது பெருங் குறையாகும். இவ்வாலயத்தை அழகுற அமைக்க உதவிய மெய்யடியார்கள், இப்பணிகளையும் நிறைவேற்ற முன்வருவார்களாக. வேடிக்கைத் திருவிழாக்களிலும், கேளிக்கைகளிலும் எம்மவர்கள் பெருந்தொகையான பணத்தை விரயம் செய்கின்றூர்கள். காலத்திற்கேற்ப இத்துறைகளில் செலவிடப்படும் பணங்களை மீதமாக்கி, அக்கபூர்வமான திருப்பணிகளிலும், புனருத்தாரணங்களிலும் மற்றும் சைவாகம விதிப்படி இடம்பெறவேண்டிய விழாக்களிலும் செலவிடுவதாயின் சைவ உலகம் எம்மைப் போற்றும் இது போன்ற முறைகளைப் பின்பற்றுவதன் மூலம்தான் ஆலயத்திற் புனிதத்தன்மை பேணப்படும்.

இம்மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் குடமுழுக்கு விழா மலர் முருகப்பெருமானின் பெருமைகளையும், சைவ சமயத் தத்துவங்களையும் ஆலய அமைப்பு முறைகளையும் சிறப்புடன் எடுத்து விளக்கும் மலராக அமையவும் மகா கும்பாபிஷேகம் செவ்விய முறையில் நடைபெறவும் திக்கரை முருகனின் திருவருளை வேண்டுகின்றேம்.

துன்பம் துடைக்க வருவார்க்கு உன்தாள்
அன்பை காட்டா மறையா அருளை
என்றும் தருவாய் குன்றுக் குமரா
தொன்று தொட்ட திக்கரை தூதா "

19, அல்பிரட் பிளேஸ்,
கொழும்பு 3. 5-7-74

காரை அபிவிருத்திச் சபையின் பொதுச் செயலாளர்

## திரு. நா. பொன்னையா அவர்களின்

# ஆசிச்செய்தி

"அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது ?
தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி
எல்லாம் தங்கும்படிக் கிச்சை வைத்துயிர்
குயிராய்த் தழைத்ததெது?"

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிருன். இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகின்ருர் தாயுமானவர். எங்கும் நிறைந்திருக்கும் இறைவனுக்கு எங்கும் கோயில் அமைப்பதில் முரண் ஒன்றும் இல்லை.

காரைநகர் களபூமி திக்கரை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் ஆதீனகர்த்தா திரு. க. திருநாவுக்கரசு மட்டுமன்றி மற்றும் பரிபாலன உறுப்பினர்களுடனும் எமது சபைக்கு தொடர்பு உண்டு. அவர்கள் சைவ சமய வளர்ச்சிக்கு பல அரிய பணிகள் புரிந்துவந்துள்ளனர் என்பதை அறிகின்ருேம். அங்கு நடைபெற்று வரும் மகா கும்பாபிஷேகம் இவர்கள் பணிகளின் சிகரமாக அமையும் என்பது எங்கள் நம்பிக்கை.

இந்த நல்ல வேளையில் நினைவு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானது மட்டுமன்றி சைவ மக்கள் அனைவரும் விரும்பத்தக்கதொன்ருகும்.

சிறப்புமலர் நறுமணம் மிக்கதாக உருப்பெற்றுச் சீரிய புகழ் பெறவும் எல்லாம் வல்ல கலியுகவரத ஸ்ரீ முருகப்பெருமான் துணை நின்று உதவ நாம் வேண்டுகின்ருேம்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

98, விவேகானந்த மேடு,
கொழும்பு 13.
10-7-74

நீண்டகாலமாக மலேசியாவிலிருந்து சமய சமூகப்பணி புரிந்தவரும் தற்போது காரைநகரில் சமூக சமயச் சேவையில் ஈடுபட்டு வருபவருமாகிய

## திரு. மு. பொன்னம்பலம் அவர்களின்


# ஆசிச்செய்தி

உடலழகும் செல்வமும், நல்ல மனமும், நற்குணமும், குடிப்பிறப்பின் உயர்வும், குலப்பெருமையும் கொண்டு பக்தியும் பண்பும் பெருகி இன்பம் கொளிக்கும் காரைநகரின் தென்கிழக்கு பாகத்தில் அம்பலவி முருகரை இருப்பிடமாக கொண்ட களபூமி என்னும் பிரிவில் வாழும் மக்கள் திக்கரை என்னும் குறிச்சியில் வீற்றிருக்கும் முருகமூர்த்தி கோவிலை அப்பகுதி மக்கள் சிறப்பாக திருப்பணி வேலையில் ஈடுபட்டு யாவரும் வியப்படைய கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகமும் திருவிழாவும் செவ்வனே நடந்து கொண்டிருக்கிறது. அத்திருப்பணி குழுவினரிற்கும், பண உதவியும் மற்றும் பல கைங்கரியங்களும் செய்த முருகபக்தர்களுக்கும் முருகன் தன் வேல் கொண்டு காத்து அனுக்கிரகம் புரிவானாக. அத்திருப்பணி வேலைகளில் சமய தத்துவங்களை சிற்பி நாகலிங்கம் வேறு எந்த கோவிலிலும் நான் காணாதவாறு சித்திர வேலைகள் மூலம் சித்தரித்திருப்பது போற்றத்தக்கதாகும்.

அருணகிரிநாதர் கந்தரநுபூதி யென்ற செஞ்சொல் மலர் மாலையை வேலையேந்திய விமலனுக்கு சாத்தினார். அதே போல் திக்கரை முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேக விழாச் சபையினர் கும்பாபிஷேக மலரை அன்பான நூலினால் தொகுத்து, அதில் ஞானம் ஆகிய நறுமணம் கமழ, மாலை ஒளிசெய்ய. அறிவு என்ற வண்டு அதில் ஒலிக்க திக்கரை முருகமூர்த்தியின் பாத மலரில் புணிய வேலவனை வேண்டிக் கொள்கிறேன்.

களபூமி,
காரைநகர்.
1-8-74

அமராதிரனே, சரணம்! மண வழகா, குழகா சரணம் அருள்
உமையாள் மகனே, சரணம்! மயில் உலவும் சுடரே சரணம்! இளம்
குமரா, குகனே சரணம்! சிவகுருவே' ஏலையாள் சரணம்! சிறு
தமியேன் கவலைப் புயல் கடிவாய், சக்திக் கதிர்வே லாசரணம்

வேலுண்டு  வினையில்லை

எஸ். முருகேசு,

கே. கே. எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே.

- கந்தர் அலங்காரம்



*With the best Compliments*
*of*



Arumugam Stores

63, Church Street,

NUGEGODA.

ஏறுமயி யேறிவிளை யாடுமுக மொன்றே ஈசருடன்
ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே வள்ளியை
மணம்புணர வந்தமுக மொல்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

எல்லோரும் முருகன்
திருவருள் பெற்றுய்ய
வாழ்த்துகின்றோம்

# MAHALUCKSHMI STORES

**26, New Chetty Street,**

**COLOMBO-13.**

**Phone: 27875**

**Branch:**

MAHALUCKSHMI STORES
**288, Hospital Road,**
**JAFFNA.**

கிளை :

**மகாலட்சுமி ஸ்டோர்ஸ்**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

1880-ல் இவ்வாலயத்தின் நிருவாகப் பொறுப்பை திரு. கனகசபை காசிநாதர் ஏற்றபோது சிறு மடாலயமாகவிருந்தது. இவர் தனது பெருமுயற்சியினால் இக்கோயிலைக் கல்லால் கட்டி 1902ம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்தார். இவ்வாலயத்தின் பூசைகள் ஒழுங்காக நடைபெறவேண்டுமென்று கருதி அதற்கான சில வழிவகைகளை ஆக்கிக்கொடுத்தார்.

இவர் தன்னுடைய பொருளுதவியோடு திருவாளர்கள் சண்முகம் கோவிந்தி, சுந்தரிபேரம்பலம், கணபதி கதிர்காமு, வேலாயுதர் கார்த்திகேசு. ஆகியோரின் நிதியுதவியையுஞ் சேர்த்துக் கணிச்சாக்கை 15 பரப்பும் மாணுக்கை 10 பரப்பும் கொண்ட நெற்காணியை வாங்கி 1904-ல் தருமசாதனம் செய்தார். அக்காணிகளைத் தானே பொறுப்பேற்று விதைத்து நெல்லைக்கொடுத்து முத்துக் குருக்களைக்கொண்டு பூசை செய்வித்து வந்தார். அந்த காலத்தில் கந்த புராணம் ஒழுங்காகப் படிக்கப்பட்டு வந்தது. படிப்பு முடிவில் அன்னதானம் செய்து வந்தார்.

திரு காசிநாதர் 1925—ல் சிவபதமடைந்த பின்னர் அவரது தம்பியார் மகன் திரு. சிதம்பரப்பிள்ளை கனகசபை கோவில் நிருவாகப் பொறுப்பை ஏற்றுச் சிறப்பாக நிருவாகித்து வந்தார். அப்பொழுது கோவில் பழுதடைந்த நிலையில் இருந்தது. அவ்வாலயத்தின் பழுதுகளைச் சீர்திருத்தம் செய்து 1928-ல் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

அவருடைய காலத்திலேயே இக்கோவிலில் திருவிழாக்கள் நடைபெறத் தொடங்கின. கோவிலுக்குச் சொந்தமான காணிகளிலுள்ள நெல்லைக்கொண்டும் மற்றவர்களுடைய பொருளதவி கொண்டும் பூசைகளைக் காலம் தவறாது நடாத்தி வந்தார். திருவிழாக்காரர் தங்கள் தங்கள் திருவிழாக்களை மிகப் பயபக்தியுடனும், சிறப்பாகவும் நடத்திவந்தனர். கந்தசஷ்டி 6 நாள் படிப்பு, திருக்கார்த்திகை 6 நாள் படிப்பு யாவும் ஒழுங்காக நடாத்தப்பட்டு வந்தன. இவருடைய காலத்தில் திருவாளர்கள் முத்துக்குருக்கள் செல்லத்துரை ஐயர், முத்துக்குருக்கள் சோமசுந்தரம் ஐயர், செல்வத்துரை நாகேஸ்வரசர்மா ஆகியோர் பூசகர்களாக இருந்தார்கள்.

திரு கனகசபை அவர்கள் 1925 தொடங்கி 1960 வரை சுமார் 35 ஆண்டுகள் வரை எவ்விதகுறைகுற்றமுமின்றி இவ்வாலயத்தைச் செவ்வனே பரிபாலித்து வந்தார். இனிய வார்த்தைகளால் எல்லோர் இதையத்தையும் கவர்ந்தவர். கோவில் முகாமையாளர் என்ற பெருமை இன்றிச் சாதாரண தொண்டர்போல், கோவிற் பணிகளைச் செய்துவந்தார். எந்தப்பிரச்சனைகளையும் சுமுகமாகச் சமாளிக்கும் வல்லமையும், ஆற்றலும் படைத்தவர். தயாளகுணமும் பெருந்தன்மையும் அவர்வழிகளை இலகுவாக்கின. இந்த அரும்பெரும் குணங்கள் நிறைந்திருந்தமையினாலே 35 ஆண்டுகளாக இவ்வாலயத்தைச் சிறந்த முறையில் நிருவகிக்க முடிந்தது.

இவர் 1960-ம் ஆண்டு கார்த்திகை மாதம் சிவபதமடைந்தபின்னர், அவரின் மகன் வைத்திய கலாநிதி க. திருநாவுக்கரசு அவர்கள் கோவில் நிருவாகப் பொறுப்பை ஏற்றார். இவர் இவ்வாலயத்தைப் பொறுப்பேற்ற பின்னர் திக்கரை முருகன் திருவாலயத் திருப்பணிகளில் பெரும் முன்னேற்றமும், பூசை முறைகளில் ஒழுங்கு முறைகளும் ஏற்பட்டு வருவதை நாம் கண்கூடாக காண்கின்றோம். அதுபற்றிய விபரங்களைப் பிறிதோர் பந்தியில் காண்க.

செந்தில்வாழ் திக்கரை முருகன் அப்பகுதி மக்களுக்குப் பல அற்புதச் செயல்கள் புரிந்துள்ளார்.

இரட்டைக் குதிரை நேர்த்திக்கடனுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தன.

களபூமியிலுள்ள செல்வந்த குடும்பம் ஒன்று நீண்ட நாட்களாகப் பிள்ளைப் பேறு இல்லாப் பெருங்குறையினால் கோவில்கள் எல்லாம் நேர்த்திக்கடன் செய்தனர். பிள்ளைப் பலன் கிடைக்கவில்லை. இறுதியில் அருகாமையிலுள்ள கோயில் கொண்டருளி அருள் சொரிந்துகொண்டிருக்கும் திக்கரை முருகனிடம் தம் குறைகளை எடுத்துக் கூறி, இரட்டைக் குதிரை வாகனம் செய்து


தருவதாக நேர்த்திக் கடன் மேற்கொண்டனர். குதிரை வாகனம் செய்து கொடுத்த அடுத்த ஆண்டிலேயே இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. முருகனை நம்பினோர் கைவிடப்படமாட்டார்கள் என்ற உண்மை நிதசர்னமாக்கப்பட்ட அதிசயத்தை அறிந்த அவ்வூர் மக்களும் அக்குடும்பமும் பெருமிதமடைந்தனர். என்னே கலியுகக் கந்தனின் திருவிளையாடல் என்றனர். இவ்வாறு திக்கரை முருகனுக்கு நேர்த்திக் கடன் செய்து பிள்ளைப்பேறுகள் பெற்றோர் பலர்.

அப்பகுதியிலுள்ள இன்னொரு குரும்பத்தில் அடுத்தடுத்துப் பிறந்த நான்கு பிள்ளைகளும் மறைந்து விட்டமையாற் கவலையடைந்திருந்தனர். தாங்கொணுக் கவலையை அகற்ற திக்கரை முருகனிடம் தவமிருந்து புராணம் படித்து சந்ததி விருத்தி வேண்டுமென இடையறுது வேண்டி நின்றனர். இந்தத் தவப்பேற்றினுல் அறு விரலுடன் ஓர் ஆண்மகன் பிறந்தார். இன்று இரண்டு இலட்சம் ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்ட இத்திருவாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆறுமுக சுவாமி ஆலயத்திற்குப் புதுமை நிறைந்த ஆறுமுக சுவாமி எழுந்தருளி ஒன்றை இந்தியாவிலிருந்து தருவித்துக் கொடுத்துள்ளார்.

தாங்கள் விரும்பிக் கேட்கும் வரங்களை ஈந்தருளும் திக்கரை முருகனுக்கு எடுக்கப்படும் விழாக்களும், திருப்பணிகளும், மற்றும் வாகனம் முதலிய அன்பளிப்புகளும் நேர்த்திக்கடன்களை நிறைத்திருக்கின்றன. இதிலிருந்து இம் முருகப் பெருமானின் வியக்கத்தகு அற்புதச் செயல்களை நாம் அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறு தெய்வீகச் சிறப்புடனும், அற்புதத் தன்மையுடனும் விளங்கும் இம் முருகன் ஆலயம் மிகப் பழைய கட்டிடங்களுடன் சீர்கெட்ட நிலையில் இருப்பதை உணர்ந்த முருகன் அடியார்களும் முகாமையாளரும் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்ய முற்பட்டனர். 19r4 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலைகள் பூர்த்தியாக்க இதுவரையும் 2½ இலட்ச ரூபா வரையில் செலவிடப்பட்டிருக்கிறது.

இத்திருப்பணி வேலைகளை கோவில்முகாமையாளரும், ஆதீன கர்த்தாவுமாகிய வைத்திய கலாநிதி திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் முன்னின்று நடத்திவந்தார். இரட்டைப் பஞ்சாக வேலையாகத் திருப்பி அமைக்கப்பட்டிருக்கும் இத் திருக்கோயில் புதுப்பொலிவுடன் சிறந்து விளங்குகிறது. பழம் பெருமையுடன் திகழும் காரைநகர் திக்கரை முருக மூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேசம் 1974ஆம் ஆண்டு யூலை மாதம் 11-ஆந்திகதி வியாழக்கிழமை நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.





திக்கரையில் புதிதாக அமைக்கப்பட்ட சண்டேசுவரர் கோவில் தூபி அபிஷேகம் நடைபெறுகிறது.

திரு. சின்னத்தம்பி அவர்களின் உபயம்

எழும்போதும் வேலு மயிலுமென் பேனெழுந்து மகிழ்ந்து
தொழும்போதும் வேலு மயிலுமென் பேன் தொழுதே யுருகி
அழும்போதும் வேலும் மயிலுமென் பேனடியே னுடலம்
விழும்போதும் வேலுமயிலுமென் பேன் செந்தில் வேலவனே

●

விவசாய மருந்துக்கள், உரவகைகள்,
(யூரியா அமோரியா மரக்கறி விதைகள்)

எங்களிடம் சகாய விலைக்கு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7576

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும், சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே

- திருமந்திரம்

*With the best Compliments*

*of*

**E. SUBRAMANIAM**

276, Main Street,

**PANADURA.**

# அம்பாளை உபாசிப்பதன் பலன்

... ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராசாரிய சுவாமிகள் ...

அம்பாளை உபாசிப்பதே ஜன்மா எடுத்ததன் பெரிய பலன். அன்பு மயமான அம்பிகையைத் தியானிப்பதைவிடப் பேரானந்தம் எதுவும் இல்லை. பெரிய பெரிய சித்தாந்தங்கள் மதங்கள் எல்லாம் எத்தனையோ இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் முடிவாக, பயனாகக் கிடைக்கிற பெரிய பலன் அம்பாளைத் தியானிப்பதால் லகுவாகக் கிட்டிவிடுகிறது. "அம்மா! நான் எத்தனையோ தோஷம் உள்ளவன். என்றாலும் உன்னை நம்பிவிட்டேன். நீ கடாக்ஷித்துவிட்டால் எத்தனை தோஷமானாலும் தூர ஓடிவிடும். நான் எப்படி இருக்கவேணுமோ அந்த மாதிரியாக இருக்கும்படியாக நீயே பண்ணு" என்று அவளிடம் நம்மை ஓயாமல் ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்தாலே போதும். அதைவிடப் பெரிய மதமோ, சித்தாந்தமோ, அநுஷ்டானமோ இல்லை. எல்லாம் அவள் சித்தப்படி ஆகட்டும் என்று விட்டுவிட்டு நாம் பஞ்சு மாதிரி மனசில் எந்த கனமும் இல்லாமல் இலேசாகிவிட்டால் அதைவிடப் பேரானந்தம் இல்லை.

அம்பாளை உபாசிப்பதற்கு வேறு பலன் எதுவும் வேண்டாம். அதுவே அதற்குப் பலன் - ஆனாலும் இந்த லோகத்தின் மாயையில் நாம் எல்லாரும் நன்றாகச் சிக்கிக் கொண்டிருப்பதால், 'நான்' என்பதை விட்டு, அவளை அவளுக்காகவே உபாசிக்கிற ஆனந்தம் நமக்கு ஆரம்ப தசையில் புரியமாட்டேன் என்கிறது. நமக்கு என்று எதெதையோ எதிர்பார்த்து அதை எல்லாம் அவள் பூர்த்திசெய்யவேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்காக அவளை உபாசிக்கத் தொடங்குகிறோம். இந்த நிலையில் அவளும்கூட நம்மை விட்டுப் பிடிக்கிற மாதிரி, நம் பிரார்த்தனைகளை நிறைவேற்றி வைக்கிறாள். தர்மத்துக்கு விரோதமாக இல்லாதவரையில் நாம் செய்கிற பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்க்கிறாள்.

மநுஷ்ய ஸ்வபாவம் ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும். அம்பாள் உபாசனையால் ஜனன நிவிருத்தி கிடைக்கும். மோக்ஷம் கிடைக்கும் என்று சொன்னால் யாரும் அதில் ஈடுபடமாட்டார்கள் என்பது ஆசார்யாளுக்குத் தெரியும். அதனால் அம்பாளை உபாசிப்பதன் பலன் இன்னின்ன என்று 'ஸௌந்தர்ய லஹரி'யில் சொல்கிறபோது முதலில் படிப்பு, செல்வம், அழகு முதலியன கிடைக்கும் என்கிறார்.

'ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா' என்று ஆரம்பிக்கிற சுலோகத்தில் அம்பிகையை ஆராதிப்பதால் கிடைக்கிற பலன்களை வரிசையாகச் சொல்கிறோம். இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், சாதாரணமாக ஒவ்வொரு ஸ்துதியின் முடிவிலும் கவி, 'இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்வதால் இப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கும்' என்று சொல்வது ஒரு மரபு—இதை 'பலச்ருதி' என்பார்கள். ஆனால் துளிக்கூட அகம்பாவமே இல்லாத ஆசார்யாளோ 'ஸௌந்தரிய லஹரி பாராயணத்துக்கு இது பலன்' என்று சொல்லாமல் 'அம்மா, உன்னைப் பூஜிப்பவனுக்கு நீ இப்படியாகப்பட்ட அநுக்கிரகங்களைச் செய்கிறாய்' என்கிறார்.

முதல் பலனாக ஸரஸ்வதீ கடாக்ஷம் கிடைக்கும் என்றார். அதாவது நல்ல கல்வி, உண்மையான கல்வியின் பயனான நல்ல குணம் கிடைக்கும் என்கிறார். பிறகு லக்ஷ்மீ கடாக்ஷம் கிடைக்கும் என்கிறார். அதாவது நிறையச் சம்பத்துக் கிடைக்கும் என்கிறார்.

பொதுவாக யாரும் பணத்தை விரும்பு கிறமாதிரி குணத்தை விரும்பிப் பிரார்த் திப்பதில்லையே. ஆனால், குணம் இல்லாத இடத்தில் பணம் இருந்து பிரயோசனம் இல்லை. நாம் பணத்தை விரும்பியே உபா சித்தாலும்கூட அம்பாளோ, இந்தப்பிள்ளை அசட்டுத்தனமாகப் பிரார்த்தனை பண்ணுகி றது. விவேகம் ஏற்படுகிறதற்கு முன்பு அர்த்தத்தைப் (பொருளை) பணத்தைக் கொடுத்தால் அது அனர்த்தமே ஆகும். எவ்வளவுக் கெவ்வளவு பணம் தருகி றோமோ அத்தனைக் கத்தனை பாபத்தையே விலை கொடுத்து வாங்கிக் கொள்வான் எனவே பணத்தை எப்படித் தர்ம மார்க் கத்தில் பிரயோசனப்படுத்துவது என்ற விவேகத்தை முதலில் தந்து பிறகு தனத் தைத் தரலாம்' என்று எண்ணுகிறாள். குழந்தை பட்சணம் கேட்டால் அதைச் செய்து கொடுக்கிற தாயார் பிற்பாடு அதனால் கெடுதல் ஏற்படாமல் விளக் கெண்ணெய் தருகிறாள். அம்பாளோ அவளுடைய குழந்தைகள் விரும்புகிற பொருளைக் கொடுப்பதற்கு முன்னாடியே சித்தத்தில் கழிவடைகள் சேராமல் விவே கம் என்கின்ற விளக்கெண்ணெயைத் தரு கின்றாள். ஸரஸ்வதி கடாட்சத்தைத்தந்து அப்புறம் லக்ஷ்மி கடாட்சத்தைத் தருகி றாள். தைத்திரீ யோபநிஷத்திலும் இப் படியேதான். முதலில் மேதை (நல்ல புத்தி) யைக்கொடு'' என்று சொல்லி அப் புறம் ''ஸ்ரீயை செல்வத்தை)க் கொடு'' என்று சொல்லியிருக்கின்றது. இதற்கு ஸ்ரீ ஆசாரியாள் பாஷ்யம் செய்யும்போது, மேதையில்லாதவனுக்கு ஸ்ரீயைத் தந்தால் அனர்த்தம் உண்டாகும்'' என்றார். 'பஜ கோவிந்தத்திலும் 'அர்த்தம் அனர்த்தம்' என்றார்.

அம்பாளை உபாசிப்பவர்கள் தனியாக லக்ஷ்மி, சரஸ்வதிகளை உபாசிக்கவேண்டிய தில்லை. அவர்கள் இரண்டு பேரும் இவ ளுக்கு இரண்டு பக்கத்திலும் சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது. (ஸசாமரராமா வாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா). சகல சக்திக்கும் ஆதாரமான பராசக்தியை உபாசித்தால் இவளே சரஸ் வதியையும் லக்ஷ்மியையும் கடாக்ஷிக்கச் செய்கிறாள். OOO

---

## பிரார்த்தனை

கடவுளே !

என்னைப் பொய்யிலிருந்து மெய்க்கு அழைத்துச்செல்லும்;
இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும்;
மரணத்திலிருந்து அமரத்துவத்திற்கு அழைத்துச்செல்லும்;

அருள் வள்ளலே !

உம்மை அடைய அருளும். என்னகத்தே எழுந்தருளும்.
அப்பொழுது நான் தூய்மை பெறுவேன்.

- உபநிடதம்

# திக்கரையில் வாழ்முருகன் திருவடிகள் போற்றி!

பௌராணிக வித்தகர் சிவத்திரு வ. குகசர்மா

வான்தவழு மதியென்ன வனப்புடைய முகமும்
    வழிகின்ற நிலவாகும் வான்கருணைப் பெருக்கும்
கான்தவழு கடம்பமலர் மாலையசை மார்பும்
    கரையற்ற அடியார்கள் கலக்கமறு புயமும்
மீன்தவழு மேகமென விளங்கு மயில்மீதே
    மேவுமிரு கன்னியர்கள் புடைசூழ வந்து
தேன்தவழும் தாமரை செறிந்துவளர் கழனித்
    திக்கரையில் வாழ்முருகன் திருவடிகள் போற்றி.

卐

திகழ்ந்தவுன் பாதமலர் தெளிவினொடு போற்றும்
    தேசுடைய தேவர்துயர் தேற்றமுறத் துடைத்து
அகழ்ந்துமே உள்ளத்தின் அகந்தையினை நீக்கும்
    அன்பருளத் தாமரையில் அமகிழ்ந் திருந்தே
புகழ்ந்திடுநல் தமிழ்செய்வோர் புன்கணது நீக்கி
    பொற்புறு நின்பதப் போததனைத் தந்து
திகழ்ந்திடு மருதவளம் நிறைவுற்றுச் சூழும்
    திக்கரையில் வாழ்முருகன் திருவடிகள் போற்றி.

தேவர் குறளுந் திருநான் மறைமுடியும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒரு வா சகமென் றுணர்.

❁

முதல்தரமான யானை மார்க் குளிர் பானங்களுக்கும்
மற்றும் ஐஸ் கிறீம் உணவு சிற்றுண்டிகளுக்கும்
கேக் வகைகள்
யாழ் கோடியல் மற்றும் குளிர் ஊட்டப்பட்ட
பதார்த்தங்களுக்கும்

# ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிரதர்ஸ்

(உரிமையாளர்: ச. க. பாலசுப்பிரமணியம்)
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்தாபன விநியோகத்தர்களிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.

கிளைகள்:

கண்டி ரேட்
★ கிளிநொச்சி

கண்டி ரேட்
★ எழுதுமட்டுவாழ்

★ காரைநகர்

# முருகனின் திருவுருவங்கள்

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.
ஆசிரியர் : "திருக்கோயில்" சென்னை 34.

முன்னுரை

இறைவன் ஒரு நாமமும், ஒருருவமும் இல்லாதவன். ஆயினும் அடியார்களின் பொருட்டு அவன், பல வடிவமும் பல பெயரும் கொள்கின்றான்.

'ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ''

என்பது திருவாசகம். அம்முறையில் தனக்கென ஒருருவம் இல்லாத இறைவன், அடியார்களுக்கு அருள்செய்தல் குறித்து, வெவ்வேறு திருவுருவங்களை மேற்கொள்ளுகின்றான். 'நானாவித உருவாய் நமையாள்வான்' 'பல பல வேடம் ஆகும் பரன் நாரி பாகன்' என்பன தேவாரம்; இறைவன் தன்னியல்பில் இத்தகையவன், 'இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்டொணாதவன் என்பது உண்மையேயாயினும், அவ் இறைவனை நம் பழம்பெரும் சான்றோர்கள் வெவ்வேறு வடிவங்களில் பல்வேறு நிலைகளில் கண்டு அறிந்து பணிந்து போற்றியுள்ளனர். சிவபிரானுக்கு உரிய அருட்கோலங்கள் 25 என்றும், 64 என்றும் நூல்கள் நுவலும். அவ்வாறே முருகனுக்கும் பலவகையான அழகிய அருள் வடிவங்கள் உண்டு என்று பெரியோர்கள் கூறுவர். குமார தந்திரம், ஸ்ரீ தத்துவ நிதி முதலிய வடமொழி நூல்களில் முருகனுக்குரிய திருவுருவங்கள் பற்றி விளக்கப் பெற்றுள்ளன.

கச்சியப்ப முனிவர்:

தமிழகத்தில் அண்மைக் காலத்தில் தோற்றியருளிய சிறந்த பெரும் சான்றோர்களிலும் ஒப்புயர்வற்ற மாபெருங் கவிஞர்களிலும் ஒருவராக மதித்துப் போற்றிப் பாராட்டுதற்குரியவர் கச்சியப்ப முனிவர் என்பவராவார். இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர். மாதவச் சிவஞான சுவாமிகளின் மாணவர். பல கலைகளில் வல்லவர். விநாயக புராணம், முதலிய பல நூல்கள் இயற்றியவர். அவர் தாம் இயற்றிய தணிகைப் புராணத்தில், முருகனின் திருவுருவங்கள் பலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிற்ப நூல்கள், முருகனின் திருவுருவங்கள் எவ்வெவ்வாறு செய்யப் பெறுதல் வேண்டும் என்று விளக்கிக் கூறுகின்றனவோ அக்கருத்துக்களைக் கச்சியப்ப முனிவர் கவின்மிகு தமிழில் கவிதை வடிவில் ஆக்கித்தந்தருளுகின்றார். அக் கவிதைகளின் எளிய கருத்துச் சுருக்கம் வருமாறு:-

(1) ஞான சத்திதரன்:-

சத்தி என்பது வேலுக்கு ஒரு பெயர். ஞானமே முருகனுக்கு வேலாக அமைந்திருக்கின்றது. ஆதலின் அதனை ஞானசக்தி எனவும் வழங்குவர். ஞான சத்தியாகிய வேலை, முருகன் தனது வலக்கையில் ஏந்தியிருக்கின்றான். இடக்கையைத் தனது தொடையில் வைத்திருக்கின்றான். இங்ஙனம் இரண்டு கைகள் உடையவனாய், வேலேந்தி நிற்கும் கோலத்துடன் விளங்கும் முருகனை ஞானசத்திதரன் என்பர். திருத்தணிகையிலுள்ள முருகன், ஞான சத்திதரன் என்னும் திருவுருவம் உடையவனே என்பது, நாம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

(2) கந்த சுவாமி:-

முருகனுக்கு உரிய சிறப்புப் பெயர்களில் கந்தன் என்பது ஒன்று. கந்தன் என்னும் சொல்லுக்குத் திரண்டவன் என்பது பொருள். "சேயவன் வடிவம் ஆறாய்

திரட்டி நீ ஒன்ருய்ச் செய்தாய்; ஆயத ஞலே கந்தனும் நாமம் பெற்ருய்'' என் பது கந்த புராணம். கடவுளர் பலரின் ஆற்றலும் கூறும் ஒருங்கே திரண்டவன் என வும் கொள்ளலாம். அடியார்களுக்குப் பற்றுக் கோடானவன். கந்தன் எனக் கொள்ளு தலும் பொருந்தும். கந்து என்பது நடுதறி அல்லது தண்டாயுதத்தையும் குறிக்கும். ஆதலின், கந்த சுவாமி என்பது, பழனி ஆண்டவரின் திருவுருவத்தைக் குறிக்கும் சிற்ப நூற்பெயர் எனலாம்.

இத்திருவுருவம் ஒரு முகமும், இருகை களும் கொண்டிருக்கும். வலக்கரத்தில் தண்டாயுதத்தை ஏந்தி, இடக்கையை இடுப்பில் ஊன்றி, துறவுக் கோலத்தில், தலை முண்டிதமாய், உருத்திராக்க மணி வடம் தாங்கிக் கோவணம் அணிந்த நிலையில், நின்ற கோலத்துடன் இருக்கும்.

(3) தேவ சேனுபதி:

முருகன் 6 திருமுகங்களும், 12 திருக்கை களும் கொண்டு, தெய்வயானையம்மையாருடன் எழுந்தருளியிருக்கும் நிலை. இதன்கண், முருகன் தனது இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் தெய்வயானையம்மையை ஒருகை தழுவி இருக்க, மற்ருெரு கை அடியார்களுக்கு ''அஞ்சேல்'' என்று அபயம் அளிக்கும் நிலையில் விளங்குவன். ஏனைய பத்துக் கைகளும் முறையே சேடயம் அரிவாள் சூலம் வச்சிரம் வேல் வாள் வில் தண்டு புள்ளம் அம்பு ஆகிய பத்து படைக் கலன்களைத் தாங்கி இருக்கும். இங்ஙனம் அமைக்கப்பெறும் சிற்பம், தேவ சேனுபதி எனப்பெறும். 'தெய்வயானையின் கணவர்' என்பது இத்தொடருக்குப் பொருள் ஆகும்.

(4) சுப்பிரமணியர்:

முருகன் தனது இடப்பக்கத்துக் கையினை, இடுப்பில் அமைத்துக் கொண்டு, வலப்பக்கத்தில் ஒருகையை அஞ்சல் அளிக்கும் அபய நிலையில் ஏந்திக் கொண்டு, தன்னை வணங்கும் அடியவர்களுக்கு அருள் பொழிகின்ற கண்களுடன் விளங்குகின்ருன். இந்நிலையிலேயே அவனைச் சிற்ப நூல்கள், சுப்பிரமணியன் எனக் கூறித் துதித்துப் போற்றுகின்றன.

சுப்பிரமணியன் என்னும் சொல்லுக்குப் பிராமணர்க்கும் வேதத்திற்கும் முதன்மை மிக்க தேவன் (சு+ப்ரமணியன்;) இன்பத்தினையே இயல்பாக உடைய சிவ பரம் பொருளின் வேறன்றி விளங்குபவன் (சு+பிரமம்+ந்யம், ண்யம்) எனப் பாம்பன் சுவாமிகள் பொருள் கூறுவர்.

(5) களிற்றூர்திப் பெருமான்:

முருகனுக்கு மயில் ஒன்றே வாகனம் என அன்பர்கள் பலரும் கருதுவர். ஆயினும், முருகனுக்கு வேறு வாகனங்களும் உண்டு.

முருகன் யானையையும் ஓர் ஊர்தியாகக் கொண்டருளுவன். யானையை ஊர்தியாகக் கொள்ளும் நிலையில் முருகனைக் களிற்றூர்திப் பெருமான் (கஜவாகனர்) எனச் சிற்ப நூல்கள் குறிப்பிடும். இத்திருவுருவத்தினை ஆசிரியர் நக்கீரரும் தமது திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலைவாய் பற்றிய பகுதியில், அதன் தொடக்கத்தில் விரித்துரைத்து விளக்கியிருத்தலைக் காணலாம்.

''நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு''

பதிற்றுப்பத்து, 11: 3 – 6

ஆண் யானையின் மீது, ஒரு திருமுகமும், நான்கு கைகளும், இடப்பக்கக் கைகள் இரண்டில் இரண்டு உரு எழுதிய கோழிக் கொடிகளும், வலப்பக்கக் கைகள் இரண்டில் வேலும் வாளும் கொண்டு விளங்குபவன், களிற்றூர்திப் பெருமான் ஆவன்.

(6) சரவணபவன்:

சிவபிரானிடம் சென்று சூரபதுமனல் தாங்கள் படும் துயரங்களைக் கூறித் தேவர்கள் முறையிட, அப்பெருமான் தனது 6 திருமுகங்களினின்று ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்தினர். விசும்பில் பரவிய அப்பொறிகளை வருவித்து இறைவன் வாயு தேவனிடம் சேர்ப்பித்தான். அவன் அவற்றைத் தாங்கமுடியாமல் அக்கினித் தேவனிடத்தில் ஒப்படைத்தான். அக்கினியும் அதனைக் கங்கையில் விடுத்தான். அதுவும்

அவற்றைத் தாங்கும் ஆற்றலின்றி நாணற் புல் நிறைந்த சரவணப் பொய்கையில் விடுத்தது. பின்னர் அப்பொறிகள் ஆறும், ஆறு குழந்தைகளாகி, அப் பொய்கையில் இருந்த தாமரை மலர்களில் வீற்றிருப்பன ஆயின என்பது, முருகனைக் குறித்த கந்த புராண வரலாறு. சரவணப் பொய்கையில் தோன்றியதனுலேயே, முருகனுக்குச் சரவணபவன் என்பது பெயராயிற்று.

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினுல் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளி னனே.

— கந்தபுராணம்

ஆறு திருமுகங்களுடன் ஒருகை வரங்கள் தரும் நிலையிலும், மற்ருெரு கை அஞ்சல் அளிக்கும் நிலையிலும் விளங்க, ஏனைய பத்துக் கைகளிலும் முறையே வேல்–கேடயம்–கண்டாமணி–தாமரைமலர்-சேவல்–தண்டு–உளி-அம்பு–வாள் என்னும் பத்துக் கருவிகளைத் தாங்கிக் கொண்டு, தாமரை மலரில் எழுந்தருளி நிற்கும் நிலையில் அமைந்துள்ள முருகனைச் 'சரவணபவன்' எனச் சிற்ப நூல்கள் குறிக்கும்.

(7) கார்த்திகேயன் :

சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக வடிவம் கொண்டிருந்த முருகனுக்குக் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் திரு முலைப்பால் அளித்தனர் என்பது வரலாறு. அதனுலேயே முருகனுக்குக் கார்த்திகேயன் என்னும் பெயர் ஏற்பட்டது. தமிழ் நாட்டு முருகனை, வட இந்திய மக்கள் கார்த்திகேயன் என்னும் பெயரிலேயே சிறப்புற அறிந்து, வழிபட்டு மகிழ்ந்து வருகின்றனர்.

கார்த்திகேயன் என்னும் நிலையில் முருகன் ஆறு திருமுகங்களும், ஆறு திருக்கைகளும் மட்டுமே கொண்டு விளங்குவன். வலப்பக்கத்திலுள்ள மூன்று கைகளும் முறையே வேலும் வாளும் ஏந்தி அஞ்சல் அளிக்கும் நிலையில் இருக்கும்; இடப்பக்கத்திலுள்ள மூன்று கைகளும் முறையே குலிசம்-கேடயம் என்பனவற்றை ஏந்திக் கொண்டு வரங்கள் தரும் நிலையில் அழகுற விளங்கும்.

(8) குமாரன் :

தனது நெற்றிக் கண்ணினுல் 'மாரனை' எரித்தருளிய சிவபெருமான், அந் நெற்றிக் கண்ணினின்றே குமாரன் ஆகிய முருகனை அளித்தருளினுன். மாரனை எரித்தது, நிக்கிரகம்; குமாரனை அளித்தது அநுக்கிரகம். குமாரன் என்னும் சொல்லே, குமரன் எனவும் வழங்கப்படும். கு-குற்சிதம், அருவருப்பு, மலம். மாரன்–மரிக்கச் செய்பவன், அழிப்பவன். உயிர்களின் மலப் பிணிப்பை அழித் தொழிக்க வல்லவன் எவனே, அவனே குமாரன் எனப்படுவான்.

குமாரன் என்னும் நிலையில், முருகன் ஒரு திருமுகமும், நான்கு திருக்கைகளும் கொண்டிருப்பான். அவனது வலப்பக்கத்தில் வள்ளியம்மை விளங்குவள். வலப்பக்கத்துத் திருக்கைகளில் வேலும் வாளும் இருக்கும். இடப்பக்கத்துத் திருக்கைகளில் கோழிக் கொடியும், கேடயமும் ஏந்தியிருப்பான்.

(9) ஆறுமுகவர் :

இறைவன் தன் அடியார்களுக்கு அஞ்சும் முகம் (இடுக்கண்) தோன்றும் போதெல்லாம், ஆறுமுகம் கொண்டுவந்து தோன்றி அருள் புரிகின்ருன்.

"அஞ்சுமுகம் தோன்றின்
ஆறுமுகம் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச்
சிந்தைவைப்பது எந்நாளோ"

— தாயுமானவர்

பிற தெய்வங்களுக்கு இல்லாத வகையில், முருகன் ஆறு திருமுகங்கள் உடையவனுக விளங்குகின்ருன். அஃது அவனது தனிப் பெரும் சிறப்பியல்பினை உணர்த்துகின்றது. ஞானம் ஐசுவரியம் திருவீரியம் வைராக்கியம் புகழ் என்னும் இறைமைக் குணங்கள் ஆறும், முருகனுக்கு ஆறு முகங்களாயின என்பர் சான்ருேர். ஆதலின் ஆறுமுகன், ஷண்முகன் என்பன அவனுக்குப் பெயர்களாயின. முருகன் வேல்–அம்பு

வாள்-திகிரி-பாசம் (கயிறு)-அபயம் என்பவற்றைத் தன் ஆறு வலக்கைகளிலும், வச்சிரம்-வில்-கேடயம்-கோழிக் கொடி-அங்குசம்-வரதம் என்பவற்றைத் தன் ஆறு இடக்கைகளிலும் உடையவனாய், வலத்தும் இடத்தும் முறையே வள்ளி தெய்வயானையர் விளங்க, மயில் மீது இவர்ந்தோ உடனிருக்கவோ திகழும் நிலையில், ஆறுமுகவன் எனப் போற்றப்படுவான். திருச்செந்தூரில் முருகன் ஆறுமுகனாகக் காட்சி தருகின்றான். திருமுருகாற்றுப்படை இந்நிலையினைச் சிறந்தெடுத்துப் போற்றித்துதித்து இருத்தல் காணலாம்.

(10) தாரகாந்தகர்:

சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் என்னும் அசுரர்கள் மூவரையும் அழித்தருளினான் முருகன் என்பது வரலாறு. தாரகன் என்பவன், சூரனின் இளையதம்பி. மாயைகள் செய்து, பகைவரை மயக்கி வருத்தி வெல்லுதலில், தாரகன் மிகவும் வல்லவன். அவன் கிரவுஞ்சம் என்னும் தனது மலையின் குகைக்குள் புகுந்த வீரவாகு தேவர் முதலானோரை மயக்கமுறச் செய்தான். அந்நிலையில் முருகன் தனது வேலை விடுத்துத் தாரகாசுரனை அழித்தருளினான். ஆதலின் தாரகாந்தகர், தாரகாரி, குருகு பெயர்க்குன்றம் கொன்றோன்' எனமுருகன் பல பெயர்கள் பெற்றான்.

ஆறுதிருமுகங்களுடன், தனது பன்னிரண்டு திருக்கைகளிலும் வலப்பக்கத்தில் வரதம்-கொடி-கேடயம்-அங்குசம்-பாசம்-குலிசம் ஏந்திக் கொண்டு, இடப்பக்கத்தில் அபயம் – வாள் – சூலம் - சக்கரம் – முலசம் – வேல் என்பனற்றுடன் முருகன் காட்சி தரும் நிலையே தாரகாந்தகர் என்னும் திருவுருவமாகும்.

(11) சேனாபதி:

முருகன் வீரர்களுக்கெல்லாம் பெருவீரனாக விளங்குவபன். வீரம் பெற விரும்புவோர் அனைவரும் முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டு போற்றுவர். 'வீரர்களுக்குள் யான் கநதனாகத் திகழ்கின்றேன்' எனக் கீதையில் கண்ணபிரான் கூறியதாகப் பெரியோர் கூறிவர். மேலும் சூரபதுமன் முதலிய அசுரர்களை வெல்லுதற்பொருட்டுப் புறப்பட்ட தேவர்களின் படைகளுக்கு முருகனே தலைவனாக விளங்கினான். சேனைக்குப் பதியாகத் திகழ்ந்த தனால், 'சேனாபதி' 'சேனானி' என்னும் பெயர்கள் முருகனுக்கு அமைந்தன. தேவசேனாபதி, தேவர்களின் படைக்குத்தலைவன் எனவும் முருகனைப் பெரியோர்கள் வழங்குவர்.

ஆறு திருமுகங்களுடன், அபயம் முசலம் வாள் சூலம் அம்பு அங்குசம் என்பனவற்றை ஆறு வலக்கைகளிலும், வச்சிரம் வில் தாமரை மலர் பிரம்பு தண்டாயுதம் என்பவனவற்றை ஆறு இடக்கைகளிலும் தாங்கிக் கொணடு, அடியார்களின் துன்பங்களை நீக்கும் முருகன், சேனாபதி எனப் படுவான்.

(12) பிர காந்தன்:

சிவபெருமானை வணங்கப் பிரமன் ஒரு சமயம் திருக்கயிலைக்குச் சென்றான். அங்கே வழியில் வீற்றிருந்த முருகனை மதியாது, எளிதாக எண்ணிச் செருக்குடன் அவரைக் கடந்து சென்றான். அந்நிலையில் முருகன் வீரவாகு தேவரை ஏவிப் பிரமனைப் பிடித்துக் கொணருமாறு செய்து, அவனது பெயர்-தொழில் முதலியவற்றை உசாவிப் பிரணவப் பொருள் யாது? என வினவினார். அவன் கூற அறியாது மயங்கி நிற்க, அவன் செருக்கு அடங்குமாறு தலையிற் குட்டிச் சிறையில் அடைப்பித்தார்.

பின்னர் அவனது படைப்புத்தொழிலைத் தாமே மேற் கொண்டருளினார். இந் நிலையே பிரமசாந்தன் என்னும் திருவுருவ மாகும். காஞ்சிபுரம் குமர கோட்டத்திலும், திருப்போரூர்க் கோயிலிலும் முருகன் இத் திருவுருவிலேயே எழுந்தருளி விளங்கு கின்றான். பிரமசாந்தன் என்னும் தொடர், பிரமனைத் தண்டித்தவர் எனப் பொருள் படும்.

இத்திருவுருவில் முருகன், ஒரு திருமுதமும், நான்கு கைகளும் உடைய வனாகத் திகழ்வான். வலக்கைளில் அபய முத்திரையும், உருத்திராகக் செப மாலையும் இருக்கும். வரத முத்திரையும், கமண்டலமும் இடக்கைகளில் விளங்கும். கந்த புராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியர்,

குமரகோட்டத்தில் தாம் நாடோறும் பூசித்து வழிபட்ட இத்திருவுருவின் இயல் பினைப் பின்வரும் பாடலால் குறிப்பிட்டுத் தல் அறிந்து இன்புறற்பாலது.

ஒரு கரம்தனில் கண்டிகை
வடம்பரித்து, ஒருதன
கர தலம்தனில் குண்டிகை
தரித்து, இருகரங்கள்
வரதமோடு அபயம் தரப்
பரம்பொருள் மகன், ஓர்
திரு முகம்கொடு சதுர்முகன்
போல்விதி செய்தான்.

(13) வள்ளி கல்யாண சுந்தரர்:

முருகன் தெய்வயானையாருக்கும் கண வனுயினும், அவனை ''வள்ளி கணவன்'' என்றே பெரும்பாலும் புலவர்கள் புகழ்ந்து போற்றுவர். முருகனுக்குத் தெய்வயானை கிரியா சத்தி என்றும், வள்ளியம்மை இச்சா சத்தி என்றும் நூல்கள் கூறும். களவு கற்பு என்னும் திருமண முறைகள் இரண்டினுள், தெய்வயானையின் திருமணம் கற்பு நெறிக் குரியது என்றும், வள்ளியம்மையின் திரு மணம் களவு நெறிதழுவியது என்றும், அறிஞர்கள் கூறுவர்.

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே

என்பது திருமுருகாற்றுப்படை. உல கில் இல் வாழ்க்கை இனிது நடத்தற் பொருட்டே முருகன் வள்ளியம்மையை மணந்து கொண்டு, அவளுடன் இனிதுறப் பேசி நகையமர்ந்தருள்கின்றுன் என ஞான நூல்கள் கூறும். இங்ஙனம் வள்ளியம்மையை மணந்து கொண்ட இனிய எழில் நிலையி லுள்ள முருகனே வள்ளி கல்யாண சுந்தரர் ஆவர்.

வலக்கையில் அபய முத்திரையும், உருத்திராக்க மணிவடமும் ஏந்தி, இடக் கைகளில் ஒன்றை வரத முத்திரையிலும் மற்றொன்றை இடுப்பிலும் அமைத்துக் கொண்டு ஒரு முகமுடையவராய், திருமால் தாரை நீர் வார்த்துக் கொடுக்க, வலப் பக்கமுள்ள வள்ளியை ஏற்று, மணந்து கொள்ளும் நிலையில் இத்திருவுருவம் எழி லுற அமைந்திருக்கும்.

14. பாலசுப்பிரமணியர்

முருகன் என்னும் சொல்லுக்கு இளமை உடையவன், அழகு மிக்கவன் என்பது பொருள். 'என்றும் இளையாய் அழகியாய்' எனப் புலவர் ஒருவர் முருகனைப் புகழ்ந்து துதித்திருத்தலைக் காணலாம். இளமையை யும் அழகையும் விரும்பாதவர்கள் எவரும் உலகத்தில் இலர். முருகனை அன்புடன் வழிபட்டுவந்தால், இளமை அழகு முதலிய எல்லா நலங்களையும் பெற்று இன்புற்று வாழலாம். இளமையும் அழகும் இறைமை யும் மிக்க நிலையில் விளங்கும் முருகனே, பாலசுப்பிரமணியர் எனப்படுவர். இவர் ஒரு திருமுகமும் இரண்டு திருக்கைகளும் உடையவராய் இருப்பர். இவர், வலக்கை யில் தாமரை மலரை ஏந்திக்கொண்டு, இடக்கையை இடுப்பில் அமைத்திருப்பர். இவரைப் பாலசுந்தரம், பாலசுவாமி என் றும் பெரியோர் குறிப்பிடுவர். இவர் தம் திருவடிகளில் இளஞ் சிறார்க்குரிய கிணிகிணி என்னும் சதங்கையை அணிந்திருப்பார்.

(15) கிரவுஞ்ச பேதனர்:

கிரவுஞ்சம் என்பது, சூரபதுமனின் தம்பியாகிய தாரகனுக்கு உறைவிடமான தும், மாயையில் வல்லதுமாகிய ஒரு மலை யாகும். முருகன் தன் தம்பியும் துணைவரு மாகிய வீரவாகு தேவரை நோக்கி, நீ தார கனின் தலைநகரமாகிய மாயாபுரிக்குச் சென்று அவனை வென்று வருக! என்று பணித்தனர். அங்ஙனமே சென்ற வீரவாகு தேவரை எதிர்த்துப் போர்செய்ய முடியா மல், தாரகன் தன் தேரைவிட்டு இறங்கி ஓடி, கிரவுஞ்ச மலையின் உட்புகுந்து ஒளிந் தான். அந்நிலையில் அவனைப் பிடிக்கத் தொடர்ந்து சென்ற வீரவாகுதேவரும், அவர் தம் துணைவர்களும், அம் மாய மலை யின் குகையிற் சிக்கி இருளில் வழி தெரி யாது திகைத்து, மயக்கமுற்றனர். அஃது றிந்த முருகப்பெருமான், தமது ஞானசக்தி யாகிய வேலை ஏவி, அம்மலையைப் பிளந்து வீரவாகுத்தேவர் முதலியோரை விடுவித்து தாரகாசுரனைக் கொன்றனர். கிரவுஞ்ச மலையைப் பிளந்து அளித்த முருகனின் திரு வுருவமே 'கிரவுஞ்ச பேதனர்' எனப்படும். இதனைச் சங்க நூல்கள் 'குருகுபெயர்க் குன்றம் கொன்றேன்' எனச் சிறப்பித்துப்

புகழும். சங்க நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல், இத்திருவுருவத்தைப் பற்றியதே ஆகும் என்பர். கிரவுஞ்சம் – அன்றிற்பறவை ; அதன் வடிவாகிய மாயமலை. பேதனர் – பிளந்தவர்.

தாமரை புரையும் காமர் சேவடி ;
பவளத் தன்ன மேனி ; திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கை ; குன்றின்
நெஞ்சுபகடு எறிந்த அஞ்சுடர் நெடுவேல் ;
சேவலங் கொடியோன் காப்ப,
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

– குறுந்தொகை – 1.

கிரவுஞ்சபேதனர் ஆறுமுகமும் எட்டுக் கைகளும் உடையவர். வலக் கைகளில் வேல் வாள் பகழி அபயம் என்பவற்றையும், இடக் கைகளில் வச்சிரம், கேடயம், வரதம், வில் என்பவற்றையும் ஏந்திக் கொண்டு, எட்டுக் கைகள் உடையவராய் ஆறுமுகங்களுடன் இருப்பர்.

(16) சிகி வாகனர் :

முருகன் மயில் வாகனத்தை ஊர்தியாகக்கொண்டவன் என்பது யாவரும் அறிந்தது. சிகி என்பது மயிலுக்குப் பெயர். அதனை வாகனமாகக் கொண்டவன் முருகன். முருகனுக்கு மயில் கொடியாகவும் இருக்கும். இதனை 'மணிமயில் உயரிய மாறாவென்றிப் பிணிமுக ஊர்தி ஒண் செய்யோனும்' என வரும் சங்கப் பாடல் கொண்டு உணரலாம். சுத்த மாயை ஆகிய விந்து தத்துவமே, முருகனுக்கு மயிலாக விளங்குகின்றது. சால விந்து எனும் தடமாமயிலாய் ! தாலோ !! தாலேலோ !!!' என்பது திருப்போரூர்ச் சந்நிதி முறை. மயில் தோகை விரித்தாடும் காட்சி ஓங்கார வடிவம் போன்றிருக்கும். முருகன் அத்தகைய மயிலின் மீது அமர்ந்து எழுந்தருளிக் காட்சி தரும் பேற்றையே, அருணகிரி நாதர் 'ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்'' என அருளிச் செய்து போற்றியுள்ளார்.

இத் திருவுருவில், வலக் கைகளில் வேலும் அபயமும் தாங்கி, இடக் கைகளில் வரதமும் வச்சிரமும் உடையவராய், ஒரு திருமுகத்துடன், மயிலின் மீது முருகன் வீற்றிருப்பார்.

இந்தப் பதினாறு திருவுருவங்களே அன்றி அக்கினி ஜாதர், சௌரபேயர், காங்கேயர், குகர், பிரமசாரி, தேசிகர் முதலிய திருவுருவங்களும் சிற்ப நூல்களில் முருகனுக்குச் சொல்லப்படுகின்றன. ஆயினும் தணிகைப் புராணம் மேற்குறித்த 16 திருவுருவங்களைச் சிறப்புற எடுத்து விளக்கியுள்ளது.

முடிவுரை :

இங்ஙனம் அடியார்களின் பொருட்டு பல திருவுருவங்களை மேற்கொண்டு, அன்பர்களுக்கெல்லாம் அருள் புரிந்துவரும் முருகப் பெருமானின் திருவடிகளைப் பல காலும் பணிந்து பத்தி செய்து, பரவித் தொழுது, நாம் உய்ய முயலுவோமாக !



உ



நாளென் செய்யும் வினை தானென்
செயும் எனை நாடிவந்த
கோளென் செய்யுங் கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடின் !


திக்கரை முருகனின் குடமுழுக்கு
இனிது நடைபெற
எங்களது வாழ்த்துக்கள்

# SIVA OIL & FIBRE MILLS

KADAWALA ... DUNAGUAHA

உ

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலா
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியாணுக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி

★


## பரந்தனில்

★ பசளை வகைகள்
★ களை நாசினி
★ கிருமி நாசினி

மொத்தமாகவும் சில்லறையாகவும்
சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளுமிடம்

# தருமராசா நிறுவனம்

கண்டி வீதி,
பரந்தன்.

உ
சிவ சிவ

# திருமுருகன் பெருமை

( திருமுறைக் கலைஞர்
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி 2. )

"முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! — ஒரு கை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்"

— தனிப்பாடல்

## தோற்றுவாய்:

முருகன் - அழகுடையவன். (முருகு+அன்=முருகன்; முருகு- இளமை, அழகு, இனிமை, தெய்வத்தன்மை முதலிய பல பொருள் குறிக்கும் ஒருசொல், ஆகவே, முருகன் என்பது ஒரேதன்மை வாய்ந்த இளமையழகும் தெய்வத்தன்மையும் உடையவன் என்பதாம். இதனை,

"என்றும், இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே! உலையாய் என் உள்ளத்(து) உறை"—என்றார் ஒருபெரியார்.

"சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவம் தன்னில்
ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம்
ஆர்க்குளர் உலகில் அம்மா! ...."

— கந்தபுராணம்

முருகக்கடவுளின் பெருமை கடல் போல விரிந்து நிற்பது; அதனை அறிய எண்ணுவது கடலின் ஆழத்தை அளப்பது போலும்.

"நின் அளந் தறிதல் மன்னுயிர்க்கு அருமை"

— திருமுருகாற்றுப்படை.

ஆயினும், "பெறுமைபெறு நினது புகழ் பேசவேண்டும்" என்றார் வடலூர். இராமலிங்க அடிகளார்.

## முருகப்பெருமானின் தோற்றம்:

பெம்மான் முருகன் பிறவான், இறவான், ஊரிலான், குணம் குறியிலான், பேரிலான் ஆகிய பரம்பொருள்; தேவர்கள் துயர் தீர்க்கும் பொருட்டு எழுந்தருளிய சிவமூர்த்தி. இம்மூர்த்தியே மூவிருமுகங்களும் ஆறிரு புயங்களும் அமைந்த கருணையே திருமேனி உருவாகக் கொண்டு முருகன் என வந்து தோன்றினன்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய."

— கந்தபுராணம்

முருகப்பெருமான் திருவுருவம், உதிரம், என்பு, சுக்கிலம், மூளை, தசை, நரம்பு தோல் என்ற ஏழுவகைத்தாதுக்களைக் கொண்ட மக்கள் உடல்போல் அன்றி, மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்ற ஆறு அத்துவாக்களின் தொகுப்பால் அமைந்த தெய்வீக வடிவம் ஆகும்.

முருகக்கடவுள் திருவடிவில், 11 மந்திரங்களைக்கொண்ட மந்திராத்துவா இரத்தமாகவும், 81 - பதமந்திரங்களைக் கொண்ட பதாத்துவா முடி (சிரசு) ஆகவும்,

51–வன்னங்களை (எழுத்துகளை)க்கொண்ட வன்னத்துவா தோலாகவும், 224–புவனங்களைக்கொண்ட புவனத்துவா உரோமங்களாகவும், 36 – தத்துவங்களைக்கொண்ட தத்துவாத்துவா சுக்கிலம், மூளை, நரம்பு, என்பு, தசை என்ற தாதுக்களாகவும் 5 – கலைகளைக்கொண்ட கலாத்துவா சகல உறுப்புகளாகவும் அமைந்து விளங்கும்.

இவற்றுள் பதம், வன்னம், மந்திரம் இம் மூன்றும் சொல்வடிவாகிய சத்தி புவனம், தத்துவம, கலை இம்மூன்றும் பொருள்வடிவாகிய சிவம் ஆகவே, சிவசத்தி வடிவம் முருகக்கடவுள் வடிவமாகும்.

## முருகப்பெருமானும் சிவபெருமானும் வேறு அல்லர்:

ஒருவன் கூத்திற்குரிய பல வேடங்கள் கொண்டு நடித்தாலும், அவன் தன் தன்மையில் சிறிதும் வேறுபடான். அது போல, இறைவன், பல வடிவு எடுத்தாலும் அவை தன் சக்தியில் காணப்படுபவை; அதனால் தன் தன்மையில் சிறிதும் வேறுபட்டுநிற்கான்; மரமும் அதன் வயிரமும் போல் சிவனும் முருகனும் வேறு அல்லர். ஆகவே, சிவனே குகன; குகனே சிவன்' ஆவன்.

" தனக்குத் தானே மகனாகிய தத்துவன் "

— தணிகைப்புராணம்

சிவபெருமான், சரவணப் பொய்கையின் அருகு நின்று உமா தேவியை நோக்கி, பொய்கையில் விளையாடும் முருகனாகிய குழந்தைகளைச் சுட்டிக்காட்டி,

"(ஆதலின்) நமது சத்தி அறுமுகன்; அவனும் ய'மும் பேதகம் அன்றால், நம்போல் பிரிவிலன்; யாண்டும் [நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான் [சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள [வல்லான்–"

என்றார். (கந்தபுராணம்). ஆகவே, சிவன் செயல் முருகன் செயலே ஆகும்.

## முருகனின் ஆறுதிருமுகம், பன்னிருகை, ஊர்த்தியாதி:

சிவபெருமானின் ஈசானம் முதலிய ஐந்து திரு முகங்களோடு அதோமுகம் (கீழ்நோக்கிய முகம்) ஒன்றும் சேர்ந்து விளங்கும் ஆறு நெற்றிக்கண்களில் தோன்றிய ஆறு தீப்பொறிகளின் திருவுருவமே ஆறுமுகக்கடவுள் ஆவர். ஆதலால், அவர்க்கு இறைவனின் சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவு), பரிபூரணத்துவம் (எங்கும் நிறைந்து நிற்றல்)' அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல்), அலுப்தசக்தி (பேரருள் உடைமை), சுதந்தரத்துவம் (தன்வயத்தனாதல்), அரந்த சத்தி (முடிவிலாற்றலுடைமை) என்ற மேலான ஆறு குணங்களும் (சுத்த சாட்குண்யமும்) ஆறு திருமுகங்களாய் அமைந்தனவாம்.

"அமலர்க்குள்ள மூவிரு குணனும் சேய்க்கு
முகங்களாய் வந்ததென்ன–"

— கந்தபுராணம்

அன்றியும் பிரணவத்தின் வியட்டியாகிய அ, உ, ம, நாதம், விந்து, சக்தி என்ற ஆறும் முருகனின் திருமுகங்களாகவும், அல்லாமலும் பிரணவம் (ஓம்) ஒன்றும், திருவைந்தெழுத்து (சிவாயநம) ஐந்தும் ஆக ஆறும் முருகக்கடவுளின் திருமுகங்களாகவும் அமைந்தன எனப் புராணங் கூறும்.

இவையே அன்றி, காணபத்தியம் (கணபதி), கௌமாரம் (குமரன்), சௌரம் (சூரியன்) வைணவம் (விஷ்ணு) சாத்தேயம் (சக்தி), சைவம் (சிவம்) என்ற இந்த ஆறு வைதிக சமயத்தின் ஆறு தெய்வங்களின் கூட்டே முருகப்பெருமானின் ஆறு திருமுகங்களாகவும் அமைந்தன என நூல்கள் கூறும்.

"ஆறுசமயக் கடவுள் வேறுவேறு அன்றியான்
ஒருவனே அங்கங்கிருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே!......"

—திருப்போரூர் பிள்ளைத்தமிழ்— *(சிறுபறை)*

முருகக்கடவுள் தம் பன்னிரண்டு திருக்கரங்களில் ஏந்திய படைக்கலங்கள் எல்லாம் பற்பல தெய்வங்களின் சக்திவாய்ந்த படைக்கலங்கள் (ஆயுதங்கள்) ஆகும். அவை, ஒவ்வொருவர்களின் தியானத்தில் பலவித மாகத் தோன்றும்.

வலப்பக்கத்திருக்கரங்களில் கொடி, வச்சிரம் அங்குசம், அம்பு, வேல், அபயமும் இடப்பக்கத் திருங்கரங்களில் வரதம்

தாமரை, மணி, மழு, தண்டு, வில்லும் ஆகிய இவற்றை முருகக்கடவுள் தாங்கி விளங்குகின்றார்.

"வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறு லாதவேல் அபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை அறுமுகம் கொண்டுவேள்
[அடைந்தான்."

— கந்தபுராணம்

"பன்னிரு கமல பாணியும் அலற்றின்
குலமும் வேலும் துரோணமும் சரமும்
பாலமும் குலிசமும் பரிசையும் வாளும்
ஆழியும் மழுவும் அபயமும்—வரதமும்"

— திருச்செந்தூர் அகவல்

சண்முகக் கடவுளுக்கு ஊர்தி (வாகனம்) நாரதர் இயற்றிய வேள்வியில் தோன்றிய ஆட்டுக்கிடா, இந்திரனாகிய மயில், சூரபன்பனின் பாதியுடலாகிய மயில், தேவலோகத்துப் பிணிமுகம் என்ற யானை இவையே ஆம்.

இந்திரன் மயில் வாகனம் வலப்பக்கம் தலையும், இடப்பக்கம் தோகையும், சூரபன்மன் மயில்வாகனம் இடப்பக்கம் தலையும் வலப்பக்கம் தோகையுமாக இருக்க முருகன் ஊர்வது.

திருக்கயிலையில் ஐராவணம் என்ற யானை * சிவபெருமானுக்கு ஊர்தியாக உள்ளது போல், ஆறுமுகப் பெருமானுக்குப் பிணிமுகம் என்ற யானையும் ஊர்தியாகும். முகத்தில் முகபடாம், நெற்றிப் பட்டம், கொம்புகளில் பூண்கள், முதலியன பிணிக்கப்படாமல் இயல்பாகவே மேற்படியாவும் அமைந்த யானை பிணிமுக யானை எனப்பெயர் பெறும். இது தெய்வீக யானை ஆகும்.

மயிலும் யானையும் பிரணவ (ஓங்கார) வடிவம். முருகப்பெருமான் மயில் மீது எழுந்தருளி, அதன் தோகைக்குள் அடங்கி நடுவே வீற்றிருக்கும் காட்சி, பிரணவத்தின் மத்தியில் இருப்பதையும், யானை மீது எழுந்தருளி இருக்கும் காட்சி, பிரணவத்தின் உள்ளும் புறமும் வீற்றிருப்பதையும் காட்டி நிற்கும்.

"ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்"-

— அப்பர் தேவாரம்

முருகப்பெருமானுக்குக் கொடி சேவற் கொடி, மயிற் கொடி, ஆண்டலைக் கொடி என மூன்றும் சேவற் (கோழிக்) கொடி –இது சூரபன்மனின் பாதி உடலாகிய கோழி உருவம் எழுதிய கொடி, மயிற் கொடி - இஃது இந்திரனாகிய மயில் உருவம் எழுதிய கொடி.

ஆண்டலைக்கொடி – இது, பேய் முதலிய பலியை நுகராமல் இருக்க, தலை ஆண்மகன் தலையும், உடல் பறவையின் உடலுமாக எழுதிய உருவம் அமைந்த கொடி. இக்கொடியை அக்காலத்து மலை நாட்டு மக்கள் மட்டும் வைத்துப் பாராட்டினர் என்பர்.

இக்கொடிகளே அல்லாமல் முருகனுக்கு ஆட்டுக்கிடா உருவம் எழுதிய கொடியும், யானை உருவம் எழுதிய கொடியும் உண்டு என்பர்.

முருகன் மயிலை ஊர்தியாகக் கொள்ளும் போது சேவல் கொடியாகவும், யானையை ஊர்தியாகக்கொள்ளுங்கால் சேவலும் மயிலும் கொடியாகவும் விளங்கும்.

"பல்பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ"

— திருமுருகாற்றுப்படை

## முருகக்கடவுளின் வேற்படை (வேலாயுதம்)

ஆறுமுகப் பெருமான் நமது திருக்கரத்தில் பிடித்துள்ள அயில்வேல் சத்தி வேல் ஆகும். இது திருமால் கையில் ஏந்தியுள்ள சக்கரப்படை போலவும், சிவபெருமான் கையில் பிடித்துள்ள சூலப் படை போலவும் அன்று; வேத சிவாகமங்கள் புகழும் தெய்வத்து உருவம் எல்லாம் அமைந்து திகழ்வது.

இவ்வேற்படை ஐம்பெரும் பூதங்களை அழிக்க வல்லது; எல்லா உயிர்களையும் ஒருங்கே போக்கவல்லது; எத்தகையோராயினும் அவரது வன்மைகளையும் வரங்களையும் கெடுத்து உயிரைக்கவரவல்லது;

---

* ஐராவணம்—இஃது இரண்டாயிரம் கொம்புகளையுடைய கயிலாயத்து வெள்ளை யானை - (ஐராவதம்—இது நான்கு கொம்புகளையுடைய தேவலோகத்து வெள்ளை யானை.) "அயிரா வணமேறா (து) ஆனே (று) ஏறி அமரர்நாடாளாதே ஆரூர் ஆண்ட, அயிரா வணமே..." என்பது அப்பர் தேவாரம்.

எப்படைகளுக்கும் தலைமை வாய்ந்தது; கதிர்வேல், இரத்தினவேல், மாணிக்க வேல், தங்கவேல், வச்சிரவேல், சிங்கார வேல், வெற்றிவேல் முதலிய பல திரு நாமங்களைப் பெற்றுத்திகழ்வது.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.''

— தனிப்பாடல்

## நவவீரர் - இலக்கம் வீரர்:

உமாதேவியின் காற்சிலம் பினின்று சிதறிய நவமணிகளில் இருந்து தோன்றிய நவசத்திகளிடம் வீரவாகுதேவர், வீர கேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர் வீரராக்கதர், வீரமார்த் தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்ற ஒன்பது வீரர்கள் தோன்றினார்கள். அந்நவ சக்திகளின் வியர்வையினின்று இலக்கம் வீரர்கள் உதித்தார்கள். இவர்களில் முதன்மையான வீரர் வீரவாகு தேவரே ஆவர்

இந்த நவ வீரர்கள் ஆறுமுகப் பெரு பெருமானை எக்காலத்தும் விட்டு அகலாது தொண்டு புரிபவர். இலக்கம் வீரர்கள் முருகனுக்குப்படை வீரர்களாக இருந்து ஏவல் புரிபவர்கள்.

## சண்முகக்கடவுளின் சத்திகள், ஐந் தொழில்கள்:

ஆறுமுகக்கடவுளின் தேவிமார், வள்ளி யம்மையார் தேவயானையம்மையார் என இருவர் ஆவர். முருகப்பெருமானுக்கு வள்ளியம்மையார் இச்சாசத்தியாகவும், தேவயானையம்மையார் கிரியாசத்தியாக வும், சத்திவேல் (வேலாயுதம்) ஞானசத்தி யாகவும், உடனிருந்து தொழில்புரிவர்.

குமாரக்கடவுளின் ஐந்தொழிலில் கோழிக் கொடி படைத்தலையும் மயில்வாக னம் காத்தலையும் சத்திவேல் அழித்தலையும், வள்ளியம்மையார் மறைத்தலையும், தேவ யானையம்மையார் அருளலையும் குறித்து நிற்கும்.

"கோழி பிறப்பு; குலமஞ்ஞை காப்பு; கரம்
தாழும் அயிற்கையில் சங்காரம்; - வாழ்குறவர்
ஏர்மகள் திரோபவம்; இந்திரன் பெண் இன்ப முத்தி
தேர்முருகன் ஐந்து செயல்.''

— தனிப்பாடல்

## முருகன் திருப்பெயர்களில் சிலபெயர் விளக்கம்:

1. முருகன்-தெய்வத்தன்மையும் இளமை அழகும் உடையவன்.
2. சண்முகம்-(ஷட்-சண்) ஆறுமுகங்களை யுடையவன்.
3. கந்தன்–சேர்க்கப் பெற்றவன்; பகை வரை அழிப்பவனுமாம்.
4. குகன்–இருதயக்குகையில் இருப்பவன்; காப்பவனுமாம்.
5. கார்த்திகேயன் – கார்த்திகை மாதர் அறுவரால் வளர்க்கப் பெற்றவன்.
6. காங்கேயன் – கங்கையில் தோன்றிய யன்; கங்கையில் தவழ்ந்தவனுமாம்.
7. சரவணன் – கங்கை நாணல் புல்லில் வளர்ந்தவன்.
8. விசாகன்–மயிலை வாகனமாக உடைய வன்; விசாக நாளில் தோன்றியவனு மாம்.
9. குமரன்–என்றும் இளமையுடையவன்.
10. கடம்பன் – கடப்பமாலையைத் தரித்த வன்.
11. வேள்-விருப்பத்தக்கவன் (முருகவேள்; செவ்வேள்.)
12. சாமி–எல்லாம் உடையவன். (தகப்பன் சாமி; சந்தசாமி.)

முருகக்கடவுளுக்கு இப்பெயர்களே அல்லாமல் சுப்ரமண்யம் (சுப்பிரமணியன்) என்ற ஒரு சிறந்த பெயரும் உள்ளது. (சு–ஆனந்தம், ப்ரம-பரவஸ்து, ந்ய(ண்ய) -அதனினின்று உதித்தது.

யாக காலத்தில் பிற தெய்வங்களை ஒரு முறையே (ஒருதரம்) கூவி அழைக்கப் பெறும். ஆனால் சண்முகக்கடவுளை மட்டும், "சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்ரமண் யோம்!!!" என்று மும்முறை (மூன்று தரம்) அழைக்கப் பெறும். சுப்பிரமணியம் (பால சுப்பிரமணியன் சிவசுப்பிரமணியன், வேங் கட சுப்பிரமணியன்) என்ற பெயர் கூறு வோர் வினைகள்யாவும் விரைவில் போக் குவர்.

"...மூக்கனல் சூல் வேள்வியில் சுப்பிர மணியன்
ஓம் எனவும் முக்கால் கூறும்
இக்கருத்தைத் அறியாமை எவ்வாறு விடுவிப்பது?
இயல்பு...''

— தணிகைப்புராணம்

## முருகக்கடவுள் எழுந்தருளிய ஆறு திருப்பதி:

''சேயோன் மேய மைவரை உலகம்'' என்று தொல்காப்பியர் கூறியபடி மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சிநிலத்திற் குரிய தெய்வம் முருகக்கடவுள் ஆவர் ஆயினும், முருகப்பெருமான் மலையின் இடமே அன்றி எவ்விடத்தும் எழுந்தருளி இருப்பர்.

மதுரைமாநகர் சிவராசதானி என வழங்குவது போல், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினங்குடி, திருவேரகம், குன்று தோருடல், பழமுதிர் சோலை என்ற ஆறு திருப்பதிகளும் முருகக்கடவுளின் ஆறுபடை வீடாம். (படை வீடு. இங்கு இராசதானி.)

ஆறுபடைவீட்டுள் திருப்பரங்குன்றம் மூலாதாரத்தலமாகவும், திருச்செந்தூர் சுவாதிட்டானத்தலமாகவும், திருவாவினன் குடி மணிபூரகத்தலமாகவும், திருவேரகம் அநாதகந்தலமாகவும், குன்று தோருடல் விசுத்தித்தலமாகவும், பழமுதிர்சோலை ஆக்ஞைத்தலமாகவும் விளங்கும. இத்தலங்களில் முருகப்பெருமான் மிகச்சிறப்புடன் எழுநதருளியுள்ளார். இன்னும் முருகக்கடவுள்,

> ''காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
> யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
> சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
> மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்''

எழுந்தருளி அன்பர்களுக்குத் திருவருள் புரிகின்றூர் என்று திருமுருகாற்றுப்படை கூறும்.

## முருகக்கடவுளின் விரதங்கள்:

முருகப்பெருமானுக்குரிய விரதம் சுக்கிரவார (வெள்ளிக்கிழமை) விரதம் கார்த்திகை (கிருத்திகை) விரதம், சஷ்டி விரதம் என மூன்றும்.

விரதம் என்பது ஒரு கடவுளைக் குறித்து ஒருபயன் கருதி, அக்கடவுளைப் பூசித்தேனும் அல்லது வழிபட்டேனும் அன்று பகல் அன்னமின்றிப் பால் பழம் அருந்தி இரவு உறக்கம் இன்றித் தியானம் புரிந்து மறு நாள் பூசை அல்லது வழிபாடு செய்து அன்னம் அருந்துதல் வேண்டும்.

சுக்கிரவாரவிரதம் — இது முருகக்கடவுளைக் குறித்து ஐப்பசி மாதம் முதல் வெள்ளிக் கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக் கிழமை தோறும் விரதம் இருந்து மூன்று வருஷம் பூர்த்தியான பின் விரதத்தை முடித்தலாம். இவ்விரதம் குடும்ப வாழ்க்கை நலனை அதிகரிக்கும்.

கார்த்திகை விரதம் — இது ஆறுமுகக்கடவுளைக் குறித்துக் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் முதலாகத் தொடங்கி ஒவ்வொரு மாதத்துக் கார்த்திகை நாள் தோறும் விரதம் இருந்து பன்னிரண்டு வருஷம் முடிந்த பிறகு விரதத்தை முடித்தலாம். இவ்விரதம் செல்வப் பெருக்கை அளிக்கவல்லது.

சஷ்டி விரதம் — இது கந்தப்பெருமானைக் குறித்து ஐப்பசி மாதம் சுக்கிலபட்சம் (வளர்பிறை) பிரதமை முதல் சஷ்டி திதி வரை 6 — நாட்கள் கொண்ட விரதம். அல்லது ஐப்பசி வளர்பிறை சஷ்டி திதி அன்று விரதம் இருத்தல். இவ்விரதம் ஒவ்வொரு மாத வளர்பிறை சஷ்டி தோறும் விரதம் இருந்து ஆறுவருஷம் முடிவுற்ற பின் விரதத்தை முடித்தலாம். இவ்விரதம் புத்திர விருத்தியைத் கொடுக்கும்.

''சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்'' என்பது ஒரு பழமொழி (சட்டி — இங்குக் கந்த சஷ்டி விரதம். அகப்பை-இங்கு வயிறு. வரும் - புத்திரப் பேறு வரும்.)

## முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரம்:

சண்முகப்பெருமானுக்குரிய ஆறெழுத்து மந்திரங்களில் 'சரவணபவ' 'குமாராயநம:' என்பன வடமொழியில் சிறந்த மந்திரங்கள் ஆகும்.

முருகா என்பது தமிழ் மொழியில் உயர்ந்த மந்திரம் ஆகும்.

சரவணபவ(ன்) - என்பது ச-மங்களம், ர - ஒளி, கொடை, வ - சாத்விகம், ந(ண)— வீரம். பவ (ன்) — உதித்தவன் என்ற பொருளாம்.

பஞ்சாட்சரத்தில் சிவசிவ என்பது சிறந்ததுபோலச் சடாட்சரத்தில் (ஓம்) குமாரா நம! என்பது சிறந்தது. இச்

சிறந்த ஆறெழுத்து மந்திரத்தை நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படை உரையில் கூறுகின்றார்.

"ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தை
குடிகொண் டோனே"

— கந்தர்கலிவெண்பா

குமாராய நம: என்று மனத்தில் செபிப்பவர் அடையும் பயன்கள்:

குமரா நம என்று கூறினல் ஓர்கால்
அமராவதி ஆள்வார்; அன்றி-யமராசன்
கைபுகார்; போரூரன் கால் புகுவர்; தாயுதரப்
பைபுகுதார்; சேரார் பயம்"

— திருப்போர் சந்நிதி முறை – மாலை

"முருகா" என்று காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்க ஓதுபவர் பெறும் பயன்கள்:

முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதலகில்
அருகாத செல்வம் அடைவார்; வியாதி
[அடைந்துறையார்
ஒருகால மும்துன்பம் எய்தார்; பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார்; சமராபுரிப் புண்ணியனே.

— திருப்போரூர் சந்நிதி முறை–பிரபந்தம்

## முருகன் அருள்பெறும் வழி:

உலகம் கண்டு அஞ்சுகின்ற கூற்றுவனின் கோர முகத்தை நாம் காணும் போது முருகா என்று கூறின் முருகனின் ஆறுமுகம் தோன்றும்; அக்கூற்றுவன் நம்முடன் போர்புரிய நேரின், அப்போது முருகா என்று ஓதினுல் அஞ்சல் என அவனது வேல் தோன்றும். ஒருகால் (ஒரு தரம்) முருகா என நினைத்தாலே போதும். அக்கருணை மூர்த்தியின் (முருகனின்) இருகால் (இரண்டு திருவடி) நமக்கு முன்னே வந்து தோன்றி அருள் செய்யும்:

"அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகம் தோன்றும்;
வெஞ்சம ரம்தோன்றில் வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்(று) ஓதுவார் முன்."

— தனிப்பாடல்

முருகனின் திரு நாமம் நமது விழிக்கு மொழிக்கு, பழிக்கு, வழிக்குச் சிறந்த துணை ஆகும்.

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முரு கா எனும்
நாமங்கள்; முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு
தோளும், பயந்த தனி
வழிக்குத் துணை வடி வேலும்செங்
கோடன் மயூரமுமே"

— கந்தரலங்காரம்

மனமே! வினைகப் பலவாறு நினைந்து கெடாதே; இறைவன் அருள்பெற வழி உளது. நீ முருகனை உள்ளன்போடு மனத்தில் நினைந்து யாசகர்க்கு இல்லை என்னுமல் தருமம் செய்க; அப்போது உனது கொடிய தீவினைகளை எல்லாம் ஒழிப்பாய்; ஒழிப்பாய். இதனைத் தவிர வேறு வழி இல்லை.

"கெடுவாய் மனனே! கதிகேள்; கரவாது
இடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்;
சுடுவாய் நெடுவே தனைதாள் படவே
விடுவாய்; விடுவாய்; வினையா வையுமே."

— கந்தரனுபூதி

## முடியுரை:

பெரும் நல்வினைப் பேற்றுத் பெறுதற்கரிய மானுடப்பிறவி எடுத்துச் சைவ சமய ஒழுக்கத்தில் நின்று இறைவன் வழிபாடு புரியும் பேரன்பர்கள் ஒவ்வொருவரும், உலகில் கண்கண்ட தெய்வமாகிய கலியுக வரதனும், மூவர் போற்றும் முதல்வனுமான முருகமூர்த்தியின் பெருமைகளை நன்கு மனத்திற் கொண்டு பக்தி பெருக்குடன் அவனது திருவடிகளைச் சிந்தித்து வந்தித்து, அவனருள் விரைவில் கிட்டும் முருகா என்னும் திருநாமத்தை நின்றும், கிடந்தும், நடந்தும், என்றும் மறவாது அன்புடன் ஓதிப் பெருவாழ்வும் பெரும் பயனும் அடைவார்களாக.

பெருஞ்செலவில் பெரும் பற்றுடன் நிகழ்ந்த பெருஞ்சாந்தி (குடமுழுக்கு) விழா கொண்டருளிய கொழும்பு-காரை நகர், திக்கரை திருமுருகமூர்த்தியின் திருவருள் பெற்று நாமெல்லாம் உய்வோமாக.

### வாழ்த்து:

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க
[வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க;
[செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்கசீர் அடியார் எல்லாம்.

— கந்தபுராணம்

# முருகன் அருட்செல்வர்கள் முருகனைப் போற்றிய வண்ணம்

## = நா. முத்தையா =

திருவருட் சக்தியோடு கூடிய சிவ பரம் பொருளின் வேறுகாதவர் முருகப் பெருமான், நக்கீரர் காலத்திலிருந்தே அவரது புகழ் வளர்ந்து பரவத் தொடங்கியது. அருணகிரியார் காலத்தில் முருகப் பெருமானுடைய புகழ் உச்சநிலை அடைந்தது. பதினாறாயிரம் திருப்புகழ் பாடியும் அருணகிரியாருக்கு முருகப்பெருமானைப் பாடும் ஆசை தீரவில்லையாம். முருகன் புகழ் பாடுவதில் அவரது நா தினவு எடுத்துக் கொண்டே இருந்தது.

அருணகிரியாருக்குப்பின் வந்த புலவர்களோ அருட்கவிஞர்களோ யாராய் இருந்தாலும் முருகன் புகழ்பாடாதவர் இல்லை என்ற அளவுக்கு முருகன் புகழ் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் முருகனைத்தொட்டு பேசுவதிலும் எழுதுவதிலும் இன்பங் கண்டனர்.

தமிழர்கள் முருகனைத் தமக்குரிய தமிழ்த் தெய்வம் ஆக்கிக்கொண்டனர். முருகன் குறிஞ்சிநிலத் தமிழ்த்தெய்வம் என்பதனை மற்றைய சமயத்தவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். தமிழ் இலக்கணம் செய்த பௌத்த, சைன, கிறிஸ்தவப் புலவர்கள் இதனை ஒப்புக் கொண்டே தமது இலக்கண இலக்கிய நூல்களிலும் இதனை எடுத்தாண்டுள்ளனர்.

ஆதிசங்கரர் 1200 ஆண்டுகளுக்கு முன்பு கேரள மாநிலத்திலுள்ள காலடியில் தோன்றியவர். இவரது புகழைக் கண்டு பொறுக்காத அபிநவகுப்தர் என்பவர் அபிசார பிரயோகம் செய்து சங்கரருக்குத் தொல்லை கொடுத்தார். அதனால் சங்கரருக்குச் சயநோய் கண்டது. நோயின் தொல்லையினால் கோகர்ணத்தில் இருந்து அலதிப்பட்டுக் கொண்டிருந்த சங்கரருடைய கனவிலே சிவன் தோன்றினார். ஜயந்திபுரம் என்று அழைக்கப்பெறும் திருச்செந்தூர் சென்று முருகனைத் துதித்தால் நோய் நீங்கும் என்று கூறினார். திருச்செந்தூர் சென்ற சங்கரர் முருகன் திருவடிகளை ஆதிசேடன் பூஜிப்பதைக் கண்ணுற்றார். உடனே சுப்பிரமண்ய புஜங்கம் பாடித் துதிசெய்தார். புஜங்கம் என்றால் பாம்பு என்று பொருள். பாம்பு போல் நெளிந்து வளைந்து செல்லும் விருத்தமானதால் இவற்றுக்குப் புஜங்கம் என்று பெயர். ஒரு பாடல் வருமாறு :

> "மயூராதி ரூடம் மகா வாக்ய கூடம்
> மனோ ஹாரி தேகம் மகச்சித்த கேஹம்
> மஹீதேவ தேவம் மகாவேத பாவம்
> மகாதேவ பாலம் பஜேலோக பாலம்".

மயிலை வாகனமாகக் கொண்ட ஆறுமுகனே வேதங்கள் கூறும் மெய்ப்பொருள் தேவாதி தேவப் பெருமாளாகவும், சிவ பெருமானது திருக்குமாரராகவும், அழகே உருவானவராகவும், பக்தர்களது உள்ளத்திலே என்றென்றும் நீங்காது வீற்றிருப்பவராகவும் விளங்கும் இத்தெய்வமே உலகமெல்லாம் காக்கும் சக்தி மிகுந்த தெய்வம். கண்கண்ட தெய்வம். நினைத்தவர் தம் துயரமெல்லாம் தீர்க்கும் தெய்வம். வேண்டும் வரங்கள் எல்லாம் வாரி வாரி வழங்குந் தெய்வம்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகள் பின்வருமாறு போற்றுகின்றார்

> "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
> ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலன்றே!
> பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டு ஒருநாள்
> சூர்மாதடிந்த சுடர்இலைய வெள்வேலே"

பாறைகளை உடைய பெரிய கடலில் புகுந்து, பண்டு ஒரு காலத்திலே சூரனாகிய மாமரத்தை அழித்த ஒளிபடைத்த இலையையுடைய வெள்ளிய வேல் யாருடையது என்று கேட்பின் சிறப்புப் பொருந்திய திருச்செந்தூரும், திருச்செங்கோடும், திருவெண்குன்றும், திருவேரகமும் ஆகிய இத் திருப்பதிகளில் ஒருபோதும் நீங்காது எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் கையிலுள்ள வேலே என்பர். "வேலை வணங்குவது நமக்கு வேலை" என்று கூறுவார் சைவ எல்லப்ப நாவலர், வேல் என்பது வெல் என்ற அடியிலிருந்து பிறந்தது. வெல் என்ற வினையடி முதல் நீண்டு வேல் என்பதாயிற்று

### திருமந்திரம் அருளிய திருமூலர்

"ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றும்
கூறுசமயக் குருபரன் நான் என்றும்
தேறினர்தெற்குத் திருஅம்பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே."

என்று கூறுகின்றார். ஆறு திருமுகங்களை உடைய செம்பொருட் செல்வன் சிவபெருமானேயாவான். ஐந்து திருமுகங்களுடன் மறைவாகக் கீழ்நோக்கிய திருமுகம் ஒன்று கூட்டி ஆறுமுகங்கள் ஆகும். ஐந்து திருமுகங்களும் ஐந்தொழில் புரிய அமைந்தன. அவையாவன மேற்கு முகம் படைத்தல்; கிழக்கு முகம் காத்தல்; தெற்கு முகம் அழித்தல்; வடக்கு முகம் மறைத்தல்; உச்சி முகம் அருளல்; ஆறுவது திருமுகம் சிவகுரு. எனவே சிவபெருமானுக்கும் ஆறுமுகனுக்கும் பெயர் வேறுபாடு தான். இருவரும் ஒருவரே. ஆற்று நீரும் குளத்துநீரும் போல. ஆறுமுகக் குறிப்பு ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் உண்மையாகும். 'குமரகுருபரன்' என்ற வழக்கினாலும் அறியலாம். இதனை அப்பர் மொழியாலும் அறியலாம்.

"முன்னையார்மயில் ஊர்தி முருகவேள்
தன்னையாரெனில் தானோர் தலைமகன்
என்னையாளும் இறையவன் எம்பிரான்
பின்னையாரவர் பேரெயிலாளரே."

திருமுருகனுக்கும் சிவபெருமானுக்கும் திருப்பெயர் முறை வேறுபாடேயன்றிப் பொருள் வேறுபாடின்று இவ்வுண்மை தேற்றவே திருமுருகப் பெருமான் தெய்வ நாச்சியாரையும் வள்ளிநாச்சியாரையும் ஒருங்கு திருமணம் புரிந்து கொண்டனர். திருமணம் என்பது செவியறிவுறுத்து ஆட்கொள்ளுதல், இருவரும் ஆருயிர்களின் இருவேறு நிலைகளைக் குறிக்கும் குறிப்பாகும். ஒருவகை செம்புலத்தே வருள் வளர்தல் மற்றொரு வகை ஐம்புல வேடருள் வளர்தல். இருவகையினரையும் சிவகுருவாக வந்து ஆட்கொள்பவன் திருமுருகன் ஒருவனேயாம். திருவருளாற்றலின் நிலை பலவாமெனினும் பொருள் ஒன்றேயாம். முழுமுதற் சிவபெருமானின் திருவருளாற்றலையே அவனுக்கு மனைவி மக்களாக உருவகஞ் செய்வர் உண்மை உணர்ந்த நல்லார். அவ்வாற்றலுக்குப் பின்பு வேறோர் மனைவி மக்களாக உருவகிக்கும் மரபு எவ்விடத்திலும் இல்லை, இவ்வுண்மை

"செப்பும் சிவனார் திருவருளே மக்கள்மனை
ஒப்பாம் அவர்க்கவை யின்றோர்."

என்பதனால் நினைவு கூர்க. படிமுறையான் வெவ்வேறு நெறிகளினுள்ளார் அனைவர் கட்கும் சிவகுருவாய் அறுமுகக் குருபரனாய் விளக்கஞ் செய்தருளி அவ்வந்நெறிக்கண் நிற்பவனும் சிவனே. இவ்வுண்மைகளைத் திருவருளால் தேர்ந்து தெளிந்தவர் தென்பால் தில்லைக்கண் திருச்சிற்றம்பலத்தினிடத்தே வேற்றுமையின்றி விரவி நின்றருள்பவன் சிவனே எனவும் அவனே அண்ணலாகவும் விளங்கியருளுகின்றனன் எனவும் திருமுறைகள் ஓதும் செவ்விய நுட்பத்தினை அருளால் உணர்வர்.

பரிபாடல் என்பது சங்க இலக்கியத் தொகை நூல்கள் எட்டில் ஒன்று 'ஓங்கு பரிபாடல்' என்று பாராட்டப்பட்டது, அதில் நப்பண்ணனார் பாட்டு ஒன்று உண்டு,

குறப்பிணாக் கொடியைக் கூடியோய் வாழ்த்துச்
சிறப்புணாக் கேட்டி செவி
உடையும் ஒலியலும் செய்யை! மற்றுஆங்கே
படையும் பவழக் கொடிநிறம் கொள்ளும்
உருவும் உருவத்தீ ஒத்தி! முகனும்
விரிகதிர் முற்று விரிசுடர் ஒத்தி!
எவ்வத்து ஒவ்வா மாமுதல் தடிந்து
தெவ்வுக் குற்றத்துத் திருந்துவேல் அழுத்தி
அவ்வரை உடைத்தோய் நீ இவ்வரை மருங்கில்
கடம்புஅமர் அணிநிலை பகர்ந்தேம்
உடங்குஅமர் ஆயமொடு ஏத்தினம் தொழுதே.

குறப்பெண்ணாகிய பூங்கொடி ஒத்த வள்ளியை மணந்த பெருமானே! எங்கள் வாழ்த்தும் உனக்குச் செவி உணவாக அமையும் ஆதலால் கேட்பாயாக பெருமானே! உனது உடை சிவப்பு, மாலையும் சிவப்பு, உனது வேலும் பகைவரைக் கொல்வதால் ரத்தம் தோய்ந்து சிவப்பாகும், உன் திருமேனியும் செந்தழல் போன்று சிவப்பு, உனது முகமோ விடியற் காலத்திலே விரியும் செங்கதிர் இளஞாயிறு போலும் சிவப்பு, சூரனை வேருடன் வெட்டி கிரவுஞ்சகிரி பிளந்தவன் நீ! இத்திருப்பரங்குன்றத்திலே கடப்ப மரத்தின்கண் எழுந்தருளி இருப்பவனே உன்னை வாழ்த்துகிறோம். கைகூப்பிக் கும்பிட்டு நிற்கிறோம். எங்களுக்கு அருள்வாயாக.

பாரதம் பாடிய பெருந்தேவனார் குறுந்தொகையுள் முருகனைப் பற்றிப் பாடிய செய்யுள் ஒன்று காணப்படுகிறது

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத்தன்ன மேனித் திகழ் ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

தாமரை மலர்போன்ற அழகிய, சிவந்த திருவடியையும் பவழம் போன்ற மேனியையும், ஒளிவீசும் குன்றிமணிபோன்ற சிவந்த ஆடையையும், கிரௌஞ்ச மலையின் நடு இடம் பிளக்க வீசிய ஒளியுடைய நெடுவேலையும், சேவற்கொடியையும் உடைய முருகக்கடவுள் காத்தலால் உலகில் உள்ள உயிர்கள் இன்பமாயிருக்கின்றன; இடையூறில்லை.

நக்கீரர் பாடிய தனிப்பாடல் ஒன்றில்,

காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா! — பூக்குங்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடங்காண்; இரங்காய் இனி.

என்று வேண்டுதல் செய்கின்றார்.

காக்கக் கடமைப் பட்டுள்ளநீ காவாது இருந்தால் அறுமுகவனே! யார்க்குப் பரமாம்! கடம்பமாலை அணிந்தவனே! முருகா! கதிர்வேலா! இது தக்கசமயம் இனியாவது இரங்கமாட்டாயா?

அருணகிரிநாதர் வாழ்ந்தகாலம் பதினைந்தாம் நூற்றாண்டு ஆகும். இளம் வயதில் காமவலையில் அகப்பட்டார். பின்னர் அதிலிருந்து மீண்டு திருவண்ணாமலைத் திருக்கோயிலின் வடவாசலில் தவமிருந்தார். வழிவழியாக முருகன் அடிமை இவர் ஆதலின் அப்பெருமான் இவர் முன்தோன்றி இவருக்கு அருள் புரிந்து திருப்புகழ் பாடச் செய்தார். "பத்திதரு முத்திநகை அத்தி இறைவா" அடி எடுத்துக் கொடுத்தார் முருகப் பெருமான். அருணகிரியாரின் கதிர்காமத் திருப்புகழ் ஒன்றைக் கீழே காண்க.

திருமகள் உலாவும் இருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானும் மிகுதிபெறுபாடல்
தெரிதருகுமாரப் பெருமாள்காண்
மருவும் அடியார்கள் மனதில் விளையாடும்
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணி அருவிசூழ
மருவுகதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு பட அசுரர்மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறைவாரி விரவுசடைவேணி
அமலர் குருநாதப் பெருமாள்காண்
இருவினையிலாத தருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதிபார
இருதன விநோதப் பெருமாளே.

இலட்சுதேவி விளையாடும் இருதிருப்புயமுடைய திருமாலின் அழகியமருமகன் என்னும் திருநாமம் உடையவன் நீ-மண் உலகிலும் விண் உலகிலும் மிக்க பொலிவு பெறு பாடல்களை அளித்தருளிய குமாரப் பெருமாள் நீ. உன்னைசசேர்ந்த அடியார் தம் மனதில் விளையாடும் பச்சைமயில் ஏறும் பெருமாள் நீ. மணியும் முத்தும் வீசி அழகிய அருவிசூழ விளங்கும் கதிர்காமம் எனும் தலப்பெருமாள் நீ. பெரிய மலைகள் பொடிபட அசுரர் மாள, போர் செய்த வீரப்பெருமாள் நீ. பாம்பு, நிலவு, கங்கை நீர் இவைதரித்த சடையுடைய குற்றமற்ற சிவனின் குருநாதன் நீ இருவினை இல்லாதவர்களும், கற்பகத்தருவை விட்டு நீங்காதவரும் ஆனதேவர்குல அரசன் தேவேந்திரனுக்கும் பெருமாள் நீ. வில் ஏந்திய வேடர்மகள் வள்ளியின் பாரமிக்க கொங்கைகள் இரண்டிலும் களிகூறும் பெருமாளே.

ஓம்

# செவ்வேளுஞ் செந்தமிழும்

— புலவர் பாண்டியனார் இரத்மலானை —

செவ்வேளென்னுந் தெய்வத்துக்குத் தமிழகத்திலே கோயிலும் வழிபாடும் அன்பரும் பல்கிப் பெருகியிருத்தல் இந்தியாவில் ஏனைய இடங்களிற் காணப்படுவதில்லை. இது பிள்ளைப் பெருமானுக்குத் தமிழகத்தோடுந் தமிழரோடுந் தமிழ் மொழியோடுமுள்ள தொடர்பு தொன்மையும் முதன்மையும் வாய்ந்ததென்பதனைக் குறிக்கின்றது.

செநதமிழ் மொழியிலே அப்பெருமானுக்கு முருகன், வேள், குழகன், வேலன், சேய், சேயோன், ஆறுமுகன், பன்னிருகையன், சேவலங் கொடியோன், மயிலூர்தி, வள்ளி மணாளன், குருபெயர்க் குன்றங் கொன்றோன், சூர்மாத்தடிந்தோன் என இன்னபல பெயர்கள் வழங்குகின்றன. இவனே பிள்ளைப்பெருமாள் எனவும் நல்ல பெருமாள் எனவும் வழங்கப்படுவான்.

தென்னகம் புகுந்த வடமொழியாளருந் திருமுருகன் சிறப்புணர்ந்து தம் வடமொழியிலே அயனுக்குப் பலவாறு புகழ்மாலை புனைந்துள்ளனர்.

ஆயினும் அக்கடவுளுக்குத் தனது செந்தமிழ் மொழியிலே கனிந்த ஆர்வம் இயல்பாக இருத்தல் போகப் பிறமொழியிலிருக்குமென்பது தோன்றவில்லை.

பண்டு பாண்டியர் புரந்த பைந்தமிழ்க் கழகத்திலே மூவெயி லெரித்த முதல்வனோடும் ஏனைய நல்லிசைப் புலமைச் சான்றோர் பலரொடும் வீற்றிருந்து தமிழாராய்ந்தான் முருகவேள். அப்பெருமான் அவ்வாறு வடமொழியாராய்ந்திலன்.

புலத்துறை கண்ட புலவர் பெருமானாகிய சேயோன் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தன் புகழ் நினைந்துருகிப் பாடிய திருமுருகாற்றுப்படை யென்னுஞ் செந்தமிழ்ப்பாச் செவிமடுத்துத் தீவிய தமிழ்ச் சுவையிலே திளைத்து அருள் சுரந்த திருவுளம் திருவண்ணாமலை அருணகிரிநாதரது அன்பிலே திளைத்ததாயினும் அவர் பாடிய திருப்புகழ் பாடற் சொற்சுவையிலே திளைத்திலது. அவை பலவகை வண்ணங்களோடு பொருந்தியிருந்தாலும் அவற்றிலே வடசொற் கலப்பு மிகுதியாற் செந்தமிழ்ச் சுவை குன்றியதே அதற்குக் காரணம்.

இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முருகன் மதுரையிலே உப்பூரி குடிகிழார் என்னும் அன்பர்க்கு மகனாகத் தோன்றி ஊமைப் பிள்ளையாயிருந்து ஐந்தாண்டுக் குழந்தைப் பருவத்திலே பாண்டியன் கழகப் புலவராக வீற்றிருந்து நக்கீரனார் கண்ட இறையனார் களவியலுரை கேட்டு மகிழ்ந்து நற்சான்றளித்த செய்தி அறிஞர் பலராலும் அறியப்பட்டது.

முருகன் அவ்வாறு ஊமைப் புலவராய் உருத்திரசன்மரெனப் பெயர் பெற்றும் புலவர் பெருமக்களாற் போற்றப்பட்டிருந்த நாளையிலே தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் கண்ட முப்பாலெனப்படுந் திருக்குறளைக் கேட்டு மகிழ்ந்து செய்யுளாற் பாராட்டுரை யெழுதிக் கொடுத்து அந்நூலின் ஒப்பற்ற பெருமையை உலகிற்குணர்த்தினான்.

அந்நாளையிலே பிள்ளைப் பெருமான் பாண்டியன் வேண்டுகோட்கிணங்கி அகநானூறென்னும் நெடுந் தொகையைத் தொகுத்தருளினான். எட்டுத் தொகை நூல்களுள் அகநானூறு ஏழாவது தொகை நூல்.

பழம் பனுவல்களாகிய எட்டுத் தொகை நூல்களுள்ளும் பரிபாடலுமொன்று. பரிபாடற்றொகை பாட்டாற் பெயரெய்திற்று பரிபாடலென்பது தமிழ்ப் பாக்களுள் ஒரு

வகை, பரிபாடற்றொகை நூலுள் எழுபது பரிபாடற் பாக்கள் உள்ளன. அவையெல்லாங் கடவுளுங் காதலும் பொருளாகப் பாடப்படுவன. எழுபது பரிபாடலுள்ளுந் திருமாலுக்கு எட்டுப் பாடலுஞ் செவ்வேளுக்கு முப்பத்தொரு பாடலுங் காடுகிழாள் என்னுந் தெய்வத்துக்கு ஒரு பாடலும் வையையாற்றுக்கு இருபத்தாறு பாடலும் மதுரைக்கு நான்கு பாடலுமிருந்தன. இவற்றுளெல்லாஞ் செவ்வேள் பாடலே தொகை மிக்குள்ளனவென்பதனை நோக்குங்கால் அந்நாளையிலே செவ்வேள் கோயிலும் வழிபாடும் வழுத்தற் செய்யுட்களும் ஏனைய கடவுளருளுடையனவற்றைக் காட்டிலும் மிகவழக்காற்றிலிருந்தது புலனாகும்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையுள் முதற் செய்யுள் செவ்வேளின் மேல் அமைந்துள்ளது. அதனைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனாரென்னும் பெரும்புலவர்.

பிற்காலத்திலும் பொய்யாமொழிப்புலவரிடந் தன்னைப் பற்றிய செந்தமிழ்ச் செய்யுள் பெறும் பெருவிருப்பத்தால் அவரைத் தனக்கு முட்டையெனப் பெயர் வைத்துக் கொண்டே வேட்டுவனாகி முருகன் காட்டு வழியிலே வலிந்தாட் கொண்டருளிய செய்தி புகழ் பெற்றது. அப்பொழுது பொய்யாமொழிப் புலவர் முட்டையைப் பாடிய வெண்பா இது:

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானகத்தே
என்பேதை செல்லற் கியைந்தனனே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு;"

இது அகத்திணைப் பொருள் பற்றியது. பாட்டுடைத் தலைவன் முட்டை.

முட்டையும் பொய்யாமொழிப் புலவர் மேல் அவர் பாடிய அகத்திணைப் பொருள் பற்றிய பாடலொன்றும் பாடினான். அவ்வெண்பா இது;

"விழுந்ததுளி மீவிசும்பில் வேமென்றும் வீழ்ந்தால்
எழுந்து சுடுமென்று மேங்கிச் செழுங் கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்."

இவையிரு வெண்பாவுந் தலைவியுடன்போக்கின் கண் மகளது பிரிவாற்றாத நற்றாய் புலம்பல் பொருளாகச் செய்யப்பட்டுள்ளன.

புலவர் பாடலில் உயர்வுநவிற்சியென்னும் அணியும் வேட்டுவன் பாடலிலே தற்குறிப்பேற்றம் என்னும் அணியும் அமைந்துள்ளன. இதனால் வேட்டுவனும் புலவனாகின்றான்.

இவ்வாறு தெய்வச் செந்தமிழ் மொழிக்குச் செவ்வேட் செல்வனோடுள்ள தொன்மையும் உரிமையுஞ் சிறப்பும் வாய்ந்த தொடர்பு போலுந் தொடர்பு வடமொழிக்குக் காட்டலியலாது.

அவ்வாறிருப்பவும் அக்கடவுளுக்குக்கோயிலெடுத்து நடுகல்வார்ப்பு நட்டுச் சிறப்புச் செய்யின் அவனுக்குப் புனலாட்டுதல் புத்தாடை புனைதல் புதுமலர் ,தூவுதல், பொங்கல் படைத்தல், புகழ் வழுத்தல் சுடர் விளக்குக் கொளுத்தல் தூநறும் புகையிடுதல் என்றிவை முதலிய வழிபாடுகளைச் செந்தமிழ் மொழிச் சொற் செப்புதலோடு செய்தலுஞ் செய்வித்தலுமின்றி வடமொழிச் சொற்கொடு செய்தலுஞ் செய்வித்தலுமாயின் அவை அப்பெருமானுக்கு மகிழ்வும் அருளும் உண்டாக்கமாட்டாவாம். அதனால் அக்கடவுளை மகிழ்வித்துத் திருவருள்பெறக் கடவோமென்பார் செந்தமிழ் மொழிச் சொற் செம் மலரால் வழிபடுதலும் வழிபடுவித்தலுமே வேண்டப்படும், அவ்வாறே பண்டு தமிழகத்திலோ நடைபெற்று வந்தன.

தமிழகத்துக் கோயில்களில் வேற்று மொழிச் சொல்லால் வழிபாடு செய்யுமுறை தொன்றுதொட்டு வரும் வழக்கமன்று. இடைக்காலத்திலே தொடங்கிப் பன்னூற்றாண்டாக வழங்கி வருவதனைத் தொன்று தொட்டு வரும் வழக்கென்றால் அறியாமையாம்.

நாட்டுக்கும் ஊர்க்குங் கோயில்களே முதன்மையில்லமெனக் கொண்டால் கோயில் வழிபாட்டுக்குரிய மொழியே அந் நாட்டுக்கும் ஊர்க்கு முதன்மை வாய்ந்த மொழியாம். அம்மொழி வழங்கு மக்களே அந்நாட்டுக்கும் ஊர்க்கு முதன்மைக் குடி மக்களாவர்.

இடைக்காலத்திலே வந்தேறிய மாக்கள் சூழ்ச்சித்திறனாலே கோயில் வழிபாட்டுக் குரிய முதன்மையைத் தமிழ்மொழி படிப்படியாக இழக்கலாயிற்று. அதற்குடன்பட்டிருந்த இற்றத்தாலே தமிழருந் தம்மைத்தாம் ஆளுமுதன்மையைப் படிப்படியாக இழுக்கலாயினர். வடமொழிக்கும் வடமொழியாளர்க்குமே முதன்மை கைம் மாறிற்று. பின்பு தமிழ்மக்கள் முகம்மதியர்க்கும் வெள்ளையர்க்கும் அரசியலடிமைப் படலாயிற்று, இன்று முற்றாக அடிமைத் தளையினின்றும் விடுபட்டிலர்.

இதனுடைய நுட்பமான காரணத்தைத் தமிழரிற் பெரும்பான்மையோர் இன்னும் உணர்ந்திலர்.

இதனை அவர் நன்குணரும் வரைத் தமிழர் தம்மைத்தாமே ஆளுமுதன்மை பெறுதல் அரிதினுமரிதாம்.

இதற்கு உலகில் ஆளுமுதன்மையி லுள்ள ஆளினமனைத்துஞ் சான்றாகும்.

இடைக்காலத்திலே தமிழகத்தின் வடபாற் கூறாகிய தொண்டைநாடு கைப்பற்றிய பல்லவர் குலத்துக்காடவ மன்னர் தம் முதன்மையை நிலைபெறுத்தற் பொருட்டுத் தம்மொழியாகிய வடமொழியாற் கோயில் வழிபாடு நிகழ்த்துவித்தனர். அஃதறியாத முடியுடைமன்னர் மூவரும் அக்காடவர் வீழ்ச்சிக்குப் பின்னர் அவரேபோலத் தாமும் வடமொழியாற் கோயில் வழிபாடு நிகழ்வித்தனர். அதனாலே தமிழகத்திலே தமிழ்மொழியுந் தன் முதன்மையிழந்தது; தண்டமிழ் மன்னருந் தாழ்வடைந்து தங் குடிபொன்றினர். தமிழ்க் குடிமக்களும் வளங்குன்றி நலிவெய்துவாராயினர்.

தமிழகத்திலே தமிழராலே தமிழர் பொருட்டு வாழ்கின்ற எந்தக்கடவுளின் வழிபாட்டுக்குந் தமிழ்மொழியே கட்டாய மொழியாகவுந் தலைமை மொழியாகவு மிருத்தல் வேண்டும். அதற்குக் குறுக்கிடுகின்ற வடநூற்படைப்புங் கட்டளையும் வடவர்க்கன்றித் தமிழர்க்காக வெனத் தள்ளல் வேண்டும்.

வடமொழியால் வழிபட்டால் அதனை ஏற்றுக்கொள்வேன். பிறமொழியால் வழிபடுவது எனக்கு விருப்பமானதென்று கடவுள் சொல்லமாட்டார். எம்மொழியில் வழிபட்டாலுங் கடவுளுக்கு மகிழ்ச்சி விளைவிப்பதேயாம் கடவுள் எல்லாமக்களுக்கும் பொதுவன்றி ஒருசாரார்க்கு மட்டும் உரியதன்று. ஆகவே தமிழர் கோயில்களிலே தமிழ்மொழியால் வழிபாடு செய்யாது வடமொழியால் வழிபாடு செய்தல் வேண்டு மென்பவர் கடவுளையுந் தமிழரையும் ஏமாற்றிப் பிழைக்கின்றவராகவே யிருப்பார்.

அயராது சூழ்ச்சியை அறிந்து திருத்துமெண்ணம் இல்லாமலே தமிழர் கடவுளுக்குக் கோயிலெடுத்தலுங் குடமுழுக் காட்டுதலு மெல்லாம் வெறுஞ் செயலன்றி உறும் பயனில்லை.

தன்னை முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்குமுருகன் ஆளுடைய பிள்ளையாராய்வந்து தேனினுமினிய பல் லாயிரஞ் செந்தமிழ்ப் பாடல்கள் பாடிப் பிஞ்ஞகனைப் பெரிது மகிழ்வித்து மகிழ்ந் தான். அத்தகைய செம்மலையும் அனேற் றண்ணமலையும் ஆர்வத்தோடு அருந் தமிழ்ச் சொற்களால் வழிபடுங்கால் அவர் களுடைய திருவுள்ளங் கனிவுறுதலல்லது துனியுறுதலாகுமோ?

தமிழகத்துக் கோயில்களிலே தமிழ் மொழியாலன்றி வேறெம்மொழியால் வழி பாடு வைத்துக்கொண்டாலும் அது தமிழரையுந் தமிழ்மொழியையும் இழிவுபடுத்துவதேயாம்.

கோயில்களிற் கடவுளுக்கு வழிபாட்டு மொழியாகுந் தமிழ்மொழியிலே தமிழ் நடைப்படுத்திய வடசொற்களுங் கடவுளுக்கு மகிழ்ச்சி பயவாவாம். எல்லாச் சொற்களுந் தூய தனித் தமிழ்ச்சொற்களாகவேயிருத்தல் வேண்டும். வடமொழியால் வழிபாடு செய்யும் வடமொழியாளர் தமிழ்ச்சொற்களை வடசொன்னடைப் படுத்தி வழங்குவாரா?

**செவ்வேள் வாழ்க!**

**செந்தமிழ் வாழ்க!!**

## காரை அபிவிருத்திச் சபையின்

1974/75 வருட அலுவலர்கள்

| | |
|---|---|
| தலைவர்: | திரு. ஆ. ச. ச. இராசரத்தினம் |
| உபதலைவர்கள்: | திரு. க. விஜயசிங்கம் |
| | திரு. பொ. வன்னியசிங்கம் |
| | திரு. வி. மு. பேரம்பலம் |
| பொதுச் செயலாளர்: | திரு. நா. பொன்னையா |
| உதவிச் செயலாளர்கள்: | திரு. அ. தவபாலன் |
| | திரு. க. பரஞ்சோதி |
| பொருளாளர்: | திரு கா. சண்முகராசா |
| உப-பொருளாளர்: | திரு. த. கணபதிப்பிள்ளை |
| ஆசிரியர் 'காரை ஒளி' | திரு. ஐ. தி. சம்பந்தன் |

9-பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.


''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு''
''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

*Best Compliments*

*from*

# MAHALATCHUMI STORES

( Prop: A. Thillaiampalam )

**Karadipokku**

**KILINOCHCHI.**

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
பாலும் தேனும் உடலுக்கு உறுதி
வேலும் மயிலும் உயிருக்கு உறுதி

உங்களுக்குத் தேவையான உள்ளூர் விளைபொருள்

**ஏலம், கறுவா, கராம்பு,**

**ஜாதிப்பூ, ஜாதிப்பருப்பு, மிளகு, கோப்பி**

சகாயமாகக் கிடைக்குமிடம் :

# தேவராஜா ஸ்ரோர்ஸ்

91 - A, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7560

"வேழ முகத்து விநாயகனைத் தொழத்
வாழ்வு மிகுந்து வரும்"
"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடுந் தொடர்ந்த வினைகளே!

பலசரக்கு ஓயில்மன் ஸ்ரோர்ஸ்
பத்திரிகை விற்பனையாளர்

# ஆறுமுகம் பிரதர்ஸ்

**கண்டி வீதி, பரந்தன்.**

# திருவாசக ஆராய்ச்சியுரை

( முதலாம், இரண்டாம் பாகம் )

காரைநகர், சங்கநூல் செல்வர்

பண்டிதமணி

சு. அருளம்பலவனார் அவர்கள்

எழுதிய

## “திருவாசக ஆராய்ச்சியுரைகள்”

### இப்பொழுது விற்பனையாகின்றது

இதுவரையும் வெளிவந்துள்ள ஆராய்ச்சி உரைகள் அனைத்திலும் முதன்மையானதும், விளக்கம் மிகுந்ததும், அரிய தமிழில் ஆக்கப்பட்ட உரையென ஈழத்து, தமிழகத்துப் பேரறிஞர்களால், போற்றிப் பாராட்டப்பட்ட திருவாசக ஆராய்ச்சியுரை இதுவேயாகும். காரைநகரில் சைவமும் தமிழும தழைத்தோங்கிய வரலாறு என்ற பெருமைக்கும் புகழுக்கும் இந்நூல் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது

**சைவ உலகம் போற்றும் இந்நூல் எல்லாத் தமிழ் மக்களிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும்.**



உ

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைத்தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே!

*with the best Compliments*

*of*

# K. K. SANGARAPPILLAI

( Prop: S. Ratnam )

**114, Hospital Road,**

**JAFFNA.**

Phone: 505

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"
"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே"

# KANESAN STORES

*Prop*: K. S. Kanagasabai

Direct Importers, Wholesalers,
Retailers in Textiles & Sundries

63, K. K. S. Road,
JAFFNA.

*T'grams*: "KANESANTEX" *T'phone*: 7169

*Branch*:

78, K. K. S. Road, JAFFNA.

ஐயா! தணிகைமலைத்தேனே! உனையன்றி
மெய்த்தெய்வம் வேறுண்டோ? மேதினியில் - பொய்யுலகில்
தட்பேது நான் செயினும் சண்முகனே! நீ பொறுத்து
அப்பா எனைக் காத்தருள்.

சரணம்! சரணம்!! முருகா !!!

*With the Best Compliments of*

# MANI GROCERIES

(Prop: K. Sivasubramaniam)

42/1, HIGH LEVEL ROAD,
MAHARAGAMA.

# திருக்கார்த்திகை

# தீப மகிமை

வரலாற்றிற்கு முந்திய காலந்தொட்டே சைவ சமயத்தவர்கள் மகத்துவமும் புனித முமான பல பண்டிகைகளைக் கொண் டாடி வருகின்றனர். அவற்றுள் திருக்கார்த்திகைத் தீப விழாவும் ஒன்றாகும். இது கார்த்திகை மாதத்திலே வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் கொண் டாடப்படும். கார்த்திகை நட்சத்திரத் திற்கு முன்னர்ப் பரணியும், பின்னர் ரோகிணியும் வருவதுண்டு. கார்த்திகை மாதப் பூரணை சில காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடனும், சில வேளைகளில் பரணியோடும், சில சமயம் ரோகிணி யுடனும் கூடி வரும். இவற்றுள் கார்த் திகையுடன் பௌர்ணமி சேர்ந்தால் அது பத்மயோகம் எனப்படும். ரோகிணி நட்சத் திரத்தோடு சேர்ந்து வந்தால் அது மகா கார்த்திகை என்றழைக்கப்படும். இப்புண் ணிய நாள் திருக்காத்திகை விரதம், கார்த் திகை விளக்கீடு, கார்த்திகை தீபம் என்றெல் லாம் அழைக்கப்படும். இது பார்வதி மணாளன் தேவாதி தேவன், மன்மதனைச் சுட்டெரித்தவன், கைலாய நாதன், ஞானத் தையும் பேரானந்தத்தையும் அளிப்பவன். பாவங்களை ஒழிப்பவன், உயிரினம் அனைத் தையும் காப்பவன், கையில் திரிசூலந் தையும் டமருகத்தையும், அரையிலே புலித் தோலையும் அணிந்திருப்பவன், வழிபடு கின்ற தெய்வங்களுள் மிகச் சிறந்தவனாக இருப்பவன், மங்களகரமான குணங்கள் நிரம்பப் பெற்றவன், கங்கை பாயும் சடா முடி உடையவன் என்றெல்லாம் ஏற்றிப் போற்றும் சிவபொருமானுக்கும்; வள்ளி மணாளனாகிக்குன்று தோறும் நின்றாடும் குமரப்பெருமானுக்கும் திருக்கார்த்திகைத் தீப தினம் மிக உவந்ததாகும்.

திருஞானசம்பந்தப் பெருமான் குடத் திலே அஸ்திரூபமாக இருந்த பூம் பாவையை எழுப்பும் பொருட்டுத் தாம் அருளிச்செய்த திருமயிலைத் திருப்பதிகத் திலே திங்கள் தோறும் செவ்வனே நடை பெறும் திருவிழாக்களைப் பற்றிக் கூறியிருக் கின்றார். அதிலே, "வளைக்கை மடநல்லார் மாமயிலைவன் மறுகில், துளக்கில் கபாலீச சரத்தான் தொல்கார்த்திகை நாள் தளத் தேந்திளமுலையார் தையலார் கொண்டா டும் விளக்கீடு காணாதே போதியோ பூம் பாவாய்" என்ற தேவாரத்தில் கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார். மேலும் இத்தேவாரத்தில் கையா ளப்பட்டிருக்கும் 'தொல்கார்த்திகை நாள்' என்ற சொற்றொடரிலிருந்து கார்த்திகை விளக்கீட்டின் பழமையும் வெள்ளிடை மலை போல் விளங்குகிறது. இவ்விழாவிற் பெண் கள் வரிசையாக விளக்கேற்றி வைத்து வழிபட்டு வருதலைத் "தையலார் கொண் டாடும் விளக்கீடு" என்று பெருமை பிறங்கப் பேசுகின்றார். இவ் விழா பண் டைக்காலந்தொட்டே பக்திசிரத்தையோடு கொண்டாடப்பட்டு வருகின்றது என்று நக்கீரர் அகநானூற்றிலும், "அணிமலையில் தீயே போல் நாடறிகெளவை தரும்" என முத்தொள்ளாயிரச் செய்யுள் அடிகளிலும் "கார்த்திகை காற்றிற் கழி விளக்கைப் போன்றனவே" எனக் களவழி நாற்பதி லும், புறச்சமய நூலாகிய சீவகசிந்தா மணி என்ற காப்பியத்திலும்,

"அகனக ரெல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர் மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணி விளக்கங்காட்டி......"

என்று சிலப்பதிகாரத்திலும்

"இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க் கைதொழுது
என்று நெடுநெல்வாடை ஆகிய சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முழுமுதற் பரம்பொருளை வழிபடுவதற்கு நம்முன்னோர் சிறந்த திருவுருவமாகக் கொண்டது ஒளியினையே. அன்று முதல் இன்றுவரை ஒளிவழிபாட்டுடினைத் தமிழினம் கைக்கொண்டு ஒழுகி வருவது பாராட்டுதற்குரியது. இறைவன் சோதியே சொரூபமாக உள்ளவன். ''கற்பனைக் கடந்த சோதி''; ''பாசம் பரஞ்சோதி''; ''தூண்டு சுடரனைய சோதி''; ''சோதியே சுடரே சுடரொளி விளக்கே'' ''ஆதியு அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி''; ''சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே''; ''மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே''; ''கேழில் பரஞ்சோதி''; ''சோதி திரம்பாடி''; ''திருவையாறகலாத செம்பொற்சோதி''; தீமேனியானுக்கெ சென்றுதாய்'' கோத்தும்பி''; தேச விளக்கெலாமானாய் நீயே''; ''ஒளிவளர் விளக்கே''; மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே ''மாது பாதி விளங்கு சோதி கொண்மேனியாய்''; ''தோற்றச் சுடர் ஒளியாய் ''வெண்ணீற் செம்மேனியர்''; ''செழுந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி''; ''எரிசுடரார் நின்ற இறைவா போற்றி''; ''ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் போற்றி''; என்றெல்லாம் தேவார திருவாசகங்களும், கந்த புராணம், அருணகிரிப்புராணம் முதலியனவும் இறைவன் சோதி வடிவானவன் என்று கூறுகின்றன.

எப்பொருளையும் விளக்கம் காட்டுவது ஒளி. ஒளி இல்லாவிட்டால் அப்பொருளைப் பார்க்க முடியாது. ஒளிச் சக்தியினாலேயே கண்கள் பிற பொருள்களை உணருகின்றன. சூரியன், சந்திரன், அக்கினியிவற்றின் ஒளியுதவி கொண்டே கண்கள் பொருள்களை அறிகின்றன. இதிலிருந்து ஒளியின் மகிமை நன்கு புலப்படுகிறது. தீபமேற்றுதல், தீப தரிசனம் ஆகியன பாப நிவிர்த்தி பெற வழிகோலுகின்றன. சிற்சத்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை அளிக்கிறது. கடவுளைக் காண்பதற்கு அவனருள் வேண்டும். ''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்று திருவாசகந் தந்த மணிவாசகரும் கூறுகிறார். இந்தப் பின்னணியிலேயே அப்பர் சுவாமிகளும்,

'' உடம்பெனு மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே'' என்றார்

எமது உடல் ஒரு மனை உள்ளம் பாத்திரம். அதில் உணர்வாகிய நெய்யை ஊற்றி உயிரென்னும் திரியை இட்டுப் பிராணன் என்னும் காற்றை நிறுத்தி அறிவுச் சுடரை ஏற்றி அன்பினால் தூண்டிக்கொண்டிருத்தல் வேண்டும். அப்படி இடைவிடாது தூண்டிக் கொண்டிருப்பின் ஆணவமாகிய மாய இருள் அகன்று சிவபரஞ்சோதி தரிசனங் கிடைக்கும். இதற்குச் சான்றுபகர பூதத்தாழ்வார் பாடிய பாடலும் உறுதுணையாக உண்டு. அதாவது:

''அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்''

இதனால் ஈசனை ஒளிவடிவில் கண்டுதொழுது மகிழும் சைவமரபோடு ஒட்டியதே திருக்கார்த்திகைத் தீப விழா. இந்நாளில் எங்கும் விசேஷமாக விளக்கேற்றி மக்கள் குதூகலமாகக் கொண்டாடுகின்றனர்.

பிரமா விஷ்ணு ஆகிய இருவருக்கும் உமைபங்கனாகிய சிவபெருமான் சோதி ரூபம் காட்டியபொழுது, அச்சோதனையைத் தமக்கு என்றுங் காட்டியருள வேண்டும் என்று பிரார்த்தித்து நின்றனர். அப்பொழுது எம்பெருமான் ''கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம்'' என்று அவர்களிருவருக்கும் கூறியருளினார். இது திருக்கார்த்திகைத் தீபமாயிற்று என்பர். அப்பர் சுவாமிகளும்,

''எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பமேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சடர்விளக்காய் நின்றாய் நீயே''

என்று பக்திமேலிடப் பாடினார்.

இத்திருக்கார்த்திகைத் தீபோற்சவம் வீடுகளிலும் எல்லாத் திருக்கோயில்களிலும் பெரும் விழாவாக நிகழும். சிவாலயங்களிலும் இல்லங்களிலும் நடைபெறும் தீபோற்சவ விழாவை சர்வாலய தீபம்

என்று கூறுவர். திருக்கார்த்திகை விரத தினத்தில் முருகன் கோயில்களில் நடைபெறுவதைக் குமாராலய தீபம் என்றும் கருதப்படும் திருமாலுக்கு தீபோற்சவ விழா எடுப்பதை விஷ்ணுவாலய தீபம் என்றும் அழைப்பதுண்டு.

இந்த திருக்கார்த்திகை உற்சவத்தைக் குறிக்கும் பொருட்டு தீபங்களைக் கொண்டு உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் சொக்கப் பானையை எரிப்பது வழக்கம். "சொக்கப் பானை" என்றோ "சொர்க்கப்பானை" என்றோ கூறுவது சரியல்ல. "சுட்கப்பனை" என்ற சொல்லு திரிபு பெற்று" "சொக்கப்பானை" என வழங்கப்படுகிறது. சுட்கம் என்பது வரட்சி. உலர்ந்த தென்னை, பனை, கமுகு. வாழை இவற்றின்தண்டினைத் தீப தண்ட மாகக் கோயிற் சந்நிதானத்தில் நட்டு உயர்ந்த பனையோலை முதலிய வற்றால் விமானம் போல உயரமாக மூடிக் கட்டிய சொக்கப்பனை எனப்படுஞ் சுட்கப்பனையில் தீமூட்டி, அது சுவாலித்து எரியும்போது சோதி சொரூப மாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்துப் பக்தர்கள் வழிபடுவர். நினைக்க முத்தி தருந்தலமாகிய திருவண்ணாமலையில் தான் இம் மகோற்சவம் புராதன காலந்தொட்டுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. "அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே" என்கிறார் மூன்று வயதில் ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். "திருப்புகழ்" என்ற அமுதத்தை எமக்கு வாரி வழங்கிய அருணகிரிநாதர் பிறந்து வளர்ந்ததும் எல்லாள மகாராசன் கட்டிய கோபுரத்திலிருந்துதித்தபோது ஆறுமுகப் பெருமானின் திருக்கரத்தால் தாங்கி ஆட் கொள்ளப்பட்டதும். திருப்புகழைப் பாடத் தொடங்கியதும் இத்திருவண்ணாமலையில் தான், திருவண்ணாமலைமேல் உள்ள தீபதாசனக் காட்சியைப் பக்தர்கள் "அண்ணாமலையானுக்கு அரோகரா என்ற அருள் முழக்கத்தோடு பல மைல்களுக்கு அப்பால் நின்று தரிசித்துப் பரவசமடைவார்கள்.

ஒரு நாள் திருமாலும் பிரமாவும் தமக்குள் "யார் பெரியவர்" என்று வாதிக்கத் தொடங்கி வாதம் முற்றிப் போராகியது. பல நெடுங்காலம் அந்தப் போர் நிகழ, அதனால் அவ்விருவர் மத்தியிலும் ஒரு பெரிய சோதி தோன்றியது. அதனைக் கண்டு ஆச்சரியப்பட்ட அவ்விருவரும் இச் சோதி வடிவத்தின் அடியையாவது முடியை யாவது முதன் முதல் கண்டவரே பெரியவர் என்று தம்முள் ஒப்பந்தம் செய்தனர். படைக்கும் தொழிலைச் செய்யும் பிரமா அன்னப்பட்சி வடிவு கொண்டு மேலே பறந்தார். காக்குஞ் சக்திக்கு அதிபதியாகிய விஷ்ணு பன்றி வடிவமெடுத்துப் பாதாளம் நோக்கிப் புறப்பட்டார். ஆனால், இருவருமே காண்டற்கரிய சோதிப் பிழம்பாய் நின்று பெருமானின் அடியையும் முடியையும் காணமுடியாது திகைத்தனர். இதற்குச் சான்றாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரத்தில் "தேடிக் கண்டு கொண்டேன் — திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடொணாத் தேவனை யென்றுமே தேடிக் கண்டு கொண்டேன்;' என்கின்றார்.

விண்ணை நோக்கிச் சென்ற பிரமா அச் சோதியின் முடியைக் காணாமலும், மண்ணை நோக்கிச் சென்ற விஷ்ணு அதன் அடியைக் காணாமலும் களைத்து நின்றபோது சிவன் முடியிலிருந்து விழுந்த தாழம்பூவைப் பிரமா அழைத்து எம்பெருமானின் முடியைக் கண்டதாகத் தனக்காகப் பொய்ச் சாட்சி சொல்லும்படி செய்தார். இதைக் கேள்வியுற்ற சிவன் சீற்றமுற்றுப் பிரமாவுக்குக் கோயில்கட்டி வழிபடும்பேறு இல்லாது போகட்டும் என்றும் தாழம்பூ சிவ பூசைக்கு உரிமையற்றதாகவும் சபித்தார். விஷ்ணு உண்மை பகர்ந்தபடியால் அவரை வணங்க வாய்ப்பளித்தார். அதன்பின் எம்பிரான் ஆணவ இருளை அகற்றி சிவலிங்க வடிவமாய்க் காட்சி அருளினார். இந்தக் காட்சி நல்கிய நிலையை அருணாசலேசுரர் என்று அழைக்கின்றோம். இதுவே எல்லாச் சிவாலயங்களிலும் காணப்படும் "லிங்கோற்பவ மூர்த்தி" தன்னேரில்லாத் தனிப் பெருஞ் சுடராய் எம்பெருமான் நல்கிய காட்சியே திருக்கார்த்திகைத் தீப விழாவின் தத்துவம் என்பர்.

"முப்புரம் எரிசெய்த அச்சிவன்' என்று அருணகிரிநாதரின் கூற்றிற்கு இணங்கச் சிவன் முப்புரத்தை எரித்தபோது ஏற்பட்ட

ஒளிக்காட்சியே "திருக்கார்த்திகைத் தீப" விழா என்றும் கூறுவர்.

கார்த்திகை நட்சத்திரத்தில் சரவணப் பொய்கையில் தோன்றி ஆறு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு "கார்த்திகேயன்" என்ற காரணப் பெயர் பெற்றவனும், முருகன், குமரன், குகன், ஷண்முகன் என்றெல்லாம் மறுபெயர்கள் பெற்றவனுமாகிய ஆறுமுகப் பெருமானின் விழாவே திருக்கார்த்திகைத் தீபவிழா என்று அழைப்பர்.

தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பெரும்பாலானவற்றில் கார்த்திகைக் காணிக்கைகள் கார்த்திகைப் பச்சை, கார்த்திகைக் காசு முதலான சொற்கள் இடம்பெறுகின்றன. கார் காலத்தைத் தொண்டபடியால் கார்த்திகை எனப் பெயர் பெற்ற மாதத்தில் கார் நெல் அறுவடை நடைபெறும், இதையொட்டிய அரசிறை வரியை இச்சொற்கள் குறிக்கின்றன.

ஒரு பழைய கதையும் உண்டு. அதாவது சிவாலயமொன்றில் தீபமெரிந்து கொண்டிருந்தது. அந்தத் திருவிளக்கில் ஊற்றப்பட்டிருந்த நெய்யை உண்ணும் பொருட்டு ஒரு எலி அதனருகே சென்றது. மங்கலாக இருந்த தீபச்சுடர் அந்த எலியின் முகத்தில்சுட, அது தடுமாறித் தாவியோடினது. அதன் காரணமாக அசைவுற்ற திருவிளக்கின் திரி முன்னரிலும் பார்க்க அதிக பிரகாசத்தோடு விளங்கியது.

"நிறைமறைக் காடு தன்னில் நீண்டெரி
தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் முக்குச் சுட்டிடக்
கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவா
னுலக மெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங்
குறுக்கை வீரட்டனாரே"

என்று திருக்குறுக்கை வீரட்டத் திருப்பதிகத்திலே திருநாவுக்கரசு நாயனர் பாடியுள்ளது இதற்கு நல்ல ஆதாரமாகும். மங்கிய தீபத்தைப் பிரகாசிக்கச் செய்த அந்த எலி மறுபிறப்பில் அதிபராக்கிரமமுடைய மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறக்கும் பெரும்பேறு பெற்றது அறியாமலே திரியைத் தூண்டிய எலிக்கு இப்பதவி கிடைக்குமானல், நற்பலன் கிட்டும் என்ற எண்ணம் திண்ணமாகப் பெற்று ஆசாரத்துடனும் அன்புடனும் திருவிளக்கிடுவோருக்கு எத்தகைய பதவியைக் கருணமூர்த்தியாகிய இறைவன் நல்குவான் என்பது சொல்லவேண்டியதில்லை. "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என அப்பர் அடிகள் சொல்லுகின்றர்கள். கணம்புல்ல நாயனர் விளக்கேற்றிச் சிவலோக பதவியடைந்தார். கலிய நாயனர் சிவாலயத்தின் உள்ளும் புறமும் திருவிளக்கேற்றி இறைவனின் திருவடிகளை அடைந்தார். இவற்ருல் திருவிளக்கே இருளகற்றும் என்பது தெளிவாகின்றது. புற இருள் போக்குவது ஒளி அக இருள் போக்குவது திருவடி உணர்வு.

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே"

என்கிருர் உழவாரத் திருத்தொண்டு செய்த திருநாவுக்கரசுநாயனர்.

ஆகவே சங்ககால நூல்களும், நாயன்மார் அருளிய தேவார திருவாசகங்களும், அருணகிரிநாதரின் திருப்புகழும் இறைவனுக்குத் தீபமேற்றி வழிபட எமது இல்லங்களில் உள்ள நோய், துன்பம் முதலிய பீடைகள் நீங்கி தெய்வீக ஒளி வீசவும் இலட்சுமி கடாட்சம் கிட்டவும், மனத்திலும் நல்ல கருத்துச் செறிவான எண்ணங்கள் இடம்பெற்று ஞானச் செல்வம் நிறைந்து விளங்கவும் திருவண்ணமலைக்குச் சென்று தீபதரிசன விழாவைக் கண்குளிரக் கண்டு பேரானந்தம் அடைவது முத்திக்கு வித்தாகும் என்கின்றன. அங்கு நேரில் போய் தரிசனஞ் செய்ய இயலாத அன்பர்கள் தத்தம் இல்லங்களிலும் ஆலயங்களிலும் இத்திருக்கார்த்திகைத் தீப விழாவன்று ஆசாரமாக நெய் விளக்கோ அல்லது இயல்புக்குத் தக்கபடி தேங்காய் எண்ணெ ஊற்றிய தீபங்களை ஏற்றி அண்ணமலையானை நினைந்து மனம் உருகி வழிபட்டால் இம்மையிலும் மறுமையிலும் அவரவர்கள் வேண்டியவற்றைத் தவருது பெற்று, இன்புற்று வாழ்வார்கள் என்பது உறுதி.


"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

**சின்னத்துரை நவரத்தினம்**

"இலக்குமி வாசம்"
தையலம்மை வளவு,
ஆனைக்கோட்டை.




சர்வபோதகம் : நியாயசிரோமணி
பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
45 நாள் யந்திர பூசையும் மகா கும்பாபிஷேக
மும் எல்லோரும் போற்றத்தக்க வகையில்
நடைபெற வழிகாட்டியாக இருந்து சிறப்பாக
நடத்தியவர் சாஸ்திரிகர் அவர்களே



சிவாகம ஞானபானு சிவஸ்ரீ சுவாமிநாத
பரமேஸ்வரக் குருக்கள்
(நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான குரு)
காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் மகாகும்
பாபிஷேகத்தை சைவாகம நெறிப்படி செவ்விய முறை
யில் நடத்திய பிரதிஷ்டா குருக்கள் அவர்களே.



தேவஸ்தான குரு:
சிவஸ்ரீ கு. சிதம்பரநாதக் குருக்கள்
திக்கரை முருகமூர்த்தி கோவில் நாளாந்த பூசைகளை
முறைதவறாது சிறப்பாக நடத்தி வருபவர்.



காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் திருப்பணி
வேலைகளைச் சிறப்புற நிறைவேற்றித் தந்த ஸ்தபதி
யார் செ. சண்முகராசா அவர்களும் அவர் குழுவினரும்
ஸ்தபதியார் செ சண்முகராசா X அவர்களுக்கு
"சிற்ப இரத்தினம்" எனச் சிறப்புப்பட்டம் வழங்கிக்
கௌரவிக்கப்பட்டார்.

# கந்தர் அநுபூதி

ஸ்ரீராமகதாரத்ன V. தியாகராஜன், புதுக்கோட்டை 1 (திருச்சி Dt. S. India)

உலகத்தின் தெய்வீக நூல்களெல்லாம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்கள் பற்றிய விளக்க உரைகளே ஆகும். பசு என்பது உயிர் அல்லது ஆன்மா. பதி என்பது இறைவன். பசுவும் பதியும் இரண்டறக் கலந்து நிற்றலே பேரின்பம். இந்தப் பேரின்ப நிலையைத் தடைசெய்வதே ஆணவம் கன்மம், மாயை என்ற பாசத்தளையாகும். இந்த ஆசாபாசம் நீங்கினால் கிடைக்கும் சச்சிதானந்த நிலையே அனுபூதி என்பதாகும்.

அந்த நிலை எய்துவதற்காகப் பாடிய பெரியார்களில் ஒருவர் அருணகிரிநாதர். கந்தன் என்ற சொல்லுக்கு பற்றுக்கோடாய் இருப்பவன் எனபது பொருள். கந்தன் என்ற சொல்லுக்கு ஒன்று சேர்ந்தவன் ஒன்றாகச் சேர்பவன் என்றும் பொருள் கூறுவார்.

சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களிடம் பால் உண்டு ஆறு குழந்தைகளாக இருந்த பெருமானை உலக மாதாவான உமாதேவி வாரி எடுத்து அணைத்த காலத்தில் ஆறுமுகங்களுடன் பன்னிரு திருக்கரங்களுடனும் ஒரே குழந்தையாக மாறிய பெருமானுக்கு சிவபெருமான் "கந்தன்" எனப் பெயரிட்டான் என்றார் கந்த புராணமுடையார்.

தாயென ஆரல் போந்து தனங்கொள் பால் [அருந்தலாலே
ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல் பேர் [பெற்றான்
சேயவன் வடிவமாறும் திரட்டி நீ ஒன்றாய்ச் செய்தாய்
ஆயதனாலே கந்தனாமெனு நாமம் பெற்றான்.

அப்பேர்ப்பட்ட கந்தப் பெருமானின் கருணையைப்பெற்றுள்ள ஆனந்த நிலையையே, பேசாது உள்ளம் புளகித்து நிற்கும் நிலையையே, அனுபூதி என்றார். அனுபூதி பெற்ற பெரியாரான அருணகிரிநாதர் தாம் பெற்ற பேற்றை இவ்வையகமும் அடையவேண்டும் என்பதற்காக கந்தரனுபூதி நூலைப்பாடினார். அனுபூதி பெற்றவர்தான் அனுபூதி பாடமுடியும் என்றார் தாயுமானவர்.

கந்தரனுபூதிபெற்றுக் கந்தரனுபூதி சொற்ற
எந்தையருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ?

கந்தரனுபூதியை மந்திரநூல் என்பர். எந்த மந்திரத்தை ஓதினாலும் "ஓம்" என்ற எழுத்துடன் ஆரம்பிக்கும் வழக்கம். அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்கள் சேர்ந்து 'ஓம்' என் ஆயிற்று எப்பர். அதனாலேயே தமிழிலுள்ள அனேக நூல்கள் "உ" என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் வழக்கம். "உலகெலாம்" என்று பெரிய புராணம் "உலகம் யாவையும்" என்று கம்பராமாயணமும் "உலகம் உவப்ப" என்று திருமுருகாற்றுப்படையும் ஆரம்பிக்கின்றன தமிழ் மறையாகிய வள்ளுவத்தை "அகரம்" என்ற முதல் எழுத்துடன் தொடங்குகின்றார் வள்ளுவப் பெருந்தகை. தமிழ் மறையான திருமுறைகளில் முதல் திருமுறையான தேவாரம் "தோ" என்ற எழுத்துடன் ஆரம்பமாகின்றது ஞானசம்பந்தர் பாடியது தமிழ்மறை. "த்" என்ற எழுத்தின் ஒற்றாகிய "த்" என்ற எழுத்துடன் ஓங்காரத்தைச் சேர்த்து 'தோ' என்று ஆரம்பித்தார். மேலும் அந்தணப்பெருந்தகையாகிய அவரது குலத்தின் மந்திர

மாகிய காயத்திரி மகாமந்திரத்தின் முதலெழுத்து "த" அதனுடைய ஒற்றெழுத்தாகிய "த்" என்பதுடன் ஓங்காரத்தைச் சேர்த்து "தோ" என தேவாரத்தைப் பாடினார் என்பர் பெரியோர்.

இதே மாதிரி அநுபூதி ஆசிரியரும் தமது மந்திரநூலாகிய கந்தரனுபூதியை "ஓம்" என்ற எழுத்தில் தொடங்கியருளுகிறார். ஆடும் மயில் ஓங்காரத்தை நினைவுறுத்தும். மேலும் "ஆடும்" என்ற சொல்லில் "ஆ" அகாரத்தையும் "டு" உகாரத்தையும் "ம்" மகாரத்தையும் குறிக்கின்றது. "ஓம்" என்ற குறிப்பில் ஆரம்பிக்கும் இவ்வழகிய நூலை 51 பாடல்களில் முடிக்கின்றார். வடமொழியில் 51 எழுத்துக்கள். அவைகளுக்குள் மந்திர சாத்திரங்கள் பூராவும் அடங்கிவிட்டன. எனவே 51 பாடல்கள்தான். சில புத்தகங்களில் 108 பாடல்கள் காணப்படுகின்றன. அவைகளை அருணகிரியாரின் வாக்கு அன்று எனினும் முருகனை வணங்குவதற்கு அவற்றையும் பாடினால் என்ன குற்றம்? யாருடைய வாக்காயினும் முருகனை வணங்க அது உபயோகம் என்றால் அதைப் பாடிப்பயன் பெறலாம் என்பது எமது பணிவான கருத்து. அநுபூதி நூலை "செஞ்சொற் புனைமாலை" என அழைக்கிறார் ஆசிரியர்.

> "ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
> பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என ஆரம்பித்து "குருவாய் வருவாய் அருள்வாய்குகனே" என்று "அருள்வாய்" என முடிக்கின்றார். "நெஞ்சக்கனகல்" என்ற விநாயக வணக்கம் செஞ்சொற் புனைமாலையின் குஞ்சம்போன்று விளங்குகின்றது.

யாது காரணத்தாலோ சில அன்பர்கள் "நெஞ்சக்கனகல்" என்ற பாடல் அருணகிரியாருடையது அல்ல என்கின்றனர். முருகனைத்தவிர எந்த தெய்வத்தையும் அருணகிரிபாடமாட்டார் என்பது அவர் கருத்து. அருணகிரிநாதர் முருகனை இட்ட தெய்வமாகக் கொண்டு எல்லாதெய்வங்களையும் பொதுப்படப் பாடியுள்ளதால், சமரச சித்தாந்த வாதியான அவர் விநாயகரையும் பாடியிருப்பார். எனவே "நெஞ்சக்கனகல்" அவரது பாட்டே என்பது அடியேனின் கருத்து.

கிளி உருவத்திலிருந்துகொண்டு அருணகிரிநாதர் கந்தரனுபூதி பாடினார் என்பர் பெரியோர். சைவத்திற்கு ஒருகிளி அருணகிரி. வைணவத்திற்கு ஒரு கிளி பாகவதம் எழுதிய சுகப்பிரம்மம். சம்பந்தாண்டான் என்பவனின் சதியால் கிளி உருவெடுத்த அருணகிரி தேவருலகம் சென்று பாரிஜாத மலர் எடுத்துத் திரும்பியபோது, சம்பந்தாண்டான் தன் உடலை மறைத்துவிட்டான் என்பதையறிந்து நேராகச் சென்று திருச்செங்கோட்டு வேலவனை தரிசித்துப் பின்னர் திருவண்ணாமலையில் வந்து அநுபூதி பாடியதாகக் கூறுவர். 51 பாடல்களில் திருச்செங்கோடு மாத்திரம் "நாகாசலவேலவ!" என்று காட்டப்படுகிறதே தவிர, வேறு எந்தத் தலமும் குறிப்பிடப்படவில்லை. கிளிகொத்திய பழம் மிகவும் சுவையுள்ளது. அதுபோல அருணகிரி என்ற கிளி கொத்திய அனுபூதியும் சுகப்பிரம்மம் என்ற கிளி கொத்திய பாகவதமும் மிகவும் சுவையுள்ளன என்பது எவரும் அறிவர். கிளி தானாக எதையும் கூறாது. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்பது பழமொழி. முருகன் கரத்தில் இருந்த கிளிமுருகன் கூறியதையே திரும்பப் பாடியது எனவே கந்தரனுபூதி முருகனது வாக்கு என்று கூடக் கூறுவர்.

முருகனை அடைய எத்தனை வழிகள் உள்ளனவோ, அவ்வளவையும் கூறுகின்றது அனுபூதி. யாவற்றுக்கும் முதன்மையானது அவனைப்பாடவேண்டியதே என்பதை "பாடும்பணியே பணியாயருள்வாய்" என்பது முதல் பாடல். மனிதனுக்கு அவனது முன்னேற்றத்தைக் கெடுக்கும் பெண்ணாசை ஒழிய வேண்டும் என்பதை "மட்டூர்குழல்" (8) "கூர்வேல்விழி" (24) "சிங்காரமடந்தையர்' (34) பாடல்கள் கூறுகின்றன. ஆசையும் பாசமும் மயக்கும் ஒழிய வேண்டுமென்பதை 'வளைபட்ட" (4) "மகமாயை" (4) "அமரும்பதி" (8) "கை வாய்கதிர்" (14) "பேராசையெனும்" (16) "பார்வாழ்வு"

(31) ''சிந்தாகுல'' (33) ''மாவேழ்சனனம்'' (39) ''வினையோட'' (40) ''மதிகெட்டற'' (50) ஆகிய பாடல்கள் கூறுகின்றன. நான் என்னுடையது என்ற அகந்தை நீங்கவேண்டுமென்பதை ''உல்லாச'' (2) ''ஆனாவமுதே'' (28) ''கிரிவாய்விடு'' (37) என்ற பாடல்களை குறிப்பிடுகின்றன. முருகப்பெருமானின் திருவடிப் பெருமைபற்றி ''திணியான'' (6) ''கருதாமறவா'' (21) ''விதிகாணுமுடம்பு'' (31) ''சூசாநம்தனிவேல்'' (44) ஆகிய பாடல்கள் கூறுகின்றன. மௌன உபதேசகுருவாக முருகன் வந்ததை ''செம்மான் மகளை'' (12) பாடலும், அந்த உபதேசத்தினால் கிடைத்த பயனைக் கூறமுடியாது என்ற ஆனந்தத்தை ''செவானுருவில்'' (30) என்ற பாடலும் அனுபூதி கிடைத்த ஆனந்தத்தை ''தூசாமணியும்'' (43) பாடல் கூறுகின்றன. ஆறுரையும் நீத்து அதன்மேல் நிலையிலுள்ள முருகன் தன்தந்தைக்கு உபதேசித்த பெருமையை ''நாதாகுமரா'' என்ற (36)-வது பாடல் கூறுகின்றது. தனது தாழ்வையும் தன்னையாட்கொண்டு உயர்ந்தோனாகிய முருகவள்ளலின் பெருமையையும் ''ஆதாரமிலேன்'' (26) ஆதாளியை (38) ''ஆறுரையும் (47) என்ற பாடல்களும், நமது கல்வியறிவை முருகனைப்பாடவே உபயோகிக்க வேண்டும் என்று ''யாமோதிய கல்வியும்'' (17) பாடலும், படித்தோமென்ற அகந்தை கூடாது என்று ''கலையேபதறி'' (32) பாடலும், தரித்திரம் நீங்கவேணும் என்று ''வடிவும் தனமும்'' (19) பாடலும், என்ன இருந்தாலும் மனிதன் உயிரோடிருந்தால் தான் இறைவனது கருணையை அனுபவிக்க முடியும். ஆதலால் யமவாதனையில்லாது காக்கவேண்டுமென்பதை 'கார்மாமிசை'' (10) ''கூகா என'' (11) ''சாகாது'' (41) என்ற பாடல்களில் வேண்டிக் கொண்டு தெய்வமான முருகா! நீயே எனக்கு குருவாக கரவாகிய (45) தாய்தந்தையாக ''எந்தாயும் எனக்கு'' (46) வரவேண்டுமெனக்கூறி பூரணமாக அடைக்கலம் புகுந்து குருவாகவந்து அருள்புரிந்து என்மனமான குகையிலே இருப்பாயாக'' ''அருள்வாய் குகனே'' என்று முடிவடைகிறது நூல்.

''நெஞ்சக்கனல்'' லே ''முருகன் குமரன் குகன்று மொழிந்து உருகும்'' படி செய்து அவனை அடையச் செய்கின்றது இந்நூல். ஒவ்வொருபாடலுக்கும் ஒரு நூலே எழுதலாம். இவ்வழகிய அனுபூதி நூலைப்பாடி முருகனையடைய நமக்கு வழிகாட்டிய அருணகிரிப் பெருமான் திருவடி வணங்கி அவரது அருளால் முருகனது அருள் பெற்று உய்வோமாக! வெற்றி வேலுற்றதுணை.

அருணகிரிநாதர் திருவடிகளே சரணம்

''தினமும் தூங்கி வழிந்து உரையாற்றும் பேராசிரியரை விட ஒரு சோடி செருப்பினைப் புதிதாகச் செய்யும் தொழிலாளி மேன்மையானவன்.''

— சுவாமி விவேகானந்தர்

''காலந்தவறாது நீராடுவதும், காய்கறி வகைகளை உண்பதுமே முக்தியளிக்கும் என்று நினைத்தால் மீன்களுக்கும், குரங்குகளுக்குமே முதலில் முக்தி கிடைக்கும்.''

— சுவாமி விவேகானந்தர்

''முழுமனதுடன் ஈடுபட்டு, நேர்மை எண்ணத்துடன் செய்யும் எந்த முயற்சியும் வீண்போகாது.''

— பெயர் அறியா அறிஞர்

# திருப்பணி

## ( வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் )

காரைநகர்

*கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்*
*செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்*
*கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்*
*அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.*

—திருவாசகர்.

ஆன்மாக்களை இறைவனிடத்திலே கூட்டி உய்விக்கும் இடங்களே ஆலயங்கள். அத்தகைய ஆலயங்களைச் செவ்வனே போற்றிப் பாதுகாத்து வருதல் எமது தலையாய கடமையாகும். அப்பணி ஆன்மாக்களின் உய்வு கருதிச் செய்யும் நற்பணியாதலின் அதுவே திருப்பணியாகும்.

தென்னாடுடைய சிவன் எந்நாளும் உயிர்களுக்குப் பேரருள் பாலித்து விளங்கும் ஈழத்துச் சிதப்பரத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் காரைநகரில், களபூமி திக்கரை முருகமூர்த்தி கோயில் திருப்பணிகள் நிறைவெய்திக் கும்பாபிஷேகம் ஆனந்த வருடம் ஆனித் திங்கள் 27-ம் நாள் சிறப்பாக நடந்தேறியமை அனைவரும் அறிந்ததொன்றாகும்' வளங் கொழிக்கும் வயல்கள் சூழ்ந்து விளங்கும் திக்கரை முருகமூர்த்தியின் திருவருட்டிறத்தினை, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் 1939-ம் ஆண்டில் யான் மாணவனாக இருந்த காலத்தில் அனுபவமூலம் அறியக் கூடிய வாய்ப்பினைப் பெற்றேன். அப்போது திருவிழாக் காலத்தில் குழப்பத்தை உண்டாக்க எண்ணிய கண்டவர் அஞ்சும் களபூமி அழுக்கடைச் சண்முகம் அவர்களை, அடியார்கள் வாகனத்தோடு சேர்த்து பின்னிப் பிணைத்து வைத்த காட்சி இன்றும் எனது உள்ளத்தை விட்டகலாத பசுமையான நினைவாக இருக்கின்றது. "மிண்டு மனத்தவர் போமின்கள் விரைந்தடியார் வம்மின் கொண்டும் கொடுத்தும் ஈசற்கு ஆட்செய்மின்" என்று போற்றும் பாடலுக்கு ஏற்பக் குன்று தோறாடும் குமரப் பெருமான் திக்கெலாம் போற்றத் திக்கரையில் கோயில் கொண்டெழுந்தருளி, அன்றுதொட்டின்றுவரை அடியார்களுக்கு அருள்பாலித்து வருதல் கண்கூடு.

திருவருள் கூட்டி வைத்தல் என்பதில் நம்பிக்கையுடையவர்களும் இருக்கிறார்கள்; இல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அடியேனது சில ஆண்டு அனுபவத்துள் திருவருள் கூட்டி வைத்தல் என்பதற்குப் பல சான்றுகளை நான் கண்டிருக்கின்றேன். திக்கரை முருகமூர்த்திகோவில் கும்பாபிஷேக மலருக்கு ஓர் கட்டுரை வேண்டுமென்பதாக ஆதீன கர்த்தா அவர்களின் சார்பில் அன்பர் ஐ. தி. சம்பந்தன் அவர்களை எதிர்பாரா விதத்தில் யாழ்ப்பாணத்தில் என்னோடு சம்பந்தப் படுத்தியமை அவ்விதத் திருவருள் நிகழ்ச்சி அனுபவங்களில் ஒன்றாகும். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அடியார்களினதும் ஆதீனகர்த்தா வைத்திய கலாநிதி திருநாவுக்கரசு அவர்களினதும் பெருமுயற்சியால் பல லட்ச ரூபா செலவில் செவ்வனே நிறைவெய்தப் பெற்றமையும், குமரனுக்குக் கோலாகலமாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றமையும், மகத்துவம் வாய்ந்த குப்பாபிஷேக மலர் ஒன்று உருவாக்கப் பட்டு வருவதும் முருகமூர்த்தியின் திருவருட்பேறாகும்.

அறுபதாண்டுகளுக்கு ஒரு முறையேனும் கோவில் கும்பாபிஷேகம் நிகழ வேண்டுமென்பது ஒரு ஐதீகம். அப்போது தான ஆண்டவனின் அருட்பிரவாகம் அடியார்களின் உள்ளத்தில் வற்றாத ஊற்றாகப்

பாயும் என்பது ஆன்ஞேர்களின் துணிபு. பணத்திலேயே உலகம் மனத்தைச் செலுத்தி, அறங்களையும் திருப்பணிகளை யும் மறந்திருந்தபோதிலும் இதற்கு விதி விலக்காகத் தனக்கென முயலா நோன் ருள் பிறர்க்கென முயலும் பெருந்தன்மை யும் திருப்பணிச் சிந்தையும் அமைந்த சான் ஞேர்கள் பலர் வாழுவதாலேயே இவ்வுல கம் நிலைத்திருக்கிறது என்பதைச் சங்ககால மன்னன் இளப்பெருவழுதியின் புறநானூற் றுப் பாடல் சான்று கூறுகின்றது. அத் தகைய பரம்பரையினர் திக்கரையில் இன் னும் வாழ்ந்து, உலகை வாழவைக்கிருர்கள் என்பதை முருகமூர்த்தி கோவில் கும்பாபி ஷேகம் தெளிவுபடுத்துகின்றது.

ஆகாயமெல்லாம் பரந்து கிடக்கும் மின்சக்தியை இயந்திரங்களாற் கிரகித்து மின்பெட்டிகளில் சேர்த்து வேண்டிய இடத் திற்குக் கம்பிகள் மூலம் கொண்டுபோய் வெளிச்சம் உண்டாக்குகின்றேம். அதே போல இறைவனது சக்தியையும் யாகங்கள், கும்பாபிஷேகங்கள் மூலம் ஆலயத்தில் உள்ள மூர்த்தியில் பாய்ச்சி நிரம்பி வைக்கப் பட்டுள்ளது. அதில் குறைவேற்படாமல் இருக்க அடிக்கடி ஆராதனைகளும் பூஜை களும், திருவிழாக்களும் அறுபதாண்டுக் கொரு தடவையேனும் கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றன. கலியுக வரதனுன கந்தனின் கருணை வெள்ளத்தில் திளைத்து நிற்கும் அடியார்களும் அறப்பணிச் சைவர் களும் வாழையடி வாழையாக வளர்ந்து வரும் ஆதினகர்த்தாக்களின் பரம்பரையின ரும் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டு மென்று பிரார்த்திப்போமாக.

மண்ணி னிற்பிறந்த தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார் அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
நண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென
உரைப்பார்.

— சேக்கிழார்.

*With Compliments*

*from*

# MORRISONS

*Colombo Printers, Carton Makers*

**183, Jayanta Weerasekera Mawatta,**
**COLOMBO-10.**

Phone: 36313

*With the best Compliments*

*from*

# JAFFNA STORES

**21. High Level Road,**

**MAHARAGAMA.**

# திருட்டுக் குடும்பம்

**செ. தனபாலசிங்கன் B. A. (Lond.)**
உதவி ஆணையாளர், தொழிற் திணைக்களம்

**அற்புதமான கதை**

ஓரு கதை அற்புதமான கதை; கட்டுக் கதை அல்ல. ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன்பு நடந்த சம்பவம், மூத்த பிள்ளையாரின் திருவிளையாடலைச் சொல்லும் கதை அது!

முதுசூரியர் இளஞ்சூரியர் என்று இரு பிள்ளைகள் முதுசூரியர் முடவர். இளஞ்சூரியர் குருடர். அதனால் இருவருக்கும் வாழ்வு வளமாக இல்லை. குருடர் முடவரைத் தன் தோளிலே தூக்கிப் போட்டுக் கொள்வார். முடவர் செல்வழி காட்ட இருவரும் அங்கு இங்கு எனாதபடி எங்கும் செல்வார்கள். முடவர் நூல்களைப் படிப்பார்; குருடர் அவற்றை எல்லாம் உள்ளத்திலே வாங்கிக்கொள்வார். திருவருள் நலத்தினால் இருவரும் பெரும்புலவர்களாகி விடுகிறார்கள். எங்கு சென்றாலும் எக்காரியம் செய்தாலும் இணைபிரியாதிருந்தமையின் இருவருக்கும் இரட்டையர் என்ற பெரும் பெயரும் வந்து அமைகின்றது.

நல்ல கொடை வள்ளல்களைப் பாடி இருவரும் பரிசில்கள் பலபெற்று வாழ்க்கை நடாத்தத் தொடங்குகிறார்கள். முடவர் ஒரு பாடலைத் தொடங்குவார். முன்இரண்டு அடிகளையும் பாடிக்கொடுப்பார். இறுதி இரண்டு அடிகளையும் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் குருடர், திருவருள் பெருகுகின்றது. பாடல்கள் கடல்மடை திறந்தாற்போல் வருகின்றன அதனால் தெய்வ புலவர்கள் என்ற திருநாமமுமே பெற்றுவிடுகிறார்கள். தில்லைக் கலம்பகம் பாடுகிறார்கள், பண்பாய கலம்பகத்துக்கு இரட்டையர்கள் என்ற பட்டமும் அவர்களைத் தேடி வருகின்றது.

ஒருநாள் மூட்டைமுடிச்சுகளுடன் இருவரும் ஒரு பிள்ளையார் கோவிலுக்கு வருகிறார்கள். கொண்டுவந்த மூட்டையை பிள்ளையாருக்கு முன்னாலே அவிழ்த்து வைத்துவிட்டுக் குளத்திலே நீராடச் செல்கிறார்கள். நீராடி முடிந்ததும் பிள்ளையாரைக் கும்பிட வருகிறார்கள். அடைக்கலமாக வைத்த மூட்டையை அங்கே காணாது திகைக்கிறார்கள். இத்திருட்டுக்குப் பிள்ளையாரே பொறுப்பு என்ற கருத்திலே பாடத் தொடங்குகிறார்கள். முடவர் வாயிலே பாடல் வருகிறது.

"தம்பியோ பெண் திருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்
குருடர் விட்டுரைப்பாரா? —அம்புவியில்
மூத்த பிள்ளையாரே முடிச்சவிழ்த்தீர்
போமோ நாம்"
கோத்திரத்துக்குள்ள குணம்

என்று குருடர் பாடலை நிறைவுசெய்து விடுகிறார். பிள்ளையாரின் பெரிய திருச்செவியிலே பாடல் விழுகிறது. பாட்டுக்கு உருகும் பிள்ளையார் பழைய பொருள்களுடன் இன்னும் பல புதிய பொருள்களையும் சேர்த்து வைத்து திருப்பிக் கொடுத்துவிடுகிறார், இருவருக்கும் இருந்த மகிழ்ச்சியைச் சொல்லவா வேண்டும்! பிள்ளையாரை வந்தித்து வணங்கிவிட்டு வழிப்பயணத்தை மேற்கொள்கிறார்கள் இரட்டையர்கள்.

**அப்பன் திருடன்:**

கோத்திரத்தின்படி பிள்ளையார் திருடன்தான்! ஆம்! அப்பன் திருடன்; தம்பி திருடன், மாமன் திருடன், திருடர் குலத்து வந்த பிள்ளையாரும் திருடன் என்று சொல்வதில் தப்பு ஒன்றும் இல்லையே!

உனக்குப் பால் கொடுத்தவர் யார்? என்று அதட்டிக் கேட்கிறுர் சிவபாத விருதயர் சம்பந்தருக்கு மூன்றே மூன்று வயது; பாடுகிறுர்.

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடைய சடலைப் பொடி பூசி என் உள்ளம்
கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த
அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான்
இவனன்றே.

உள்ளம் கவர் கள்வன் பிரமாபுரம் மேவிய பெம்மான்பால் கொடுத்தான் என்று தயாகித் தந்தையாகித் தாங்குகின்ற தயாபரனைச் சுட்டிக்காட்டுகிறது சம்பந்தக் குழந்தை. ஸ்ரீருத்திரம், 'தஸ்கரணும் பதமே நம' என்று பாடி ஆண்டவனைக் கள்வர் தலைவன் என்றே சொல்லி விடுகிறது. உலகத்துச் கள்வர்களுக்குக் களவினுல் பயன் உண்டு. அதனுல் இந்தக் கள்வன் பயன் ஏதும் இன்றிக் களவு செய்யவருகிறுன். இவனைவிடப் பித்தன் வேறு யார் இருக்கிறுர்கள்? கள்வன் பிறர் அறியாமலே தன் தொழிலைச் செய்வான் இந்தக் கள்வனும் மறைந்து நின்றே உள்ளத்தைக் களவு செய்துவிடுகிறுன். முன் சொல்லாமலே களவு செய்வது கள்வன் தொழில், இந்தக் கள்வனும் பக்குவம் கண்ட விடத்துப் பிறர் அறியாமலே நுழைந்துகொள்வான்; கொள்ளை கொள்வான். அப்பன் கள்வன் என்று சுருதியுக்தி அநுபவம் மூன்றினுலும் நிரூபிக்கச் சான்றுகள் பல சொல்லலாம்!

தம்பி திருடன்:

தம்பி முருகன் கள்வன்; அவன் வள்ளி என்ற வஞ்சியைக் காதலித்து அவள் தேனூறு சொல்லுக்கு வாயூறி நிற்கிறுன். அம்மங்கை தன் செங்கையால் தந்த தேனையும் தினை மாவையும் அருந்தி மகிழ்கின்றுன். மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி மணந்துகொள்ள வருகிறுன். உலைப்படுமெழுகதென்ன உருகியே ஒருத்தி காதல் வலைப்படுகின்றுன்போல வருந்திய இரங்கி நிற்கிறுன்.

மொழியொன்று புகலா யாயின் முறுவலும்
புரியாயாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக்குழலி
வேனுய்யும்
வழியொன்று காட்டாயாயின் மனமும் சற்று
உருகாயாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம்
தவிர்தி என்றுன்

என்று கெஞ்சுகிறுன் தன் முயற்சி எல்லாம் பலிக்காதது கண்டு முடிச்சுவழ்க்கும் மூத்த பிள்ளையாரை—தன் நேரிலாது அமரும் தந்தமுகத்து எந்தைதனை முன்னே வருவாம் முதல்வா என நினைக்கிறுன். தந்திக் கடவுள் தனிசாரனப் பொருப்பு மறிகடல் போல் முழங்கி முந்திப் படர்கின்ற மொய்குழலாள் முன்னுக வருகின்றது. "இவ்வேழம் காத்தருள்க எந்தை நீர் சொற்றபடி செய்வேன்" எனத் தன்னையே தத்தம் பண்ணிக் கொடுக்கிறுள். உற்கை தரும் பொற்கை உடையவர் போல் உண்மைப் பின் நிற்க அருளாளர் நிலை" என்ற திருவருடப் பயனுக்கு இலக்கியமாகி விடுகிறுள் வள்ளி நாச்சியார். வேடனுகி விருத்தனுகி வேங்கையாகி பொய் வேடம் கொண்ட பெருமான் தன் திருக்கோலத்தைக் காட்டுகிறுன்.

முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்
கொன்னுர்வை வேலும் குலிசமும் ஏனைப்படையும்
பொன்னுர்மணி மயிலுமாக புனக்குறவர்
மின்னுள் கண்காண வெளிநின்றனன் விறலோன்

வள்ளி நாயகியார் அவன் அருளாலே அவன் திருக்கோலத்தை கண்டருள்கின்றுர். சுப்பிரமணியப் பெருமான் வள்ளிநாயகியாரைத் தழுவிக்கொள்கின்றுர். சில நாள்களின் பின் பெருமாள் வள்ளியைத் திருடிச் சென்றுவிடுகிறுன். வேடுவர் திரண்டு நேருக்கு வருகிறுர்கள் பெரும்போர் எழுகின்றது. சுற்றில் வேடுவர் மாண்டொழிகின்றுர்கள். பின்னர் திருவருள் நலத்தினுல் எல்லோரும் மாண்ட உயிர் மீண்டு வருவதால் எழுந்து எம்பிரான் இணையடி போற்றுகிறுர்கள். வள்ளி திருமணம் நிறைவேறுகின்றது.

**மாமன் திருடன்:**

கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை. தின்னப்பழம் கொண்டு வருவான் பாதி தின்கின்றபோதிலே தட்டிப் பறிப்பான் விளையாட வாவென்று அழைப்பான். வீட்டில் வேலை என்றால் அதைக் கேளாது இழுப்பான். இளையாரொடு ஆடிக்குதிப்பான் இடையிலே பிரிந்துபோய் வீட்டிலே சொல்லிக் கொடுப்பான். இந்தவம்பன் உறி ஏறி நெய், திருடுவதில் சமர்த்தன் மூத்த பிள்ளையாரின் இவன் தாய் மாமன்!

**பசுபோதக் கவனம்:**

மூத்த பிள்ளையார் முடிச்சு அவிழ்ப்பார். நமக்கு வாழ்க்கையில் இருக்கும் முடிச்சுக்களுக்குக் கணக்கே இல்லை. முடிச்சுக்கள் சிக்கலாகி அவிழ்க்கவே முடியாத நிலை. அவை எல்லாம் நாம் வலிந்து போட்ட முடிச்சுக்கள். அவற்றால் துன்பங்கள் ஒன்றுமாறி ஒன்று வந்து நம்மைத் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. மேலும் மேலும் பிறந்து உழல்வதற்கே இந்த முடிச்சுக்கள் இதனை இன்னொரு வகையில் சொல்லப்போனால் முடிச்சுக்கள் பசுபோதம்— வினைக்குக் காரணமான ஜீவபோதம் இந்தப் பசுபோதம் கழன்றுபோனால் மட்டுமே நமக்கு விடிவு உண்டு அதனை வாங்கிக் கொள்ள ஒருவர் இருக்கிறார். கொடுக்கத் தெரியாமல் நாம் இருக்கிறோம் நமக்கு அது வேண்டாத பொருள். வாங்க இருப்பவர் வேண்டும் பொருளாக ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறார். கொடுத்துவிட வேண்டியதுதானே. நாம் கொடுப்பது அழுக்குப் பொருள். கிடைப்பதுதேடக் கிடையாத சொத்து — கருணை வெள்ளம். இந்தக் கருத்தை பரஞ்சோதி முனிவர் பாடுகிறார். பாடல் இதுதான்!

உள்ளம் எனும் கூடத்தூள் ஊக்கம் எனும்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர் பூட்டி
இடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை என்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவருவினைகள் தீர்ப்பாம்.

பசுபோதத்தைக் கவனமாக்கத் தெரியாமல் திண்டாடுகிறோம். கவனமாக்கிக் கொடுத்துவிட்டால் முடிச்சு அவிழ்ப்பார் மூத்த பிள்ளையார். அப்பன் மக்கள் எல்லோருமே திருட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இத்திருடர்களிடத்திலே பசுபோதமாம் அடுக்குப் பொருளைக் கொடுப்போம்! வருவது பேரின்பம்!!

நாம் போதிய நெடுங்காலம் அழுதாயிற்று! இனியும் அழ வேண்டாம். எழுந்து நின்று ஆண்மையுடையவராகுங்கள். ஆண்டகையாக்கும் மதமே நமக்கு வேண்டுவது. ஆண்டகையாக்கும் கொள்கைகளே நமக்கு வேண்டுவன. எல்லா வகையிலும் ஆண்டகையாக்கும் கல்வியே நமக்கு வேண்டுவது. இதுவே உண்மைக்கு உரைக்கல். உங்களது உடலையும் அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்செனஒதுக்குக. அதில் உயிரில்லை. அது உண்மையாக ஒண்ணாதது. மெய் வலிமையூட்டும் மெய் தூய்மையாகும். மெய் எல்லா அறிவுமாகும். மெய் வலிமையூட்டல் வேண்டும். ஒளி வீசல் வேண்டும். ஆற்றல் பொழியவேண்டும்.

- சுவாமி விவேகானந்தர்

உ

வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே

- அப்பர்சுவாமிகள்


காரைநகர் திக்கரை முருகனின்
கும்பாபிஷேகம் இனிது நடந்தேற
வாழ்த்துகின்றோம்



# THEIVANSS

DEALERS IN TEXTILES & OILMAN GOODS

**BUS STAND KILINOCHCHI**

# தெய்வன்ஸ்

பஸ் நிலையம் கிளிநொச்சி

# பலர் புகழ் முருகன்

பெ. திருஞானசம்பந்தன் M. A., I. T.
சென்னை பல்கலைக் கழகம், தமிழ்நாடு.

ஷட் வக்த்ரம் இகிவாஹனம் த்ரிநயனம்
ரக்தாம்பராலங்க்ரும்
சக்திம் சர்ம ச கட்க சூல விசிகாபீதிம்
தனுஸ் சக்ரகம்!
பாசம் குக்குடம் அங்குசஞ்ச வரதம் தோர்பிர்
ததானம் ததா
த்யாயேத் ஈபஸித ஸித்திதம் சசிதரம் ஸ்கந்தம்
சுராராதிதம்
—குமார தந்திரம்.

இமயம் முதல் ஈழநாடு வரை ஏத்தப் படும் கடவுள் முருகன். எப்பாலவருக்கும் உரியவன் எந்நிலத்திலும் உறைபவன். எம் மொழியினராலும் போற்றப்படுபவன். துதிப்போரையும் வைதாரையும் வாழ வைப்பவன். வேதம், புராணம், ஆகமம், தோத்திரம், காவியம் என்ற வட நூல்களி லும், சங்க இலக்கியம், திருமுறைகள், புராணங்கள் தோத்திரங்கள் முதலான தீந்தமிழ் இலக்கியங்களிலும் போற்றப்படு கின்றவன், ஆதி சிவனுக்கு உபதேசம் செய்தவன், அகத்தியருக்கும், தமிழறிவித் தான். கற்றோரும் மற்றோரும் வழிபடும் தெய்வம் கார்த்திகேயன்.

'சுப்ரஹ்மண்யோம்' என்று மும்முறை கூறிப் போற்றுகிறது வேதசம்ஹிதை. இச் சொல் பிரம்மத்தை உணர்த்துவதாகக் கொள்வர் சிலர். இருப்பினும் பிரம்ம மாகிற பரம்பொருளிலிருந்து வேறுபட்ட தன்று சுப்பிரமணியர் என்ற நம் வழிபடு தெய்வம் என்பது பெறக்கிடக்கிறது. அக விருளைப் போக்கி முக்தியின்பத்தை முற்று விப்பவர் சனத்குமாரராகிய ஸ்கந்தர் என்று கூறுகிறது சாந்தோக்யோபநிடதம்.

முருகன் பிறப்பு சுப்பிரபேதாகமத்தில் பேசப்படுகிறது. தக்ஷன் மகளான தாக்ஷா யணி தந்தை சிவபெருமானுக்கு இழைத்த தீங்கைப் பொருதவளாய் தன்னுடலைப் போக்கி இமவான் புத்திரியாகப் பிறந்து சிவனையே பதியாய் அடையும் பொருட்டு தவம் புரிந்தாள். சிவனும் சக்தியும் கூடி னர்கள். தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்க சிவபெருமானிடமிருந்து தோன் றிய தேஜஸை அக்கினி ஏற்றான். அவ்வெப் பத்தைத் தாங்காத அக்கினி அதனை சர வணப் பொய்கையில் விட்டான். அங்கே ஆறுமுகனை கார்த்திகை மாதர் அறுவரால் வளர்க்கப்பெற்றான் என்று இவ்வாகமத் தில் கூறப்படுகிறது. 'அறுவர் பயந்த ஆலந் மர் செல்வ' என்று திருமுருகாற்றுப்படை இதை நினைவுறுத்தும்.

அறுமீன் முலை உண்டு அழுது விளையாடி வரும் குமரனை சரவணப் பொய்கையில் கண்ட உமாதேவியார் அவ்வுருவம் ஆறினை யும் கையால் எடுத்தணைத்து உச்சிமோந்து மகிழ்ந்த செய்தியை குமார சம்பவத்தில் கவிஞன் காளிதாசன் கவினுற வருணிப் பதைக் காண்போம். முருகனின் அழகைப் பருகுவதற்கு தனது இரு கண்கள் போத வில்லையாம் தேவிக்கு. ஆயிரம் கண்கள் இருக்கக்கூடாதா என்று ஏங்குகின்றாள். 'செங்கோடனைத் தொழ நாலாயிரம் கண் படைத்திலனே' என்று அருணகிரியார் ஏங்குவதைப் பார்க்கிறோமே. இமவான் மகளான பூங்கொடியில் தீங்கனியெனத் திகழ்கிறானும் சண்முகன். பார்வதி யெனும் பாகீரதி நதியில் செந்தாமரை

யென மிளிர்கிருனும் செவ்வேள். கிரிஜா வெனும் கீழ்த்திசையில் தோன்றும் வான் மதியென விளங்குகிருனும் குமரன்.

'ஹைமீ பலப் ஹேமகிரேர் லதேவ
விகஸ்வரம் நாகநதீவ பத்மம்
பூர்வேவ திக் நூதனம் இந்து ஆபாத் தம்
பார்வதீ நந்தனம் ஆததானு? —குமாரசம்பவம்.

அம்சுமத்பேதம், காமிகாகமம், குமார தந்திரம் முதலான ஆகமங்கள் முருகனுடைய வரலாறு, ஆலய அமைப்பு, மூர்த்திகளின் பேதங்கள், விழாக்கள், விரதங்கள், பூசைமுறை ஆகியவற்றை விளக்கிச் செல்கின்றன.

சில்பரத்னம், சில்பசாரம், மானஸ்ாரம், காசியசில்பம், போன்ற சிற்பநூல்கள் கந்தன் திருவுருவ அமைப்பு பற்றி விரிவாக எடுத்துக் கூறுகின்றன. முருகனுடைய திருவுருவங்கள் பதினுறு என குமாரதந்திரம் கூறுகின்றது. இரண்டு, நான்கு, ஆறு. எட்டு, பன்னிரண்டு என்ற எண்ணிக்கையில் திருக்கரங்களை உடைய மூ.ர்த்திகள் ஓவ்வொன்றிலும் பலவகை வடிவங்கள் உள்ளன.

ஒருமுகமும், இருகரமும் கொண்ட மூர்த்தி ஒருவகை. இரு கரங்களில் வலது கரம் தண்டமேந்தியும் இடது கரம் இடுப்பில் வைக்கப்பெற்றும் உள்ளன. கோவணம் அணிந்துகொண்டு நிற்கும் மூர்த்தி. தாமரையன்ன செம்மேனி. இதுவே பழனியாண்டவரின் திருக்கோலம். இதனை குமாரதந்திரம் வருணிக்கின்றது.

கல்பத்ருமம் ப்ரணமதாம் கமலாருணபம்,
ஸ்கந்ததம் புஜத்வயம் அனுமயம் ஏகவக்த்ரம்,
காத்யாயனீசுதம் சஹம் கடிபத்தவாமம்
கௌபீற தண்டதர தக்ஷிணஹஸ்தம் ஈடே.

மேலே குறிக்கப்பட்ட காத்யாயனிப் புதல்வரான கந்தப்பெருமான் கல்பவிருட்சம் போல் வேண்டுவார் வேண்டியாங்கு ஈபவர்.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் தரும் ஆறுமுகப் பெருமானின் திருமுகங்களில் ஒன்று சூரபன்மாதி பகைவரை அழித்து பேரின்பம் தருவது, இரண்டாவது கன்பத்தைதம் போக்கி முத்தியின்பம் நல்குவது. மூன்ருவது வேதாகமங்களின் மெய்யறிவைப் புகட்டுவது, நான்காவது மும்மல இருளைக் களைந்து பேரொளியோடு திகழ்வது, ஐந்தாவது வள்ளி தேவசேனையர்க்கு மோகம் விளைப்பது, ஆருவது திருவடி சார்ந்தாரைக் காப்பது என்னும் முறையினைக் காண்கின்ருேம்.

பன்னிரு திருக்கரங்களில் ஒன்றுதேவர்களுக்கு அமிர்தம் வழங்குவது, ஒன்று தேவமகளிரை அணைப்பது, ஒன்று மழை பெய்யச் செய்து உயிர்களைக் காப்பது, ஒன்று மலர்மாலை அணிந்திருப்பது, ஒன்று அஞ்சேல் என்று உணர்த்துவது, ஒன்று இடையின் இடப்பக்கத்தில் சார்ந்திருப்பது, ஒன்று தொடையில் சார்ந்திருப்பது, ஒன்று வீரவளை அணிந்தது, ஒன்று மணியோடு கூடியது, ஒன்று அங்குசம் பிடிப்பது, ஒன்று கேடயம் சுழற்றுவது. ஒன்று வாளேந்துவது, இங்ஙனம் மாமுகங்கள் ஆறும் பன்னிரண்டு திண்தோளும் கொண்ட கந்தப்பெருமான், கூர்த்த வேற்படையைத் தாங்கி பச்சைமயில் வாகனுய் பக்தர்களின் அச்சம் அகற்றி அருளைப் பொழிகின்ற பாங்கினை குமரகுருபர அடிகள் கந்தர் கலி வெண்பாவில் பாடிப் பாவுவதைப் பார்க்கிருேம்.

குமாரதந்திரத்தில் கூறப்படும் சண்முகப் பெருமான் ஆறுமுகமும், ஈராறு கண்களும், பன்னிரு கைகளும், பவழநிறமும் உடையவர். அவரது வலது கைகளில் சக்தி, பாணம், கத்தி. அபயம், கொடி, கதை ஆகியவையும், இடது கைகளில் வில், வச்சிரம், தாமரை, வரதம், சூலம், கேடகம் ஆகியவையும் பொருந்தியுள்ளன.

வித்ருமதிப த்விதச ஹஸ்த ரவிநேத்ர
சக்தி சரகட்கமபய த்வஜ கதாஞ்ச
வாமகர சாப குலிசாப்ஜ வர சூல
கேடதர சவ்யகர ஷண்முக நமஸ்தே
—குமாரதந்திரம்.

முருகப்பெருமானுக்குரிய பெயர்கள் தத்துவார்த்தப் பொருள் பொருந்தியவை என்பது நுணுகிப் பார்பார்க்கு புலனுகும். 'சரவணபவனு' என்னும் மந்திரச் சொல் நாணல் நிறைந்த பொய்கையில் தோன்றியவன் என்ற பொருள் தந்தபோதும் 'சாம்' என்ற சொல் இருபத்தைந்து என்ற எண்ணைக் குறிப்பதாகவும் கொள்ளாலம். இருபத்தைந்து தத்துவங்களின் கூட்டமாகிற இப்பிரபஞ்ச வடிவமாகவே பிரணவப் பொருளான சண்முகப் பெருமான் விளங்குவதால் 'ஓம் சரவண பவாய நம' என்று துதிக்கிறோம்.

'குஹன்' என்ற சொல்லும் ஒவ்வொருவரின் இதயமாகிற குகையில் வசிப்பவன் என்ற பொருளைக் குறிப்பதாகும்' தூல பிரபஞ்ச வடிவாக 'சரவணனுக' இருப்பவன் ஆக்கும் வடிவாக அணுவுக் கணுவாக ஒவ்வொருவர் உள்ளத்திலுங் இருக்கிறுன் என்பதை இது உணர்த்துகிறது.

'ஸ்கந்தன்' என்னும் சொல் உமையம்மையரால் சேர்க்கப்பட்டவன் எவவும் சத்துருக்களை நாசம் செய்பவன் எனவும் பொருள்படும்.

'முருகு; என்பது 'அழகு, இளமை' என்று பொருள்படும்: நக்கிரரும் 'என்றும் இளையாய், அழகியாய், ஏறுரர்ந்தான் ஏறே' என்று கூறுமிடத்து இப்பொருள் விளக்கத்தைக் காண்கிறோம்.

'குமாரன்' என்ற சொல்லிற்கு 'குத்சிதம் மாரயதி' என்று வட நூலார் பொருள் காண்பர். 'தியவற்றை அழிப்பவன்' என்று பொருள்படும். ஆணவம், கன்மம், மாயை போனற சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய திய சக்திகளை அழித்தவன் ஞானவேல் ஏந்திய குமாரன் என்பதைப் பார்க்கிறோம்,

தமிழில் மிகப் பண்டைய நூல் தொல்காப்பியம் செம்மேனியனை குறிஞ்சிக் கிழவன் 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்ற வரியில் குறிப்பிடப்படுகிறுன். பரிபாடலில் 31 பாடல்கள் செவ்வேளைப் பற்றியதாக அறிகிறோம். சிலப்பதிகாரத்தில் குன்றுடும் குமரனும் அவன் கைவேலும் குரவைக் கூத்தும் பேசப்படுகின்றன. சீவக சிந்தாமணியில் சீவகனது வீரத்தை முருகப் பெருமான் கிரவுஞ்ச மலையைத் துளைத்ததற்கு உவமிக்கிறுர். சமயாசாரியர்கள் நால்வரும் கந்தன், குமரன், சேந்தன், முருகன், யேய், கடம்பன், வேலன் என்ற பெயர்களால் தம் பாடல்களில் குமரனைக் குறிப்பிட்டுள்ளனர். சேக்கிழார் கண்ணப்பநாயனுர் வரலாற்றைக் கூறும்போது 'முருகமர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றிற் சென்று பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்; வாரணச் சேவலோடும் வரிமயில் குலங்கள் விட்டார்' என்று குறிப்பிட்டுள்ளார். கச்சியப்ப சிவாசாரியர் அருணகிரிநாதர், குமரகுருபரர், சம்பந்த சர்ணுலயர், சிதம்பர சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலானுேர் முருகன் புகழ் பாடிப் பெருநூல்கள் யாத்தமை அனைவரும் அறிந்தது. இராமலிங்க அடிகளார் திருத்தணிகை முருகன் பேரிலும் சென்னை கந்தகோட்டக் குமரன் பேரிலும் பாடிய பாமாலைகளை அறிதார் யார்; ஞானியார் சுவாமிகளின் 'முருகர் அந்தாதியும்' திரு. வி. கல்யாணசுந்தரனுரின் 'முருகன் அருள் வேட்டல்' என்னும் தோத்திரப் பாடல்களும் முருகனைப் பற்றிய தற்கால இலக்கியங்களில் இடம் பெறுவன, 'அறிவாகிய கோயிலிலே அருளாகிய தாய்மடிமேல், பொறிவேலுடனே வளர்வாய் அடியார் புதுவாழ்வுற ீவ புவிமீதருள்வாய் முருகா, முருகா, முருகா' என்று பாரதியார் பரவியுள்ளதையும் அறிவோம்.

ரகுவம்ச மகாகாவியத்தில் காளிதாசனின் குமார பக்தி தெளிவாகக் காணப்படுகிறது. ரகுவம்ச நாயகர்களை வருணிக்கும்போது குமரக் கடவுளையே வெவ்வேறு பெயர்களில் அமைத்து உவமிக்கிறுன். திலீப மகாராஜாவும் அவர் பத்தினியான

சுதக்ஷிணையும் தம் குமரனான ரகுவை உமையும் சிவபெருமானும் எப்படி சரவணப் பொய்கையில் விளையாடிய புதல்வனைக் கண்டு களிபேருவகை கொண்டனரோ அப்படி மகிழ்ந்தனர் என்று கவிஞன் கூறுகின்றான்— 'உமா-விருஷாங்கோ சாஜன்மநா மதா—ததா ந்ருப; ஸாசஸௌதேந நநந்தது:' கிரௌஞ்சத்தைப் பிளந்த குமரவேளை ஒத்த பராக்ரமம் பொருந்தியவன் தசரதன் என்று கூறுகிறான் பத்தாவது சருக்கத்தில். அருள் கனிந்த பார்வையுடன் பரசுராமரை நோக்கித் தப்பாத வில்லுடன் கூடிய ராமன், சிவகுமாரனை ஒத்தவன், கம்பீரமாகப் பேசினான் என்கிறான் கவிஞன் பதினோராவது சருக்கத்தில்கைகேயி, சுமித்ரை கௌசல்யை ஆகிய மூவரிடத்திலும் ஒத்த அன்பு கொண்ட ராமனை கிருத்திகை மாதர் அறுவரிடமும் ஒத்த அன்பு கொண்ட தேவசேனாபதியோடு உவமிக்கிறான் பதினான்காவது சருக்கத்தில். இப்படி ரகுவம்ச காவியத்தில் காளிதாசனால் குமரனைக் குறிக்கும் சொற்கள் குமாரன், சாஜன்மா [சரவணன்)- குகன், ஸ்கந்தன், ஈசனின் தேஜஸ், நகரந்திரகான், ஹரஸூநு, சமூனாம் நேதா [தேவசேனாபதி) ஷண்முகன் ஆவன.

மேகதூதம் என்ற தூதுகாவியத்தில் கவிஞன் தன் கந்தபக்தியை வெளியிடுகின்றான். மேகத்தினிடம் கூறுகின்றான். 'என் காதலியிடம் தூதுசெல்ல நீ மேற்கொள்ளும் பயணத்தில் புஷ்பமேகமாகவே உன்னை மாற்றிக் கொண்டு புனிதமான ஆகாசகங்கையின் நீர் துளிக்கும் மலர்களைக் கொண்டு தேவகிரியில் வாழும் கந்தனுக்கு மலரபிஷேகம் செய்வாயாக' என்கிறான்—

தத்ர ஸ்கந்தம் நியதவஸதிம் புஷ்பமேகீக்ருதாத்மா
புஷ்பாஸாரை ஸ்நபயது பவான் வ்யோம கங்கா!
ஜலாத்ரை:
அந்த கந்தனுக்கு காதில் மயிலிறகைச் சூட்டி
மகிழ்கிறாள்

பார்வதி என்றும் வருணிக்கிறான் கவிஞன்,

அத்வைதத்தை நிறுவிய ஆதிசங்கரர் தேவதைகள் அனைத்திலும் அத்வைத பாவத்தோடு பிரம்மத்தைக் காண்பவர். குழந்தை கந்தனாகக் காண்கிறார் பரம்பொருளை. குகப் பெருமானிடத்தில் அவருக்கிருந்த பக்தியை எப்படி வெளியிடுகிறார் பாருங்கள். 'இக்கண்களில் கந்தன் என்றும் கலந்திருக்க வேண்டும். இச்செவிகள் என்றும் அவன் புகழையே கேட்க வேண்டும். இந்த நா அவனது புனிதச் செயல்களையே புகழ வேண்டும். இக்கைகள் அவனுக்கு திருத்தொண்டுகள் செய்த வண்ணமே இருக்க வேண்டும். இவ்வுடல் அவனுக்கே ஆட்படல் வேண்டும். சுருங்கச் சொன்னால் எண்ணங்கள் அனைத்தும் அந்தக் குகனிடத்திலே ஒன்றிவிடல் வேண்டும்;'

'த்ருசி ஸ்கந்த மூர்த்தி, ச்ருதௌ ஸ்கந்த கீர்த்தி:
முகே மே பவித்ரம் சதா தச்சரித்ரம்,
கரே தஸ்ய க்ருத்யம், வபுஸ் தஸ்ய ப்ருத்யம்,
குஹே ஸந்து லீனா: மமாசேஷ பாவா:'

.சுப்ரஹ்மண்ய புஜங்கம்,

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற்கரிய
செல்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படைவாழ்க அன்னான்
பொய்யில் சீர் அடியார் வாழ்க வாழ்க
இப்புவனம் எல்லாம்

–கந்தபுராணம்.

# எங்கள் குலதெய்வம்

A. R. V. சோமசுந்தரம், பொன்னுவலை.

ஈழத்துச் சிதம்பரத்தை தன்னகத்தே கொண்டு தீவுக்கே சிகரமாய்திகழும் காரை நகருக்கே திலகம் வைத்தாற்போல களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலயம் அமைந்து இருப்பது சைவப் பெருமக்கள் செய்த பெருந்தவமே.

கலியுக வரதனாகிய எங்கள் தெய்வத்தின் அற்புதங்களையும் என் சிந்தனையில் சுழல்கின்றவற்றையும் எடுத்து எழுதும் ஆற்றல் எனக்கு இல்லையெனினும் சுருங்கக் கூறின். ஒருநாள் ஒருபொழுதாயினும் மனம் கசிந்து வேண்டினால், அவர் தம் வாழ்வில் களிப்பையோ, கனிவையோ காண்பது மிக எளிது,

தமிழர் பண்பாட்டின் உருவமாகத் திருக்கோலம் கொண்டவன் முருகன். முருகன் வேறு, தமிழர் வாழ்வு வேறு அல்ல என்ற அளவுக்கு முருகன் தமிழர் வாழ்வுடன் இரண்டறக் கலந்துவிட்டான்.

முருகன் புகழ் நக்கீரர் காலத்திருந்தே பரவத் தொடங்கி விட்டது. அருணகிரியார் "பாடும் பணியே பணியா அருள்வாய்'' என முருகனிடம் வேண்டினார். அதனால் பதினாயிரத்திற்கு மேற்பட்ட திருப்புகழைப் பாடினார்.

'திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாயே
ஒருத்தரை மதிப்பதில்லை உன்றனருளாலே'

என்று மன உறுதி திருப்புகழ் படித்தால் உண்டாகும்.

அங்கும் இங்கும் எங்கும் உள்ள எங்கள் குலதெய்வம், எங்களைக் காக்கும் கல்லுக்குள் உள்ள தேரைக்கும், கருவுக்குள் உறையும் உயிருக்கும், முட்டைக்குள் உள்ள குஞ்சுக்கும் உணவு தருகின்ற தெய்வம் எங்களைக் காக்காமல் கைவிடுமா?

கலியுக வரதன் எனவும், தமிழ் தெய்வம் என்றும், ஓங்காரப் பொருள் எனவும், தமிழ் தெய்வம் எனவும், உயர்ந்தோரால் எண்ணி இறைஞ்சப்படும் முருகப்பெருமானின் திருப்பணி வேலைகளைச் செவ்வனே செய்து சைவத்தின் பெருமையை உலகறியச் செய்தார்கள். முருகனடியார்கள் அனைவரும் வேண்டிய வேண்டியாங்கு எய்தி மேம்படுக என வேண்டித் திருமுருகன் இணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்செய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே"

என்கிறார் அருணகிரியார். ஆகவே உங்கள் குலதெய்வத்தைத் துணையாகக் கொண்டவர்க்கு எப்போதும் ஒரு குறையும் வராது.

சண்முகக் கடவுள் சரவணத் துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
தண்மலர்க் கடப்பமாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி

*Telephone* : **249 Kilinochchi** *Telegrams* : **"Paddy"**

# V. R. THAMBIPILLAI

*Dealers in* : Tractor Motor Spares
and Agro Chemicals

**Kilinochchi.**

*Branches*:

## LANKA FILLING STATIONS

**KILINOCHCHI & MANKULAM**

## வே. இ. தம்பிப்பிள்ளை

**கிளிநொச்சி.**

தொலைபேசி : 249 கிளிநொச்சி தந்தி : "நெல்" கிளிநொச்சி

# கடவுள் வழிபாடு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

உடம்பின் வேருய் 'உயிர்' என்று ஒரு பொருள் உண்டா? என்று ஒரு வினுக் கால வரையறையின்றி இருந்து வருகின்றது.

உயிர் என்று ஒன்று உண்டு என்று நிரூபிப்பது எளிதன்று. உயிர் இல்லை என்று நிரூபிப்பது இயலாதது.

விஞ்ஞானம் உடம்பை அணுவணுவாக ஆராய்ந்து, 'வாற்பேத்தை' முதல் வானரம்வரை சென்று மனித உடம்புக்கு வந்து, தன் முடிவை இனிது வெளிப்படுத்த வல்லதாய் விளங்குகின்றது,

'மனித உடலொன்றைச் சிருட்டி செய்யவோ அதன் கண் வளர்ந்து செல்லும் உணர்ச்சியினைக் கூட்டி வைக்கவோ விஞ்ஞானத்தால் இயலாது என்ற காலம் போய் விட்டது. அதற்கு அவயவஞ் செய்தல் கை கூடும் என்ற காலம் வந்து விட்டது' என்று கொண்டாலும், உயிரென ஒன்று இல்லையென நிரூபிப்பது இயலாததே.

விஞ்ஞானி ஒருவன் மனித திருஷ்டி ஒன்றைச் செய்து விட்டான் என்று வைத்துக் கொள்வோம். உணர்ச்சி மயமாகிய உயிர், கருப்பையுட் பிரவேசிப்பதுபோல அந்த விஞ்ஞானியின் சிருட்டியிலும் பிரவேசிக்குமாயின், அப்படியொன்று பிரவேசிக்கவில்லை என்று அவனுற் சாதிக்க முடியுமா?

o

உலகம் சடம், சித்து என்ற இரண்டன் கூட்டம், இந்த உடம்பு இதற்கு நல்ல உதாரணம். சடம் அறிவற்றது; சித்து அறிவு.

வேறு பிரித்தற்கரிய இரண்டன் கூட்டத்தில், ஒன்றை எடுத்துக் கொண்டு அதனை மாத்திரம் ஆராய்ந்து நிச்சயிக்கும் முடிவு முடிந்த முடிபு ஆகாது. கூடியிருப்பதன் சார்பால், எடுத்துக் கொண்டதிற் காணும் இயல்பையும் ஆராய்ந்த வழியே பூரண முடிபு சித்திக்கும் என்பர் அறிந்தோர். இது சிந்திக்கற் பாலது.

o

தேவர்களுக்குப் புலவர்என்றும் பெயர். புலம்—அறிவு. மனிதரிலுந் தேவர் அறிவாலுயர்ந்தோர்.

> பற்றிய தொடர்பையும் உயிரையும் பகுத்து
> இற்றென உணர்கிலம்'

என்பது புலவர்களாகிய தேவர்கள் கூற்ருய் வருவதொரு கந்தபுராணப் பாட்டின் பகுதி. பற்றிய தொடர்பு—உடம்பு. இற்று - இவ்வியல்பினது.

உடலின் வேருக உயிரைப் பகுத்து அதன் இயல்பை உணரத் தேவர்களாலும் முடியவில்லை.

மனிதர், தேவர், முனிவர் என்போர் நிலை வேறுபாட்டால் மூன்று வேறு கணத்தவர். இவர்களுள் தவத்தாலுயர்ந்து தூய்மை யெய்தியவர்கள், கண் முதலிய புறக்கரணங்களைக் கடந்து, அவைகளுக் கெட்டாதவைகளை அவைகளை விலகி நின்று அறியவல்லவர்கள்.

நம் அறிதற் கருவிகள், தம்மிலுந் தூலப் பொருளை அறிதற்குதவுமேயன்றி, தம்மிலுஞ் சூக்குமமான நுண்பொருள்களை அறிதற்கு உதவமாட்டா.

o

வனவாச காலத்தில் அருச்சுனன் தவஞ் செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவனை அவ்விடத்திற்காணுது தருமர் கலங்கிப் புலம்பினுர். அப்பொழுது அங்கே வந்த உரோமசர் என்கின்ற முனிவர், கண் மூடி மௌனியாச் சில கண நேரம் சும்மா விருந்தார். பின், 'அருச்சுனன் சுவர்க்கத்தில் தந்தையாகிய இந்திரனுடன் இருக்கின்ருன். உங்களிடம் வருவான்' என்ருர். கால இடங்களைச் கடந்த அறிவு அவருக்கு எப்படி உண்டானது! அந்த அறிவு புறக் கரண அளவு கருவிகளாற் சித்திக்குமா?

மனம் புத்தி அகங்காரம் என்கின்ற உட்கரணங்களைச் சுத்தஞ் செய்தவர்கள், அவற்றைத் தனித் தனியும் ஒருங்கு சேர்த்தும் இரண்டிரண்டாகக் கூட்டியும் எழு வகைப்படுத்திப் பயன்படுத்துவர், ஏழு வகையும் எழுவகைக் கண்கள். இக்கண்களாற் 'சப்தலோகப் பிராப்தி' என்கின்ற சித்தி உண்டாம். அஃதாவது ஏழு உலகத்துச் சம்பவங்களையுங் காணுவதொரு வல்லபம்.

உரோமசர் எழுவகை அகக் கண்களில் ஒன்றன் மூலம் அருச்சுனன் இருந்த இடத்தைக் கண்டு சொன்னவர் ஆகலாம்.

எழுவகைக் கண்களாலும் வரும் அநுபவங்களை அநுபவித்துக் கொண்டு உடலின் கண் உறையும் பொருளை, உடலின் வேருக அகக் கண்களாற் காண முடியுமா! அக்கண்கள் தம்முள் ஒன்றையொன்று காணுதவைகள். அப்படிப்பட்டவைகள் தம்மைப் பயன்டுடுத்துகின்ற: தம்மிலும் நுண்ணிய பொருளைக் காணுவதெப்படி?

o

காடுகளுக்குள்ளே மரங்கள் கொடிகள் பந்தர் செய்து கொண்டிருக்கும் இடங்களிலே உரோமசர் போன்ற முனிவர்களின் ஆச்சிரமங்கள் இருந்தன. ஒவ்வொரு ஆச்சிரமமும் ஒவ்வொரு பல்கலைக் கழகம். அங்கே மாணவர்கள் வேதம் விதித்தவாறு பிரமசரியத்தை அநுட்டித்து ஏகாக்கிர சித்தர்களாக முனிவர்களுக்குப் பணி செய்து வேதாத்தியயனஞ் செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள், அம் முனிவரிடம் வினவும் முடிந்த வினு ,நான் யார்' என்பது.

o

ஜனகமகாராஜா, பெரிய ஆத்மஞானி அவரிடம் முனிவர்கள் வருவார்கள், முனிவர்களே, உங்களுள் யார் யார் உங்களை கண்டு கொண்டவர்கள் என்று அவர்களை ஜனகர் வினவுவார்; நான் யார் என்னும் விசாரத்தை அம்முனிவர்களுக்கு உதிக்கச் செய்வார்.

'நான் ஆர்...என்னை ஆரறிவார்' என்கின்றது திருவாசகம்.

o

உபநிடதங்கள் வேதாந்தம் எனப்படும். வேதாந்தம், 'நான் யார்' என்று வினவும் மாணுக்கர்களுக்கு முனிவர்கள் உபதேசித்த வாக்குக்களைக் கொண்டது. அந்த வேதாந்தம் மாணவனை நோக்கி, 'மாணவனே, ''நீ பிரமம்''; உன் உடலில் ''நான்'' ''நான்'' என்று சொல்லுவது அந்தப் பிரமமே. அதனைக் காண்' என்று கூறிக் காணுதற்கு உபாயங்கள் வகுக்கின்றது. மாணவன் நான் என்கின்ற பிரம்மத்தைக் காண முயல்கின்ருன். இவ் விஷயத்தில் புராணக்கருத்தொன்று சிந்திக்கற்பாலது.

•

பிரம விஷ்ணுக்கள் தேவர்களுக்குள் உயர்ந்தோர். அவர்கள் தம்மைத்தாம் காண வல்லவர்கள். அப்படிப்பட்டவர்கள் ஒருமுறைக்கு மேலே பலமுறை தம்மைப் 'பிரமம்' என்று கண்டு, அதனுலே அகங்காரங்கொண்டு, மயக்கம் அடைந்தார்கள் என்கின்றது புராணம். அதன் கருத்தென்ன? புராணம் வேதாந்த விரோதமா?

o

புராணம் வேதப் பொருளை விளக்கஞ் செய்வது, 'புராணந் தெரியாதவனைக்கண்டு வேதம் அஞ்சுகின்றது' என்று ஒரு ஆப்த

வசனமுமுண்டு. ஆகவே, புராணக்கருத்தை வேதவிரோதமின்றிக் காணவேண்டும்.

o

ஒருவரை ஒருவர் கட்டித் தழுவினர் என்றால் உயிர் ஒன்றையொன்று தழுவியதா? உடல் ஒன்றை யொன்று தழுவியதா இதனை சற்றே சிந்தித்துக் கொண்டு, வேதாந்த புராணக் கருத்துக் களுக்கு இணக்கங் காண்போம்.

o

உயிர் குற்றியலுகரம் போன்றது. குற்றியலுகரத்தை வரிவடிவிலோ ஒலி வடிவிலோ தனியே காட்ட முடியாது. அது சார்பெழுத்து. அதனைத் தனிக் குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்குப் பின்னே சொல்லிறுதியிலே வல்லின மெய்யின்மேலே வைத்துத்தான் காட்டமுடியும்.

உயிர்களை மெய்களாகிய தேகத்திலே வைத்துத்தானே காணுகின்றோம். சார்பெழுத்துப் போன்றனவாகிய உயிர்கள், மற்றொன்றைச் சார்ந்தன்றித் தனித்திருக்கை இல்லாதவைகள். ஒன்றைச் சார்ந்து அதன் வண்ணமாயிருப்பது உயிரின் இயல்பு; பளிங்குபோல.

o

உயிர் இப்பொழுது உடலைச் சார்ந்து உடல்வண்ணமாயிருக்கின்றது. நீ யார் என்று விசாரித்தால், அதுதான் சார்ந்திருக்கும் உடலையே தான் என்று காட்டுகிறது. அவ்வாறுதான் அது தன்னைக் காட்ட முடியும்.

இந்த உயிருக்கு இந்த உடலின் வேறாகவும் சார்பிடம் உண்டு. அது உயிரினும் நுண்ணிது. அதனைச் சாரும்போது உயிர் தன்னைத்தான் காணும்; 'நான் யார்' விடுபடும். அந்தச் சார்புக்குப் 'பிரமம்' என்று பெயர் கூறுகின்றது வேதாந்தம்.

நாம் உயிருக்கு அதன் சார்பாகிய உடலின் பெயரை வழங்குகின்றோம்; வேதாந்தம் உயிரின் நுண்சார்பாகிய பிரமத்தின் பெயரை வழங்குகின்றது. உடல் தூலச் சார்பு; பிரமம் சூக்குமச் சார்பு.

பந்த நிலையில் உயிரின் சார்பிடம் உடம்பு; பந்தம் நீங்கிய நிலையில் உயிரின் சார்பிடம் பிரமம். சீவன்முத்தர்கள் உடம்போடிருந்தாலும் அதனை வேண்டாதிருப்பவர்கள்; பிரமச்சார்பு கைகூடியவர்கள். 'பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை' என்பது வள்ளுவர்.

o

புராணம் பிரமவிஷ்ணுக்கள் தம்மைப் பிரமம் என்று மயங்கினார்கள் என்று கதை சொல்லுவதன் கருத்து, 'உயிர் பிரமமன்று; உயிரின் சார்பிடம் பிரமம்' என்பதை வலியுறுத்துவதேயாம்.

o

நாம் காணும் உடல் உயிரின் பொய்ச் சார்பு; இச்சார்பு அநித்தியமானது; இடையிடையே வந்து போவது.

உபநிடதங் கூறும் பிரமம் உயிரின் மெய்ச்சார்பு; நித்திவமானது; வந்து போவதன்று.

o

வேதாந்தக் கருத்தைத் தத்துவ நெறியில் விளக்கஞ் செய்வது, சைவசித்தாந்தம். அது வேதாந்தத் தெளிவு.

'கண்ட இவை நானல்லேன்; காணுக் கழிபுரமும் நானல்லேன்' என்பது சிவஞான சித்தியார்.

கண்ட இவை பொய்ச்சார்பாகிய தேகாதிகள். அகக்கரண புறக்கரணங்கள் எனினும் ஆம். காணுக் கழிபரம் மெய்ச் சார்பாகிய பிரமம்.

o

நாம் உயிரின் மெய்ச்சார்பாகிய பிரமத்தை, நம்மைத் தேடும் முகமாகக் காண வேண்டியவர்கள்; காண முயலவேண்டியவர்கள்; முயலாதவழி நமது நோய் நீங்காது.

நாமெல்லாம் மனநோயாளர்களாயிருக்கின்றோம். இந்த உலகத்திலே மனநோயில்லாதவர்களைக் காண்டல் அரிதினும்

அரிது. எவர் ஒருவரது மனசை எடுத்துப் பரிசோதனஞ் செய்தாலும், அது கவலை களின் இருப்பிடமாயிருப்பதைக் காண லாம். வழி தப்பி மனக்கவலையைப் பெருக் கும் மனிதனைப் பார்த்து, உன் வழியால், ''மனக்கவலை மாற்ற லரிது'' என்கின்றார் வள்ளுவதேவர்.

இந்த உலகத்திலே மனிதரின் மனக் கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தே தீரு வோம் என்று அறைகூவி, மேலும் மனக் கவலையைப் பெருக்கி மடிந்தவர்களின் சரித்திரமே உலக சரித்திரம்.

இன்றும் பொருளாதார நிபுணர்கள், சமத்துவ சகோதரத்துவ சமாதானக்காரர் கள் என்று எத்தனையோ பலதிறத்தினர் கள் இதோ உய்யவழி காட்டுவோமென்று பெருமுயற்சி எடுக்கின்றார்கள். அவர்கள் முயற்சியெல்லாம் வயிற்றுக்கவலையளவில், அதனையும் பூரணஞ் செய்யமுடியாமல், நின்றுவிடுகின்றன. மனக்கவலை நாய்வால் போல இருந்தபடி இருக்கிறது.

o

வள்ளுவர் ஒருவரே 'கவலை மாற்றல் அரிது' என்ற அவரே. கவலை போக்கும் மருந்தையும் அறிந்தவராயிருக்கின்றார்.

ஓ மாணவர்களே, நீங்கள் 'கற்றதனு லாய பயனென்கொல்' என்று நம்மையெல் லாம் விளித்து வினவிக் கொண்டே அந்த மகான், கவலை போக்கும் வழியை—ஒன்றே யொன்றான வழியை—நமக்குக் காட்டுகின் றார்.

'அறஞ்செய விரும்பு' சொன்ன அன்னை வள்ளுவர் காட்டும் வழியை அநுவதித்து

'ஆலயந் தொழுவது சாலவு நன்று'

என்கின்றாள்.

அறங்களுள் தலையாய அறமாவது, உயிரின் மெய்ச்சார்பும் கவலை போக்கும் மருந்துமாகிய கடவுளை வழிபாடு செய்வ தொன்றுமேயாம்.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழிந்துச்
சார்தரா சார்தரு நோய்.)

\+ \+ \+ \+

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் [குமின்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் [பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் [காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! உன் அடி [என்மனத்தே
வழுவா திருக்க வரந்தா வேண்டும்; இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள் செய்பா [திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த [தீவண்ணனே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

(குறள்)

# மனமுருகி இறைவனை வழிபடுக

— திருமுருக கிருபானந்தவாரியார் —

அகில உலகங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ஒன்று தானே அறிகின்ற பொருள்; மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள்; அறிவித்தாலும் அறியாத பொருள் மற்றொன்று, இவற்றைந் பதி, பசு, பாசம் என்று நம் சைவசமய ஞான நூல்கள் கூறுகின்றன.

பதி: தானே அறிகின்ற பொருள்.

பசு; அறிவித்தால் அறிகின்றபொருள்

பாசம்; அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள். இறைவனும் அநாதி; ஆன்மாக்களும் அநாதி.

''பதியினைப்போல் பசு பாசம் அநாதி;'
என்கிறார் — திருமூலர்.

ஆனால் இறைவன் இன்ப வடிவினன்; ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித் துன்பத்தை நுகர்கின்றன.

''சதாபாரதா துக்க பவான்திணபந்தோ''

என்று சுப்ரமண்யபுஜங்கத்தில் சங்கரரும் கூறுகின்றார்.

ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குதற்குத் திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனி தாங்கி, ஆன்மாக்களுக்கு உடம்பையும், கருவிகரணங்களையும் உலகங்களையும் படைத்துக் கொடுத்தருளினார்.

அவ்வாறு படைத்த எழுவகைப் பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

''அரிது அரிது மானிடராதல் அரிது''
—ஔவையார்.

''எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்''
என்கிறார்—தாயுமானவர்.

எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறிமாறி வந்து இளைப்புற்றேன் என்கின்றார்.
—மணிவாசகர்.

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்துணையென்று அறுதியிட்டுக் கூறினும் கூறிவிடலாம். ஆனால், நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிட முடியாது என்கின்றார்.
—அருணகிரிநாதர்.

''எழுகடல் மணலை அளவிடி னதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்''
—திருப்புகழ்.

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டினால் பாற்கடல் சிறிதாகிவிடும் என்கின்றார்.
—குருநமசிவாயர்.

''எடுத்தபிறப் பெல்லாம் எனக்குவந்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டின்...
அடுத்துவரும்
பன்னு கணைத்துயிலும் பாலாழி புஞ்சிறிதாம்
மன்னு சிதம்பர தேவா.
—சிதம்பர வெண்பா.

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது என்றோம்.

மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள்.

மன் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன்; நினைக்கின்ற கருவி மனம். அது இன்றியமையாத ஒன்று. மற்றப் பிராணிகட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன். வடமொழியில் மநுகா; ஆங்கிலத்தில் மேன்; இச்சொற்கள் யாவும் மன் என்ற பெயர்ச் சொல்லிலிருந்து தோன்றியவை.

மனம் என்ற கருவியில்லாமையால் விலங்குகளின் வாழ்வு ஒன்றுபோல் அமைந்திருக்கின்றன. மாடு அன்று உண்ட புல்லைத்தான் இன்றும் உண்ணுகின்றது; மனிதன் உணவைப் பல்வேறு வகையாகப் பக்குவஞ் செய்து உண்ணுகின்றான்.

குருவி அன்று கூடு கட்டியதுபோல் தான் இன்றும் கட்டுகின்றது. மனிதன் வீடுகட்டும் முறை கணத்துக்குக் கணம் பல்வேறு விதமாக முன்னேற்றமடைந்திருக்கின்றது.

உணவினாலே, உடையினாலே. நடையினாலே. பேச்சாலே, எழுத்தாலே, வாகனங்களினாலே மனிதன் முன்னேற்றமடைகின்றான்.

இதனை இதனை இப்படி இப்படிச்செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றான்.

இவ்வாறு சிந்திக்கின்ற மனிதன் சமய நெறியிலும் முன்னேற வேண்டும்.

நான் யார்? இந்த உடம்பு எப்படிவந்தது? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன்பொருட்டுத் தந்தானா: என்பொருட்டுந் தந்தானா? உடம்பு எடுக்குமுன் எப்படி நான் இருந்தேன்? எதற்காக உடம்பு தரப்பட்டது? நான் எங்கிருந்து வந்தேன்? எதன் பொருட்டு வந்தேன்? எங்கே போக வேண்டும்? நான் எங்கே போய்க் கொண்டிருக்கின்றேன்? என்பனவாறு சிந்தனைகள் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைகள் தாம் சிந்திக்கத் தக்கவை. இவைகளைச் சிந்திக்கிறவன் உண்மையில் மனிதனாகின்றான். இந்தச் சிந்தனையில்லாதவர்களைச் சிந்தித்துப் பரமகுருநாதராகிய அருணகிரிநாதர் பாடுகின்றார்,

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கின்றிலேன்
தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன்
மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன்
உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.

ஏனைய சிந்தனைகள் பிறவியைத் தரும். அச்சிந்தனைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும்.

## பஞ்சாக்கரத்தில் பல பிரிவுகள் உண்டு

''ஐம்பத்தோன்றிலெட்டாறில் மூன்றினில்
ஐந்தில் தங்கும் அப்பாலை வான்பொருள்''

—என்பது திருவகுப்பு.

மூன்று என்பது திரியட்சரம், இதைப் பரம ஞானிகள் ஓதுவார்கள்.

''சிவாய எனும்நாமம் ஒருகாலும் நினையாத
திமிராக ரனைவாவென் றழையாதே''

—திருப்புகழ்.

ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம்—ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீர் ஐந்துறலாம் ஆவியீர்
ஐந்திடவாம் ஓரிரண்டோ டாய்ந்து,

ந — திரோதமலம்

ம — ஆணவமலம்

சி — சிவம்

வ — திருவருள்

ய — ஆன்மா

ஆன்ம எழுத்து ய ஈரைந்து பத்து

தமிழ் கணக்கில் பத்து — ய.

இந்த யகரத்தை அபரது—பின் சிகரத்துக்கும் வகரத்துக்கும் பின்வைத்து சிவய என்று ஓதுவார்களானால்,

### "ஆவியீரைந்தை அகற்றலாம்''

ஈரைந்து—பத்து; பத்து என்ற சொல்லை ஆவி என்ற எழுத்துக்களுடன் சேர்க்க வேண்டும்.

ஆ என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க—ஆபத்து

வி என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க—விபத்து

ஆபத்து—உடலுக்கு வருந்துயர்

விபத்து—உயிருக்கு வருந்துயர்

உடலுக்கு வருந்துயர்கள் பசி, பிணி முதலியன.

உயிருக்கு வருந்துயர் பிறப்பு, இறப்பு என்பன.

இந்த ஆபத்து, விபத்து என்ற இரு வகைத் துயரங்களும் சிவாய என்று ஓதுவார்க்கு உண்டாகமாட்டா.

**ஆவியீர் ஐந்து அறலாம்:-**

ஆணவம், கன்மம், மாயை, திரோதம், மாயேயம் என்ற பஞ்ச மலங்களும் அறும்.

**ஆவியீர் ஐந்து உறலாம்:-**

ஆவியீர் விளி உயிர் போன்றவர்களே! நிவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியாதிதகலை என்ற பஞ்ச கலாமயமும் உண்டாகும்.

**ஆவியீர் ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து:-**

ஆவி — பிராணவாயு

ஈரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்து இடலாம் - வெளியே அவமேகழிகின்ற பன்னிரு அங்குலம் பிராணவாயு அவ்வாறு கழியாது உள்ளே மீளும்.

இன்னும் ஒருமுறை அப்பாடலைச் சிந்திப்போம்:

ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம்-ஆவியீர்
ஐந்துறலாம் ஆவியீ ரைந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து.

என்ன அற்புதமான செய்யுள்? எத்துணை ஆழமான செம்பொருள்கள்? ஆதலால், ஐந்தெழுத்தைச் சிந்திப்போமானால் துயர்கள் சிந்திப்போம்.

தனியிழையை எளிதில் அறுத்துவிடலாம், இருபத்தையாயிரம் யிழைகளைக் கூட்டி முறுக்கிவிட்டால், அக்கயிற்றால் தேரை யிழுத்துவிடலாம். அதுபோல் பல லட்சம் முறை மந்திர ஜெபம் கூடுமானால் இறைவனைத் தெரிசித்துவிடலாம்.

96 கோடி ராமமந்திர ஜெபத்தால் தியாகராஜ சுவாமிகள் ஸ்ரீராமரை நேரில் தெரிசித்தார். அண்மையில் வாழ்ந்த உண்மைத் துறவியாகிய பாம்பனடிகள் 36 நாள் பாம்பன் வலசையில் மயானத்தில் குழிவெட்டிக்கொண்டு, அக்குழியிலிருந்து இடையறாது சடக்கர மந்திரத்தைச் செபித்து இளம்பூரணை நேரில் கண்டு தெரிசிக்கப்பெற்றார்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவது போல், இடையறாது தியானஞ் செய்தால் எம்பெருமான் வெளிப்படுவான்.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுள்ள மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.
—அப்பர் பெருமான்

உடம்பை உயிர்செலுத்துகின்றது; உயிரை இறைவன் செலுத்துகின்றான்.

காரை டிரைவர் செலுத்துகின்றான். டிரைவரை எஜமான் செலுத்துகின்றான் என்பதுபோல் உணர்க.

உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை. டயருக்குள் ட்யூப்; ட்யூப்புக்குள் காற்று.

இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக எண்ணினால் உள்ளம் உருகும்; அன்பினால் என்பும் உருகும். முடிவில் உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றி விடும்.

அரக்கின் இடையில் தங்கம்; தங்கத்தின் இடையில் இரத்னமணி.

அரக்கு உருகினால் தங்கம் உருகும்; தங்கம் உருகினால் மணி அதில் பதிந்துவிடும்; அதுபோல் உள்ளம் உருகி, உயிர் உருகி சிவத்துடன் ஒன்றுபடவேண்டும்.

நம் உள்ளமே உருகவில்லையானால் உயிர் எவ்வாறு உருகும்? இறையுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும்?

ஆதலால், அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி, இறையுடன் கலந்து இன்புறுவதுவே சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிவாம்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவஎண் குணபஞ் சரனே.

என்று அனுபூதி இதனை நமக்கு உணர்த்துகின்றது.

உணவு தேடுகின்ற நாம் உணர்வுந் தேடவேண்டும். நித்த அறிந்த வேறுபாடு களை உணர்வதுதான் உணர்வுடைமைக்கு அழகாகும்.

## நேற்றிருந்தார் இன்றில்லை

மகாபாரதத்தில் யட்சப் பிரச்சனை என்று ஒன்று உளது. அது மிக மிக அருமை யானது. யட்சமுர்த்தி தருமரைப் பார்த்து வினவுகின்றார். ''தருமா? உலகிலே மிகவும் ஆச்சர்யமானது எது?''

தருமர்;

''தினந்தோறும் இறக்கின்றவர்களைக் கண்டும் தனக்கு மரணம் இல்லையென்று எண்ணுகின்றானே! அதுதான் பெரிய ஆச் சர்யம்'' என்றார்.

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேல் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணை செய்யாடில்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க வாகுமோ.

என்று தயரதர் கூறுகின்றார்-

ஆதலால் மரணம் வருமுன் இறை வன் சரணத்தை வழிபட்டு நலம்பெற வேண்டும்.

இதுகாறும் கூறியவாற்றால், முப்பொ ருள் உண்மையும், இறைவன் தந்த அரிய பிறப்பு மனிதப் பிறப்பு என்பதும், இப் பிறப்பினால் இனியொரு பிறப்பு எடுக்காத வகையில் நாம் இறைவனுடன் ஒன்றி சிவாத்துவிதம் பெறவேண்டும் என்பதும், அதற்குரிய நெறி அன்பினால் உருகுவது என்பதும், ஐந்தெழுத்தை ஓதி உய்யவேண் டும் என்பதும், மரணம் நேருமுன் சரணம் பெற வேண்டும் என்பதும் தெரியப் பெற்றோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.


ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை நடாத்தும் அனைத்துலகத் தமிழ் நாவல் போட்டி

**பரிசு ரூபா 1750 - 00**

தமிழ் இலக்கியத்தின் தரத்தை உயரச் செய்வதன் பொருட்டும் தமிழ் எழுத்தாளர்கள் தமது திறமையை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமும் ஊக்க மும் அளிக்கும் பொருட்டும் ஈழத் தமிழ எழுத்தாளர் பேரவை நாவல் போட்டி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. முதற் பரிசாக 1000/- ரூபாவும் இரண்டாம் பரிசாக 500/- ரூபாவும் மூன்றும் பரிசாக 250/- ரூபாவும் வழங்கப்படும்.

இப்போட்டியில் அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

போட்டிக்கு அனுப்பப்படும் நாவல்கள் ஈழத்தமிழரது சமூகம், பண்பாடு, பொருளாதாரம் வாழ்வியல் ஆகியவற்றை நிலைக்களனாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

நாவல்களின் நீளம் 50,000 வார்த்தைகளுக்கு மேற்படாமல் இருத்தல் விரும்பத்தக்கது.

போட்டிக்குரிய நாவல்கள் கிடைக்கவேண்டிய கடைசி நாள் 31-8-74 அதற்குப் பின்பு கிடைக்கும் நாவல்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படா.

நாவல்கள் அனுப்பி வைப்பதற்கும் ஏனைய விபரங்களுக்கும் ;

இணைச் செயலாளர்
ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை
111, பிக்கறிங்ஸ் வீதி,
கொழும்பு 13.

# சைவம்

சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் B. A.

சைவம் என்ற சொல் சிறந்த பல பொருள்களைத் தரும் பண்புடன் விளங்குகிறதொன்று. சிவ சம்பந்தமுடையது. சைவம் என்பது அதன் மொழிப் பொருள். சிவம் என்ற சொல் முழுமுதற் கடவுளைக் குறிப்பதாய் எல்லாம் கடந்தது, எங்கும் இருப்பது, எல்லாம் வல்லது என்பனவாதிப் பல பொருள்களை உள்ளடக்கியதாய் விளங்குவது, "அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்கும், தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம்'' என்பது திருவாசகம். இத்தகைய சிவத்தைக் குறிக்கும் எல்லாக் கொள்கைகளின் தொகுதியைச் சைவம் என்பர்.

## "சைவம்" உலக வழக்கு

மேலே கண்டவாறு கடவுளைப்பற்றிய எல்லாக் கொள்கைகளுக்கும் இருப்பிடமாவது சைவம் என்றிவ்வாறிருக்க, உலக வழக்கில் அது வழங்குமாற்றைப் பார்ப்போம். சைவம், சைவர் என்பதை ஒரு சாதிப் பெயராகச் சிலர் வழங்குவர். மற்றும் சிலர் அற்றன்று, அது புலாலுண்ணாமையைக் குறிக்கும் என்று வழங்குவர். இதுவே பெருவழக்காம் "இன்றைக்கு நான் சைவம்'' "என்வீட்டில் நான் மட்டும் சைவம்'' "எங்கள் தகப்பனார் கால முதல் நாங்கள் சைவம்'' (நாராயண நாய்க்கர் மிலிடரி ஹோட்டல் \போர்டு பலகையில் கீழ்ச் சில நாட்களில் தொங்கும்) "இன்று சைவச் சாப்பாடு'' என்ற சிறு பலகை விளம்பரம். இவைபோன்று உலக வலக்கில் உரையாடல்களில் வரும் சைவம் என்னும் சொல் புலாலுண்ணாமை என்ற பொருளையே தாங்கி நிற்றல் காண்க. சைவம் என்பது புலாலுண்ணாமை என்ற அடிநிலையின் மேலெழுந்த கட்டடம் என்ற உண்மை உலகர் யாவரும் ஒப்புக்கொண்டது என்பது இதனாற் புலனாகும். இது சைவைத்தின் சிறப்பு. வைணவம், சைவம், புத்தம், கிறித்தவம், இஸ்லாம் முதலிய ஏனைய சமயப்பெயர்களுக்கு இப்பொருள் பொருந்தாமையால், வழக்கில் இல்லாததும் காண்க. சைவம் என்றால் புலாலுண்ணாமையை இன்றியமையாது குறிப்பது போலக் கிறித்துவம், இஸ்லாம், புத்தம், சமணம், வைணவம் என்ற சமயப் பெயர்கள் குறிப்பதில்லை. சில சமயப் பெயர்கள் புலாலுண்பதையே குறித்து நிற்கும்.

## சைவம் ஒரு சமயம்

இனிச் சைவம் ஒரு சமயத்தின் பெயராகவும் வழங்கப்படுகிறது. "சைவமுதலாமளவில் சமயமும் வகுத்து'' என்கிறார் தாயுமானார். ஆம்; சைவம் ஒரு சமயம் தான். ஆனால், அது எல்லாச் சமயங்களுக்கும் முதன்மை பெற்றது என்பார் முதலாம் என்றுங் குறித்தார். எழுத்துக்களுக்குள் அகரம் முதன்மை பெற்றது போலச் சமயங்களுள் எல்லாம் சைவம் முதன்மை பெற்றது. அகரம் எல்லா எழுத்துக்களுள்ளும் வியாபித் நின்றுதான் வேறோர் எழுத்தினும் அடங்காது நிற்றல் போலச் சைவமும் எல்லாச் சமயங்களும் தன்னுள் அடங்காதா ரொன்றிலும் அடங்காது தனி நிற்பது. "சைவ சமயமே சமயம்'' "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை'' என்பன முதலியவை காண்க. இவை வெறும் அபிமானத்தாற் சொன்னவையல்ல. உண்மை நெறிநிலை கண்டு சொல்லியவையே. ஒவ்வோர் செயலுக்கும் நான்கு பொருள்கள்

இன்றியமையாது வேண்டப்படுவன. செயலைச் செய்பவன்–1; செயல்–2; செயலின் பயன்–3; அப்பயனைச் சேர்ப்பிப்பவன்–4 என்பன. இத்தன்மை சைவ நெறியிலே தான் காணப்படுவது. ஏனைய சமயங்கள் இவற்றுள் ஒவ்வோராற்றாற் குறைபாடுடையன. செய்பவன், செயல் செய்யும் ஆன்மா ஒருவன் உண்டு என்று ஒப்பாத சமயங்கள் உள்ளன. இதுபோலவே கருமம் (செயல்) என்பதையும், கருமத்தின் பயனையும், அதனைக் கொண்டு செய்தவனிடம் சேர்ப்பிக்கும் இறைவனையும் ஒப்பாத சமயங்களும் உண்டு. அவையெல்லாம் அவ்வவ்வாற்றாற் குறைபாடுடையன.

> செய்வானுஞ் செய்வினையு மதன்பயனுஞ்
> [சேர்ப்பானும்
> மெய்வகையா னான்காகும் விதித்த பொருள் எனக்
> [கொண்டே
> இவ்வியல்பு சைவநெறியல்ல வற்றுக் கில்லையென
> உய்வகையாற் பொருள் சிவனென் றருளாலே
> [யுணர்ந்தறிந்தார்
> [பெரிய புராணம் - சாக்கிய நாயனார் புராணம் (5) ]

பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களையும் நிச்சயம் செய்து, பசுவாகிய ஆன்மா பாசங்களினீங்கிச் சிவனடி சேர்ந்து சிவானந்தத்தில் வாழ்வது முத்தி என்று வகுத்து அதற்குரிய உபாயங்களையும் கூறுவது சைவம்.

## சமய நிச்சயம்

சமயங்களின் உண்மைத் தத்துவ நிலையினை நிலையிட்டுக் காட்டவந்த அருணந்தி சிவாசாரியார் கூறியதாவது: உலகத்திலே ஓதப்படும் சமயங்களும் பொருள் நிச்சயம் செய்யும் நூல்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மாறுபாடாகப் பலபலவும் உள்ளன. அவற்றுள் எது உண்மைச் சமயம்? யாது உண்மைப் பொருள் நூல்? என்று கேட்பாராகில் இது ஆகுவது: இது ஆகாதது என்னும் பிணக்கமில்லாமல் நீதி முறைப்படி இவை எல்லாம் ஓரிடத்தே காணும்படி நிற்பது யாதோ அதுவே உண்மைச் சமயமும் உண்மைப் பொருள் நிச்சயிக்கும் நூலுமாம்.

> ஓதுசம யங்கள்பொருளுணரு நூல்க
> ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு
> மிவற்றுள்
> யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
> லிதுவாகு மதுவல்ல தெனும் பிணக்க தின்றி
> நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
> நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
> லாதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
> யடங்கியிடு மிவையிரண்டு மரனடிக்கீழடங்கும்.
> [சித்தி - சுத் – 8].

என்றிவ்வாறு உண்மைச் சமயத்தைக் காண்பதற்கு உரைகல் தந்திருக்கிறார். இந்த உரைகல்லில் மாற்றுரைத்துப் பார்த்தால் சைவசமயமே உண்மைச் சமயமாவது என்பது விளங்கும். அது எவ்வாறு? எல்லாச் சமயங்களும் தன்னிடத்தே பிணக்கமின்றிக்காண நிற்பதெங்ஙனம் என்னில் ஒரு சமயத்துடனும் மாறுபடாமல் அவ்வவற்றையும் தன்னுள் அவ்வவற்றுக் கேற்கும் சோபானத்தில் [படிமுறையில்] வைத்து அமைதி காட்டி நிற்பதாம். “சோபன பட்சங்காட்டி” “ராசாங்கத்தமர்ந்தது வைதிகச் சைவ மழகிது அந்தோ”! என்பது தாயுமானார் திருவாக்கு.

எல்லாச் சமயங்களும் தம்முள்ளே பிணக்கமின்றிக்காண நிற்பதெவ்வாறென்னில் எல்லாவற்றையும் அவ்வவற்றுக் கேற்றபடிமுறையில் வைத்துக் காணுதல் இதுவே சைவசமய உண்மைச் சமரசமாகும்.

## சமய சமரம்

மற்றப்படி இப்போது பரந்தகொள்கை என்ற பெயரால் “எல்லாம் ஒன்று” என்று வழங்கப்படும் சமரசங்கள் எல்லாம் குழறுபடையேயாம். சமயங்களை வைத்து ஆராயப் புகும்போது அவ்வவற்றின் கடவுட்கொள்கை, முத்தியிலக்கணம், முதலாகிய தத்துவங்களைப் பற்றியே ஆராய்ந்து அவ்வவற்றின் தகுதிகளின் தார தம்மியங்களை நிச்சயித்தல் வேண்டும். அவ்வாறில்லாமற் கண்மூடித்தனமாய் எல்லாம் ஒன்றுதான் என்று பேசுதல் பொருந்தாததாகும். உலகியற்கை விரோதமும் அசம்

பாவிதமுமாகும். உதாரணமாகப் பார்ப்போமானால் ஒரு வீட்டு எஜமானி அவ் வீட்டில் உள்ளவர்களையும், வருபவர்களையும் ஒன்று போலப் பார்த்து உபசரிக்க வேண்டியது முறை என்றால் எல்லாரையும் தனது நாயகன் போலவே பார்ப்பது என்பது பொருந்துமா? ஒரு வைத்தியர் தன்னிடம் வரும் நோயாளிகளையெல்லாம் வித்தியாசமில்லாமல் ஒன்று போலப் பார்க்க வேண்டுமென்பது முறையாகும் இது எல்லா நோயாளிகளுக்கும் ஒரே விதமான சிகிச்சையும் மருந்தும் தரவேண்டுமென்பதாகுமா? அவ்வவர் நோய்க்கும், பருவத்துக்கும், பக்குவத்துக்கும் தகுந்தபடி சிகிச்சை செய்ய வேண்டுமென்றுதானே அதற்குப் பொருள்!

இரசம் என்பது ஓர் உணவுப் பண்டம். அது புளி, உப்பு, பெருங்காயம் முதலியவற்றை ஏற்றபடி உரிய அளவுபடக் கூட்டி அமைத்தல் வேண்டும். இப்படிக்கன்றி, புளி உப்பு முதலியவற்றைப் புளி 2 ரூபா எடை, உப்பு 2 ரூபா எடை, பெருங்காயம் 2 ரூபா எடை, தண்ணீர் 2 ரூபா எடை என்றிவ்வாறு சமரசமாக இருக்க வேண்டுமென்று சமனெடையாகக் கூட்டி அமைத்தால் அது உணவுக்கு உதவுமா? எல்லாச் சமயங்களும் சமம் என்று கூவுவோர் கூற்றும் இவ்வாறேதான். இக்கருத்துப் பற்றியே திருஞானசம்பந்தராதியோரையும், ஏசுநாதரையும், முகமது நபியையும் ஒரு படித்தரமாக வைத்துக் காண்போர் கூற்றும் ஆராயத் தக்கவை.

## சைவம் சமயாதீதமானது

"சைவ முதலா மளவில் சமயமும் வகுத்து" என்றருளிய தாயுமானார் "மேற் சமயங கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்று மருளினார். அதன்படி சைவம் என்பது எல்லாச் சமயங்களையும் தன்னுள்ளடக்கிப் படிமுறையில் வைத்துக் காணும் ஒரு சமயம் என்ற அளவில் மட்டும் நில்லாது சமயாதீதமாகவும் விளங்குவது. அதனைச் "சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்" பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தைவிட்டுப், பொய்வந்துழலுஞ் சமய நெறி புகுத வேண்டாம்" என்றருளிச் செய்துள்ளார். இதனைச் சன்மார்க்கம் என்றும் ஞான மார்க்கத்துள் வைத்துப் பேசுவது சிவஞான சித்தியார், இதுபற்றி அதனுட் கூறப்படுவனவற்றைச் சிறிது கவனிப்போம்:—

சகல கலை புராண தேவ சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவுமுணர்தல் வேண்டும்; அதன் மேல் அவற்றுட் கூறப்படும் பல பல மார்க்கப் பொருள்களையும் கீழாகக் காணுதல் வேண்டும்; அவற்றின் மேலாம் பதிபசுபாசங்களைத் தெரிவித்துப் பரமசிவனைக் காட்டும் நன்னெறியாகிய ஞானத்தை நாடுதல் வேண்டும்; அந்நாட்டத்திலே உறைந்து நின்று ஞானம் நேயம் ஞாதிரு - (அறிவு - அறியப்படுபொருள் - அறிகின்றவன்) என்ற மூன்றும் அறச்சிவனுடனாகும் தன்மையுடைய பெரியோர் சிவனைப் பெறுவர்.

"சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து,
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாகமேலாம்
பதிபசுபா சந்தெரிந்துப் பரமசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர்களே"

[ சித்தி 8 - 22 ]

இத்தகைய சைவசமரச சுத்த ஞானத்தை அடையும் வழியாது? என்னில், முதலிற் புறச்சமய நெறியில் நின்று அகச் சமயம் புகுதல் வேண்டும். சுமிருதிகள் விதித்த விதிகளின் வழி ஒழுகுதல் வேண்டும். அதன்பின் ஆச்சிரமதர்ம மார்க்கங்களில் ஒழுகுதல் வேண்டும். அரிய தவங்கள் செய்தல் வேண்டும். கலைகள் பலவும், வேதமும், புராணங்களும் வேதசிரமாகிய வேதாந்தமும் உணர்ந்து தெளிதல் வேண்டும் — இவ்வாறு சென்றால் சைவத்திறந்து அடைகுவர். அதில் சரியை, கிரியை,

யோகம் முற்றிய பின் அடையும் சிவ ஞானத்தினுலே சிவனடியைச் சேர்குவர். இதுவே வழியாகும். இதினின்றும் சைவத் திறத்திலடைகுவதும், அதில் சரியை கிரியை, யோகங்கள் முற்றிய நிலை அடைவதும், அதன் மேல் வரும் சிவஞானத்தாலே சிவத்தையடைகுவதும் எத்துணை அரிது என்பது தெரியலாகும். இதனைப்,

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிகுதி வழியுமன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவை யடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் யுதிதும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப் பொருளை மிகத்தெளிந்துத் சென்றுத் சைவத்
திறந்தடைவ ரிதிற்சரியை கிரியை யோகஞ்
செலுத்திய பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

(சித்தி. 8-11)

என்றருளினுர் அருணந்தி சிவனுர்,

இத்தனை அரிதிற்கிடைத்த சைவத் திறத்தை யடைந்தும் அதில் வருத்த கிரியையாதிகளை முற்றிச் சிவஞானம் அடைந்து சிவத்தை அடைய முயலாமல் மக்கள் பேயாய்த் திரிந்து வாளுனை வீணுளாகக் கழிப்பது கொடிது! கொடிது!!

## சமயவாதமும் பரசமய நிராகரிப்பும்

எல்லாச் சமயங்களையும் படி முறையில் வைத்துப் பார்த்துச் சமரசம் காணுவது சைவம் என்றுல் அதிற்

சமய வாதமும் பரசமய நிராகரிப்பும் காணப்படுவானேன் என்றுல் சமய உண்மைகளை நிலையிட்டும் அறுதியிட்டும் காண்பதற்கும், அவ்வச் சமயங்கள் தத்தம் அளவில் நில்லாது ஆக்கிரமிப்பும், சைவத்திற்கு அழிவும் செய்யும் போது அதைத் தடுப்பதற்கும் இவை வேண்டப்படுவனவேயாம். சைவமானது எந்தச் சமயத்தையும் விரோதிக்காது; அழிவும் செய்யாது; இவ்வுண்மைகளைத் திருஞான சம்பந்த நாயனுர் சரிதத்தினுள் வரும் சமண வாதம் புத்த வாதங்களுள் வைத்து விரித்துக் காட்டியுள்ளேன். அவற்றைப் பார்க்க பௌத்த வாதத்தின் போது ஆளுடைய பிள்ளையார் உண்மை தெரிய வேண்டி வாது செய்ய வந்து புத்தர்களைக் கருணை நோக்கம் செய்து "நிற்பனவுஞ் அரிப்பனவும் சைவமேயாம் நிலைமையவர்க் கருள்புரிந்தார்" அவர்கள் சைவராணுர்கள் என்பது வரலாறு. இவ்வாறன்றிச் சைவ சமய சமயா சாரியர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காகச் சமய வாதங்கள் செய்தார்கள் என்பதை நாம் சரிதங்களிற் கேட்டதில்லை.

## சைவ சமய பிரமாண நூல்கள்

வேதமும் சிவாகமங்களும் தாம் சைவசமயப் பிரமாண நூல்களாம். சைவத் தெய்வத் திருமுறைகளாகிய தமிழ் வேதங்களும் அவ்வவ்வாறே பிரமாண நூல்களாம். வேத சிவாக மங்கள் சிவபிரான் தாமேயருளிய முதனூல்கள் திருமறைகள் சிவமேயாகிய பெரியோர்கள் மூலமாக இறைவன் வெளிப்படுத்தியன. புராண இதிகாசங்களும் இவற்றின் உட்பிரிவுகளாகக் கொள்ளப்படும். வேதம் பொது நூல் உலகிற்குச் சொல்லியது சிவாகமங்கள் அருஞ்சிறப்பு நூலாம். இவை சத்திநி பாதர்க்குச் சொல்லியன. கல்லால மரத்தினிழலில் இறைவன் அமர்ந்து முனிவர்களுக்கு உணர்த்தியது வேதங்களின் ஆசங்கையை நீக்குதற்கு. அறம் முதலாகிய நான்கு உறுதிப் பொருள்களையும் விளக்கினுர். "அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான் முக்கண் மூர்த்தி மேயது முதுகுன்றே" என்பது தேவாரம் இது உலகியலை அவர்களுக்கு உணர்த்தியதாம். "நன்றுக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை, அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ" என்றும்,

"அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம் பேடீ
அருந்தவருக் கறமுதனூன் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ"

என்றும் வரும் திருவாசகங்கள் காண்க. மேற்சொல்லியவாறு வேதம் பொதுநூல், உலகர்க்குச் சொல்லியது என்றும் சிவாகாமங்கள் சிறப்பு நூல், சக்தி நிபாதர்க்குச் சொல்லியது என்றும் உண்மை பிறிதோராற்ருலும் பெறப்படும். தமது உபநயனத்தின் போது வந்து ஐயங்கேட்டுத் தெளிந்த வேதியர்களுக்கு ஆளுடைய பிள்ளையார் பஞ்சாக்கரந்தினை அருளிய போது ''ஐந்தெழுத்துமே'' என்று மந்திரத்தைக் கூருது அதன் பெயர் மாத்திரம் கூறி உபதேசித்ததும், நல்லூர்ப்பெருமணத்தில் அங்கு வந்த பக்குவான்மாக்களாகிய அத்தனை பேரையும் தீட்சை செய்து முத்தியடைவிக்க உபதேசிக்கும் போது ''நமச்சிவாயவே'' என்று மந்திரத்தையே உபதேசித்ததுங் காண்க.

வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் பிறந்து நூல்கள்
ஆதிநூ லநாதி யமல னருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னெழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்''


(சித்தி. 8-1 ம

இவ்வாறு நூல்களின் தாரதம்மியங்களை வைத்துக் கண்டுகொள்க.

இவ்வாறு சைவ உண்மைகளை யுணர்ந்தோர் தாம் முன்பு கொண்டிருந்த சமயங்களின் குறைபாடுகளை உணர்ந்து சைவ மேன்மைகளைப் பிடித்து ஒழுகி உய்தி பெறுகுவர். ''முன்னொரு சமயந்தன்னைப் பொருளென முற்றி நின்ருேர், பின்னர் வான் சைவமெய்தப் பெறினவர் பேசுமாரேல்'' என்று உவமானத்தில் வைத்து இதனை உணர்த்தினர் மாதவச் சிவஞான யோகிகள் (காஞ்சிப் புராணம், நகரப் படலம்)

இதுகாறுங் கூறியவாற்ருல் சைவம் என்பதொன்று தான் சமய அடிப்படையில் புலாலுண்ணுமையைக் கொண்டு ஒழுகுவதென்பதும் இவ்வுண்மை உலக வழக்கிலே ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதும், சைவம் ஏனைய சமயங்களையெல்லாம் உள்ளடக்கி நின்று அவற்றுள் முதன்மை பெற்று விளங்குவதென்பதும், சமய நிச்சயம் செய்தல் இவ்வாறு என்பதும், சைவ சமரசம் இத்தன்மையுடைதென்பதும், சமயங்களுள் ஒன்றென்பதனேடு சமயாதீதமாகவும் விளங்குவதென்பதும், சமயாதீத நிலை அடைவதற்கு வழியின்னதென்பதும், பரசைவத்தில் சைவ நிராகரிப்பு இத்தன்மையுடையதென்பதும், சைவத்தின் பிரமாண நூல்களிவை என்பதும், ஒருவாறு பேசப்பட்டன. உலகியல் வேத நூலொழுக்கமென்பதும், நிலவு மெய்ந்நெறியே யென்பதும், விளக்கப்பட்டது.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்''
''எல்லாம் அரனுமமே சூழ்க''



''உடம்பெனும் மனைய கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெனுந் திரிம யக்கி
இடம்படும் ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கின்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே.''

- அப்பர் சுவாமிகள்

*With the best Compliments*

*from*

# V.R.T. & Co.

General Merchants & Commission Agents
Dealers in Oilman Goods, Hardware

**99, Highlevel Road,**
**MAHARAGAMA.**

# வீரனும் சூரனும்

'சித்தாந்த வித்தகர்'' கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், சென்னை 92.

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே — செந்தில்நகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவவா ராதே வினை.

''சுக்குக்குமிஞ்சிய மருந்தில்லை. சுப்பிரமணியத்திற்கு மிஞ்சிய தெய்வமில்லை'' என்பது ஒரு உலகப் பிரசித்தமான பழமொழி. துவாபர யுகத்தின் முடிவில், ரிஷிகளும் முனிவர்களும் மற்றும் பலரும் ஒன்றுகூடி வரப்போகும் கலியுகத்தில் ஏற்படவுள்ள சகல துன்பங்களையும் எப்படிப் போக்கிக் கொள்வது என்று ஆலோசித்தார்கள், கடைசியில் ஏகமனதாக அவர்கள் கண்ட முடிபு இதுதான். ''ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுவாம், கலிசல்மஷ ஏிஎினீம்'' அதாவது, கலியுகத்தில் கந்தப்பெருமான் புகழைப் பேசிக்கொண்டிருந்தால் துன்பங்கள் நீங்கும் என்பதாகும். எனவே, உயிர்த்தொகைகளாகிய நாமும் கந்தப் பெருமானை வணங்கினால், கந்தப் பெருமானுக்குரிய திருப்பணிகளைச் செய்தால், அப்பெருமான் அருளைப் பெற்று அருளாளர்களாகிய நக்கீரர், அருணகிரிநாதர், குமரகுருபர முனிவர், சிதம்பர சுவாமிகள் போன்ற பெரியார்கள் அருளியுள்ள திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் கலிவெண்பா, திருப்போரூர்ச்சந்நிதி முறை முதலிய அருள் நூல்களைப் பக்திசிரத்தையுடன் படனஞ்செய்தால் ஈடேறலாம். துன்பங்கள் நீங்கும்; இன்பம் பெருகும்; ஐம்முகச் சிவனே சூரபத்மன் முதலிய அசுரர்களுக்கு அவர்கள் செய்த அருந்தவத்திற்கு இரங்கி அளவிலாத வரங்களைக் கொடுத்தான். அவர்கள் தேவர்களைத் துன்புறுத்தும்போது அவர்களை யடக்க வேண்டியதாயிற்று. வரங்கொடுத்த அதே வடிவத்துடன் சென்று அசுரர்களை யழிப்பது முறையல்ல என்றெண்ணியே அறுமுகச்சிவனாயினன். இதற்குப் பிரமாணம் கந்தபுராணந்தான். 'ஈசனே அவன் ஆடலால் மதலையாயினன்'' என்பதாகும். எனவே, சிவன் வேறு, கந்தன் வேறல்ல. இருவரும் ஒருவரே என்பது தெளிவு. இத்தகைய கந்தப் பெருமானுக்குப் பல திருநாமங்களுண்டு.

''எந்தை சக்திகள் உயிரெலாம் ஒடுங்குறுமெல்லை
மூந்து போலவொன் றாகிய கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகிக்
கந்தன் என்று பேர் பெற்றனன் கவுரிதன் குமரன்'

கார்த்திகைப் பெண்கள் வளர்த்த காரணத்தால் 'கார்த்திகேயன்' எனப் பெயர் பெற்றான். சரவணத்தில் உற்பவித்ததால், 'சரவணோத் பவன்' எனப்பெயர் பெற்றான். அக்கினியினால் தாங்கப் பெற்றதால், அக்னிபவன். வாயுதேவனால் தாங்கப்பெற்தால் 'வாயுபவன்'. கங்கையில் தோன்றினதால் 'காங்கேயன்' என்னுமொரு பெயருமுண்டு. இன்னும் பல திருநாமங்களுமுள. இவற்றுள் மிகச் சிறந்த திருநாமம் முருகன் என்பதாகும். இது ஒரு தனித் தமிழ்ச் சொல். இதன் இலக்கணம், இளமை, அழகு, தெய்வத் தன்மை, சிவமணம் உள்ள ஒருவனுக்கே முருகன் என்ற பெயர் பொருந்துமாம். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பெருமான் இதனைப் பின்வருமாறு உணர்த்தியுள்ளார் ''பண்டை மணங்கமழ் தெய்வத் திளநலம் காட்டி''.

இனி இம்முருகப் பெருமானுக்கே வீரன் என்ற ஒரு பெயருமுண்டு. உலகில் எத்தனையோ வீரர்கள் இருந்தார்கள், இருக்கின்றார்கள், இருப்பார்கள். ஆயினும் வீரன் என்றால், அது முருகனையே குறிக்கும் என்றால் இதனை மறுப்பார் அகில லோகங்களிலுமில்லை எனலாம்.

இனிச்சூரன் என்றால் சூரபத்மனையே குறிக்கும். எத்தனையோ சூரர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள், இனியும் இருப்பார்கள். ஆயினும் சூரன் என்றால் நம் சூரபன்மனையே குறிக்கும் என்பது உலகப் பிரசித்தமான உண்மை.

இத்தகைய மயில் வீரனான முருகப் பெருமான், சூரபத்மனால் போற்றப்பெற்ற செய்தியைக் கண்டு மகிழ்வோமாக! ஒருவனை அவன் நண்பன் புகழ்வதும், அவனால் உதவி செய்யப்பெற்றவன் புகழ்வதும், பொருளைக் கருதிப் புகழ்வதும் சிறந்ததல்ல. ஒரு பகைவன் மாற்றானைப் புகழ்வதுதான் சிறந்தது என்பது யாவருக்கும் தெரிந்த ஒரு உண்மை.

போர்க்களத்தில் சூரபத்மனுக்கு முருகன் தன் விசுவரூபத்தைக் காட்டியபோது அவன் புகழ்ந்த சிலவற்றைக் கண்டால் முருகப் பெருமான் புகழ் நன்கு விளங்கும். முருகப்பெருமான் சூரனுக்குச் சிறிது ஞானத்தையும் கொடுத்தருளிய காரணத்தால்தான் சூரன் அப்பெருவடிவினைத் தன் ஊனக் கண்களாற் பார்த்து வியக்கமுடிந்தது. இதோ அச்செய்யுள்களுள் சில.

(கந்தபுராணம் - யுத்த காண்டம் – சூரபன்மன் வதைப்படலம்.)

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி அன்றோ?"—433.

"ஒற்றெனை முன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிக லின்றி நின்ற பராபர முதல்வன் என்றே
சொற்றனன் சொற்ற எல்லாம் துணிபெனக் கொண்டி லேனால்
இற்றையிப் பொழுதில் ஈசன் இவனெனும் தன்மை கண்டேன்" — 434

"பீடியுயர் வடிவம் கொண்டு மேவிய நாதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா மற்றியான் பெற்ற அண்டம்
ஆயவை முழுது மற்றும் அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்தில் தோன்றியே நிற்கும் அன்றே" — 435

"நேரிய னாகி ஈண்டே நின்றிடும் முதல்வன் நீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதுமச் சுறுவ தல்லால்
ஆரிது நின்று காண்பார் அமரரில் அறிவிலாத
சீரிய வரங்கொண் டுள்ளேன் ஆதலால் தெரிகின் றேனால்" — 438

"இங்கென துயிர்போல் உற்ற இளவலும் இளைய சேயும்
செங்கையில் வேலோன் தன்னைச் சிறுவனென் றெண்ணல் கண்டாய்
பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகும் என்றார்
அங்கவர் பொழிந்த வாறும் சரதமே ஆன தன்றே" — 440

"போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணும் துடித்தன புவன மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயனீதன்றோ" — 443.

இவ்வாறே சிங்கமுகனும், பானுகோபனும், இரணியனும் ஏனையோரும் வீரனைப் புகழ்ந்தார்கள். விரிவஞ்சியவற்றையிங்கு எடுத்துக்காட்டாமல் நிறுத்திக்கொண்டேன்.

எனவே, வீரனை அவன் பகைவர்களான சூராதியர் புகழ்ந்தவற்றைப் பார்த்தாயிற்று.

இனி முருகன்தன் அடியவர்கள் முருகப்பெருமானைப் புகழ்ந்துள்ளதையும் சிறிது பார்ப்போமாக. முருகன் அடியவர்கள் எண்ணில்லாதவர்கள். ஆயினும் அவர்களுள்ளே மிகச் சிறந்தவர்களாக எண்ணப்படுபவர்கள் வெகு சிலரே. அவர்களுள் மிக மிகச் சிறந்தவர்கள் (காலக்கிரமத்தில்) நக்கீரதேவர், அருணகிரிநாதர், குமரகுருபரமுனிவர், சிதம்பரசுவாமிகள் முதலியவர்கள். இவர்களுள் முருகப்பெருமான் புகழைத் திருமுருகாற்றுப்படையில் பாடியருளியவர் நக்கீரதேவராவார். இப்பிரபந்தம் சைவர்களது பிரமாண நூலான தமிழ் வேதத்தில் 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளதென்றால் என்னே முருகன் புகழ்! இனி அருணகிரிநாதர் முருகன் புகழைத் திருப்புகழ்ப் பாடல்களாலும் கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், கந்தரந்தாதி முதலியவற்றின் பாடல்களாலும் பாடியுள்ளார். "குட்டிக் கந்தபுராணம்" என்று பிரசித்தமாக வழங்கப்பெறும்" கந்தர் கலிவெண்பா"'வை அருளிச் செய்து முருகன் திருவருளைப் பெற்றவர் "குமரகுருபர முனிவர்" ஆவார்கள். பிறகு "திருப்போரூர்ச் சந்நிதிமுறை" என்னும் அருள் நூலில் கந்தன் புகழை விதந்து ஓதியுள்ளார்கள். இன்னும் முருகப் பெருமான் மீது எண்ணில்லாத அருளாளர்கள் பாடியுள்ளார்கள். இடமில்லாத காரணத்தால் அவற்றைச் சொல்லாமல் விட்டு விட்டேன்.

கடைசியாகச் சூரன் பெருமையைப் பின்வரும் செய்யுளால் கண்டு மகிழலாமே!

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றே வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"


இராவணனைக் கொன்றார் இராமன்: நரகாசுரனைக் கொன்றான் கண்ணபிரான். இரணியனைக் கொன்றான் நரசிம்மமூர்த்தி. இப்படியே பலர் பலரைக் கொன்றுள்ளார்கள். ஆயினும், வென்றவரைத்தான் உலகோர் புகழ்ந்துள்ளது வெளிப்படை. வென்றவரோடு சேர்த்து வெல்லப்பட்டவர்களையும் உலகம் புகழ்வது இந்த ஒரு வரலாற்றிற்தான் என்றால் அது மிகையாகாது.

இதோ அந்தப் பாடல்:

"ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்"

"வற்று அருள்சேர் குமரேசன் வண் காதை தன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும் துகளு றாமே
கற்றாரும் கற்பான் முயல்வாரும் களித்து கேட்டல்
உற்றாரும் வீடு நெறிப்பாலின் உறுவர் அன்றே"

வாழ்க சைவம்! வளர்க வீரன் புகழ்!!
வையகமுந் துயர் தீர்கவே!;



உ

முருகா எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்! வியாதி அடைந்துநையார்
ஒருகால மும்துன்பம் எய்தார்! பரகதி யுற்றிடுவார்!
பொருகாலன் நாடு புகார்சம ராபுரிப் புண்ணியனே.


*For Quick Grinding of*

# PURE COFFEE

කඩිනමින් පිරිසිදු කෝපි කුඩුකර ගැනීමට පැමිනෙන්න.

சுத்தமான கோப்பி
உடனே அரைத்துக்கொள்ள விஜயம்செய்யுங்கள்.

*Visit*

# DEVI HOUSE

(Prop. N. Shanmuganathan)
**71, A, Havelock Road,**
**COLOMBO-5.**

**Telephone: 84535**

# ஆலய அமைப்பு

திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார் B. A. B. L.

முன்னுரை:

தமிழ் மக்கள் பண்டைக்காலம் முதற்கொண்டு அறிவாற்றல்களால் உண்டாக்கிப் போற்றி வந்திருக்கும் செல்வங்களில் ஆலய அமைப்பு ஒன்றாகும். அது ஒப்பற்றிருப்பதுமன்றி நமது முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், கலைச் சிறப்புகளையும், உலகெங்கும் தோற்றுவித்துப் பெருமை கொள்ளச் செய்ததுமாகும். நமது பண்பாட்டிலும், தமது பண்பாடு சிறந்ததென்று செருக்குடன் பிதற்றித் திரியும் வெள்ளையர்களும் தென்னாட்டிற்கு வந்து நமது செல்வங்களை ஒருமுறை பார்த்தவுடன் தமது செருக்குப் பேச்சுக்களை அடக்கிக் கொண்டு, ''அம்மா பெரிது'' என்று அகமகிழ்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இங்ஙனம் ஒப்பற்றபெருமை தமிழர் பண்பாட்டிற்கு அளித்து வருகிற ஆலய அமைப்பானது, உலகிலேயே சிறந்த செல்வங்களில் ஒன்று என்றால் அது மிகையாகாது. அதன் வரலாற்றையும் பெருக்கத்தையும் நூல் ஆதாரத்தையும் தத்துவ அடிப்படையினையும் வெவ்வேறாக விரித்துக் கூறி இங்கே சுருக்கமாக எழுதுவோம்.

வரலாறும் பெருக்கமும்:

தென்னாட்டின் சிற்பக்கலை தொடர்ச்சி பெற்ற ஒரு வரலாற்றோடு அமைந்துள்ளது. அது சமய வளர்ச்சியைப் பின் பற்றியே தொடர்ந்து உள்ளது. பண்டைத் தமிழர் முதலில் இயற்கைப் பொருட்களை வணங்கி வந்தார்கள். கதிரவன், நிலா, நெருப்பு, காற்று, மழை, நிலம் இவைகளைப் போற்றினார்கள். இளங்கோவடிகளும் முதலில் திங்கள், ஞாயிறு, மழை இவைகளைப் போற்றியிருத்தலை நாம் காண்கிறோம். பிறகு கண்ணினாற் காணமுடியா அருவங்களைப்போற்றினார்கள். அவ்வாறு போற்றி அவைகளுக்காக உருவங்களைக் கற்பித்து அவைகளின் மூலமாக அருவங்களை வணங்கினார்கள். மக்கள் தங்குவதற்கு நிழலும் கூரையும் கொள்ளுதலை ஒத்துத் தாம் வழிபடும் இறைவனை, வெய்யிலிலிருந்தும் மழையிலிருந்தும் காப்பதன் பொருட்டு மேடையின் மீது முதலில் மரநிழல் அமைத்தார்கள். எடுத்துக் காட்டாக, அரசமரம், வேம்படியாண்டவர், ஆலம்பொழில் முதலியவற்றைக் காண்க. பிறகு பந்தல் அமைத்தார்கள். பந்தல் கூரையாகவும் ஓரறையில்லமாகவும் பெருகிற்று. அக்காலத்தில் ஏற்பட்ட இல்லம் மண் இல்லமாக இருந்தது. பிறகு செங்கல் இல்லமாக வலியுறுத்தப்பட்டது. இவ்விதக் கோயில்களே பல நூற்றாண்டுகள்வரை கட்டப்பட்டன. உருவங்களோ பொதுவாக உருண்டைக் கற்களாகவே இருந்தன, அது எளிதில் ஆக்கக் கூடியது. அவைகளிலிருந்தே இலிங்கங்கள் தோன்றின எனலாம். இப்போதும் கிராமங்களில் உருண்டைக் கற்களே தெய்வங்களாக இருப்பதைக் காணலாம். கொங்கு நாட்டில் திருமால் கோயில்களிலும் உருண்டைக் கற்களே மூலத்தானங்களில் இருக்கக் காணலாம். (எடுத்துக் காட்டாக காரமடை அரங்கநாதர் கோயில் மூலத்தானங் காண்க.)

இனிப்பல்லவர் ஆட்சி 3-ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டில் தொடங்கியது. அம்மன்னர்கள் கலைவிற்பன்னர்கள். அவர்களில் சிலர் சமணர்களாகவும் இருந்தார்கள். வடநாட்டுக் கலைகளையும் பயின்றவர்கள். மண்தளிகள் நெடுங்காலம் இருக்

கக் கூடியவை அல்ல என்றறிந்து இறைவன் தளிகள் நிரந்தர நிலைபெறு உறுதலே நலம் என்று கருதிக் கருங்கல்லிற் கோயில்களைச் சமைத்தார்கள். மலைப்பாறைகளைக் குடைந்து மண்டபக் கோயில்களை உண்டாக்கினார்கள். பிறகு தனிக் கற்களைத் தேர்கள்போல் அமைத்தார்கள். பாறையில் உருவங்களைச் செதுக்கினார்கள். பிறகு செதுக்கின கற்களை ஒன்றன்மேல் ஒன்று அடுக்கிக் கட்டுக் கோயில் ஆக்கினார்கள். இந்த வகையில் மகேந்திரவர்மன் காலந் தொடங்கிக் கற்றளிகள் நாட்டில் ஏற்படத் தொடங்கின. தனிக் கற்கோயில்கள் ஒரே அறை கொண்டவை. மண்டபக் கோயில்கள் தூண்களையும் பல சிற்றறைகளையும் கொண்டவை; கட்டுக் கோயில்கள் ஒன்றன் முன் ஒன்றாகக் கட்டின மண்டபங்களையும் மதில்களையும் கொண்டவை. தனிக் கற்கோயில்கள் கருவறை, சிகரம் இரண்டும் அடங்கிய விமான முறையாம். மண்டபக் கோயில்கள் பல சிற்றறைகளும் ஒன்று அல்லது மூன்று முன் மண்டபமும் கொண்டவை. கட்டுக்கோயில் ஒன்று, மூன்று, ஐந்து என்ற ஒற்றைப் படையில் கொண்ட மண்டபங்களை நீளமாகக் கொண்டவை. இம்மூவகைக் கோயில்களும் பல்லவ மன்னர்களால் உண்டாக்கப்பட்டவை. அதே காலத்தில் அவற்றைப் போன்ற அமைப்பு நடு இந்தியாவில் சாளுக்கியர் ஆட்சியிற் கட்டப்பட்டது. இவை ஏற்பட்ட காலத்தில் பல மண்டபங்களில் ஓவியம் தீட்டப்பட்டது. கோயில்களின் விமானங்களும் தேர்போலவும், சைத்திரியம் போலவும் சித்திரிக்கப்பட்டன. பிற்காலப் பல்லவர்கள் யானை முதுகு போன்ற சைத்திரியக் கோயில்களும் கட்டினார்கள். (எடுத்துக்காட்டாக திருத்தணி வீரட்டானர் கோயில் காண்க.) இவ்விதக் கோயில்கள் தொண்டை நாட்டில் மிகுதியாகக் கட்டப்பட்டன. பல்லவர்களுக்குப் பின் ஆட்சி புரிந்த பேரரசர்கள் சோழர்கள். இவர்கள் மூலத்தானங்களை மிகப் பெரிதாகக் கட்டினார்கள். முதலில் கருங்கல்லினாலும் பின்னர் செங்கல்லினாலும் அவற்றைக் கட்டினார்கள். தஞ்சை ராசராசேச்சுரம் கங்கை கொண்ட சோழேச்சுரம் முதலியவற்றைக் காண்க. சுற்று மண்டபங்களும் கோபுரங்களும் அளவில் அவற்றிற்குச் சிறியவைகளாக இருந்தன. மூலத்தான மூர்த்திகளும் மற்றச் சுற்று உருவங்களும் பெரிதாக உண்டாக்கப்பட்டன. அப்போது கோயில் அமைப்பு மிகச் சிறந்து வளர்ந்தது. மதில்களும் கோட்டை மதில்களைப்போல் உயர்வாகக் கட்டப்பட்டன. செப்புத் திருமேனிகளும் வெகு அழகாகச் செய்யப்பட்டன. தேவர்களுடைய உருவங்கள் மட்டுமேயன்றி அடியார்களுடைய திருவுருவங்களும் செய்து வைக்கப்பட்டன. அதுவரையில் மானிட உருவங்கள் வணங்கப்படவில்லை. சோழ மன்னர்கள் காலத்திற் தான் நாயன்மார்கள், ஆழ்வார்கள், திருவுருவங்கள் வணங்கப்பட்டன. கோயிலமைப்பே ஒரு கலையாக ஓதப்பட்டுப் போற்றப்பட்டது. சோழ நாட்டிலிருந்து இக்கலை தெற்கே பாண்டி நாடும் ஈழநாடும் சென்றது. திரைகடல் ஓடித் தமிழர் பண்பாட்டைப் பரப்பச் சென்ற தமிழ் வீரர்களும் வணிகர்களும் ஆலயக் கலையைச் சாவகம் (ஜாவா), ஸ்ரீ விசயம் (சுமத்திரா), கடாரம் (மலாயா) கம்போடியா (இந்து சீனா) முதலிய நாடுகளுக்கும் கொண்டு சென்றார்கள். அந்நாடுகளிற் குன்ற மன்ன கோயில்கள் கட்டப்பட்டன. இன்றைக்கும் வெள்ளையர்களும் மயங்கி வியக்கும்படியான பெருங்கோயில்கள் தீவுகள் தோறும் காணப்படுவதை அறியலாம். இவைகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டவை.

சோழ பாண்டியர்கள் மெலிவடைய வடக்கே ஹொய்சலர்கள் சிறிது காலம் ஆலய அமைப்பைச் சிறப்படையச் செய்தார்கள். அவர்களுடைய வேலைப்பாடுகளைக் கருநாடக சாம்ராச்சியத்தில் பெரிதும் காணலாம். தென்னாட்டில் சிலவே உள்ளன. திருச்சிக்கருகில் கண்ணனூர் போசலேசுவரர் காண்க. அவர்கள்

ஆலயங்களில் சித்திரவேலைப்பாடுகளை மிக நுணுக்கமாகச் செய்தார்கள். பின்னர் முகம்மதியர் சூறையாடல் வந்தது. அதற்குப்பின் விஜயநகர ஆட்சி தென்னாட்டில் சிலநூற்றாண்டுகள் வரை இருந்து விளங்கியது. அவர்கள் மூலத்தானத்தைவிடச் சுற்றுப்புறக் கட்டடங்களைப் பராமரித்தார்கள். முன் மண்டபங்கள், பெருங் கோபுரங்கள், பெரும் மதில்கள், தடாகங்கள், நந்தவனங்கள் முதலியவைகளை வைத்துக் கோயில்களைச் சிறப்பித்தார்கள். நான்குகால் முதல் ஆயிரத்தெட்டுக் கால்கள் வரை மண்டபங்கள் தோன்றின. மூன்றுநிலை முதல் பதினொரு நிலை மாடங்கள்வரை அமைந்த கோபுரங்கள் கட்டப்பட்டன. அழகானபடிகள்கொண்ட தெப்பக் குளங்கள் தோண்டப்பட்டன. தூண்களில் பலவிதச் சிற்பங்களும் விட்டங்களிலும் தளங்களிலும் கற் சங்கிலிகளும் கல்மலர்களும் உத்தரங்களில் விலங்குகள் முதலியனவும் செதுக்கப்பட்டன.

விஜய நகரத்தாருக்குப்பின் நாயக்க அரசர்கள் அச்சிற்பப்பணிகளையே தொடர்ந்துசெய்தார்கள். இந்தவகையில் ஒரு மதில்கொண்ட கோயிலானது மூன்று ஐந்து ஏழு மதில்கள் கொண்ட பெரும் கோயில்கள் ஆயின. இந்த முறையில் ஆலய அமைப்பு இருபது ஆண்டுகளாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது.

ஆகம அல்லது நூல் ஆதாரம்:— தென்னாட்டின் ஆலய அமைப்பானது வெவ்வேறு சமயங்களைப் பொறுத்து வேறுபட்டிருக்கின்றது. பண்டைக் கோயில்கள் பெரும்பான்மையாக முப்பிரிவினவாக மூன்று சமயச் சின்னங்களாக இருக்கின்றன. அவைகள் முறையே சமணம், சைவம், வைணவம் என்பனவைகள். பல்லவர் காலம் முதற்கொண்டே மிகச் சிறப்புற்ற தலைநகரான காஞ்சியில் இம்மூவிதச் சமய நிலையங்களையும், காணலாம்; அவைகள் முறையே திரும்பருத்திக்குன்றம் என்ற சமணக் காஞ்சி, திருவேகம்பம் என்ற சிவ காஞ்சி, அத்திகிரி என்ற விஷ்ணு காஞ்சி என்பனவாகும். இம்மூன்று இடங்களையும் உற்றுநோக்கி ஆராய்ந்தால் எவ்வாறு வேறுபடுகின்றன என்று அறியலாம். இவைகளில் சமணக் கோயில்களுக்கும் சைவக் கோயில்களுக்கும் அமைப்பில் வேறுபாடு மிகுதியும் இல்லை. திருவுருவங்களில் மட்டும் வேறுபாடுகள் இருக்கும், ஆனால் சைவக் கோயிலுக்கும் விஷ்ணு கோயிலுக்கும் வேறுபாடுகள் பல உள்ளன. மூர்த்திகளில் மட்டும் அன்று இட அமைதிகளிலும் உண்டு. ஆனால் அடிப்படையான சிற்பமுறைகள் இவைகளிலும் ஒன்றே என அறியவேண்டும். கருவறைகள், மண்டபங்கள், விமானக்கட்டு, பிராகாரங்கள், மதில்கள், கொடிமரம் முதலிய பெருத்த பகுதிகள் எல்லாம் ஒரே அடிப்படை கொண்டிருக்கும். இவைகளுக்குக் காரணம் இவை இரண்டும் பண்டைப் பெருமக்களால் வகுக்கப்பட்ட ஆகம முறைப்படி அமைந்திருப்பதேயாகும்.

ஆகமங்கள் இரு பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. அவை சைவம் வைணவம் என்பன. சைவாகமங்கள் இருபத்தெட்டு என்பர். வைணவாகமங்கள் பஞ்சராத்திரம், வைகானசம் என இரண்டு என்பர். இவை அவ்வச்சமயங்களின் கோட்பாடுகளைக் கூறுகின்றன. சமயக் கோட்பாடுகளையே யன்றிச் சமய நிலையங்களின் கூறுகளையும் பொருள்களையும் கூறுகின்றன. அந்நிலையங்களில் சிறப்பானவை ஆலயங்கள். ஆகவே ஆலய அமைப்பு, அவைகளைக் கட்டும் விதம் அவற்றில் வைக்கும் பொருட்கள், அவைகளை ஆராதிக்கும் முறைகள் நடத்தும் சடங்குகள் முதலிய பல பகுதிகளையும் இவ்வாகமங்கள் போதிக்கின்றன. இப்போது கிடைத்துள்ளனவும் பாராட்டப்படுவனவுமான ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. இவைகளைப் படித்துப் பொருளுரைப்பவர்கள் ஆலய ஊழியர்களான குருக்களும் பட்டர்களுமேயாவர். இவர்களிற் பலபேர் படிப்புகுறைவினால் அந்

நூற்களை அறிந்துகொள்ளாமல் பழைய வழக்கங்களை முன்னிட்டே நடவடிக்கைகளைச் செய்துகொண்டுவருகிறார்கள். இப்பாராமுகத்தினால் ஆகமங்களின் சிறப்பே இக்காலத்தில் மறைக்கப்பட்டுவிட்டது. சைவாகமங்கள் இருபத்தெட்டில் காமிகம். காரணம், சுப்பிரவேதம், மிருகேந்திரம் என்பவைகளே சிறந்தவைகளாகும். இவைகளே அச்சில் வெளிவந்துள்ளன. இவைகள் இப்போது கிடைப்பது அரிதாகிவிட்டன. இவற்றுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு கோவிலும் பின்பற்றுவதாகக் கூறுகிறார்கள். நூலைப் பார்க்காவிடினும் வழக்கப்படி சடங்குகள் வழங்கப்படுகின்றன.

ஆகமங்கள் முழுவதையும் சேகரித்துப் படித்து அறிந்துகொள்ளச் சோம்பற்படும் ஆலய ஊழியர்களின் பொருட்டுச் சில சிவாசாரியப் பெரியோர்கள் முக்கிய விதிமுறைகளை மட்டும் சேகரித்துத் திரட்டுகளாக வெளியிட்டிருக்கிறார்கள். இத்திரட்டை வைத்துக்கொண்டே இக்கால ஆலய வழிபாட்டுப் பரிபாலனம் செய்யப்பட்டுவருகின்றது. இந்தத் திரட்டுகளும் வட மொழியிலேயே உள்ளன. இவைகளையும் படித்த அர்ச்சகர்கள் அல்லாத மற்ற மக்கள் அறிவதற்கில்லை. ஆகவே ஆலய அமைப்பை ஆராயவேண்டின் காரணம், காமிகம் போன்ற சிற்சில அச்சு நூல்களே நமக்குக் கிடைக்கும் அடிப்படை ஆதார நூல்கள் ஆகின்றன.

இனி தமிழ்நாட்டுச் சிற்பச் செல்வங்களை அறிய வடமொழிக்குத் தானா போக வேண்டும்? தமிழ்மொழியில் இல்லையா என்ற கேள்வி எழும் அல்லவா? இது ஒரு சிக்கலான கேள்வி. சிறந்த ஆலயங்கள் தமிழ்நாட்டில் தான் உள்ளன. அவைகளைக் கட்டியவர்களும் தமிழர்களே. அவற்றைப் போற்றுகின்றவர்களும் தமிழர்களே. அப்படியிருக்க வடமொழியில் மட்டும் நூல் ஏற்பட்டுத் தமிழில் ஏன் ஏற்படவில்லையென்று எவரும் கேட்கலாம், குறிப்பிடத்தக்க சிறப்புப் பெருமைவாய்ந்த ஆலயங்கள் பல்லவர் காலத்திலும் அவர்களுக்குப் பின்னரும் ஏற்பட்டன. முதல் வம்சமும் இடை வம்சமும் (4முதல் 7 நூற்றாண்டு வரை) வடமொழியை போற்றி வந்தன. தமிழைப் போற்றி வந்தனவாகச் சான்றுகளே இல்லை. பின் வம்சம் தான் தமிழைப் போற்றிற்று. மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்ற இடை வம்சத்துச் சக்கரவர்த்திகளே கோயில் அமைப்பில் அக்கறை எடுத்துக்கொண்டதனாலும் அவர்கள் வடமொழியினையே ஆதரித்து வந்ததனாலும் சிற்பிகள் தங்கள் நூல்களை வடமொழியிலேயே அமைத்திருக்கவேண்டும். ஆகவே ஆகம நூல்களும் அவற்றைப் பின்பற்றிய சிற்ப நூல்களும் வடமொழியில் ஏற்பட்டன போலும்.

இப்போதும் ஆகமங்களைத் தவிர மற்றச் சிற்பநூல்களும் வடமொழியிலேயே இருக்கின்றன. மயமதம், மானசாரம், சிற்பரத்தினம் போன்ற நூல்களும் வடமொழிகளே. இவைகளில் சிறந்த பிரதிகள் தமிழ் நாட்டில் அகப்படாமல் திருவிதாங்கூரில் அகப்பட்டன என்றால் அதுவும் வியப்பே. மலையாள முறைக்கும் தமிழ் முறைக்கும் ஆலய அமைப்பில் வேறுபாடு இருக்க, நமது சிற்பநூல்கள் அங்கே எப்படிச் சென்று சிக்கிகொண்டனவோ அறியோம், நமது தமிழ்நாட்டுத் தபதிகள் விஸ்வகுலத்தார்கள். இவர்கள் வடமொழிச் சிற்பநூல்களையே படித்துப் பின்பற்றுகிறார்கள். திருவிதாங்கூரில் வெளியிட்ட சிற்பநூலிலும் செய்யுள் நடை மிகத் தாழ்ந்ததாக உள்ளது. படிப்பில் சிறந்தவர்கள் இதை எழுதினதாகத் தெரியவில்லை என்பர்.

இனித் தமிழில் ஆலய அமைப்பைப் பற்றிய நூல்கள் இல்லையோ? இருக்கவே இல்லையோ என்று கேட்டால் அறிஞர்கள் அவ்வகைத் தமிழ் நூல்கள் இருந்தன வென்றும் நாளாவட்டத்தில் மறைந்தன

என்றும் கூறுவார்கள், இக்கருத்து இவ்வாறு இருக்கத் தமிழிலும் கோயில் அமைப்பைக் குறித்துக் கூறும் ஒரு சிறந்த நூல் உண்டு. அதுவே பண்டைத் திருமுறையாகிய திருமந்திரம் ஆகும்.

ஆகமப்படி ஆலய அமைப்பு:- ஆலயங்கள் இயற்கை செயற்கை என்ற இருவிதத் திருவுருவங்களைக் கொண்டவை. இயற்கையாக இருந்த உருவங்களைச் சுற்றிக் கோயில் எழுப்புவதற்காகக் கருவறை முதலில் கட்டிய பிறகு மற்ற மண்டபங்கள் ஒன்றன்பின் ஒன்ருகக் கட்டிப் பெருங் கோயில் ஆக்குவார்கள். அதற்காக நிலத்தை விதிகளின்படி தெரிந்தெடுக்க வேண்டியதில்லை. செயற்கைத் திருவுருவங்களுக்கு ஏற்படும் ஆலயங்களுக்கு மட்டும் நிலத்தைத் தெரிந்தெடுக்கவேண்டும். இதற்கு ஆகமங்கள் விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. நிலம் இருவகைப்படும். புலி முதலிய கெட்ட விலங்குகள் வசிக்கும் காடுகள் இராக்கத, பைசா நிலங்கள் எனப்படும். அவைகள் கோயில் கட்டப் பயன்படா. நெல் முதலிய நன்செய்ப் பயிர் விளையும் நிலங்கள், ஈசுவர நிலங்கள்—பசு நிலங்கள் எனப்படும். அவைகளே கோயில் கட்டத் தகுதியான நிலங்களாம். இவ்வித நிலங்கள் பத்துவகைப் படும். அவைகளில் ஈசுவர — பசு நிலங்களைத் தேர்ந்தெடுத்து உழுது, நீர்ப்பாய்ச்சிப் பயிரிட்டுப் பசுக்களை மேய்த்துச் சுத்தப்படுத்திப் பின்னர் கோயில் எழுப்ப வேண்டும். முதலில் அரக்கர்கள் முதலிய தீமைகளைப் போக்குவதற்கு வேள்வி செய்து பிரவேச பலிகளைக் கொடுத்து வாஸ்த்து சாந்தியென்ற தூய்மையொழுங்கைச் செய்யவேண்டும். பின்னர் கட்டிடத்திற்காகக் குறிப்பிட்ட கற்களையெழுப்பிக்கொண்டுவர வேண்டும். தூய்மையான செங்கற்களைச் சுட்டு நல்ல மணலைப் பரப்பிவைக்கவேண்டும். பிறகு நவதானியம் முதலிய நூற்றெட்டுச் சாமான்களைச் சேகரித்து அஸ்திவாரம் எடுத்த இடத்தில் அவைகளை இட்டுப் பூசித்துக் கட்டிடம் தொடங்கவேண்டும். அவைகளின் மீது கர்ப்பக்கிருகம் முதலியவை கட்டவேண்டும். இந்தமுறையில் கோயில் கட்டிடத் தொடக்கம் செய்யவேண்டும்.

இனிக்கோயிலின் படம் ஒன்றை அகல நீளத்திலும் பிறகு உயரத்திலும் கவனித்து வரைய வேண்டும். ஒவ்வோரு பகுதிக்கும் அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறைப்படி அஸ்திவாரம், பீடிகை மதில், கால்கள், உத்தரம், மேல் முகடு, கோபுரம் முதலியவை அமைய வேண்டும். பொதுவாக ஒன்று முதல் ஏழு சுற்றுகள் அல்லது ஆவரணங்கள்வரை கட்டலாம். நடுவில் உள்ளது கருவறை. அதன் முன்னர் அர்த்த மண்டபம். பிறகு மணி மண்டபம். பிறகு மகா மண்டபம், பிறகு முன் மண்டபம் இவைகளேயன்றிப் பெரிய கோயில்களில் பதினாறுகால், முப்பத்திரண்டு கால், அறுபத்திநான்கு கால், நூற்றெட்டுக் கால், ஆயிரத்தெட்டுக்கால் மண்டபங்களும் கட்டப்படுகின்றன. இனிக் கொடி மரம், பலிபீடம், தீர்த்தக் கிணறு முதலியவை ஒவ்வொரு கோயிலுக்கும் உண்டு. பிரகாரங்களில் நந்தவனமும், வாகன அறைகளும், சமையலறை, களஞ்சியம். தோமேடு முதலியவைகளும் உண்டு.

சிவாலயங்களில் சுவாமிகோயில் மட்டுமன்றி அம்மன், பிள்ளையார், முருகன், வைரவர், நடராசர், நவக்கிரகங்கள், அறுபத்திமூன்று அடியார்கள், நந்தி முதலியவர்களுக்கு தனி ஆலயங்களும் மண்டபங்களும் உண்டு. திருமால் ஆலயங்களில் கருடன், அனுமான், ஆழ்வாராதியர் முதலியவர்களுக்கு மண்டபங்கள் உண்டு. திருவிழா மண்டபம், அலங்கார மண்டபம், கொலு மண்டபம் ஆகியவைகளும் உண்டு. கல்யாண மண்டபத்தில் ஐம்பொன் விக்கிரகங்கள் வைக்கப்படும். அர்த்த மண்டபத்தில் பூசைச் சாமான்கள், திரிவிட்டக் கால் பழக்கால் முதலியவை வைக்கப்படும். விழாக்களில் ஒன்பதுவகை எடுபிடி சாமான்கள் உண்டு, ஐந்துவகை வாத்தி

யங்களும் வாகனாதிகளும் வைத்திருப்பார்கள். யாகசாலை தனியாக உண்டு. இவைகளுக்கெல்லாம் விதிகள் நிரம்ப உண்டு. இவைகளுக்கெல்லாம் ஆகம நூல்களிலும் புராண நூல்களிலும் கோயில்களுக்கேற்றபடி விவரங்கள் சொல்லப்படுகின்றன.

தத்துவப் பொருள்:– எந்த ஓர் இயக்கத்தை மனிதன் தொடங்கினாலும், அதனை வளர்த்து வைத்துப் பயன்பெற்றாலும் அந்த இயக்கத்துக்கு ஒரு தத்துவப் பொருளைக் காண்பது அவனது நுட்ப அறிவின் ஆற்றல் என அறியவேண்டும். அப்படிப்பட்ட நுண்ணிய அறிவுடைய மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தான் வளர்த்த சமய நிலையங்களுக்கு ஒரு தத்துவப் பொருளைக் காணமாட்டானா? ஒப்புவமைகளை வைத்துக்கொண்டு அரிய தத்துவப் பொருள்களை அவன் அங்கேயும் காண்பான் அல்லவா? ஆகவே சமய நிலையங்களில் மிகச் சிறந்ததாகும். கோயில் அமைப்பின் தத்துவப் பொருளை அவன் கண்டுகொண்டது ஒரு வியப்பன்று. கோயில் இறைவன் எழுந்தருளும் இல்லம் ஆகும். (கோ—இல்) மனிதன் வசிக்கும் இருப்பிடம் அவனுடைய வீடு ஆகும். மனிதனுடைய செல்வ நிலைக்குத்தக்கவாறு அவன் வசிக்கும் வீடும் இருக்கும். அது குடிசையாயும் மாளிகையாயும் இருக்கலாம். அது போலவே இறைவனுடைய கோயிலும் சூழ்நிலையைப் பொறுத்துச் சாதாரணமாக ஒரு நிலைமுதல் ஏழு நிலை மாடம் வரை உயர்ந்திருக்கும். இது சாதாரண உவமையாகும். இதனிலும் உயர்ந்த ஓர் உவமையுண்டு. கோயில் இறைவன் உறைவிடம் ஆகின், மனிதனுடைய உடல் அவனுடைய உயிர் அல்லது ஆன்மா வசிக்கும் அரிய இருப்பிடம் ஆகும் அல்லவா? இதனை உயர்ந்த ஞானிகளும் உணர்ந்திருக்கிறார்கள். ஒப்புயர்வற்ற சித்தர் திருமூலநாயனார் இவ்வுவமையைக் கூறுகிறார்;

"உள்ளம்பெரும் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந் தார்க்குச் சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.''

இப்பாசுரத்தில் உடம்பு ஆலயத்துக்கு உவமையாக்கப்பட்டது. கருவறை, ஆலயம், கோபுரம், சிவலிங்கம், ஒளிவிளக்கு மூலிதயன கோயிலுக்கு இன்றியமையாதன. அவை போலவே உடலுக்கு உள்ளம், ஊனுடம், வாய், சீவன், புலனறிவு இவைகள் இருக்கின்றன. மனிதனுடைய உடலில் அவன் உயிர் வசிப்பதுபோல ஆலயத்தில் இறைவன் வசிக்கிறான். ஆகவே ஆலய அமைப்புக்கு ஓர் உவமை மனித உடலிலே காணப்பட்டது. மனித உடம்பின் அமைப்பை முன்னிட்டு அவன் தான் வழிபடு கடவுளுக்கும் ஓர் இருப்பிடம் உண்டாக்கினான் என்று சிலர் எண்ணக் கூடும். இத்தத்துவ அறிவைத் திருமந்திரம் சிவபூசை என்ற பகுதியில் விவரிக்கிறது. இதனையே பெருக்கி உரைக்கும் மற்றொரு பாசுரமும் உண்டு அது;

''படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
நடமாடக்கோயில் நம்பர்க்கொன்றாகா
நடமாடாக் கோயில் நம் பர்க்கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே.''

என்பதாகும்.

இனி ஆலயத்தின் மற்றவெளிப்படையமைப்புகளும் மானிட உடல் நிலையில் காணலாம். ஆலயங்களில் ஒன்று முதல் ஏழுவரை சுற்று நிலைகள் உண்டு. ஒரே ஒரு சுற்று உள்ள கோயில் பிள்ளையார்கோயில் போன்ற குக்கிராமக் கோயில் மனிதனுடைய பருவுடம்பைப் போன்றது. பருவுடற்குள் உயிர் உள்ளதுபோல் ஒரு சுற்றுக் கொண்ட ஆலயத்துள் மூலப் பொருள் இருக்கும். இனி மூன்று சுற்றுக் கொண்டவை பேரூர்த்தலக் கோயில்கள் அதனைப் போன்றது. மனிதனுடைய பருவுடல் (ஸ்தூல உடல்), நுண்ணுடல் (சூக்கும உடல்). துண்ணுண்ணுடல் (காரண உடல்) என்பன. தவிர ஐந்து மதில் உள்ளது. திருவானைக்கா போன்ற பெருந்தலங்கள்

இது மனிதனுடைய ஐந்து கோசங்களுக்குச் சமமானது. (i) அன்னமய கோசம் (ii) பிராணமய கோசம் (iii) மனோமய கோசம் (iv) விஞ்ஞானமய கோசம் (v) ஆனந்தமய கோசம் என்ற நுண்ணிய அடுக்கடுக்கான உடல்கள். இறுதியாக ஏழு மதில் கொண்ட மாபெரும் கோயில். சீரங்கக் கோயில் இதற்கு உதாரணம். இது மனிதனுடைய ஏழு உடல்களுக்குச் சமமானது. பூ, புவ, அவ, மகா. ஜனு, தப, சத்திய என்ற ஏழு லோகங்களுக்கு அமைந்த நுண்மையில் மனிதனுக்கு ஏழு நுண்ணுடல்கள் உண்டு என்பர் பெரியோர். இந்த உவமையைப் பொருத்து உள்ளது மாபெரும் கோயில்கள் எனக. ஆகவே கோயில் அமைப்பு உடம்பின் அமைப்போடு ஒத்திருக்கும் தத்துவத்தை மனிதன் கண்டான்.

"இனி அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு'' என்பது பழமொழி. அதன் எதிரிடையும் அதைப் போலவே. பிண்டத்தில் உட்கிடை போலவே அண்டத்திலும் உண்டு எனக. மானிட உடம்பைச் சுற்றி நுண் உடல்கள் இருப்பதைப் போலவே அண்டங்களைச் சுற்றி பெரும் அண்டங்கள் உண்டு அவைகளைச் சூரியமண்டலங்களாகவும், சந்திர மண்டலங்களாகவும் வகுக்கின்றனர். இவைகளுக்கு நடுநாயகமாக ஒரு மாபெரும் எரி குழம்பு அண்டம் இருக்கும். அவ்வெரி அண்டமே எல்லாச் சுற்று அண்டங்களையும் ஆட்டி வைக்கும் ஆற்றல் கொண்டது. அதுபோலவே கருவறையில் இறைவன் நடுநாயகமாக வீற்றிருப்பான். சுற்றிலும் மூன்று, ஐந்து, ஏழு மதில்கள் ஆவரணங்களாக அமைந்திருக்கும். இந்த வகையில் ஆலய அமைப்பு ஏற்பட்டுள்ளது.

இனி ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மூலையிலும் சுற்றுத் தேவதைகள் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அந்தத் தேவதைகளுக்குச் சின்னஞ் சிறு தனி அறைகள் உண்டு. அவைகளுக்குத் தனித் தனிச் செயல்களும் பயன்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை ஒத்தாற்போலப் பிண்டமாகிய உடலிலும், அணடத்திலும் உண்டு. உடலில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளைப் போலவே ஆலயங்களிலும் உண்டு. அவைகளை விரிக்கிற் பெருகும்.

அரசனுக்குத் திருவுலா, திருவோலக்கம், விருந்து, சயனம், பள்ளியெழுச்சி முதலியவைகள் இருப்பது போலவே கோவிலில் உள்ள இறைவனுக்குத் திருவிழா, கொலு, பூசை, அர்த்த சாமம், அனந்தல். பள்ளியெழுச்சி முதலிய சடங்குகள் உண்டு. இவைகளையெல்லாம் உற்று நோக்கின் மனிதன் தன் சூழ்நிலையை ஒத்தே ஆலய அமைப்பு விழா அமைப்பு முதலியவைகளை ஏற்படுத்தியுள்ளான் என்று கூறினல் மிகையாகாது.


**பின்னுரை:-** இதுவரை ஆலய அமைப்புப் பற்றி வளர்ச்சி வரலாறு, ஆகம ஆதாரங்கள், தத்துவப் பொருள் என்ற பகுதிகளில் கூறினோம். இவைகளேயன்றிச் சிற்பம், ஓவியம், இன்னிசை, பண்டைக்கலை முதலிய அருங்கலைகளில் ஆலயம் எவ்விதம் செல்வக்களஞ்சியமாக இருக்கிறது என்பதை ஆராய்வது மற்றொரு முறையாகும். தென்னாட்டுக் கோயில்களிலுள்ள சிற்பச் செல்வம் வேறெங்கும் இல்லை என்றே கூறலாம். ''கல்லும் கவிசொல்லும்'' என்று இந்த ஆலயங்களைத்தான் கூறவேண்டும். "கல்லும் சொல்லாதோ கவி'' என்று புலவன் கூறினல் இந்தச் செல்வத்தை நன்கு அறிந்தே சொன்னார் எனக. மாமல்லை, காஞ்சி, மதுரை, வேலூர், பேரூர், நெல்லை, கிருட்டிணபுரம் முதலிய கோயில்களைப் பார்த்தவன் வேறு எதனைப் பார்க்கவேண்டும். தென்னாட்டுக் கோயில்களில் பண்டாரங்களில் உள்ள இன்னிசைகளைக் கண்டவன் காட்சிச்சாலைகளுக்குப் போகவேண்டுமோ. திருத்தேர்களில் காணும் மரத்திருவுருவங்களைக் கண்டவன் தச்சரின் உயர்ந்த மூளையைச் சோதிக்கவேண்டுமோ. பேரூர் போன்ற பண்டைப் புதையற் பொருட்கள் கலையாராய்ச்சிக்கு ஒப்பற்ற திரவியங்களாகப் பரிணமிக்கிறதைக் கூறவும் வேண

டுமோ? உரோமானிய நாணயங்கள், மாண்டவர் குழிகளில் கண்டபண்டை எலும்புகள், மட்பாத்திரங்கள், நகைநட்டுக்கள் தமிழர் பண்பாட்டிற்கு ஒப்பற்ற சான்றுகளாக இருக்கின்றன அல்லவா? இவைகள் எல்லாம் ஆராச்சிக்குரிய செல்வங்கள் என நாம் அறியவேண்டும் இவைகள் ஆலய அமைப்பின் சின்னங்களாக நமக்குக் கிடைக்கின்றன.

இனிக் கோயில்களைக் கட்டிவைத்து அவைகளைத் தக்கபடி பராமரிப்புச் செய்யாவிடில் அவைகள் அழிந்துபோவதன்றி மக்களுக்குப் பயன்தராவன்றே. அவைகளைக்கட்டிய முன்னோர்கள் பராமரிப்பு முதலியவைகளில் தக்க ஏற்பாடுகள் செய்து வந்தார்கள். ஆலயங்களைச் சமய நிலையங்களாகவும் செய்துவைத்தார்கள். அர்ச்சகர் முதல் திருவலகு வரையுள்ள ஊழியர்களை ஏற்படுத்தி அவர்களுக்கு ஊதியங்கள் தந்து மானியங்களையும் வைத்தார்கள் அவைகளைத் தக்கபடி பராமரிப்பதற்கு அதிகாரிகளையும் வைத்தார்கள். குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு மன்றங்களும் வைத்தார்கள். திருவிழாக்கள், சமயப் பிரசாரங்கள், சமய நூல் ஓதுதல் முதலியவைகளுக்கும் ஆட்களும் வருவாய்களும் ஏற்படுத்தினார்கள். இச்செயல்கள் பல்லவர்கள் காலம் முதற்கொண்டே நடைபெற்றுவருகின்றது. சோழர், பாண்டியர் காலங்களில் விபரமாகவே சாசனங்கள் ஏற்படுத்தினார்கள். அக்காலங்களில் இருந்த ஆலய பரிபாலனங்களில் ஒரு கூறு கூட இன்று இல்லையென்றே கூறவேண்டும். தாங்கள் ஏற்படுத்திய அமைப்பு அழியாமல் இருக்கும் பொருட்டுக் கணக்கற்ற விதிகளையும் தண்டனைகளையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள். இந்த முறையில் ஆலய பரிபாலன அமைப்பு இருந்தது.

உலகிய செய்திகளிலும் ஆலயம் ஒரு நடுநாயகமாக அமைப்புப் பெற்றிருந்தது. ஒரு ஊரை எடுத்துக் கொண்டால் அவ்வூர்ப் பரிபாலனம் பெரும்பாலும் கோயிலை வைத்துக் கொண்டே செய்யப்பட்டது. கோயில் அமைப்பானது ஊர்ச்சபையாகவே அமைவு பெற்றிருந்தது. வீடு அமைத்தல் புதுவீடு கட்ட இடம்தரல், நெசவு முதலிய தொழிலாளர்களுக்குச் சலுகைதரல், கல்விக்கும், மருத்துவத்துக்கும் வசதி செய்தல், நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல், அதனை பிரிவினை செய்து பரிபாலித்தல், விளைபொருட்களைப் பங்கிட்டுக் கொடுத்தல், வரி முதலியவைகளை வாங்குதல், அவைகளை இறைவனுக்கு அளித்தல், பஞ்ச நாட்களில் வரி தள்ளிக் கொடுத்தல், குற்றங்களை விசாரித்துத் தண்டித்தல் முதலான பல உலகிய விவகாரங்களில் கோயில் சபையார்களே ஈடுபட்டு வந்தனர். இவற்றால் கோயில் அமைப்புத் திட்டத்தின் பெருமையினை நன்கு உணரலாம். இத்தனை விரிவான நோக்கங்களைக் கொண்டு கோயில் அமைக்கப்பட்டது என்றால் அதன் பெருமையையும் உட்கிடை நோக்கத்தையும் அளக்க முடியுமா? OOOOO

( மதுரைத் தமிழ் சங்க பொன்விழா மலரிலிருந்து )



உ

ஒன்றாய் ஆறாய் ஒளியாய் வெளியாய்
குன்றாய் குருவாய் குகனாய் குமராய்
அன்றாய் இன்றாய் அன்பாய் இளையாய்
மன்றாய் மணியாய் மலிந்தாய் (திக்) கரையே

ௐ

துன்பம் துடைக்க வருவார்கு உந்தன்
அன்பை காட்டா மறையா அருளை
என்றும் தருவாய் குன்றுக் குமரா
தொன்றி தொடட்ட திக்கரை தூதா

- நாராஜண சுவாமிஜி



'வேலுண்டு வினையில்லை'


அன்பளிப்பு

கே. ஆறுமுகம்

37, கஸ்பாவ ரோட்,

நுகேகொடை.

தொலைபேசி : 2689

''வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை''

காரைநகர் திக்கரை முருகனின்
குடமுழுக்கு விழா சிறப்புடன்
நடைபெற வாழ்த்துகின்றோம்.

# THE NEHRU PRESS

Printers & Publishers
282, Wolfendhall Street,
COLOMBO-13

Phone : 31588

திக்கரை முருகனின்
கும்பாபிஷேகம்
சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகின்றோம்

▲

**சி. சண்முகம்**
கண்டி வீதி,
பரந்தன்.

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோனுயர்வான்

▲

**மு. விவேகானந்தா**
கறடிப்போக்கு
கிளிநொச்சி.

# முன்னிய கருணையாறுமுகப் பரம்பொருள்

அருட்கவி சி. விநாசித்தம்பி

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது ஆறுமுகநாவலர் அருள்வாக்கு. சரீரத்தால் பாடுபடுகிறோம் பயன் அடைவதற்காக. நாம்படும் பாடு நயம் தருமோ நட்டம் தருமோ எனச் சிந்திக்கச் செய்வது அறிவு. நூலறிவு வாலறிவு என இருவகைப்படும். அதாவது நாம் படித்த படிப்பு நூலறிவு. அந்த நூலறிவு மெய்ப்பொருளுக்கு - மெய்ப்பயனுக்கு உபயோகப்படுத்தப் பருவமெய்தினால் வாலறிவாகும்.

அதனை,

'' எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''

— திருக்குறள்

' எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''

— திருக்குறள்

அறிவால் அறிந்துன் இருதாளிறைஞ்சும்
அடியாரிடைஞ்சல் களைவோனே

— திருப்புகழ்

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள் கொண்டறியார் அறியுந்தரமோ

— அநுபூதி

இத்தகைய அரிய வாக்குகளால் அறியலாம். வாலறிவால், வாலறிவன் நற்றாள் தொழுகின்ற பண்பும் அப்போது தோன்றும். பிறவியெடுத்தது ஏன் என்று தோன்றும் நானார்? என்னுள்ளமார்? ஞானங்களார்? என்ற வினாக்கள் தோன்றும், தன்னை மறந்து தன்னாமங்கெட்டுத் தலைப்படும் நிலையும் தோன்றும். அந்த நிலையிற் காண் பொருள்தான், முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருள் - அதுவே மெய்ப்பொருள் — பரம்பொருள்.

அந்தப்பொருள் - அடியார்கள் உள்ளம் ஆறும்முகமாக, ஆறுமுகம் கொண்டு காட்சி தந்தது. அக்காட்சிப் பொருளே, ஆறுமுகமான பொருள். அந்தப் பொருளை உள்ளுருகி அறிந்து பவப்பிணியறுப்பவனே புனிதனாகிறான். ''அருவமுமுருவுமாகி யநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பு'' முருகனாக - சரவணபவனாக வந்தான் என்கிறார். கச்சியப்பர், இதனைப்பிறிதோரிடத்தில் - உமாதேவிக்கு முருகனின் பெருமையைக் கூற வந்த பரமன் "ஆதலின் நமது சத்தி அறுமுகனவனும் நாமும் பேதகமன்று'' என்று கூறியதாக நிரூபிக்கிறார். சிவனே முருகன், முருகனே சிவன். அந்தப் பரம்பொருள் - எமது தேகத்திலேயுள்ள - மூலாதாரம் - சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்கட்கும் தலைமை தாங்கி நிற்கிறான். அதலைப் பூமியின் மேற்பரப்பில் காணப்படும் ஆறுமலைச்சிகரங்களில் - ஆறுபடை

வீடாகக் காட்டுகிறான். மனிதனின் தலையில் – உச்சியில் சகஸ்ரார பீடத்தில் (சிகரத்தில்) நிற்கிறவன் வெளியிடத்திலும் தம்மைக்காட்டி, வெளியிடத்தில் கண்ட என்னை - உங்கள் உள்ளத்திலும் காணுங்கள் என்று இருதய குகையினுள்ளே வீற்றிருக்கின்றான். இருதயமாகிய குகைக்குள்ளிருப்பதால் அந்தப் புண்ணியனுக்குக் குகன் என்ற பெயர் வந்தது. "நான் உள்ளேயிருக்கிறேன். என்னைக் கேட்கத்தெரியாமல் ஓடியலைகிறீர்களே'' என்று எமக்குள்ளிருக்கும் புண்ணிய முருகன் புன்னகை புரிவாராம். மேலான ஐந்து ஆதாரங்களையும் ஒருநிலைப்படுத்தி - மூலாதாரத்தில் அடக்கி அங்கிருக்கும் பிராணவாயுவைத் துணைக்கொண்டு 'சும்மா இரு'' என்று பெருமான் சொல்லிய நிலைபெற்று - சுழுமுனை நாடி வழியே சென்றால் பிரமரந்திரத்தில் அந்தப் பொருளைச் சந்திக்கலாம். சந்தித்துக்கேட்கும் போது தான் "இன்னே பெறுதி நீ முன்னிய வினையே'' என்ற நக்கீர முனிவரின் வாக்கும் பலிதமாகும்.

க = தமிழில் ஒன்று; ரு = தமிழில் ஐந்து. க என்ற மூலாதாரம் தொடக்கமாக ஐந்து ஆதாரங்கள் தோன்றி ஆறு ஆதாரங்களுடன் மனிதஜென்மம் உருவாகியது. இதனைக் "கருவினுருவாகிவந்து'' என்று அருணகிரி சுவாமிகள் குறிப்பிடுகிறார். இந்தக் கருவாய் உயிராய் வந்த சீவராசியைக் காக்க அந்த ஆருதார அதிபனாயிருக்க ஆறுமுகத்தைக் கொண்டு அறிவாகியெங்கும் நிறைந்து நின்று - அடியார் வேண்டிய வேண்டியாங்கு கொடுக்கும் கருணையே கருணை. இதனைச் செம்மையாகச் சித்திரிக்கிறது கச்சியப்பரின் கவித்தேன்.

"முன்னிய கருணை ஆறுமுகப் பரம்பொருள்'' கேட்டவற்றைச் சுரக்கும் கருணை, - அந்தக் கருணையை உடைய ஆறுமுகம் – அந்த ஆறுமுகங்கள் எது என்றால் மூலப் பரம்பொருள். இவ்வித சிறந்த அழகு வடிவில் படம்பிடித்துக்காட்டுகிறது இத்தொடர் இதனை உள்ளங் கொண்டால் அந்த வள்ளலின் கருணையைப் பெறலாம் என்பது திண்ணம். OOO

## வெற்றிவேல்

'வேந்தே நான் அடைந்த வெற்றிக்கெல்லாம் வித்து எது என்பது எனக்கு விளங்குகிறது. உனது உணர்ச்சியில் ஒருமுகப்பட்ட உள்ளத்தைக்கொண்டு நான் எதைச் செய்தாலும் அது வெற்றியே. உன்னிடத்து ஒப்படைந்த உள்ளமே வெற்றிவேல்.'

கடவுளிடத்து இருப்பதெல்லாம் நம்மிடத்தும் உண்டு. கந்தன் உயிர்களுக்குச் சேனைத் தலைவன். வேலாயுதத்தைக் கொண்டு அவன் எக்காரியத்திலும் வெற்றி பெறுகிறான். மனது நம்மிடத்து உள்ள வேல். குவிந்து ஒருமுகப்பட்டு இது கடவுளைச் சார்ந்திருக்குமானால் இது வெற்றிவேல் ஆய் விடுகிறது.

வெற்றிவேல் உற்ற துணை.

# கும்பாபிஷேகம்

திரு. கா. கைலாசநாதக் குருக்கள் M. A. Ph. D.

**பிரதிட்டை** என்றால் என்ன? இக் கிரியையில் யாகசாலை எதற்காக? கும்பங்கள் எதற்காக? குண்டங்கள் அமைத்துத் தீ வளர்ப்பது யாது? காரணம் பற்றி? நேரே திருவுருவிலேயே இறைவனைத் தோற்றவைக்காது கும்பம், குண்டங்கள் முதலிய உபாயங்களைக் கையாளும் நோக்கந்தான் யாது? என்ற கேள்விகளுக்கு உரியவாறு விடைகூறும் முகமாகக் கும்பாபிஷேகம் கிரியையமைப்பையும் அடிப்படைத் தத்துவத்தையும் சுருக்கி அறியத் தருவது இக்கட்டுரை.

எங்கும் நிறைந்தவன் இறைவன், அவ்வாறிருந்தும் அவனைத் தரிசித்தல் வேண்டிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கோவிலையே நாடிச் செல்லுகின்றனர். இதனால் "அவன் எங்கும் உளன்" என்ற சிறப்புக்குன்றுமோ வெனின், ஒரு பொழுதும் குன்றாது! சிக்கலான இக்கேள்விக்குத் தெளிவான விடை பகருகின்றது. சிவஞான சித்தியார் [ 12–3–4 ] பசுவின் உடலெங்களும் பால் பரந்து சுவறியுள்ளது. எனினும் அது முலைகளின் வழியே தான் வெளியேறுகின்றது. அதே போன்று எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் குறிப்பிட்ட இடத்திலேயே சிறப்பாக வெளிப்போந்து அருள் சுரப்பான். இவ்வாறு அருள் பெருக்குமிடம் குருலிங்க சங்கமமெனச் சமய நூல்கள் கூறும். இம் மூன்றினுள் இலிங்கத்தில் இறைவன் தோற்றியருளுதலையே ஆலய வழிபாட்டில் நாம் உணருகின்றோம்.

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள் பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவலிங்கம் எனவும் படலாயிற்று. பரம் பொருளான சிவபிரானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம், "அம்பரமன் இத்தகையன் என எமக்கு விளக்கி நிற்கின்றது! அவ்விளக்கத்தின் சுருக்கம்: "உருவமில்லாத எம்பெருமானை எவ்வாறு இரசிப்போம் என ஏங்கி அலமந்து நிற்பார்க்கு உருவங்காட்டியும், 'எம் போன்ற உருவம் வாய்ந்தவன் இவன்' எனத் தற்பெருமை தோன்ற இறுமாந்து நோக்குவார்க்குக் கைகால் முதலிய உறுப்புக்களைத் தெளிவாகப் பெறாத அருவநிலையில் தோற்றியும் அருவுருவமாக விளங்குவது இலிங்கத் திருமேனி" என்பதாம். இணைத்துப் பெருமை வாய்ந்த இலிங்கத் திருமேனி அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய்ப் பரமன் விளங்கும் உயர் தத்துவத்தை உணர்த்துவது. சிவபிரானுக்கு உரித்தான இச் சிவலிங்கத் திருமேனி இல்லாத கோவில் கோவிலாகாது! அரசன் இல்லாத நாடு போன்றதே இலிங்கத் திருவுருவமில்லாத திருக்கோயில். பாரத நாட்டில் ஆகம முறைப்படி அமைந்த கோவில்களில் இலிங்கஸ்தாபனம் இல்லாத கோவிலைக் காணலரிது. கோவில்களில் எல்லாம் இறைவன் தம்மைச் சுட்டும் அடையாளமான இலிங்கமூர்த்தியாகிக் கருவரையில் மூல விக்கிரமாய் முதன்மை பெற்று எழுந்தருளுகின்றான். சிவபிரானுக்கல்லாத ஏனைய மூர்த்திகளுக்கு நிறுவப்படும் மூல விக்கிரமம் அவ்வுருவமான இலிங்க வடிவில் அமையாத-தாய் உருவ நிலையிலேயே உபாயமாக நிறுவப்படுதல் உபசார வழக்கு.

பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரமனை, பால் கறப்பவன் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று, எவ்வாறு குறிப்பிட்ட ஓரிடத்தில் வெளிப்படுத்தும் இவ்வரிய நிகழ்ச்சியை நிகழ்த்துபவனே அருச்சகன் கல்லில் வடிக்கப்பட்ட வடிவத்தில் ஆகமங்கூறும் வழியைக்கடைப் பிடித்தே இறைவனை எழுந்தருளச் செய்கின்றான். இது நிகழுமாற்றைச் சிறிது விரிவாக நோக்குவதற்கு முன் பிரபஞ்ச அமைப்பைச் சற்று நுணுகி அவதானித்தல் பயன்தரும். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களனைத்தையும் எட்டுப் பிரிவுகளுள் அடக்கலாம். இவற்றிற்குப் புறம்பாய பொருளொன்று உண்டு என்றால், அது இவையெட்டும் ஒருங்கே ஒன்று சேரும் வண்ணம் அருளுருவம் தாங்கும் இறைவனேயாகும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐந்து பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவைவிளங்கவும், வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும், இவ் வேழனின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இப்பிரிவுகள். பிரபஞ்சம் முழுவதும் இறைவன் நிறைந்து நிற்பன் ஆதலால் இப் பிரபஞ்சத்தின் கூறுகளான இவ்வெட்டுப் பொருள்களிலும் இறைவனை உணருகின்றோம். இவ்வெட்டு அம்சங்களையுமுடைய பரமன் இதுபற்றி அட்டமூர்த்தி எனச் சிறப்புப் பெற்றவன். எனவே, இவ்வெட்டு அம்சங்களில் நிகழ்த்தும் வழிபாடு அவனது வழிபாடு ஆகும். இவ்வம்சங்களில் இறைவன் எழுந்தருளலைக் காணல் அவனைக் காணலேயாகும். இவ்வடிப் படையிலேதான் சிவாசாரியர் இறைவனைச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுவித்து அங்கு என்றும் சாந்நித்தியமாக விளங்கும்படி செயலாற்றுகின்றார். இவ்வாறு நிகழும் கிரியையே பிரதிட்டை எனப்படும்.

பிர என்னும் பகுதிக்குச் சிறப்பாக என்றும், நான்கு புலனாகும்படி என்றும், திஷ்ட என்னும் பகுதிக்கு நிற்றல் என்றும் பொருள் உண்டு. எனவே, பிரதிஷ்டை என்னும் சொல் "ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக நிலை நிற்றல்" என்றும், "ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும் படி நிலை நிற்றல்" என்றும் பொருள் பெறும். இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பிரதிட்டை என்னும் கிரியை கும்பாபிஷேகம் என்றும் மறு பெயரால் வழங்கி வருகின்றது. இச் சொல் பிரதிட்டை என்னும் சொல் போலக் கிரியையின் விளைவைச் சுட்டாது கிரியையின் ஓரமைப்பாகிய முழுக் காட்டுதலை மட்டும் குறித்து நிற்கின்றது. பிரதிட்டை என்றும் கிரியையில் குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இலிங்கத் திருமேனிக்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிகரமான அம்சம். சிகரமான இக் கும்பாபிஷேகமே, – குடமுழுக்கே – பிரதிட்டையே, இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒரு வழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யும் செயலைக் காட்டுகின்றது. ஆகமங்கள் கூறும் இவ்வுபாயத்தினை, குட நீரால் முழுக்காட்டல் மூலம் இறைவனை எழுந்தருளி நிலை நிறுத்தும் முறையின் சிறப்பினை, வேதாகமங்களைக் கொண்டு நோக்குமிடத்து, இக் கிரியை முறையில் சிறப்பும் உயர் தத்துவமும் புலனாகும் அதைச் சற்றுநுணுகி நோக்குவாம்.

எங்கும் நிறைந்த இறைவன், புலன்களால் கிரகிக்கப்படாத பெருமான், எமக்கிரங்கி, திருவருள் பாலித்துப் படிப்படியாக எங்கட்குப் புலனாகிக் கிட்டும் முறையை உபநிடதங்கள் எடுத்துரைக்கின்றன. இதைக் துணையாகக் கொண்டு வகுத்தமைக்கப் பட்டுள்ளது பிரதிட்டை என்றும் கும்பாபிஷேகக் கிரியையாகும். சர்வவியாபி எனச் சுவேதா சுவதரங் கூறும் பகவான் முதலில் சிறு அளவில் மட்டுமே புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் இந்திரியங்களால் செவ்விதாகக் கிரகிக்கப்பட்டமை

யால் வாயுவாகச்சற்று விரிகின்றான். ஆகாயத்திலும் பார்க்க வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் அது கண்ணால் காண்பதற்கு அரிதான தொன்று அன்றோ! இதை அடுத்த நிலை அக்கினியாக விரிந்த நிலை, இது கட் புலனாவதே. இது தூய்மை பெருக்கி எம்மை ஈடேற்ற வல்லது அக்கினியைப் பெரிதும் நெருங்கிப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாக வழிபடுதலில் இன்னல்கள் பல உள. இவ்வின்னல்கள் எதுவும் இல்லாது தானே எல்லாமாய் விளங்குவது நீர் என்றாலும், கிரகிக்கத்தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுதல் எளிதன்று இதுகாறும் கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவது பொருளாகிய மண். இதனிடத்து இறைவனை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு நன்கு கைகூடவல்ல நிலை. இவ்வாறு இறைவன் அருவநிலையினின்றும் இழிந்து ஆகாரம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் நுண்மை அகன்று படிப்படையாகப் பருமை வளரும் வகையில் விரிந்து விளக்குகின்றான். இதைத் தைத்திரிய உபநிடதம்.

''ப்ரம்ஹண ஆகாச: ஸம்பூத
ஆகாசாத் வாயு:
வாயோ ரக்நி:
அக்நே ராப:
அத்ப்ய: பிருத்வி''

என எடுத்தியம்புகின்றது.

இறைவனை முற்றிலும் புலனாகாத நிலையிலிருந்து, பால்கறப்பவன் பசுவுடலெங்கணும் பரந்து சுவறிய பாலை முலைகளில் வெளிப்படச் செய்வது போன்று விக்கிரகத்தில் வெளிப்பட வைப்பதற்காக, இதுகாறும் கூறிய விரிவு முறை வழி நின்று விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்துங் கிரியைகளே கும்பாபிஷேகப் பெருங்கிரியையின் அம்சங்களாய் விளங்கக் காண்கின்றோம். ஆகாய வெளியிலமைவது யாகசாலை. அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயுவும் குண்டங்களில் ஒருங்கு உறையக்காண்கின்றோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர், இவை நான்கிலும் புலனாகாது எங்கும் பரந்து நின்ற இறைவனைக் கிரியைகள் மூலம் படிப்படியாக வெளியாக்கிப் புலனாக வைத்தலே யாகசாலையில் குண்டங்களில் வளரும் தீயில் இறைவன் தோற்றமடைப்பிக்கப் பெறுகின்றான். மேடையில் நிறுவப்பட்ட கும்பங்களின் நீரிலும் கிரியைகளின் சிறப்பினால் மேலும் வெளிப்படுத்துகின்றான் இவ்வாறு வெளிப்படும் நிகழ்ச்சி இறுதியில் மணி அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் வந்து முடிவெய்துகின்றது. முன்னர்க் கூறிய எட்டு அம்சங்களுக்காகத் தனித்தனியே அமைக்கப்பட்ட குண்டங்களில் சாந்நித்தியமானவனை, நீர்நிறைந்த கும்பத்தில் வெளிப்பட்டு நிற்கும் அவனை, மண் இயல்பு வாய்ந்த விக்கிரகத்தில் ஒடுக்கி அங்கேயே நிலைபெறச் செய்த பின்னரே, அவன் அவ்விக்ரகத்தில் பாரெங்கணும் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக வெளிப்பட்டு பிரதிட்டிக்கப்பட்டவனாய் விளங்குகின்றான். இது பற்றியே, அறவே கிரகித்தற்கரிய இறையை, எளிதில் கிரகித்தற்கு முடியாதவாறு ஆகாயம் நுண்ணிதாயிருத்தல் பற்றி, முதன் முதல் புலனான ஆகாயத்தில் நிறுத்து வழிபடுவதற்கு வகையறியாராய், அதையடுத்து, கட்டிலனாகாத வாயுவிலும் பொருத்தி வழிபடும் ஆற்றல் அற்றவராய், புலனாகித் தோற்றும் தன்மையனாயும் ஒரே வழிப் புலனாகாது திடீரென மறைந்துவிடும் இயல்பினனாயும் விளங்கும் அக்கினியிலும் நிறுவி வழிபடுதலில் திருப்திகாணாதவராய், வற்றும் இயல்பு காரணமாக என்னும் தொடர்ந்து நிலை பெறாத — எனவே பிரதிட்டைக்கு ஏற்ற, வாறு பொருந்தாத நிலையினதாதல் பற்றி நீரிலும் இறைவனைத் தாபித்து வழிபடும் வாய்ப்புப் வராய், மண்ணிலேயே இறைவனை நிரந்தரமாக நிறுவி வழிபடும் ஒரே வழி

யைக் கடைப்பிடிக்கும் நிலையுற்றோம். எனவே, என்றும் வெளிப்பட்டுப் புலனாகி விளங்கும் வண்ணம் இறைவனை நிறுத்திப் பிரதிட்டை செய்யும் பொருட்டுத் திருக்கோவிலில் நிறுவுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் திருவுருவங்கள் மண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இவ்விக்கிரகங்களிற் சில மண்ணோடு உறவு கொண்டமலைகளில் பிளந்தெடுத்த கருங்கல்லில் சமைக்கப்படுவன. சில மண்ணிலே அகழ்ந்தெடுக்கப்படும் ஐவகை உலோகங்களில் வடிக்கப்படுவன. சில மண்ணிலே வளரும் மரங்களிற் செதுக்கப்படுவன. இன்னுஞ் சில மண் சுண்ணாம்பு முதலியன கலந்த சுதையால் அமைவன. இவ்வாறு மண்ணிற் அம்சத்தை மட்டுமே கொண்டு அமையும் விக்கிரகத்தை நிறுவி அதிலே இறைவனைக் குடிபுகுத்திச் சிறப்பாகத் தோற்றி விளங்க வைக்கும் கிரியையில் தோற்றுவித்தலை நேரே விக்கிரகத்திலேயே நிகழ்த்துதலை விடுத்து, அவன் படிப்படியாக வெளிப்படும் முறையே இலகுவான வழியென உணர்ந்து, அதையே உபாயமாகக் கையாண்டு, இதுகாறும் சுட்டப்பட்ட, விண், வாயு, தீ, நீர் ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டு இறைவனைப் படிப்படியாக அவற்றினூடே விக்கிரகத்தில் சுலபமாக எழுந்தருளுவிக்கும் கும்பாபிஷேகப் பெருங்கிரியையில், ஆகாயரூபமான யாகசாலையிலும். குண்டங்களில் எரிவளரக் காரணமாகி நின்று அக்கினியினின்றும் வேறுபடாது இணைந்து நிற்கும் வாயுவிலும் அங்கு வளரும் அக்கினியிலும், பேடையில் அமைக்கப்பட்ட கும்ப நீரிலும் இறைவனைப் பாரனைத்தையும் கடந்து நிற்கும் துவாசதாந்தத்தில் இருந்து இழிந்துவந்து தோற்றம் பெறுமாறு எழுந்தருளச் செய்து, ஆவாகித்து, பூசனைபுரிந்து, இத்தோற்றம் முழுவதையும் கிரியை முடிவில் மண் இயல்பினதான திருவுருவத்தில் ஒடுக்கி அங்கு நிலைபெற வைத்து, இவ்வொடுக்கம் நிறைவுறக் கும்ப நீரால் விக்கிரகத்தை முழுக்காட்டுவதன் மூலம் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் சிவாசாரியார் எங்கும் பரந்த இறைவனின் வியாபகத்தினை, பசுவின் முலைகளில் பால் வெளிப்படுவதுபோன்று போன்று திருவுருவத்தில் வெளிப்படும் வண்ணம் ஒருமுகப்பட்டு உறைந்து நிறைந்து விளங்கச் செய்கின்றார்.

கும்பாபிஷேகம் என்னும் இக்கிரியையின் பின்னர், எங்கும் பரந்து நிற்கும் இறைவன் ஏனைய இடங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளங்குகின்றான். இந்நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றுந் தொடர்ந்து விளங்கும் நிலை. இந்நிலையிற்றான், அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அருச்சனை உபசாரங்கள் முதலிய ஆராதனைகளால் இறைவனை வழிபடத் தொடங்குகின்றோம். இவ்வம்சங்கள் கொண்ட வழிபாடு சுருக்கமான நித்தியக் கிரியைகளாகவும், விரிவான நைமித்திகக் கிரியைகளாகவும் திருக்கோவில் வழிபாட்டில் என்றமென்றும் நிரந்தரமான இடம் பெறுவன.

''ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகமன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்'' என இறைவன் கூறியவாங்கு சிவபிரானும் முருகனும் வேறுபாடற்றவர்கள். எனவே முருகனது பிரதிட்டையிலும் அவன் உருவம் பற்றிய தத்துவங்களில் அட்ட மூர்த்தங்கள் அடிப்படைகளாக விளங்குவன,

இதுகாறும் கூறப்பட்ட கும்பாபிஷேக முறை கோவிலே இல்லாத இடத்தில் புதிதாகக் கோவிலெடுத்து விக்கிரகத்தை நிறுவி முதன் முதல் நிகழ்த்தும் அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்னும் ''முதற் கும்பாபிஷேகம்'' பற்றியது.

பிரதிட்டை ஆகி, நெடுங்காலம் வழிபாடு நிகழ்ந்துவருங் கோவிலில் கருவறையின் பகுதிகள் பழுதடைந்து சிதிலமடையின், மூலவிக்கிரகத்தில் சாந்நித்தியமாய்

விளங்கும் இறைவனை, உரியகிரியைகளால் கும்பத்தில் எழுந்தருளச் செய்து, வேறு ஓர் இடத்தில் தற்காலிகமான 'பால ஆலயம்' கற்பித்து, அங்கு நிறுவப்படும் மரத்தால் ஆன சிலையிலோ, திரையில் எழுதப்பட்ட திருவுருவிலோ ஒடுக்கி, கோவிலில் உள்ள பழுதுகளை அகற்றிச் சீராக்கியபின், பால ஆலயத்தில் இதுகாறும் சாந்நித்தியம் கொண்டருளிய இறைவனை மீண்டும் கும்பத்தில் ஆகருஷித்து, ஆவாகித்து, யாக சாலை அமைத்து, அங்கு அக்கும்பத்தை ஸ்தாபித்து யாகக்கிரியைகளை முறைப்படி நிகழ்த்திய பின் திருத்தியமைக்கப்பட்ட கோவிலின் கருவறையில் முன்னரே இருந்த மூல விக்கிரகத்தில் இறைவனை முன்போல் சாந்நித்தியங் கொண்டருளும்படி சேர்ப்பித்தல் முறையாகும். இவ்வாறு நிகழும் கும்பாபிஷேகம் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் எனவும் புனர் ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனவும் சுட்டப்படும். ஜீர்ணம்= பழுதடைந்த (கோவில்); உத்திதாரணம்= =மீட்டல்) திருத்துதல்); புநர் =மறுபடியும்; ஆவர்த்தனம் = திருப்பிக் கொண்டு வருதல்.



எங்கும் கனிந்த எழிற்தெய்வம்! என்றும் மாரு இளந்தெய்வம்
பொங்கும் மழலைமொழித் தெய்வம்! புதுமை கமழும் புகழ்த்தெய்வம்!
சங்கப் புலவர் தொழுதேத்தும் தலைமைப் புலமைத் தமிழ்த்தெய்யம்
ஙிங்கத் தமிழர் நெஞ்சமெலாம் திகழும் திக்கரைவேற் செழுந்தெய்வம்!

காரைநகர் திக்கரை
முருகன் குடமுழுக்கு
விழா சிறப்புடன் நடை
பெற வாழ்த்துகின்றோம்

# MARKANDU & SONS

General Merchants, Commission Agents
& Tobacco Merchants

29, DAMBULLA ROAD — GALEWELA

# திருவாசகத்தேன்

— அ. தவபாலன் களபூமி, காரைநகர். —

"தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவாநெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகமென்னும் தேன்"

சைவ சித்தாந்தமாம் செந்நெறிக்குத் திருமுறை பன்னிரண்டும் உயிர்போன்றமைந்தன. இத்திருமுறை பன்னிரண்டும் செந்தமிழ்க்கண் பொதிந்துள்ள குறைவிலா நிறைவாம் மந்திர மறைநூல்; வாழ்மைத் தமிழின் வளம்மிகு இலக்கியம் இவற்றிற்கு இலக்கணம் என அமைந்தது மெய்கண்டநாயனுர் அருளிய சிவஞான போதம்; இத்திருவாசகம் எட்டாம் திருமுறையாக அமைந்தது. ஆளுடைய அடிகளாம் மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் அவர்தம் தவப்பயனுக இறைவனே குருவடிவிற்ருேன்றி ஆட்கொண்டருளினுர். திருச்சிற்றம்பலத் திருக்கூத்தற் பெருமான்பால் எழுந்த பெருங்காதற்கனிவு தேனினும் இனிய திருவாசகத்தை ஊற்ருகச் சொரிந்தது. வாதவூர் அடிகளது உண்மை ஞானத்தின் விளைவாக எழுந்த அனுபவ ஞானத்திருவாசகத்தை இறைவன் 'பாடுக' என உத்தரவிட அடிகளார் பாட இதன் ஒரு பகுதியை இறைவனே தன் கையில் எழுத்தாணி கொண்டு எழுதினுர். திருவாசகத்திற்கு அழகிய சொல் பக்குவான்மாக்களால் விரும்பப்படும் வாசகம்; தெய்வத்தன்மை பொருந்திய வாசகம்; என்றெல்லாம் பல சிறப்பு பொருள்களை அருள் ஞானிகள் கண்டனர். தெய்வநலங்கனிந்து சொட்டும் சொற்ருெடர்களால் அமைந்தவை இனிமையும் எழிமையும் ஆழமும் நிரம்பப்பெற்றவை. மெய்யன்புடன் ஓதுவார், கேட்பார் உணர்வார் அனைவரையும் எல்லையறு பேரின்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்து பரவசமூட்டும் பண்பின. மெய்யடியாரின் அனுபவ உண்மைகளை தெட்டத் தெளிவாக விளக்குவன. இந்நூலினைப் படித்துச் சுவைத்துப் பேரின்பம் துய்த்த புலவர்கள். திருவாசகம், மணிவாசகம், மதுரவாசகம், வாசகத்தேன், வாசகமாலை என்று பற்பல பெயர்கள் சூட்டி மகிழ்ந்தனர். மனம் குழைந்து படிப்போர் நெஞ்சத்து அமுதூறி நிலவச் செய்வதாகலின் மதுரவாசகம என சிவப்பிரகாசசுவாமிகள் விதந்தனர்; நன்மணிகள் பல கோத்து ஆக்கும் மாலைபோன்று அருள் சொட்டும் சொன்மணிகள் பல கோத்து ஆக்கியதால் வாசகமாலை எனவும் அவர் கருதினுர். திருவாசகத்தேனென இவரும் இராமலிங்க வள்ளலாரும் சுவைத்து மகிழ்ந்தனர்.

"திருவாசகத்தைத் தேன்" போன்றதென்று பக்தர் வியத்தல் காணக்கிடக்கிறது. திருவாசகம் முழுவதையும் அனுபவித்து அதன் சுவையூற்றுக்கள் தோறும் தோய்ந்து தோய்ந்து ஒப்புவமை தேடி ஈற்றில் தேனையே ஒப்பாகக் கண்டனர். இனிய

பொருட்கள் பலவற்றுள்ளும் தேனைக்கண்ட திலேயே தனிச்சிறப்பு உண்டு தேனுனது தூயமலரிற்றேன்றி தீஞ்சுவை உடைத் தாய், குரல் இனிமை மிகக் கொடுப்ப தாய் மிருதியாக உண்பார்க்கு இலகுவில் மலம் கழிப்பதாய், பித்தம் தணிப்பதாய், கபத்தை இளக்குவதாய் நோய்கள் பல வற்றைத் தீர்ப்பதாய் அமைந்துள்ளது. அதுபோல் திருவாசகத்தேனுனது வாதவூ ரண்ணலின் மலர்வாய்ப் பிறந்து சொற் சுவையும் பொருட்சுவையும் நிரம்பப் பெற்று உயிருக்கு சிவஞான உணர்வாகிய வலுவையூட்டும். சேயின் குரல் இனிமை யாகித்தாயை மகிழ்விப்பது போல் சிவமாம் தாய்க்கு கருணையை மிகுவித்து உயிர்கள் அனைத்திற்கும் இனியனுக்கும் தொல்லை யிரும் பிறவிச்சூழும் தளையாகிய ஆணவ மலத்தைக் கழிக்கும். பிறவிப்பிணி தீர்க்கும் திருவாசகத்தினைச் சுவைத்து பேரின்பம் துய்த்த அடியார் "திருவாசகம் என்னும் தேன் அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கி யது'' என்று மட்டற்ற இன்பப் பெருக்கு டன் பாடிப் பரவுகின்ருர்.

இந்நூல் படிப்பவர் மனதைப் பரவசப் படுத்தும் பெற்றியது. எளிய சொல்லும் விழுமிய பொருளும் கொண்டு இழுமென் ஓசையால் தலைவனை அடைய உதவும் தனிப்பெருந் திறன் உடையது. திருவாச கத்தினை ஒருமுறை ஓதினுலும் உயிர்த் தன்மை கெட்டு சிவமயமாதல் நிச்சயம். தன்னையும் தலைவனையும் அறியாது அலை கின்ற மனதிற்கு ஒய்வு நல்கும் அருமருந்து கடவுளின் அருளை வாரிவாரி வழங்கும் கற்பகத்தரு. சித்தமலம் அறிவித்து சிவா னந்தப் பெருங்கடலை சிந்தையில் நிறைய உதவி திருமேனி முழுவதும் பரவச்செய்து புளகாங்கிதம் கொள்ளச் செய்யும், தனிப் பெரும் நூல். சிவப்பிரகாச சுவாமிகள் வேதத்திற்கும் திருவாசகத்திற்கும் வேற் றுமை கற்பிக்கின்றுர். வேதம் ஓதச் கேட்டு நெஞ்சம் குழைந்து நிற்பவர் ஒருவரும் இல்லை. திருவாசகத்தை ஒருமுறை ஓதினுல் கருங்கல் மனமும் கரைகிறது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றன. மெய்ம் மயிர் சிலிர்க்கிறது. அனைவரும் அன்பு வெள்ளத்தில் சூழ்கின்றனர் எனப் பின் வரும் பாடலில் விளக்குகின்றுர்.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய் பிறந்த வாசகத்தேனே
யாதோ சிறந்த தென்குவீராயின்
வேதம் ஓதின் வழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகமிங் கொருக்கால் ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணக்கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி
அன்பராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே''

மற்றெரு பகுதியிலே மணிவாசகன் என்னும் மேகம்பொழி திருவாசக வெள் ளம் பெருக்கெடுத்தோட அதனைப் படிப் பவர் மனக்குளம் நிரம்பி, தாக்கெனும் மதகுவழியாக வெளிப்பட்டுப் கேட்பவர் செவிமடை வழியாக மனவயலிற் பரவி அங்கு அன்பாகிய வித்தில் இருந்து சிவ மூளையை தோற்றுவித்தது. அதில் இருந்து கருணைமலர் மலர்ந்து முத்திப்போகம் விளைந்தது என உருவகித்து மகிழ்ந்து கொண்டாடிப் பாடுகின்றுர் மேலும் அவர் தானே திருவாசகம் பொற்கலத்தை ஒப்ப தெனவும் அதனை ஓதமுத்தி கிடைக்கும் எனவும் பாடிப் பரவசப்படுகின்றுர். 'பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை போல்' பாவென்ருல் திருவாசகத்தேனுகும்.

''குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்
குமிழ்ண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும்
காணப் பெற்ருல்
மனிதப்பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே''

என்று பாடியருளினுர் அப்பர் சுவாமி கள். இத்தால் எண்ணரிய பிறவிகளில் அரிதான மானிடப் பிறவியைப் பெற்ற நாம் திருவாசகத்தினை சிறப்புற ஓதியும் ஓதக்கேட்டும், மற்றவர்கள் கேட்டு பயன் பெற உதவியும் உய்திபெறுவோமாக. ●

உ

வணங்கத் தலை வைத்து
வார் கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடியார்
கூட்டமும் வைத்தெம் பெருமான்
அணங் கொ டணிதில்லை
யம்பலத்தே யாடுகின்ற
குணங் கூரப் பாடி நாடா
பூ வல்லி கொயாமோ

▲

அரிசி, தவிடு, பாக்கு, கரி, உப்பு,
எள்ளுப் புண்ணுக்கு,
தேங்காய் எண்ணெய், கயிறு வகைகள்

▲

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளுமிடம்.

▲

ஸ்ரீ முருகன்ஸ் ஸ்ரோர்ஸ்
93, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

வரங்கொண்ட உமைமுலைப்பால் மனங்கொண்ட செவிவாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறை இறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்றன் கண்ணைவிட்டு நீங்காவே !

- செந்தில் கலம்பம்

*Wtth the Best Compliments of*

# MYLANDS


**Dealers in Textiles & Oilman Goods.**

**115, 117, K. K. S. Road,**
**JAFFNA.**

**மைலண்ட்ஸ் — யாழ்ப்பாணம்**

நாளென் செயும்வினை தான் என் செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேச ரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

-கந்தர் அலங்காரம்



**திக்கரை முருகன் குடமுழுக்கு விழா**
**சிறப்புடன் நடைபெற எமது வாழ்த்துக்கள்**

○

# முருகன் ஸ்ரோர்ஸ்

18-B, சேர்ச் வீதி, நுவரெலியா.

# இல்லையோ வுளம் ஈசனே

— பண்டிதர் க. மயில்வாகனம் —

திங்கள் சூடிவரு செஞ்சடைக் கடவுள்
தேவ தேவனருள் மதலையே
செகம ளித்தருள் கன்னி யீன்றருள்
செல்வ மாமயில் வீரனே
துங்க வேற்படை கையில் ஏந்தியருள்
சோதியே கருணை வாரியே
தூய அன்னையர் இருவர் தம்மொடுந்
தோன்றி வந்தருள் செய் தூயனே
இங்கு நின்னடிப் போதலாற் றுணை
ஏது மில்லையால் எந்தையே
ஏழை யேந்தமக் கருள் புரிந்திட
இல்லையோ வுளம் ஈசனே
கொங்கு தங்குதண்ணூர் துறைதொறுங்
குயில்கள் பாடல்பயில் காரையூர்க்
கோல நீடுதிக் கரைப்பதியமர்
தலைவனே முருக முதல்வனே

வேத மோதிவரு பங்கயக் கடவுள்
வெருவவே சிறைசெய் வித்தகா
விளங்கு மைந்திலைப் பொருட்டிறந்தெரி
விநோத பண்டித சாமியே
மோதவந்தபுன் சூர்க்கும் இன்னருள்
முன்பு செய்தருள் வேலவா
முறுவல் செய்துலகை வாழவைத்திட
மூவிரு முகங்கொள் ஐயனே
ஓது நின்னடிப் போதலாற் றுணை
ஒன்று மில்லையால் எந்தையே
உற்று வாடிடும் அடிமை உய்ந்திட
உள்ளமே கொளும் ஐயனே
தாதுமேய தண்ணூர் துறை தொறும்
தந்தை பாடல் பயில் காரையூர்த்
தாவில் திக்கரைப் பதியமர்ந்து வளர்
தலைவனே முருக முதல்வனே.

— வேறு —

முத்தமிழ்ச் சுவைதெரிவித்துப் புலவனே
முடிவிலா இன்ப ஊற்றே
மோகனப் புன்னகைத் திருமரு மார்பினன்
மூவுல களந்த நெடுமால்
நந்துநன் மருகனே நண்ணினர்க்கினியனே
ஞானமே வடிவமானோய்
நாடிடுந் தொண்டர்கள் நாடொறுங் கூடிமகிழ்
நலந்திகழ் உருவமைந் தோய்
இத்தலத் துன்னடிப் போதலால் வேறு துணை
எந்தையே காண கில்லேன்
ஏங்கியே வாடிடும் ஏழையான் உய்ந்திட
இன்னருள் செய்யுமையா
தத்துநீர்த் துறைதொறுஞ் சங்கினங்கூடியே
தவளவெண் முத்த மீனுந்
தகவு மலி காரையூர்த் திக்கரைப்பதிவரு
தலைவனே முருக முதல்வனே.

# கிரியைகளின் தத்துவத்தை பொதுமக்கள் உணரச் செய்தல் வேண்டும்

"சைவ சமயக் குருமார் மக்களால் நன்கு மதிக்கப்படும் உயர்ந்த அந்தஸ்தைப் பெறவேண்டுமானால் அதற்குள்ள ஒரே வழி குருமார் தங்கள் கல்வி அறிவை வளர்த்துக்கொள்ளுதலாகுதல் என்று சிவானந்த குருகுலப் பாடசாலைக் கட்டடத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய வித்தியாதிபதி பிரம்மஸ்ரீ கி. லக்ஷ்மண ஐயர் குறிப்பிட்டார்.

"சைவ சமயப் குருமார் தாம் செய்யும் சமயப் பணிக்கு வேண்டிய அளவு வடமொழியிலும் தமிழிலும் புலமை பெற்றிருப்பதோடு திருமுறைகளிலும் சித்தாந்த சாஸ்திரங்களிலும் போதிய பயிற்சிபெறுவதும் அவசியமாகும். தாம் செய்யும் கிரியைகளின் தத்துவத்தைப் பொது மக்களுக்கு எடுத்து விளக்குவதன் மூலம் அவர்களின் மனதை அக்கிரியைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் தாம் செய்யும் கிரியைகளில் வேவ்வேறு வழிமுறைகளைக் கையாண்டு பக்தர்களுக்கு ஐயமும் அவநம்பிக்கையும் உண்டாக்காமல் திட்டமிட்டு ஒருமுறைப்பாட்டுடன் கிரியைகளைச் செய்வதோடு ஒலிச் சிறப்புடைய மந்திரங்களை அழகாக உச்சரிக்கவும் பயின்றுகொள்ளவேண்டும். இவ்விதமான பயிற்சியளிப்பதற்காகவே சிவானந்த குருகுலம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டு விஸ்தரிக்கப்படுகிறது. நமது சமய குருமார் இதனைச் சரியாகப் பயன்படுத்தி எமது சமயத்துக்கும் நாட்டுக்கும் நன்மைசெய்யவேண்டும்."

[ சைவசமயக் குருமாரைப் பயிற்றும் சேவையை மேலும் விரிவுபடுத்துவது பற்றி ஆலோசிப்தற்கு யாழ்ப்பாணத்தில் சிவானந்த குருகுல பாடசாலைக் கட்டிடத்தில் நடபெற்ற கூட்டத்தில் திரு. கி. இலட்சுமண ஐயர் எம். ஏ. அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி ]



திக்கரை முருகன்
கும்பாபிஷேக விழா பற்றி

# திரு. கி. பி. ஹரன்

அவர்கள்

திரு. கி. பி ஹரன் அவர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட பின்னர் 13-7-74 திகதியன்று "ஈழநாடு" ஐயாறன் பகுதியில் எழுதியவை இங்கு தரப்படுகிறது.

எதிர்பாராதவிதமாக திக்கரை முருகமூர்த்தி ஆலய கும்பாபிஷேகத்திற்குச் சென்றிருந்தேன். மக்களின் பக்திவெள்ளத்திடையே நடைபெற்ற அவ்விழா வைபவங்களையும், அன்பு உள்ளங்களையும் என்னால் மறக்கமுடியாது. நம் மக்களுக்காகத்தான் எவ்வளவு பக்தி! ஊர் மக்கள் கும்பாபிஷேகத்துக்காக அள்ளி அள்ளி கொடுத்தார்களாம். இரண்டு இலட்சம் ரூபா செலவில் நடந்துள்ள இத்திருப்பணியால் அவ்வூருக்கே புதிய பொலிவு ஏற்பட்டுள்ளது.

ஆறுமுகசுவாமியின் (பஞ்சலோக) விக்கிரகம் தமிழகத்திலிருந்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாம். சீக்கிரத்தில் அவர் வந்துவிடுவாரென்றும் சில மாதங்களில் மீண்டும் ஒரு கும்பாபிஷேகம் நடக்கலாமென்றும் அறியவந்தேன்.

நாம் கோயிலில் சென்று வழிபடுவதின் நோக்கமென்ன? ஆறுமுகன் தமது கைகளில் வேல் முதலிய ஆயுதங்களை வைத்திருப்பானேன்? நமக்குள்ளேயிருக்கும் ஆணவங்களையும், உயர்வு - தாழ்வு எண்ணங்களையும், கோபதாபங்களையும் நீக்கி நம் மனதைச் சுத்தப்படுத்தவே என்கிறார் பெரியார் சீதாராம சாஸ்திரியார். மனம் வெளுத்தால் நாம் திருவருளை பெறத் தகுதியடைந்து, நம் வாழ்க்கையும் சிறப்படையும். தீயவை புரிந்தாரேனும், முருகவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை...' என்று கந்தபுராணம் நமக்கு உறுதி கூறுகின்றது.

இந்த கும்பாபிஷேகத்துக்குப்பின், அப்பகுதி மக்களிடையே அன்பு பெருகி உயர்வு தாழ்வு பேதங்கள் நீங்கி மூடப்பட்டுள்ள பாலாவோடை அம்மன் கோயிலும் திறக்க எல்லாம் வல்ல இறைவன் துணை செய்ராக.

குறிப்பு :

திரு. கி. பி. ஹரன் (ஐயாறிலிடத்தில்) ஒரு தெய்வீக சக்தியுண்டு என்பதற்கு, அவர் மேற் தலைசெய்தி எழுதிய ஒரு வார காலத்திற்குள் ஒரு வருடத்தற்கு மேலாகப் பூட்டப்பட்டிருந்த காரைநகர் பாலாவோடை அம்மன் கோவில் திறக்கப்பட்டது திருவருள் செயலே. அவர் ஊடாக வந்த கருத்துக்கள் தெய்வீக சக்தி வாய்ந்தவையே.

— ஆசிரியர்

வாசிக்கத்தவருதீர்கள்!

# காரை ஒளி

(காரை அபிவிருத்திச்சபையின் வெளியீடு)

- கலை, கலாச்சார, இலக்கிய பொருளாதார இதழ்.
- மேலும் பல புதிய அம்சங்களுடன் நாவராத்திரி இதழ் வெளிவரவுள.
- பள்ளிக்கூட மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள.
- காரை ஒளியில் பிரசுரிப்பதற்கு வாசக நேயர்களிட மிருந்து கதை, கட்டுரைகள், கவிதைகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

விபரங்களுக்கு:

**ஐ. தி. சம்பந்தன்**
ஆசிரியர்
"காரை ஒளி"
98, விவேகானந்தமேடு, கொழும்பு-13.

வாங்கி விட்டீர்களா! வாசித்து விட்டீர்களா!

# ஈழத்துச் சிதம்பர புராணம்

**காரைநகர் மக்களின் இல்லங்களில் இருக்க வேண்டிய அரிய வரலாற்று நூல்.**


சைவம் வளர அரும்பெரும் தொண்டாற்றிவரும் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தின் மிகப் பெரிய பணிகளில் ஒன்றாக அமைந்தே ஈழத்துச் சிதம்பர புராண நூலாகும். இந்நூல் "சைவ சித்தாந்திகட்கு ஒரு வரப்பிரசாதமாகவும், இலக்கிய இரசிகர்களுக்குப் பெரு விருந்தாயும் இலக்கணம் கற்போருக்கு அருந்துணை நூலாகவும் உரை எழுதப் பயில்வோருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், சொல்லராய்ச்சி நிகழ்த்துவோருககுக் களங்கரை விலக்கமாயும் அமைந்து கற்பக தருவென வேண்டுவ தெல்லாம் தரும் அரிய நூல் என கலாநிதி கா. கைலாச நாதக் குருக்கள் அவர்கள் கருத்துரை வழங்கியுள்ளார்கள். இத்தகை அரிய பெரிய நூல் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெறுவதற்கு தகுதியுடைய நூலாகவிருந்த போதிலும், ஒரு சிலரின் சூழ்ச்சியால் அப்பரிசு கிடைக்கவில்லை. இது பற்றி இலங்கையிலுள்ள பல சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனினும் இந்நூலை மிகச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்டதற்காக, தேசிய கல்வி அபிவிருத்திச்சபை பதிப்பாசிரியர் திரு. க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு பாராட்டுப் பரிசு வழங்கியுள்ளது.


இந்நூலுக்கு இப்பொழுது பெரும் மதிப்பேற்பட்டு வருகின்றது. நூலைப் பெற விரும்புவோர் "திரு. க. வைத்தீஸ்வரக்குருக்கள், சிவன்கோவில், காரைநகர்," என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

# காரை நகர்

## திக்கரை முருகன் குடமுழுக்கு விழாத் தோற்றமும் கோவில் அமைப்புக்களும்.




சுமார் 2 இலட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்ட திக்கரை முருகமூர்த்தி கோவிலின் புதிய தோற்றம்.




ஆறுமுகசுவாமி கோவில் கொடுமுடி தோற்றம்




கருவறையில் முருகப் பெருமானுக்கு குடமுழுக்கு நடைபெறுதல்.



முருகமூர்த்தி கோவில் கொடுமுடி தோற்றம்




கும்பம் வீதிவலம் எடுத்து வருதல்.



கோவிலிலுள்ள திருவுலா மூர்த்திகள்.



முருகப் பெருமான் வள்ளி தெய்வானை
சமேதராய் வீதிவலம் வரும் காட்சி.



முருகப்பெருமான் எழுந்தருளி
காட்சி கொடுத்தல்.

# கோணேசன் கொலுவிருக்கும் கோணமலை

◀ ஈழவேந்தன் ▶

பேராயீரம் உடையவன் எம்பெருமான். அப்பெருமான் கொலுவீற்றிருக்கும் கோணமலைக்கும் பல பெயர்கள் உண்டு. திரிகோணமலை, திருக்குன்றுமலை, திருக்கோணமலை, திருக்கோணதமலை, திருக்கொணமலை, கோணமலை, கோணமலை, மச்சேந்திர பர்வதம், மச்சேஸ்வரம், தெக்கணகைலாசம், தென்கைலாசம், திருமலை ஆகிய பெயர்கள் அவற்றுட் சில. இப்பெயர்கள் அனைத்தையும் துருவி ஆராயும் போது அவை அனைத்தும் செந்தமிழ் சிவநெறி தொடர்புள்ளன வாகவே இருப்பதை உணரலாம். வேறு சொற்களில் விளம்பின் ஈழத்தின் பெரும் பான்மை இனத்தவர் தம் இன அடிப்படையிலேயோ, தம் மொழி அடிப்படையிலேயோ, தம் மத அடிப்படையிலேயோ இத் திருமலை தமக்கு உரியதென்று உரிமை பாராட்டுதற்கு அருகதையற்றவர்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறது.

வடக்கினை கிழக்கினை, இணைத்து வரலாற்றுப் பெருமையோடு சமய முதன்மையும் பெற்று விளங்கும் இத்திருமலை உலகிலுள்ள மிகச்சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றையும் தன்னுள் அடக்கித் திகழ்கிறது. திருமலையைச் சுற்றியுள்ள கடல் வளத்தினை 'குரை கடல் ஓதும் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை யென' தமிழ் ஞானசம்பந்தர் தகைசான்ற முறையில் கூறிப் போந்தார். இங்கு தான் எமக்கு அருளினை அள்ளி வழங்கும் அருள் நேசனாகிய கோணேசனும் கொலுவீற்றிருக்கிறான். ஆழி சூழ் ஈழத்தின் வடகீழ் கரையிலுள்ள திருகோணமலை தமிழர்கள் குடியேறிய முதன்மையான இடங்களில் ஒன்றாகும். இதையொட்டிய விரிவை பிரித்தானிய கலைக் களஞ்சிய (Encyclopaedia Brittanica) தொகுதி 22ல் பக்கம் 477ல் கண்டு பயன் பெறுக.

## நெருங்கி வாழ்ந்த தமிழ்க் குடிகள்

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமலை' என்று கூறிய கூற்று தமிழ்க்குடிகள் அன்று மிகப் பலர் வாழ்ந்தனர் என்று உண்மையை உணர்த்தி நிற்கிறது. இன்று, அன்று நெருக்கமாய் வாழ்ந்த தமிழ்க்குடி வேற்று இனத்தவரால் நெருக்கப்பட்டு அல்லல் உறும் நிலையினைக் காண்கிறோம்.

## ஈழத்தில் முதல் நிலவிய சமயம் சைவம்

ஈழத்தில் குறிப்பாகத் திருகோணமலையில் சிவநெறி தழுவி நின்ற செந்தமிழ் மக்கள் வாழ்ந்தனர் என்ற உண்மையை வணக்கத்திற்குரிய வல்பொல இராகுல என்பவர் எழுதிய 'இலங்கையில் பௌத்த வரலாறு' (பக்கம் 44) என்னும் நூலின் வாயிலாக அறியலாம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோர் என்று கருதப்படும் விசயன் வருவதற்கு முன்பே இங்கு சைவம் தழைத்தோங்கியிருந்ததென்பதற்குரிய சான்றுகளை அந்நூல் தருகிறது.

### திருமலை – இந்துக்களின் உரோமாபுரி

இனி கத்தோலிக்க மதபீடத்தில் முதன்மை பெற்றவர்களுள் ஒருவராகிய தூய (பரிசுத்த) பிரான்சிஸ் சவேரியார் தரும் கருத்து இதோ. திருகோணமலையை நேரில் பார்வையிட்ட இவர் 'கிழக்கேய மிலேச்சர் களின் உரோமாபுரி' (The Rome of the heathens of the East) என திருக்கோண மலையைக் குறித்துள்ளார். இதன் விரிவு இலங்கையில் கத்தோலிக்க மதம் வளர்ந்த, வரலாறு' (History of the Catholic Church in Ceylon Vol. 1 by father Ganapragasam) என்ற நூலில் இருந்து அறிய முடிகிறது. இதில் எம்மை அவர்கள் 'மிலேச்சர்' என்று அழைத்திருப்பினும் உலகின் பல பாகங்களில் இருந்து வந்த இந்துக்கள் திருக்கோணமலையில் எழுந்தரு ளியிருக்கும் கோணேசரை வழிபட்டனர் என்ற பேருண்மையை எடுத்துக் கூறிய தற்கு நன்றி காட்டுவோமாக. கத்தோலிக் கருக்கு உரோம் எப்படியோ அப்படியே இந்துக்களுக்கு திருகோணமலை என்று மொழிந்த மொழி மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

### வரலாற்று உணர்ச்சி உரிமைக்கு வித்து

இவ்விதம் விரிவாகத் திருமலையின் வரலாற்றை யாம் ஆராய்ந்ததற்குக் கார ணம் தமிழர்கள் தம் உரிமைக்காகப் போராடுகின்ற போது தமது வளமிக்க வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். வர லாற்று உணர்ச்சியுமற்று உரிமை வேட்கை மின்றி 'ஏனோதானோ ,என்று வாழ்வதி ஞற்தான் இன்று சிவநெறி தழுவி நிற்கும் செந்தமிழர் இந்தச் சீர் அழிந்த நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

### குடிசன மதிப்பு இடித்துரைக்கும் ஆபத்து

வந்தோரை வாழவைக்கும் பண்பு. இது வரவேற்கத் தக்க பண்பும் கூட ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு – ஓர் வரம்பு உண்டு என்றபடி வந்தவர்கள் வாழ்வினில் உயர்ந்தபின் எம் வாழ்வினை ஒழிக்கும் அளவிற்கு இடம் கொடுத்தல் மடமை. தன் கூடாரத்தில் தங்குவதற்கு ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த அரேபியனின் கதை எல்லை மீறிய. எம் பரந்த நோக்கிற்கு எச்சரிக்கையாக அமையட்டும். திருமலை குடி மக்கள் மதிப்பைக் காலக் கண் கொண்டு பார்க்கும் போது 1834ம் ஆண்டு 250 என மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள புத்தமதத் தவர் 1953ல் 14,082 ஆக பெருகியுள்ளனர். இன்று 1964ல் அவர்களின் எண்ணிக்கையை எண்ண எம் உள்ளத்தில் ஏக்கம் ஏற்படு கிறது. 1834ல் இந்துக்களின் எண்ணிக்கை 14,182. 1953ல் எம் எண்ணிக்கை 32,362 ஆகத்தான் பெருகியுள்ளது. விகிதாசாரப் படி எமது பெருக்கம் போதாது. ஆனால் 1964ல் எமது எண்ணிக்கையின் வளர்ச்சி தடைப்பட புத்த மதத்தினரின் எண் ணிக்கை மிகப்பெருகியுள்ளது. இந்நிலைக்கு காரணம் இரண்டு. ஒன்று எம் மரபுவழித் தாயகத்தைப் பறிக்கும் அரசாங்கத்தின் சதித்திட்டம். மற்றையது எமது தாய கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி அற்றநிலை எம்மிடை நிலவுவது.

இவ் விபரங்கள் அனைத்தையும் அறிந்த பின்பும் யாம் பொறுத் திருப்பின் யாம் அழிவது உறுதி. எம்முடைய அடிப்படை உரிமைக்காக யாம் போரிடும் போது எம்மை வகுப்புவாதிகள் – சமய வெறியர்கள் என்று சிலர் தூற்றக்கூடும். ஆனால் எம்மைப் பொறுத்தவரை எம்மை யாம் பாதுகாப்பது வகுப்புவாதம், சமய வெறியென்றால் அந்த வகுப்புவாதமும் சமய வெறியும் வாழட்டும் என்றும் வாழ்த்துவோமாக.

### புத்தமும் சைவமும் ஒன்று?

எம் இனத்தை, எம் மதத்தை அழிக் கும் சதித்திட்டங்களை உருவாக்கும் ஈழத் தின் பெரும்பான்மை இனம் கையாளும் மற்றைய சதித்திட்டம் புத்தமதமும் சைவ மதமும் ஒன்று என்று கூறி எம் மதச் சின்னங்களோடு தம் மதச் சின்னங்களை இணைக்க முயல்வதே. இந்த மாயவலையில்

யாம் சிக்க மறுக்கிறோம். யாம் தழுவி நிற்கும் சிவநெறி ஒரு மதம், ஆனால் புத்தம் ஒரு மதமல்ல. அது ஒரு மெய்விளக்கம் (தத்துவம்) – ஒரு கோட்பாடு என்பதை யாம் உணரவேண்டும்.

எமது மதம் எம் இன்னுயிர்க்கும் (ஆன்மா) இறைவனுக்கும் உள்ள இணைப்பை வலியுறுத்தும் போது, ஆண்டவன் இல்லையென்று கூறுகிறது புத்த கோட்பாடு. இந்த அடிப்படைத் தத்துவத்திலேயே யாம் மாறுபடும்போது எப்படிப் புத்தமும் சைவமும் ஒன்றாக இருக்கமுடியும்? எம் மணிவாசகப் பெருந்தகை 'புத்தம் முதலாய புல்அறிவுப் பல்சமயம்' என்று புத்த நெறியை வன்மையாக ஒறுத்ததின் உட்பொருள் என்ன? சைவமும் புத்தமும் அடிப்படை நோக்கில் மாறுபட்டவை என்பதை இடித்துரைக்கவில்லையா?

ஆதலால் புத்தமும் சைவமும் ஒன்று என்று பசப்பு வார்த்தைகூறி எம் உரிமைக்கு உலைவைக்க வருவோரையிட்டு யாம் மிக மிக விழிப்போடு இருக்க வேண்டும். யாம் மீண்டும் கூறுகிறோம் எம்மிடம் மதவெறி இல்லை. ஆனால் யாரும் மதம்பிடித்து எம் மதத்தை அழிக்க சூழ்ச்சி செய்யின் யாமும் சும்மாவிருக்கப் போவதில்லை.

### கயவாகுவின் கண் ஏன் கெட்டது?

அனுராதபுரமும் கலனியாவும் எப்படி புத்தமதத்தினருக்கு புனித நகரங்களாக விளங்குகின்றனவோ அது போல திருகோணமலை குறிப்பாக கோணேசர் கோட்டை எம்மதத்தவருக்குப் புனித நகராக விளங்குகிறது. அப்புனிதத்தன்மையை கெடுக்கும் முறையில் – எம் மதத்தில் மாசினை ஏற்றும் முறையில் கோணேசர் கோட்டைக்குள் புத்தமத பாடசாலையையும் நிறுவி எம்மோடு போர்தொடுக்க சிலர் முயல்வதாக செய்திகள் கிடைத்துள்ளன.

### தீயோருக்கு வரலாறு தரும் செய்தி

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஈற்றில் மனிதனைக் கடிக்கும் வெறிநாய் போல எம்மொழியை அழித்து எம் மினத்தை அழிக்க முயலும் அரசாங்கம் இன்று எம் மதத்திலும் கை வைக்கத் தொடங்கி விட்டது போலும். 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' என்று சிலப்பதிகாரம் செப்பும் வேந்தன் ஒரு காலத்தில் கோணேசர் கோயிலை இடித்து அதில் புத்த கோயில்கட்டும் நோக்கோடு திருமலை நோக்கி வந்தான். ஆண்டவனின் ஆத்திரத்திற்கு ஆளான இவனின் கண்கள் கெட்டன. தன் தவற்றை உணர்ந்து கண்ணீர் விட்டுக் கலங்கிய கயவாகு முக்கண்ணனாகிய கோணேசன் அருளை வேண்டி நின்றான். இரக்கத்தின் உருவான இறைவன் இவன் இறைஞ்சுதலை ஏற்று மீண்டும் இவன் கண்கள் தழைத்த இடம் இன்று கந்தளாய் என்று அழைக்கப்படுகிறது. இவன் தலை சிறந்த சிவபக்தனாக மாறினான். கயவாகு வேந்தனின் வாழ்வில் ஏற்பட்ட இந்நிகழ்ச்சி கோணேசர் கோயிலுக்குத் தீங்கு விளைவிக்க விழையும் தீயோருக்கு நல்ல பாடமாக அமையட்டும்.

### தமிழன் செய்யும் தவறு

புத்தசிங்கள ஆதிக்கம் எம் இனத்தின் எம் மதத்தின் அழிவிற்கு வழிகோலுவதால் யாம் இவ்வாதிக்கத்தை ஆணிவேரோடு அகற்றவேண்டும் என்பது முடிந்த முடிவெனினும் ஏறக்குறைய 20 இலட்சம் சிவநெறி தழுவி நிற்கும் செந்தமிழ் மக்கள் ஈழத்தில் வாழ்ந்தும் வரலாற்றுப் பெருமை மிக்க அருள் ஞான சம்பந்தரும் அருணகிரிநாதரும் ஏனைய சிவநெறிச் செம்மல்களும் உள்ளம் உருகி வழிபட்ட இக்கோயிலை எத்தனை பேர் சென்று வழிபடுகிறோம்? திருமலைக்குச் செல்ல எத்தனையோ போக்கு–வரவு வசதிகள் இருந்தும் வழிபடச் செல்லும் எம் மதத்தவரின் எண்ணிக்கை மிகக் குறைவே. கதிர்காமத்திற்கும், திருக்கேதீசுவரத்திற்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கும் பல்லாயிரக்கணக்கில் செல்லும் நாம் ஏன் கோணேசரின் அருள்பெற விழைகிறோமில்லை.

'தாயினும் நல்ல தலைவன் எம் வாமினும் மனத்தும் மருவி நின்று அகலா மாண்பினன்' என்று எம் தமிழ் ஞானசம்பந்தன் பத்திச் சுவை நனி சொட்ட கோணேசன் புகழ் பாடினரே; இப்பாடல் பாடியவர் உமையின் முலைப்பால் அருந்திய ஞானசம்பந்தர் என்பதை யாம் மறக்க முடியுமா? குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமலை அமர்ந்தவர் எம் குறைகள் தீர்ப்பது உறுதி.

கோணேசர் கோயிலின் குடமுழுக்கிற்கு (கும்பா அபிடேகத்திற்கு) முன் எம்மவர் போகாதிருந்திருப்பின் ஏதும் பொருள் இருக்கலாம். ஆனால் 3-4-63 ல் மிகச் சிறப்பாக கோணேசர் கோயில் குடமுழுக்கு நடந்த பின்பும் யாம் அங்கு சென்று வழிபடத் தவறின் யாம் செந்தமிழ் பேசி சிவநெறி தழுவி நிற்பதில் யாது பயனும் இல்லை. ஆதலால் இனிமேலாவது சைவப் பெருமக்கள் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் கால் நடையிலும் ஊர்தி வாகனங்களிலும் சென்று கோணேசனை வழிபடுமாறு வேண்டுகின்றோம்.

எமது உரிமைக்காகப் போராடு முன் எமக்குள்ள உரிமையை இழக்காது இருக்க முதலில் பழகிக்கொள்வோமாக. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற புறநானூற்றுப் புலவர் புகட்டிய உண்மை எமக்கு முற்றும் பொருந்தும். ○


வரக்கர்ஸ் ஸ்தாபனத்தினர் தமது மோட்டார் பழுது பார்ப்பு வேலைத்தலத்தில் டீசல் என்ஜின் உரிமையாளர்களின் வசதிக்காக நவீன, பரிபூரணமான எலெக்ரோனிக் பரிசோதனை மற்றும் சேவைச் சாதனைகளை நிறுவியதுடன், மாற்றுறுப்புகளின் பூரா வகையருக்களையும் கையிறுப்பிலும் வைத்திருக்கின்றனர்.

**கொள்ளுப்பிட்டி**

தொலைபேசி : 27811

**கண்டி**

தொலைபேசி : 215 & 511

**காலி**

தொலைபேசி : 280 & 281

**யாழ்ப்பாணம்**

தொலைபேசி : 7031

**WALKER SONS & CO. LTD.,**

தலைமை அலுவலகம் :

த. பெ. 166, கொழும்பு-1.

தொலைபேசி : 28441-9.

# பெருஞ்சாந்தி அல்லது கும்பாபிஷேகம்

தருமையாதீனப் புலவர் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள்

உயர்நிலைக்கும் உயிர்நிலையாய்–உயிர்களுக்கு என்றும் மாறாத – பேராதபேரின்பத்தை அளிப்பதாய் – இருப்பன ஆலயங்கள்.

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்” என்பர் சிவயோகியராகிய திருமூலர். ஆகவே ஆலயம் வேறு: பெருங்கோயில் வேறு. ஆலயம் தூலமானது:பெருங்கோயில் நுண்ணியது என்ற உண்மையை உவமையின் வாயிலாக உணர வைத்துள்ளார். ஆகவே பெருங் கோயிலாகிய நுண்ணிய ஆலயத்தின் (சூட்சுமாலயம்) உறைவிடமாய்ப் பருவுருவாய் இருப்பது ஆலயம் என்பது பெறப்படும்.

ஆலயம், கோபுரம், சுற்றுமலை திருமதில்கள் முதலான வரையறைகளையுடையதாய் இடவரம்புக்குட்பட்டது. நுண் கோயில் பரந்ததாய் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் காட்டுவதாய், இடவரையறை கால வரையறைகளைக் கடந்ததாய் விளங்குவது.

எடுத்துக்காட்டுக் கூறுவதானால் பூசலார் புராணத்தில் பல்லவன்கண்டது ஆலயம். பூசலார் கண்டது பெருங்கோயில். பெருங் கோயிலுக்கு நாம் அன்றாடம் செய்யும் செப, தவ, தியானசமாதிகளே நாட்பூசையும் பெரும் சாந்தி முறைகளுமாம். அதனால் சிவம் என்னும் உயிரின்டமாகப் பிரகாசித்து நிற்கும். ஒருநாள் இருநாள் நமது தமோகுண ரசோகுண ஆதிக்கத்தாலோ, கன்ம வினையின் ஆட்சியாலோ செப தவங்களை நழுவவிடுதலே அகப் பூசனையில் நிகழும் தாழ்வு அத்தாழ்வு தீருவதற்காகச் செய்யப்பெறும் மணியின் கண் ஒளிபோல - தீயின்கண்சூடும் ஒளியும் போல, பூவின்கண் மணம் போலச் சீவனிடத்துச் சிவம் குணவடிவில் விளங்கி நிற்பதாகச் செய்யப்பெறும் பிள்ளையார் சதுர்த்தி - மாத சிவராத்திரி - மஹா சிவராத்திரி – கார்த்திகைச் சோமவாரம் முதலான நோன்பு நாட்களே விழாக்கள். இவைகள் அனைத்தும் விசேட தியானங்கள். இவை நித்திய தியானத்தில் நிகழ்ந்த குறைகளைப் போக்கவும் ஆன்மாவினிடம் சிவம் பிரகாசிக்கவும் செய்யப்பெறும் பெருஞ்சாந்திகள். இவைபோலப் “புறம் பேயும் புண்ணியனைப் பூசிக்க” என்ற ஆணையின் வண்ணம் புறப்பூசை செய்வதற்காக அமைந்த இடங்கள் ஆலயங்கள். அங்கேயுள்ள மூர்த்திகளில் சிவம் பிரகாசிக்கிறது. அங்ஙனம் பிரகாசிக்கச் செய்யும் கிரியைகள், பூசைகள், அவற்றில் தெரிந்தோ தெரியாமலோ விளையும் மந்திரக் குறைவு, கிரியைக் குறைவு, கரணக்குறைவு, திரவியக்குறைவு சிரத்தைக்குறைவு இவைகளை நீக்கவும் பரிபூரணமாகச் சிவம் பிரகாசிக்கவும் செய்யப்பெறுவன. விழாக்கள் இவற்றிலும் விளையும் குறைகளைப் போக்கிக் கொள்ளச் செய்யப்பெறுவன பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகங்கள். ஆகவே கும்பாபிஷேகங்கள் எவ்வளவு இன்றியமையாதன என்று எண்ணுதல் வேண்டும்.

**சாதனங்கள்:** கும்பாபிஷேகத்திற்கு மண்டபம் கலசங்கள்; குண்டலங்கள், நெய் சமித்து, தானியம் அன்னம் நைவேத்தியங்கள் முதலான புறச்சாதனங்கள் மிகத் தேவையானவை. இவைகளையும் பயன் தரச் செய்வனவாம், சிவத்தன்மை இவற்றினிடம் விளங்கச் செய்வனவாய் உள்ள சாதனங்கள் நான்கு. அவை ஆசாரியன், கும்பம்–பிம்பம்-அக்கினி என்பவை. சோதியாய் விளங்கும் சிவத்தைக் கும்பத்திலும், அதிலிருந்து பிம்பத்திலும் நிலைபெறச் செய்பவன் ஆசாரியன்.

ஆகாயம், பராகாயம், பூதாகாயம், கடாகாயம் என மூவகைப்படும். பராகாயம் அறிவே வடிவாய் எங்குமாய் - என்றுமாய் நீக்கமற நிற்பது. பூதாகாயம் மண் முதலான ஏனைய பூதங்கள் விரிந்து நிலைபெற இடந்தருவதாய் எல்லாவற்றையும் தன்னகத்தடக்கி நிற்பது. பூதாகாயத்தின் ஏகதேசமாய்க் காணப்பெறுவது. கடாகாயம் குடத்தின் அளவினதாய் மனிதனுடைய தேவைக்குப் பயன்படும் தரத்ததாய் விளங்குவது.

பராகாயம் அதன் தன்மை குறித்து ஞானகாயம் - சிதாகாயம் சிற்சபை என்றெல்லாம் வழங்கப்பெறும். அந்த ஞானகாய வடிவானது சிவம். அது இந்த பூதாகாயத்திலும் நீக்கமறச் செறிந்துள்ளது. அதனை இன்னும் சுருக்கி நமக்குப் பயன் தரச் செய்யக் குண்டகாயத்தில் ஒளிப்பிழம்பாக ஒளிரச்செய்வதே அக்கினிக் காரியம்.

ஒளி தீயைப்பற்றியது. தீ-தேயு என்ற பூதவடிவினது; உருவுடையது. அருவான ஆகாயத்திலுள்ள பரசிவத்தை ஒளியான உருவாய் அமைய வேண்டிக் கொள்வதே அக்கினிக் காரியம்.

அதனை மேலும் பருப்பொருளாக்கித் தருவது கடஸ்தாபனம். ஒளியாய் கட்புலனாய கடவுளை நீராய்க் கண்ணுக்கும் ஊறுணர்ச்சிக்கும் உருக்கொள்ளச் செய்து அதில் நீரின் தன்மையாகிய தண்மையாய்ப் பிறவிவினைகளின் வெப்பத்தைப் போக்கும் இயல்பினதாய மந்திர ஒலிகளாய்க் கலந்து நிற்கச் செய்வதே கடஸ்தாபன பழிபாடு.

இங்ஙனம் கடத்தில் விளங்கும் கடவுளை அருவுருவத் திருமேனியாய சிவலிங்கத்திடமோ உருவத்திருமேனியாகிய மகேசுர வடிவங்களிலோ விளங்கச் செய்வதே கும்பாபிஷேகம்.

விமானக் கோபுரங்களுக்குச் செய்யும் கும்பாபிஷேகம் மக்கள் ஆலயங்களையும் அரனெனத் தொழுவதற்காகச் செய்யப் பெறுவது.

பெருஞ்சாந்திக் காலங்களில் ஆறுகால வழிபாடும் நிறைவேறும்போது இடையில் செய்யப்பெறுவது நாடி சந்தானம்என்னும் கிரியை. அது குண்ட-கும்ப-பிம்ப-கோபுர விமானங்களோடு இணைக்கத் தருப்பைக் கயிற்றையிட்டு மின்னூற்றல் கம்பியின் வழியாகச் சென்று பயன்படுவது போல, ஆசாரியனுடைய - அடியார்களுடைய – அன்பர்களுடைய தியான தரிசன விசேடத்தால் வெளிப்படும் சிவத்துவ சத்தி குண்டத்தினின்றும் கும்பத்திற்கும் அதனின்று பிம்பத்திற்கும் அதனின்று கோபுர விமானங்களுக்கும் வியாபித்து எங்கும் என்றும் விளங்கச் செய்யும் செயல்.

இங்ஙனம் செய்ய மிகமிகத் தேவையானவன் ஆசாரியன் என்பது பெறப்பட்டதன்றோ! அவன் தூய பிறப்பினனாய் – தூய ஒழுக்கத்தினனாய் - சதா சர்வ காலமும் தன்னைப்பற்றியோ – குடும்ப சேமலாபங்களைப் பற்றியோ - வருமான செலவுகளைப் பற்றியோ சிறிதும் சிந்தியாதவனாய் - சதா சிவசிந்தனையோடு விளங்குபவனாக இருத்தல் வேண்டும் இவன் அன்றாடம் கட்டும் உள்ளக் கோயில் பெருங்கோயில். அவன் செய்யும் செப, தவ, விரத தியானங்களால் சிவத்துவ வியாபகம் பெற்ற உள்ளம் பெருங்கோயில். அதில் விளங்கும் சிவத்தை அனைவருக்கும் பயன்தரச் செய்வதே நித்ய நைமித்திக - சம்புரோட்சண - மகா கும்பாபிஷேகாதி கிரியைகள். ஆகவே இதனால் மகா கும்பாபிஷேகமாகிய பெருஞ் சாந்தி விழாவின் பெருமையும் இன்றியமையாமையும் பெறப்படும்.

காரை நகர்ப் பெருமக்கள் பெருஞ்சாந்தி விழாவைக் கண்டவர்கள் சிவம் தன் ஆயிரம் கலைகளோடும் விளங்குவதைத் தரிசிக்கும் பேறு பெற்றவர்கள். குறைவும் நிறைவுமில்லாமல் என்றும் அஞ்சாத பூரணமாய் இருக்கும் இறைவனைக் கண்டு என்றும் தம்முள்ளத்துச் சிவம் பிரகாசிக்கச் செய்ய நாள் வழிபாடுகளையும் சிறப்பு வழிபாடுகளையும் இயற்றி இன்புறுவார்களாக.

அச்சிறப்பு வழிபாடுகளில் ஒருவகை இம்மண்டலாபிஷேக வழிபாடு இங்ஙனமே இனிப் பெருஞ்சாந்தி நடந்த நட்சத்திரத்தில்மகாபிஷேக வருஷாபிஷேக வழிபாடுகளையும் நடத்திச், சிவபுராணப் பாராயணத்துடன் செழித்து வாழ்வார்களாக.

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

★

உங்கள் குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசிய
உணவுவகைகளும், ஆடவர்களுக்கும், மங்கையர்களுக்கும் அழகூட்டும்
வாசனைத்திரவியங்களும், மருந்துவகைகளும்
எங்கள் சொந்தச் தயாரிப்பில் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச்

**சுறுட்டு, நல்லெண்ணெய், கோழித்தீன்**

வகைகளும் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ள
தேடிச் செல்லுங்கள்

# இரத்தின ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: ச. மு. இராசரத்தினம்

கொவ்வலை, நுகேகொடை.

# RATNA STORES

Prop: S. M. RAJARATNAM

**KOHUWALA, NUGEGODA.**

உ

காரைநகர் திக்கரை முருகன்
எல்லோர்க்கும் இன்னருள் புரிவான்

# KUMAR STORES

*( Prop: K. KUMARASAMY )*

Dealers in : Best Jaffna Cigars, Jaffna Nelli Crush, Jaffna Gingelly Oil, Radio Battery, Maliban Biscuits and other Oilman Goods.

குமார் ஸ்டோர்ஸ் மகரகம

**109, Dehiwella Road,**
**MAHARAGAMA.**

# சிற்றி ரிறேட் கோப்பரேசன்

# CITY TRADE CORPORATION

**Mill Road,**
**VAVUNIYA**

*Dealers for :* **Sri Lanka State Trading ( Tractor ) Corporation**
**Sri Lanka State Trading ( General ) Corporation**
**Walker Sons & Co. Ltd.**
**Brown & Co. Ltd.**

# சொற் காத்த பொற் பாவை

— வித்துவான் திருமதி ப. நீலா B. A., - தருமபுரம் —

சொல்லிற்குக் கடிய வேகமும் சுடும் ஆற்றலும் உண்டென்பதைக் கம்பர் காட்ட நாம் காண்கின்றோம்.

சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் ஒன்றைச் [செம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக் [குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா தப்புறம் கழன்று [கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் [போயிற்றன்றே.

என்று இராமன் தாடகையைக் கொல்லத் தேர்ந்தெடுதத அம்பு சொல் போலக்கடிய வேகத்துடன் சென்றது என்றார்.

சேக்கிழார் ஞானசம்பந்தர் வாக்கில் வைத்து - சொல்லிற்கு வேகம் உண்டென் பதைக் கம்பருக்கு முன்பே காட்டினார்.

திருஞான சம்பந்தப் பெருமான் மதுரையில் தங்கியிருந்த திருமடத்திற்குச் சமணர்கள் தம் மந்திரத்தால் தீங்கு செய்ய முயன்று தோற்றுப்போய்ப் பொதி தழலைக் கையிலெடுத்துப்போய் வைத்தனர்.

அந்தண் மாதவர் திருமடப் புறத் தயல் இருள்போல்வந்து தந்தொழில் புரிந்த வஞ்சனை மனத்தோர் நீங்கியபின்பு அடியார்கள் ஞானசம்பந்தருக்குச் செய்தியைத் தெரிவித்தார்கள். ஞானப்பிள்ளையார் இத்தீமை பாண்டியனாலேயே விளைந்தது; அதனால் அவனுக்கே இது ஆகவேண்டும் என்று கருதினார். கருதியும் கனிந் தொழுகு கருணையினால்

பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்
அரசன்பால் அபராதம் உறுதலாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடைய ஆதலாலும்
தீப்பிணியைப் பையவே செல்கென்றார்.

தீப்பிணியைச் செல்க என்று அவர் சொன்னவுடன் அது பாண்டியனைப் பற்றிவிடும் சொல்லிற்கு அத்துணை ஆற்றல் உண்டு. பாண்டிமாதேவியின் மங்கல நாணிற்கு இச்சொல்லால் தீங்குவிளைந்துவிடக் கூடாதே என்ற கருணையால் அச்சொல்லின் வேகத்தைக் குறைத்தும் 'பையவே சென்று பாண்டியற்கு ஆக' — என்றமை எண்ணுந் தோறும் இன்பந்தரும் சொல்லாட்சி யன்றோ!

சேக்கிழாருக்கும் முன்பாக இளங்கோவடிகள் இச்சொல்லின் வேகத்தை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். கவுந்தியுடன் கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் செல்லும் நேரம், தீதுதீர் நியமத் தென்கரை எய்திப் போது சூழ் கிடக்கையோர் பூம்பொழிலில் சற்றே இளைப்பாறினர். அந்நேரம் அங்குவந்த வம்பப்பரத்தையொருத்தியும் வறுமொழியாளனொருவனும் காமனும் தேவியும் போல விளங்கும் கோவலன் கண்ணகியை யாரெனக் கேட்டு அறிவோம் என்று கவுந்தியைக் கேட்டனர். கவுந்தி சொன்னாள்.

'என் மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்கம் நீங்குமின் பரிபுலம் பினரென'—

உடனே அவர்கள்

'உடன்வயிற் றோர்கள் ஒருவிகுடன் வாழ்க்கைக்
கடவதும் உண்டோ கற்றறிந் தீரென்'

நாகாவாமல் கேட்டனர். குணமென்னும் குன்றேறிநின்ற கவுந்திபால் தோன்றிய கணநேரச் சினம் மிகப் பெரிய சாபத்தை அவர்களுக்குத் தந்தது. இவர்கள் என் பூங்கோதையை எள்ளி நகையாடினர்– ஆகவே முள்ளுடைக் காட்டில் முதுநரியா கட்டும் என்று சாபமிட்டாள். அடுத்த கணத்தில் அவர்களை அங்கே காணவில்லை –குறுநரியின் நெடுங்குரல் கூவிளிதான் கேட்டது. சொல்–எத்துணை வேகமாகப் போய்ப் பயன் தருகிறது என்பதை உணர்ந்ததோடு அதற்குச் சுடும் ஆற்றலும் உண்டு என்பதை இப்போது எண்ணிப் பார்க்கிறோம்.

நாவினால் சுட்ட வடு என்றும் – இது தீப்புண்ணைக் காட்டிலும் கொடியது என்றும் வள்ளுவம் கூறும். கம்பர் இதனையும் நினைவுபடுத்துகிறார். இதை அசோக வனத்தில் கூறுகிறாள் – இந்த இலங்கையை மட்டுமல்ல நான் சினந்து ஒரு சொல் சொன்னால் இவ்வுலகமே அழியும். ஆனால் இராகவனின் வில்லாற்றலை – என் சொல்லாற்றலால் நான் தாழ்வுபடுத்தக் கூடாது என்பதால் நான் சொல்லைப் பயன்படுத்தவில்லை என்கிறாள்.

அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்

இப்படி வேகமும் சுடும் தன்மையும் கொண்ட சொல்லைச் சரியானபடி ஆளத் தெரிந்து கொள்ள வேண்டும். இதனையும் வள்ளுவரே கூறுவார்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து

வெல்ல முடியாத ஒரு சொல்லைக் கூறித் தற்கொண்டானின் புகழைப் பேணியவர் ஒரு பெண்ணரசியார். தகைசான்ற சொற்காத்து வாழ்தலும் பெண்ணின் நல்லிலக்கணங்களில் ஒன்றல்லவா? இருவர்க்கும் உளதாகிய நன்மையமைந்த புகழை ஒரு சொல் சொல்லிக் காத்த பெண் திலகம் தான் திருநீலகண்டக் குயவனாரின் இல்லத்தரசி. அவளே சொற்காத்த பொற்பாவையாகிறாள்.

தில்லையில் வேட்கோவர் குலத்தில் தோன்றி, ஆதியும் முடிவுமில்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவர் திருநீலகண்டர். அவரைப் பற்றிப் புராணம் பாட வந்த சேக்கிழார்

நிகழ்திரு நீலகண்டக் குயவனார் நீடுவாய்மை
திகழும்அன் புடைய தொண்டர் செய்தவம்
கூறலுற்றாம்

என்று அப்பெரியவர் இல்லறத்தில் நின்றும் தவம் செய்து உய்தி பெற்றவர் என்று காட்டினார்.

திருநீலகண்டர் இல்லறமேற்றும் தவநெறி நிற்கக் காரணம் அவர் மனைவி சொன்ன ஒரு சொல்லே. இளமை மீதூர இன்பத்துறையில் எளியவர் ஆனார் திருநீலகண்டர். ஒருநாள் அவர் பரத்தையொருத்தியை அணைந்து வந்தமையைக் கண்டு மனைவியார் ஊடல் கொண்டார். ஊடலைத் தணிக்க, வேண்டுவ இரந்து கூறினார் நாயனார். அப்படியும் புலவி தணியாமை கண்டு அருகு சென்று அன்பு மனைவியை அணைய முயன்றார்.

பெண்ணின் நல்லவள் 'தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்' – என்று கூறிப் பெயர்ந்தாள்.

மூண்டஅப் புலவிதீர்க்க அன்பனார் முன்பு சென்று
மூண்டயங் கிளமென் சாயல் பொற்கொடி அனையார்
தம்மை
வேண்டுவ இரந்துகூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டுவி ராயில் எம்மைத் திருநீல கண்டம் என்றார்

"ஆணைகேட்ட பெரியவர்" என்றார் சேக்கிழார். செயற்கரிய செய்கையைச் செய்யப் போகிறார் அல்லவா? எம்மை என்று நீ கூறியதால் மற்றை மாதரார் தம்மையும் என்றன் மனத்தினும் தீண்டேன் என்று

மனைவியைப் பார்த்துக் கூறி விட்டார். இற்புறம்பு ஒழியாதே யிருப்பினும், அன்புறு புணர்ச்சி யில்லாமையோடு அதனை அயல் அறியாமலே இருவரும் வாழ்ந்து வந்தனர்.

ஆண்டுகள் உருண்டோட, வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயாமல் இருந்தார். 'வடிவுறு மூப்பு' என்று மூப்பும் கூட அவர்கள்பால் அழகாய்ப் பொருந்தியது என்றார் சேக்கிழார். நெறியோடு வாழும் வாழ்க்கையாளர்க்கே இது இங்ஙனமாகும். மூப்பு அழகாய் வந்தது என்று இங்கே சொன்ன ஆசிரியர் பிறிதோரிடத்தில் அழகே மூத்து வந்தது என்று கூறுவார்.

தம் அடிமையாகச் சுந்தரரை வழக்கிட்டு ஆட்கொள்ள வரும் பெருமானது கோலம் – மூத்த திருக்கோலம். அங்கே பேரழகே இப்படி முதிர்வு பெற்றது என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

பண்டிசரி கோவண உடைப் பழமை கூரக்
கொண்டதொர் சழங்குஉடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகிலுடன் குசை முடிந்துமிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள

வந்த வடிவத்தைக் கூடியிருந்தோர்

மொய்த்தவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ

என்று அதிசயித்துப் பாரார்த்தனராம். இப்படிப்பட்ட வடிவுறு மூப்பு வந்த காலத்தில் தான் – தொண்டரை விளக்கம் காண்பதற்காக இறைவன் வந்தான்.

வந்த சிவனடியார் திருநீலகண்டர்பால் ஓடு தந்ததும் அவர் அதனைப் பத்திரம் செய்ததும் நாமெல்லாம் அறிந்த கதை. சால நாள் கழிந்த பின்பு ஓட்டைக் குறியிடத்தகலப் போக்கியபின் – அடியார் மீண்டும் வந்தார். எல்லாம் தான் வைத்து வாங்க வல்ல பெருமான் ஓட்டைத் திரும்பக் கேட்டார்.

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே — என்று

அநுபூதியில் "தாமே பெற வேலவர் கல்வியும் அறிவும் தந்தார்' என்று அருணகிரியாரும் நவில்கிறார். அப்படி எல்லாம் வைத்து வாங்குவதில் தேர்ந்த ஈசனிடம் ஓடுமறைந்த மாயம் சொல்லித் திகைக்கிறார் திருநீலகண்டர்.

களத்து நஞ்சொளித்த பெருமான் தானொளித்த ஓட்டினால் இவரது உண்மை வெளிவர அருள்பாலிக்கிறான். நான்மறை வல்ல தில்லைவாழ் அந்தணர் சபைமுன் வழக்கிடுகிறான். திருப்புலீச்சுரக் குளத்தில் மூழ்கிச் சபதம் செய்கிறார் குயவனார்.

உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வௌவிப்பாவகம் பலவும் செய்து பழிக்கு நாணுயாகிறாய். அந்த மண்ணோட்டிற்கு இணையாகப் பொன்னோடு தந்தாலும் வேண்டேன் ஏன் தெரியுமா? அந்த ஓட்டிற்கு இணையாக எதுவும் ஆகாது. தன்னை ஒப்பரியது. தலத்துத் தன்னுழைத் துன்னிய யாவையும் தூய்மை செய்வது. பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது – அதனை நீ வௌவினாய். அதற்கிணையானவன் நீயே. உன்னை வளைத்து நான் கொண்டேயன்றிப் போவதும் செய்யேன் — என்று வழக்கிடுகிறார் எம்பெருமான்.

புதல்வன் மேல் ஆணையிட்டு உன் தூய்மையைப் போற்றிக்கொள் என்று ஈசன் சொல்ல-எனது கள்ளாமையைப் பறைசாற்றப் பொய்யில் சீர்ப் புதல்வன் இல்லை என்று தலைகுனிந்தார் தொண்டர்; காதல் மனைவியின் கையைப்பற்றி இக்குளத்தினில் மூழ்குக-என்ற உரை கேட்டதும் 'எங்களில் ஓர் சபதத்தால் உடன் மூழ்க இசைவில்லை' – தம்மாற்றுமை கூறிய பெரியவர், ஒரு மூங்கில் தண்டைப்பிடித்து முழுகத் தொடங்கினார். தண்டின் ஒரு

முனையை மனைவியும் மற்றொரு முனையை கணவரும் பிடித்து முழுகும் போது - சிவனடியார் கூக்குரலிட்டு மாதைத் தீண்டிக் கொண்டுடன் முழுகாவிடில் நீர் ஒடுதிருடியவரே-என்று ஆர்ப்பரித்தார். திருநீலகண்டர் பண்டுதாம் செய்த செய்கையைச் சொல்லி மனைவியைத் தீண்ட முடியாத காரணத்தைப் பாரோர் கேட்க வெளிப்படுத்தியபின் நீரில் மூழ்கினர்.

பெரிவர், சேணிடையும் தீங்கடையாத் திருத்தொண்டர் அருந்தவத்தொண்டர், உண்மைகாப்பார், பழுதிலாதார் என்று இப்படியே திருநீலகண்டரைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். அப்படிப் பழுது வாராமல் தவம்செய்த தலைவர் மூழ்கி எழுந்தபோது இளமைத் திருக்கோலங் கொண்டு பொலிந்தார். அவனி அதிசயித்தது.

புனிதவதியார் இளமை நீங்கி மூப்புக் கோலம் பெற்றபோது உலகம் அதிசயித்துப் பார்த்தது - என்பதை நாம் உணர்வோம்.

ஈங்கிவன் குறித்த கொள்கை இது இனி இவனுக் [காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் [குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு [அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர் தாள் பரவி நின்றார்.

அப்போது இளமை நீங்கி முதுமை வந்தது.

இங்கே திருநீலகண்டரும் மனைவியும் முதுமை நீங்கி இளமைக்கோலம் பெற்று நிற்க அதிசயித்து நோக்கினர்கள் அவனி மாக்கள். இறைவன் 'வென்ற ஐம்புலனால் மிக்கீர்' என்றழைத்து- என்றும் நம்பால் விருப்புடன் இருக்க — என்றருள் செய்து மறைந்தான்.

திறலுடைச் செய்கை செய்து அதனால் சிவலோகம் எய்திய தம்பதியர் பேரின்பத்தை எய்தினர் என்று சேக்கிழார், புராணத்தைப் பாடி முடித்தார். தற்கொண்டானைப் பேணிய பெருமாட்டி- இருவர்மாட்டும் அமைந்த நன்மையமைந்த சொல்லை - தம் சொல்லால் காத்தவகை எண்ணி அவரைநெஞ்சுள் நிறுத்தி நாமும் போற்றுகிறோம்.

---

யாழ்ப்பாணத்தில்

சிறந்த புகைப்படங்களுக்கு

# எ. வி. எம்ஸ்.

ஸ்ருடியோவை நாடுங்கள்.

( உரிமையாளர் : எ. வி. மகாலிங்கம் )

---

# ஆகமம் வியந்து கூறும் குமர வழிபாடு

என். எஸ். பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள்

வேதம், ஆகமம் இரண்டும் எல்லா நூல்களுக்கும் முதனூலாகி அநாதி மல முத்தனாகிய இறைவனால் அருளப்பட்ட நூலாம். நீதி நெறியில் நிற்போர்க்கும் ஞானநெறியில் நிற்போருமாகிய இருவரும் உய்தற் பொருட்டு ஆகமத்தையும் அருளிச் செய்தனர். அன்றியும் வேதத்தில் சிவ வழிபாடு செய்யும் விதம், அவ்விடத்திற் கூறுமையால் வேதசாரமாக ஆகமத்தைக் கூறினர். வேதம் சூத்திரமாகவும் ஆகமம் அதன் விரித்துரையாகிய பாடியமும் போலாம். இவ்வாகமங்கள் இருபத்தெட்டாகும். ஞானம், யோகம் கிரியை, சரியை என்னும் நான்கு பகுதிகளை உடையது. அவற்றில் ஸ்ளிதம் என்னும் ஓர் ஆகமும் உண்டு. அவற்றிலிருந்து சேர்க்கப்பட்டது குமாரதந்திரம். இக் குமாரதந்திரத்தில் குமரனை பிரதிஷ்யை செய்யும் முறைகளும், தியனஸ்லோகங்களும் சுப்பிரமணியரின் பேதங்களும் பூஜா காலங்களும் வழிபடும் முறைகளும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. சுப்பிரமணியருடைய மூர்த்தி பேதங்கள் பதினாறு என

ஞானசக்திதரஸ் கந்தோ
தேவசேனாபதிஸ்ததா
சுப்பிரமண்யோ கஜாரூட
சரகானன சம்பவ:
கார்த்திகேயக் குமாரச்ச
ஷண்முகஸ் தாரகாந்தக:
ஸேநாநீ பிரம்ம சாஸ்ச்ச
வல்லீ கல்யாண சுந்தரம்
பாலச்ச கிரனஞ்ச பேதாச்ச
சிகி வாஹன ஏவச.

இவ்வாறு கூறுகிறது.

இம் மூர்த்திகளை பிரதிஷ்டை செய்யும் நான்குவித பிரதிஷ்டை முறைகளையும் அப்பிரதிஷ்டையில் செய்யப்படும் கிரியா பேதங்களையும் நன்கு விளக்கி இருக்கிறது.

சுப்பிரமண்யப் பெருமானுக்கு ஆறு காலங்கள் பூஜை செய்வது உத்தமம். நான்கு காலப் பூஜை செய்வது மத்திமம். 2 காலப் பூஜை செய்வது கடைசிப் பட்ஷம் என்றும் விளம்புகிறது. சூரியோதயத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகை உஷத் காலம். சூரியோதயத்திற்குப் பின் ஏழே முக்கால் நாழிகை பிராதக் காலம். பகல் பதினைந்தாவது நாழிகை மாத்யான்னிக காலம், சூரிய அஸ்தமனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகை பிரதோஷ காலமென்றும், சூரிய அஸ்தமனத்திற்கு பின் மூன்றேமுக்கால் நாழிகை சாயங்காலமென்றும் அதற்குப் பின் மூன்றே முக்கால் நாளிகை அர்த்தயாமமும் ஆகும். இக் காலங்களில் முறை உஷத் காலம், காலசந்தி, மாத்தியான்னிகம், பிரதோஷகாலம், சாயங்காலம், அர்த்தயாமம் ஆகிய ஆறு காலப் பூஜைகளைச் செய்வது ஆகம சம்மதமாகும். குமாரதந்திரோகத் மார்கே நைவகுகம் யஜேத்'' என்னும் குமாரதந்திர வாக்கியப்படி உற்சவங்கள் குமாரதந்திர முறைப்படியே செய்யவேண்டும். மாதந்தோறும் கார்த்திகையிலும், ஷஷ்டியிலும் ஏகதின உற்சவம் செய்யலாம். பிரம்மோற்சவம் ஆவணி, தை, மாசி, பங்குனி, வைகாசி முதலிய மாதங்களில் நட்சத்திரத்தை அந்தமாக வைத்து பத்து நாட்கள் அல்லது பன்னிரண்டுநாட்கள் உற்சவம் செய்வது பிரம்மோற்சவமாகும். இது சிறப்புத் தருவது ஐப்பசி அமாவாசைக்கு மறுநாள் பிரதமை தொடங்கி ஷஷ்டி முடிய ஸ்கந்தஷஷ்டி உற்சவம் செய்யலாம். எனவே ஆகம விதித்தவாறு வழிபடுவது இம்மை மறுமை நலன்களை தருவது திண்ணமாகும்.



முருகா வருக! தமிழாய்ந்த முதல்வா வருக! வேங்கடவன்
மருகா வருக! அருளொழுகும் வதனவருக! எனையாளக்
குருவாய் வருக! எமது குலக்கொழுந்தே வருக! மயிலேறி
விரைவாய் வருக! இது தருணம் வேலாயுதனே வருக!

திக்கரை முருகன்
கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகின்றோம்.

★

# Maygala Stores & Industries

**119, Wolfendhal Street,**
**COLOMBO-13.**

# திக்கரை முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து

## 45 நாட்கள் அபிஷேகம் செய்த உபயகாரர்களின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | மகா கும்பாபிஷேகம் | பொதுச் செலவு |
| 2. | திரு. வி. எம். பேரம்பலம் | கொழும்பு |
| 3. | திரு. சி. சிவசம்பு | கிளுவனை |
| 4 | திரு. க. ஆறுமுகம் | விளானை |
| 5. | திரு. கா. அம்பிகைபாகன் | பொன்னுவளை |
| 6. | திரு. க. தர்மபாலனும், பங்காளரும் | பொன்னுவளை |
| 7. | திரு. சு. திருநாவுக்கரசு | அந்திரானை |
| 8. | திரு. சி. சபாரத்தினம் | விளானை |
| 9. | திரு. அ. சு. ஆறுமுகம் | பிள்ளையார் கோவிலடி |
| 10. | திரு. க. தம்பையா | திக்கரை |
| 11. | திரு. கே. கே. விசுவலிங்கம் | பாலாவோடை |
| 12. | திரு. சி. மாணிக்கவாசகர் | பொன்னுவளை |
| 13. | திருமதி. வ. தில்லையம்பலம் | மலேசியா |
| 14. | திரு. மா. பாலசுப்பிரமணியம் | பாலாவோடை |
| 15. | திரு. பொ. சுப்பிரமயணிம் | திக்கரை |
| 16. | திரு. கே. ஆர். கந்தசாமி | வவனியா |
| 17. | திரு.சு. வேலுப்பிள்ளை | கணவோடை |
| 18. | திரு. கே. வி. பி. வேலுப்பிள்ளை | பொன்னுவளை |
| 19. | திரு. ஆர். சோமசுந்தரம் | பிள்ளையார் கோவிலடி |
| 20. | திரு. கு. ச. கணபதிப்பிள்ளை | விளானை |
| 21. | திரு. சி. முருகேசு | பொன்னுவளை |
| 22. | திரு. வே. சண்முகம் | பொன்னுவளை |
| 23. | திரு. க. தர்மலிங்கம் | சத்திரந்தை |
| 24. | திரு. எஸ். வி. முருகேசு | யாழ்ப்பாணம் (மண்டலாபிஷேகம்) |
| 25—35 வரை | திருவிழா உபயகாரர்களின் உபயம் விபரங்கள் வேறு இடத்தில் | |
| 36. | திரு. ஏ. கனகரத்தினம் | கிளுவனை |
| 37. | திரு. எம். ஆறுமுகம் | தம்புளை |
| 38. | திரு. த. கா. நடராசா | வளுப்போடை |
| 39. | திரு. கே. கே. கந்தையாபிள்ளை | யாழ்ப்பாணம் |
| 40. | திரு. கே. நடராசா | தன்னை |
| 41. | திரு. க. நாகலிங்கம் | கிளிநொச்சி |
| 42. | திரு. கே. குமாரவேலு | வெள்ளவத்தை |
| 43. | திரு. வி. இராமநாதன் | தன்னை |
| 44. | திரு. எஸ். எம். இரத்தினம் | கோவளை |
| 45. | திரு. எஸ். எம். எஸ். தெய்வேந்திரன் | கிளிநொச்சி |

### திருவிழா உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. க. திருநாவுக்கரசு | விளானை |
| 2. | திரு. பொ. சதாசிவம் | நந்தாவில் |
| 3. | திரு. ச. மு. பேரம்பலம் | பொன்னுவளை |
| 4. | திரு. க. சேனுதிராசா | பொன்னுவளை |
| 5. | திரு. சி. ச. கனகரத்தினம் | விளானை |
| 6. | திரு. மு. பாலசிங்கம் | குண்டங்கரை |
| 7. | திரு. ஆ. சுப்பிரமணியம் | விளானை |
| 8. | திரு. ஆ. ச. சங்கரப்பிள்ளை | பாலாவோடை |
| 9. | திரு. ப. சபாரத்தினம் | விளானை |
| 10. | திரு. அ. முருகேசு | கிளுவனை |
| 11. | களபூமி இளைஞர்கள் | |

# நித்திய பூசை உபயகாரர்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | — | திரு. பரமு கந்தையா | விளானை |
| | | திரு. இராமு சதாசிவம் | ,, |
| வைகாசி | — | திரு. எஸ். மார்க்கண்டு | விளானை |
| ஆனி | — | திரு. சாமியார் ஆறுமுகம் | பொன்னுவளை |
| | | திரு. கு. ச. கணபதிப்பிள்ளை | விளானை |
| ஆடி | — | திரு. ஆ. வீரகத்தி (ஆசிரியர்) | பொன்னுவளை |
| | | திரு. சி. முருகேசு | அந்திரானை |
| ஆவணி | — | திரு. கே. வி. பி. வேலுப்பிள்ளை | பொன்னுவளை |
| | | திரு. த. கா. முருகேசு | வளுப் போடை |
| புரட்டாதி | — | திரு. ச. ஆ வேலுப்பிள்ளை | பாலாவோடை |
| ஐப்பசி | — | திரு. மாதவி தில்லையம்பலம் | இடைப்பிட்டி |
| கார்த்திகை | — | திரு. து. தில்லையம்பலம் | இடைப்பிட்டி |
| மார்கழி | — | திரு. மாதவி தில்லையம்பலம் | இடைப்பிட்டி |
| தை | — | திரு. பொ. சுப்பிரமணியம் | திக்கரை |
| | | திரு. வே. செல்வரத்தினம் | பாலாவோடை |
| மாசி | — | திரு. தா. துரைராஜா | கொட்டைப்புலம் |
| | | திரு. க. தம்பையா (ஆசிரியர்) | திக்கரை |
| பங்குனி | — | திரு. ச. மு. சுந்தரம் | கரப்பிட்டியந்தனை |
| | | திரு. க. நடராஜா | பொன்னுவளை |

# இக்கோவிலில் நடக்கும் விசேட தினங்கள்

1. புரட்டாதி — சனிக்கிழமை விரதங்கள்
2. ஐப்பசி — கந்த சஷ்டி விரதமும் சூரசங்கார விழாவும்
   உபயம்:- க. த. வேலுப்பிள்ளை — பாலாவோடை
   வெள்ளிக்கிழமை விரதங்கள்
3. கார்த்திகை — திருக்கார்த்திகையில் திருச்செந்தூர் புராணம் படித்தல்
   உபயம்:- க. மு. சுப்பிரமணியம் — விளானை
   திருக்கார்த்திகைத் தீபம்
4. மார்கழி — திருவெம்பாவை விரதங்கள்.

# Worship of Muruka

MUDALIYAR, KULA SABANATHAN
*Retired Chief Tamil Translator to the Govt. of Ceylon*

"What is the use of old and dilapidated Hindu Temples in every village? What is the use of pouring milk and honey on stone statues? Can't this useless religious service, devoid of social service be stopped immediately? Social service is more important than religious service. First of all, is there a God? If there is a God, he must be blind. We are languishing in the lap of poverty without even a single decent meal a day, without a pair of trousers for a change. Our parents have sold all their properties in sending us to the Universities and we have passed out as Arts Graduates and yet we can't get even a peon's job in any Govt. Department or Corporation. We cannot get employment even in the private sector. In this context, please let us know whether temples are necessary. Some thoughtless Hindu fools and rich merchants are spending lakhs and lakhs of rupees in renovating old temples,in building Gopuras like sky-scrapers, and in annual Temple Festivals. Look at the amount of money spent on Eelathu Chidambaram on Thiruvathirai festival".

Well, this is the unanimous voice of the present day unemployed educated Hindu youths. They give expression to wh t they actually feel about the whole business. The challenge must be met. Realities must be faced by the Hindu Public. In the first instance they must be satisfied that Hindu Temple are necessary and that Social service actually begins at the Temple.

There is a mistaken notion prevalent among the youths of our country that Religious service is quite different from Social service. It is a pity that the Hindu youths are not aware of the fact that Hindu Temples served as the background for Social Service. The significance and the use of temples for all kinds of social service has not been taught to the children of Hindu parents either at school or at home. Some youths go to the extent of suggesting that the Temple premises as well as Temple property could be utilsed for colonisation schemes for the middle class peasants. Onions and chillies could be grown in temple gardens instead of fragrant flowers for the temple.

Here is what a Saint and Scholar, who is living in our midst, says on this vexed problem.

"His Holiness Sri Sankarachariya of Kanchi Kamkoti Peetam called upon the people to be selfless and to lead a life

of dedication in the service of God and of their fellowmen. He also stressed the importance of worship in temples and said that temples promoted dharma and bhakthi among the people.

The revival of the ancient custom of Athithi Pooja (அதிதி பூசை) would banish hunger and poverty. The object underlying this parctice was that no one should go without food. "Live and give for other" were the cardinal principles which governed the lives of people in the olden days, who led a better and happier life than those of the present generation. These principles had been neglected of late and consequently humanity had suffered a moral deterioration. Salvation was possible only if people gave the rightful place to temple worship for the realisation of God. The system of feeding the poor, which was believed to be an important function of all temples was still in vogue only in the temples at Chidambaram, Avadaiyarkoil and Puri. Poojas should be revived in respect of all idols found abandoned. It was the duty of every Hindu to ensure that the idols installed by their forbears were offered proper worship".

Now the Tamil word Muruka or Murukan means the tender and beautiful child. Murukan is represented in legend and painting as a beautiful child or youth.

"In the face of fear," says an ancient and popular verse, "His face of comfort shows. In the fierce battle-field, with 'Fear not', His lance shows. Think of Him once, twice He shows, to those who chant Muruka"

"A refreshing coolness is in my heart as I thinketh on Thee, peerless Muruka. My mounth quivers praising Thee, lovingly hastening Muruka, and with tears calling on Thee, Giver of gracious help-hand. O Warrior! With Thirumuru-kattuppadai Thou comest, Thy Lady in Thy wake.

The people of Karainagar are pious devotees of Lord Murukan. There are many Murukan Temples at Karainagar. It is the duty of every son of Karainagar, wherever he may be, to support the good cause of renovating an ancient Muruka Temple. Those who give lavishly for such a good cause will gain merit in the next birth. No temple should be neglected There should be regular poojas in every temple at Karainagar. That is my humble prayer. I congratulate the devotees who have come forward to renovate an ancient temple called Karainagar Thikkarai Murugan. May they be crowned with success is my humble prayer.

கந்தா போற்றி! மெய்ஞானக் கடம்பா போற்றி! கருணைவளர்
எந்தாய் போற்றி எவ்வுயிர்க்கும் இறைவா போற்றி! சிவசக்தி
மைந்தா போற்றி! கதிர்வேல் மணியே போற்றி மணங்கமழும்
செந்தார் புனைந்தாய்! தெவிட்டாதின் திருவடித்தேன் மலர்ப்போற்றி

# S. V. MURUGESU

154, HOSPITAL RORD, .. JAFFNA

Telephone: 564

*GENERAL MERCHANT, GOVT. CONTRACTOR,*
*COMMISSION AGENT & TRANSPORT AGENT.*

**JAFFNA ... COLOMBO**

*ALWAYS USE*

## ESVIEM RICE

*for*

**QUALITY & QUANTITY**

*BRANCH:*

**S. V. MURUGESU**

**KARAVEDDY.**

*Telephone:* **32**

If any one speaks evil of you, let your life be such that no one will believe him — MORE IN LOVE

When you retire to bed, think over what you have been doing during the day. — DIE IN LOVE

Never be idle; if your hands can't be employed usefully, attend to the cultivation of your mind.

Taste the honey of Divine Love and become an embediment of Love

*With the best Compliments*

*of*

# Banksons Textile Industries Ltd.

**49, Bankshall Street,**
**COLOMBO-11.**
**T'phone : 25323**

அழகுத் தெய்வம்! அகவுயிருக்கமிழ்தத் தெய்வம்! அடியரோடு பழகும் தெய்வம்! பண்புநடை பயிற்றும் தெய்வம்! பரமசிவ மழலைத் தெய்வம்! உரைகடந்த மாண்புத் தெய்வம்! மெஞ்ஞானப் பழனித் தெய்வம்! பேரின்பம் பரப்பும் கதிர்வேற் தெய்வமே.

**யாழ்ப்பாணத்தில் சகலவிதமான**

***பிடவைகளுக்கும்***

**பிரசித்திபெற்ற இடம் :**

**S. R. S.**

# எஸ். ஆர். செல்லத்துரை

**216, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி : 296

# மலரை மலர வைத்தவர்கள்

திக்கரை முருகப்பெருமானின் கும்பாபிடேகத்தையொட்டி கும்பாபிடேக மலர் ஒன்றை வெளியிடவேண்டுமென கருத்துத் தெரிவித்தபோது, அதை மனப்பூர்வமாக வரவேற்று இம்மலரைச் சிறந்த முறையில் படைப்பதற்குத் தேவையான உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய திரு. கா. விஸ்வேஸ்வரன் அவர்கள் ஒரு இறை பக்தன். இம்மலர் சிறப்பாக வருவதற்கு அவர் மகத்தான பணியாற்றியுள்ளார்.

கும்பாபிடேக விழாச்சபை (கொழும்புக் கிளை) பொருளாளராகப் பெரும் பணிபுரிந்த திரு. பொ. நமச்சிவாயம் அவர்கள் கும்பாபிடேக விழா நிதியைத் திரட்டுவதற்கும் மலருக்கு விளம்பரம் சேகரித்து உதவுவதிலும் சிறந்த பங்கை வகித்துள்ளார். அவருடைய ஊக்கமும் உற்சாகமும் கிடைத்திருக்காவிடில், கொழும்பிலுள்ள கும்பாபிடேக விழாச்சபை செவ்விய முறையில் செயற்பட்டிருக்கமுடியாது.

காப்பாளராகவிருந்து சகல வழிகளிலும் உதவி புரிந்த திரு. ச. க. பொன்னம்பலம் அவர்கள் ஆற்றிய சேவையை இங்கு வியந்து கூறாமலே எல்லோருக்கும் நன்கு தெரியும்.

எவ்வளவு பணம் செலவானாலும் ஒரு சிறந்த கும்பாபிடேக மலரை எப்படியும் வெளியிடவேண்டுமென பல வழிகளிலும் உதவி புரிந்த திரு. மு. பாலசிங்கம் அவர்கள், இறுதி நேரத்தில் நிதியுதவி அளித்திராவிடில் இம்மலரை உரிய நேரத்தில் வெளியிட்டிருக்கமுடியாது. இம்மலருக்கு எவ்வாறு உதவி புரிந்தாரோ அதே போன்று திக்கரை முருகமூர்த்தி கோவில் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு, கும்பாபிடேகம் நடந்தேறும் வரையும் உறுதியுடனும் உற்சாகத்துடனும் உழைத்துவந்தார்.

மலரை வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்தவுடன் என் சிந்தனைக்கு வந்தவர் திரு. வே. இ. தம்பிப்பிள்ளை ( கிளிநொச்சி ) அவர்கள். அவர் உதவியை நாடி கிளிநொச்சி சென்றிருந்தபோது அகமும் முகமும் மலர வரவேற்று மலருக்கு வேண்டிய விளம்பரங்களையும் மற்றும் உதவிகளையும் பெருந்தன்மையோடு புரிந்தார். திக்கரை முருகப்பெருமானின் திருப்பணி வேலைகள் இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு ஆரம்பத்தில் வித்திட்டு துரிதமாக செயற்பட வைத்ததுபோல், இம்மலர் சிறந்த மலராக வெளிவரவேண்டுமென அவர் வாழ்த்தியது வீண்போகவில்லை.

யாழ்ப்பாணத்தில் விளம்பரம் சேகரிக்கச் சென்றபோது சகல ஒத்துழைப்புகளையும் தந்து உதவிய கா. வி. குலரத்தினம் (லிங்கம் ஸ்டோர்ஸ்) அவர்கள் மலர் விற்பனைக்குரிய பொறுப்பினையும் ஏற்று நமக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்துள்ளார்.

பல பேரறிஞர்களின் கருத்துக்களையும் கட்டுரைகளையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த மலராக முருகபக்தர்கள் முன்கொணரவேண்டுமென்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது கைகொடுந்து உதவ முன்வந்தவர் லீலா அச்சக உரிமையாளர் திரு. சி. த. சின்னத்துரை ஜே. பீ. அவர்கள். அவர் பணத்துக்காக மட்டும் அச்சு வேலை செய்யும் நோக்குடன் முன்வரவில்லை. 1971-ம் ஆண்டு அச்சேற்றிய திக்கரை முருகன் திருப்பணி மலரினால், காரை நகர் மக்களின் அபிமானத்தைப் பெற்றார். அதே போன்று பிறிதோர் மலரில் தனது சிந்தனைத் திறனையும், அச்சிட்டு வெளியிடும் திறமையையும் காட்டவேண்டுமென உளம் கொண்டிருந்த அவரின் தனி முயற்சியின் பயனே. இம் மலரின் சிறப்பிற்கும் பொலிவிற்கும் காரணமாகும். லீலா அச்சகத்தில் பணிபுரிந்தோர் சிறந்த முறையில் தங்கள் பங்கைச் செலுத்தியுள்ளனர்.

அட்டைப்படத்தை அழகாக வரைந்துதவிய திரு வி. கனகலிங்கம் (வி. கே.) யின் கைவண்ணத்தால் மலர் தனிச் சிறப்புப் பெற்றுள்ளது.

இம் மலர் நிறைவு பெற்ற மலராக மலருவதற்கு பலவகையிலும் உதவி புரிந்த அன்பர்கள், அடியவர்கள் யாவருக்கும் திக்கரை முருகன் திருவருள் கிடைக்குமாக.

---

சைவத் தமிழ் உலகம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குப் பல பட்டங்கள் வழங்கிப் பாராட்டியுள்ளது. இதுவரையும் அம்மையாருக்குக் கிடைத்துள்ள பட்டங்களின் விபரம் :-

| | ஆண்டு | பட்டம் | வழங்கியோர் |
|---|---|---|---|
| 1. | 1966 திசம்பர் — | செஞ்சொற் செம்மணி | மதுரை ஆதீனம் |
| 2. | 1970 ஆகஸ்ட் — | சிவத்தமிழ்ச் செல்வி | காரை – மணிவாசகர் சபை |
| 3. | 1971 திசம்பர் — | சித்தாந்த ஞானகரம் | காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் |
| 4. | 1972 பெப்ரவரி — | சைவ தரிசனி | இராஜேஸ்வரி பீடாதிபதி(தமிழ்நாடு) |
| 5. | 1972 ஏப்பிரல் — | திருவாசகக்கொண்டல் | சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கம் |
| 6. | 1973 பெப்ரவரி — | திருமுறைச் செல்வி — | வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் |
| 7. | 1974 ஜனவரி — | சிவமயச் செல்வி | ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் |

# மண்டலாபிடேகம் நடந்த அற்புதக் கதை

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிடேகம் மிகச் சிறப்பாக நடந்தேறிய பின்னர், அதற்கிணையாக நடைபெற வேண்டிய மண்டலாபிடேகத்தை பெருஞ் செலவில் சிறப்பாக நடத்துவதற்கு நிதி இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் கோவில் ஆதீனகர்த்தா திரு. க. திருநாவுக்கரசு அவர்கள். மெய்யடியார்களுக்கு உணவு அளிக்க நெல்லு இல்லையே என்று இறைவனை நினைந்து சுந்தரர் மனம் வருந்திக் கொண்டிருந்த போது நெற்குவியல் குவியலாக வந்தடைந்த சம்பவத்தையும், நாவுக்கரசர் நிதியில்லையென்று கவலைப்பட்ட போது, இறைவனருளால் செங்கற்கள் பொற்கற்களாக கிடைக்கப்பெற்ற சம்பவத்தையும், நாயன்மார் காலத்தில் நடந்த தெய்வீக அற்புதங்களை அறிந்து இறையருளை வியந்திருக்கின்றோம்.

அதேபோன்று திக்கரை முருகனும் ஒருமுருக பக்தரிடம் கனவில் தோன்றி இப்பணியை நிறைவேற்ற ஆணையிட்டதாகவும், அந்த அதிசயக் கனவினால் அதிர்ச்சியடைந்த அன்பர், மண்டலாபிடேகத்தை தானே பொறுப்பேற்றுச் செய்வதற்கு முன்வந்ததாகவும் கூறப்படுகிறது.

அதன்படி 21ம் நாள் அன்று நடைபெற்ற மண்டலாபிடேகத்தை, கும்பாபிடேகத்திலும் பார்க்க மிக விமர்சையாகப் பெருந்தொகையான செலவில் நிறைவேற்றினர். அன்று முருகப் பெருமானுக்கு 1009 சங்குகளினாலும், விநாயகர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு தனித்தனியாக 108 சங்குகளாலும் பிரமாண்டமான சங்காபிஷேகம் நடைபெற்றது. இரவு விஷேட மேளக்கச்சேரிகளும், இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்று, முருகப்பெருமான் பூத்தண்டிகையில் எழுந்தருளி வீதிவலம் வந்து அருள் புரிந்தார்.

— காழியர்கோன்

# சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றிவரும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"மருணீக்கியாரைத் திருநாவுக்கரசராக்கியது திலகவதியார். கூன்பாண்டியனை நெடுமாற நாயனாராகத் திகழ்ச் செய்தது மங்கையர்க்கரசியார். ராசராச சோழனைச் சிவபாத சேகரனாக்கியது அவனது தமக்கையாகிய பெரிய குந்தவையார். இங்ஙனம் பண்டு சைவத் தமிழ் மங்கை நல்லார் பலரும் சைவமும் தமிழும் சிவபக்தியும் வளர்ந்தோங்க ஆவன செய்தமை தமிழ் நாட்டு வரலாற்றில் இடம் பெற்றுள்ளது இங்ஙனம் தமிழறிந்த மகளிர் சிலர் சிவத் தொண்டில் ஈடுபட்டுச் சைவத்திற்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டுகள் பல புரிதல் கண்கூடு. அத்தகைய வழியில் சென்று பலருடைய பாராட்டுதலுக்கு உரியவராக ஈழத்துப் புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திகழ்வது அறிய மகிழ்ச்சி. தாய்குலம் சிவத்தொண்டு புரிந்தால் சைவம் சிறக்கும் வளரும்'' என ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களைப் பாராட்டியுள்ளார்கள். சைவ உலகம் அனைத்தும் ஒருங்கிணைத்து போற்றும் வாய்ப்பினையும் பேற்றினையும் பெற்று சித்தாந்த ஞானகரமாகத் திகழும் செந்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கடந்த கால் நூற்றாண்டு களாக சைவமும் தமிழும் தழைத்தோங்க ஆற்றிவரும் பணி அளப்பரியது. அன்னாரின் சேவையினைப் பாராட்டி இது காறும் நடைபெற்றுள்ள 10 க்கு மேட்பட்ட பாரட்டு விழாக்கள் அன்னாரின் சேவை நலனைப்பட்டவர்த்தனமானமாகப் படம் பிடித்து காட்டுகின்றன. சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் பொருள் தொண்டாற்றி வரும் பண்டிதை அவர்களின் பெயர் தமிழர்கள் வரலாற்றில் பொறிக்கப்படும். அன்னார் பல்லாண்டு வாழ்த்து சைவசமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற வண்டுமென திக்கரை முருகப் பெருமான் திருவருளை வேண்டுகின்றோம்.
G

இலங்கையில் யாழ்ப்பாணத்தும், காரைநகர்தனிலும்,
எழில் திருக்கே தீச்சரத்தும், இடைமருதூர் முதலா
வலங்குலவு தமிழ் சைவ மாநாடு நிகழும்
மற்றைய பல் இடங்களிலும், மாட்சிமிகும் அவர்தம்
நலங்குலவி விரிவுரைகள் நயத்து மிகக்கேட்டு
நனிபெரிதும் மகிழ்ந்துள்ளேன்; நலந்திகழ் அம்மையார்தாம்,
தலங்குலவத் தமிழ்சைவம் தகப்பரப்பி, நந்தம்
தமிழ் மகளீர் தலை மணியாய் நீடுழி வாழ்க. (ஆசிரியர்)

முருகா



எங்களிடம் சகலவிதமான

★ சாய்ப்புச் சாமான்களும்

★ பலசரக்குச் சாமான்களும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

*Agents for Batticaloa District* :-

1. **The Maharaja Organisation (Distributors Ltd.)**
2. **Show Wallace & Hedges Ltd.**
3. **Union Carbide Ceylon Ltd.**

# RAJESWARI STORES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Prop: K. K. Shanmugam

No. 11, Trinco Road,

BATTICALOA.

Telephone: 335

**ராஜேஸ்வரி ஸ்டோர்ஸ்** இல.11, திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.

ஓம் முருகா துணை

செங்கே ளடுத்த சிவனடி வேலும் திருமுகமும்
பங்கே நிறைந்த நற் பன்னிரு தோளும் பதுமமலர்
கொங்கே தரளம் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்தெதிர் நிற்பனே

# செ. நடேசபிள்ளை,

35, வீரகத்திப்பிள்ளையார் வீதி,

மட்டக்களப்பு.

ஏக விநியோகஸ்தர் :

## யானை மார்க் குளிர் பானங்களும்
## மற்றும் தயாரிப்புகளும்


(பங்காளர்)

நடேசன் கொம்பனி,
16-A, பிரதான வீதி,
செங்கலடி.

ஈஸ்வரி சினிமா,
வாழைச்சேனை.

அடைவு பிடிப்பவரும் நகை வியாபாரியும்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனுமாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா ஞானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமானே.



# ஆ. இராஜேந்திரன்

46, மெயின் வீதி,

கல்முனை.

ஏகவினியோகஸ்தர் :-

## யானை மார்க் குளிர்பானங்களும்

## மற்றும் தயாரிப்புகளும்

வதிவிடம் :-

நிர். 5, சுப்பையா லேன்,

மட்டக்களப்பு.

பார்பூத்த செவ்வளம் பதிபூத்த திக்கரையோன்
கோவில் கொள்ள
சீர்பூத்த பொன்ன ம்பலன் சிறப்பெய்த சீரிழமை
சேராறுமுகமுடையோன்
நார்பூக்க நகைபூக்க நங்கையர் மலர்பூக்க நன்
நான்குகளும் பூக்க
ஏர்பூக்க ஏறிவரும் எம்மயிலோன் காரைக்கதிர்
முகவன் திருத்தாள் போற்றி

( லக்ஷ்மி நாராஜன சுவாமிஜி )

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7, 57 ஆம் ஒழுங்கை
கொழும்பு 6



*WITH THE BEST COMPLIMENTS OF*

# Ceylon Paint Industries Ltd.

116, STEUART PLACE,
COLOMBO.

Phone : 26651

நியூ லீலா அச்சகம், 33, செபஸ்தயன் மேடு, கொழும்பு 12.

# PLAYING CARDS FLAT FILES




Manufacturers of Playing Cards
Flat Files and Stationery etc.







# NAGO INDUSTRIES

128, Bandaranayaka Mawatha,
COLOMBO-12.

Telephone: 23131



# ஸ்ரீடம் மார்க்
# கற்பூரம்

வடிவேலன் பவனிவரும் தரிசனம் கண்டு
அகமகிழ்ந்து அன்பு சொரியும் மெய்யடியார்களின்
மனோபீஷ்டங்கள் நிறைவேற

**எங்கள் நல்லாசிகள்**
எங்கும் எல்லாக் காலங்களிலும்
ஏகக்கிராக்கியாய்ப் பாவிக்கப்படுவது

இது ஓர் சிறந்த தயாரிப்பு! கற்பூரம் வாங்கும்போது

## ஸ்ரீடம் மார்க் கற்பூரம்

என்றே கேட்டு வாங்குங்கள்




தயாரிப்பாளர்கள்:

**ஸ்ரீலங்கா**
**இன்டஸ்ட்ரீஸ்**
**லிமிட்டெட்,**
மினுவாங்கொடை ரேட்,
ஜா - எல,

தொலைபேசி: 419 & 265
தந்தி: 'கலாஸ்'
தபால் பெட்டி எண் 4.

நியூ லீலா, கொழும்பு-12.